## சு. சமுத்திரம்



# இன்னொரு உரிமை

வானதி பதிப்பகம்

# இன்னொரு உரிமை

சு. சமுத்திரம்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : மே 1992

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 27-00

நேருஅச்சகம், 43 அம்மையப்பன் தெரு சென்னை-600014

# 'வளைந்த தெங்கு' முதல் சாகித்திய அகாதமி வரை

நம் தமிழ் நாட்டில் இலக்கிய உலகிலும் சரி, அரசியல் உலகிலும் சரி, வேதனையான சில விபரீதங்கள் விளையாடிக்கொண்டிருந்த நேரம். 1957லிருந்து 62 வரை இருக்கலாம். மகா கவி பாரதியாரைக் 'கோழை' என்றும், வீரபாண்டியக் கட்டபொம்மனை 'கொள்ளைக்காரன்' என்றும் ஒரு எழுத்தாளர், ஒரு வாரப் பத்திரிகையில் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார்.

பண்டித ஜவஹர்லால் நேருஜி ஒருமுறை தமிழகத்திற்கு விஜயம் செய்தபோது, 'நேருவே திரும்பிப் போ' என்றும், 'கறுப்புக்கொடி' காட்டியும், 'காலணி'களை எடுத்து வீசியும் விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டது ஒரு தேசவிரோத அரசியல் கூட்டம்.

இதைக் கண்டு குமுறிக் கொதித்தெழுந்த சில தேசிய இளைஞர்கள் கூட்டாகச் சேர்ந்து, 'தேசிய முழக்கம்' என்றொரு பத்திரிகையைத் துவக்கி, ''துடிக்கிறது தோள்! துலங்குகிறது வாள்! துரோகத் தேச விரோதக் கூட்டமே நீ தூள்! தூள்!!'' என்று போர்க் குரலெழுப்பி தமிழ்ப் பத்திரிகையுலகில் ஒரு புழுதியைக் கிளப்பிக்கொண்டு புறப்பட்டார்கள்.

அவர்களிலே சு. சமுத்திரமும் ஒருவர்.

ஆளுக்கொரு பத்திரிகையை வைத்துக்கொண்டு, தேசியத் தலைவர்களைத் தாறுமாறாகத் தாக்கி எழுதிக்கொண்டிருந்தவர்களை எதிர்த்து, மேடைக்கு மேடை; எழுத்துக்கு எழுத்து; பேச்சுக்குப் பேச்சு; நாடகத்துக்கு நாடகம் என்று பல முனைகளிலும் அவர்களுக்கு பதிலடி கொடுத்துக்கொண்டிருந்த தேசிய முழக்கம் குழுவில் சமுத்திரமும் ஒருவர்.

அப்போது அவர் கல்லூரி மாணவர். அந்தக் கால கட்டத்திய மாணவர் உலகம், திராவிட மாயையில் சிக்கித் திக்குமுக்காடிக் கொண்டிருந்தபோது, 'வாள்வீச்சு' போன்ற தன் மேடைப்பேச்சுத் திறனால் ஏராளமான கல்லூரி மாணவர்களை தேசிய மேடைக்கு அழைத்து வந்து பெருந்தலைவர் காமராஜரின் பாராட்டைப் பெற்றார்.

மகா கவி பாரதியைக் 'கோழை' என்று எழுதிய தமிழ்வாணனுக்குக் கவிதையிலேயே பதிலடி கொடுத்து "வளைந்த தெங்கு" என்று ஒரு கவிதை எழுதினார். அதுதான் அவர் எழுதிய முதல் கவிதை. ஆரம்பமே அவர் எழுத்தில் ஒரு கோபம் இருந்தது. அது இன்னும் அடங்கவே இல்லை என்பதை அவரின இந்தச் சிறுகதைத் தொகுப்பிலும் காண முடிகிறது.

நாங்கள் அரசியல்வாதிகளின் பொய்ப் புனைச் சுருட்டுப் பேச்சுகளுக்கு அரசியல் ரீதியாகப் பதிலடி கொடுத்தால், சமுத்திரம் கதைகள், கவிதைகள் மூலமாகவே சந்திப்பார். முதல் கவிதையாக 'வளைந்த தெங்கு' எழுதியவர், முதல் கதையாக "முட்கலூர்

அழகி'' என்று ஒரு சரித்திரத் தொடர்கதையை எழுதினார். தீவிரமான ஏட்டிக்குப் போட்டி அரசியல் கட்டுரைகளுக்கிடையே, 'முட்கலூர் அழகி'க்கு வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பிருந்தது.

அப்போதே நான் நினைத்தேன்; சிறந்த இந்த இளைஞனின் திறமைகளை காலம் ஒருநாள் தலை வணங்கி எற்றுக்கொள்ளத்தான் போகிறது என்று. அது எந்த அளவுக்கு சாத்தியமாகி இருக்கிறது என்பதற்கு அவர் படைப்புக்குக் கிடைத்த 'சாகித்திய அகாதமி' விருதே சான்று ஆகும்.

தேசிய முழக்கம் என்ற எங்கள் பத்திரிகைக் 'குரு குலத்தில்' தோன்றிய இந்த எழுத்துச் செடி, இன்று வளர்ந்து, மரமாகி, காய்த்துக்கொண்டிருப்பதைக் கண்டு, ஒரு தாயுள்ளத்தோடு 'இவன் தந்தை என் நோற்றான் கொல்' என்னும் சொல்லுக்கிலக்காய் நாங்கள் பெருமையடைகிறோம்.

இந்தச் சிறுகதைத் தொகுப்பிலுள்ள எந்தக் கதையைப் படித்தாலும், கதை படிக்கிறோம் என்ற எண்ணமே நமக்கு எழவில்லை. அவர் கதைகளின் பாத்திரங்களும் சம்பவங்களும், நம்மைச் சுற்றியோ, நாமாகவோகூட இருக்கிறோமோ என்ற எண்ணமே நமக்கு ஏற்படுத்தும்.

இருப்பவர்கள் இல்லாதவர்களை இகழ்வதையும், இம்சிப்பதையும், வலியவர்கள் மெலியவர்களைச் சுரண்டுவதையும், பகிரங்கமான கிண்டலோடும், மறைமுகமான எதிர்ப்புக் குரலோடும் இவர் பாத்திரங்கள் உலா வரும்.

ஒவ்வொரு கதையின் முடிவிலும் ஒரு அசாத்திய அசத்தல் தெரியும். சில கதைகளின் முடிவுகள் நம்மை உலுக்கி எடுத்துவிடுகிறது. 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்ற பாரதியின் வெஞ்சினமும், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் நெஞ்சிரக்கமும் இவர் கதைகளில் நிறைந்திருக்கின்றன.

இவர் பாத்திரங்கள் வட்டாரத் தமிழில் பேசுவது தான் படிப்பதற்குக் கொஞ்சம் நெருடலாக இருக்கிறது. ஒருவேளை இந்த வட்டார நடையே தம் வெற்றிக்குக் காரணம் என்று இவர் நினைக்கிறாரோ என்னவோ!

சமுத்திரம் ஒரு கம்யூனிஸ்டாக இருப்பாரோ என்று ஒரு முறை வானதியார் என்னிடம் ஒரு வினாவை எழுப்பினார். நான் அவரைப்பற்றிய உண்மைகளைச் சொல்லி, அவர் கதைகள் வானதியில் வெளிவர வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுத்தேன்.

அவர் அதை ஏற்று, அழகிய முறையில் இச் சிறு கதைத் தொகுப்பைப் பதிப்பித்து வெளியிட்டுள்ள பதிப்பக வேந்தர் வானதி திருநாவுக்கரசு அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல பதிப்பகம் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நண்பர் சமுத்திரம் நிறைய எழுத வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

**மு. தர்மலிங்கம்**

(தேசிய முழக்கம்)

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பெண்மைக்கு முதுமை இல்லை | 1 |
| 2. | லவ் ஆல் | 9 |
| 3. | கோமதியின் கதை | 16 |
| 4. | மாமனுக்கு ஆகாது | 30 |
| 5. | பகலில் சென்னை | 39 |
| 6. | 'வெட்டி' மனிதர்கள் | 49 |
| 7. | பெங்களூர் தெரஸா | 64 |
| 8. | நூலிழையில் ஒரு பந்தம் | 76 |
| 9. | காமதேனு | 93 |
| 10. | காதல் புறாக்கள் | 109 |
| 11. | தலைக்குனிவு | 121 |
| 12. | வரம்பு மீறிகள் | 136 |
| 13. | சுமைதாங்கிகள் | 149 |
| 14. | நிசமான பத்தினி | 161 |
| 15. | இன்னொரு உரிமை | 175 |
| 16. | செத்தாலாவது வாழலாம் | 186 |
| 17. | கதை இல்லாத நாயகி | 194 |
| 18. | பாசப்பிரிவினை | 205 |
| 19. | சின்ன மனிதர்கள் | 215 |
| 20. | உறவுக்கு அப்பால் | 224 |

# பெண்மைக்கு முதுமை இல்லை

''நான் ஒருத்தி இருக்கேன்.

அந்த வீட்டுக் காம்பவுண்ட் கேட்டைத் திறந்து மூடிய சத்தத்துடன் சத்தமாக பாட்டியின் கோபச் சத்தத்தையும் கேட்ட, ராமநாதன் தாத்தாவுக்கு பதில் கோபம் வர வில்லை. பதிலளிக்க வேண்டும் என்றும் தோன்றவில்லை. சந்தோஷம் தாங்காதவர்போல், அவர் தனது முதுகுபோல் முன்னுக்கு வளைந்த கைத்தடியைத் தூக்கி, சிலம்பம் ஆடப் போகிறவர்போல் லேசாய் சுற்றியபடியே பாட்டியையே பார்த்தார். ''எப்பா... இந்த மாதிரி உறவுக்குக் கை கொடுத்து உரிமைக்குக் குரல் கொடுக்கும் இவளை இதே தோரணையில் பார்த்தும், கேட்டும் எவ்வளவு நாளாச்சு... பத்து வருஷம் இருக்குமா... கூடவே இருக்கும். எப்போ பேரன் பிறந்தானோ அப்பவே என்னை விட்டுட்டாள். கண்டுக்காம விட்டுட்டாள். அந்தப் பயலுக்கே இப்போ பன்னிரெண்டு வயசு.

தாத்தா, முன்னறையில் முக்கால் பகுதியை வியாபித்த சோபா செட்டில் உட்கார்ந்து கைகளை விரித்துப் போட்ட படியே பாக்கியம் பாட்டியைப் பார்த்தார். பாட்டி பொறிந் தாள். ஏதோ சேதி சொல்லப்போனவரை வழி மறித்துக் கேட்டாள்.

''நான் இங்க வெறுமையா கிடக்கேன். ரஞ்சித் கண்ணுக்குள்ளே நிக்கான். கண்ணப்பன் நெஞ்சுக்குள்ளேயே நிக்கான்.''

''ஒன் மருமகள்.''

''அவள்மேல இருந்த கோபம்கூட போயிட்டு. அவளை யும் பார்க்கணும்போல தோணுது.''

''அப்போ பம்பாய்க்கு போயிட்டு வா! பிளைட்ல வேணும்னாலும் போ!''

''ஒங்கள இப்படி தனியா விட்டுட்டா.''

''எப்பா... இப்படிப்பட்ட வார்த்தயக் கேட்டு பன்னி ரெண்டு வருஷமாச்சு! வனவாசம் முடிஞ்சுட்டு, எனக்கும் புரிய வேண்டியது புரிஞ்சுட்டு; ஒனக்கும் தெரிய வேண்டியது தெரிஞ்சுட்டு.''

''டி.வி சினிமா பார்த்து ரொம்பத்தான் கெட்டுப் போயிட்டீங்க.''

தாத்தா, பாட்டியின் கையைப் பிடித்து இழுத்தார். அவளும், அது பொறுக்காதவள்போல் அவரருகே உட்கார்ந் தாள். தாத்தா அவள் மஞ்சள் கயிற்றைத் தூக்கிப் பிடித்து, அங்குமிங்குமாய் ஆட்டியபடியே எதையோ பாராமல் படித்து ஒப்பிக்கும் பள்ளி மாணவன்போல் ஒப்பித்தார்.

''ஆயிரம் பிள்ளை பெத்தாலும், ஐயாயிரம் பேத்தி எடுத்தாலும் முதல்ல இருந்து முடிவுவரைக்கும் புருஷனுக்குப் பெண்டாட்டியும், பெண்டாட்டிக்கு புருஷனும்தான் துணை என்கிறது எவ்வளவு நெசமாயிட்டு பாரு! இடையில வாரதுங்க இடையிலேயே போகுதுங்க. மகள் என்கிற செடிய பதியம் போட்டு எடுத்துட்டுப் போறாங்க! மகன் என்கிற கிளையை வேற இடத்துல நடுறாங்க. இது தெரி யாமல், பேத்தியைப் பார்த்து புருஷன் பெண்டாட்டியை மறக்கான்! பேரனைப் பார்த்து பெண்டாட்டி புருஷனை

மறக்காள். கடைசியில இந்த ரெண்டுபேரையும் பிள்ளைங் களும், பேரன் பேத்திகளும் மறக்கும் போதுதான்... வயசான புருஷனும் வயசான மனைவியும் ரெண்டாவது இல்லறத்தை துவக்குறாங்க. உடம்பு படாம உள்ளம் மட்டும் படுற இல்லறம், இளமையில போட்ட ஒத்திக முதுமையில நிசமாவுற..."

"நீங்க சொல்றது ஒரு வகையில சரிதான்... ஆனாலும் நீங்க நினைக்கறது மாதிரி நான் ஒங்களை மறக்கலியாக்கும். மகள்கள் வீட்டுக்குப் போனாலும் சரி, மருமகளை திட்டிக் கிட்டோ, இல்ல திட்டு வாங்கிட்டு நிற்கும்போதோ சரி, நீங்க நல்லா இருக்கீங்களான்னு ஒங்கள ஒரு பார்வ பார்ப் பேன். "எங்கே சுத்துறீங்க, தள்ளாத வயசு தாங்காதுன்னு கேட்கப் போவேன். அதுக்குள்ள நான் கேட்க நெனச்சத கண்ணப்பன் கேட்டுடுவான், நீங்க தொலவுல நின்னாலும் முன்னால நீங்க கொடுத்த நினைப்பாலேய ஒங்கள மான சீகமா என் பக்கம் இழுத்துப் பிடிச்சு விடாம இருந்தே னாக்கும்."

"நீ தப்பா நெனக்காட்டால் நான் ஒண்ணு சொல் லட்டுமா."

"பழைய மாதிரியேதான் பேசுறீங்க."

"அதாவது நல்லதுலயும் ஒரு கெட்டதுண்டு. கெட்ட துலயும் ஒரு நல்லதுண்டு... நம்ம பையனும், மருமகளும் பேரன் பேத்திகளோட பம்பாய் போன இந்த ரெண்டு நாளா வீடே சூன்யமா, தெரியுறது நிசந்தான். ஆனாலும் பன்னிரண்டு வருஷத்துக்குப் பிறகு இந்த ரெண்டு நாளாத் தான் நாம பழையபடியும் மனம் விட்டு அன்னியோன்னிய மாய்... என்னப்பா அப்டி முறைக்கே!"

"முதல்ல கண்ணாடிய மாத்துங்க, நான் ஒன்னும் முறைக்கல! சிரிக்கப் பார்க்கேன், அழுக வருது! அழப்பாக் கேன், சிரிப்பு வருது!"

''ஒன் முகத்த முழுசா பார்க்கதுக்காவது கண்ணாடிய மாத்தணும். பட்... இந்த பவருக்குமேல கண்ணாடியே கிடையாதாம். இந்தச் சனியன சும்மா மூக்கும் காதும் வெறுமனே சுமந்திட்டு இருக்கு.''

''இனிமேல் வாக்கிங் கீக்கிங்கின்னு போமாட்டிங்களே? கச்சேரி அரட்டைன்னு சுத்தமாட்டீங்களே!''

''படிப்படியா குறைச்சுடுறேம்பா! படிப்படியா என்ன இப்பவே, இந்த நிமிஷத்துலயே உன் பார்வை படுற இந்த தெருவையே குறுக்கும் நெடுக்குமா நடப்பேன். வெள்ளிக் கிழமை மட்டும் மயிலை கபாலீஸ்வரன் கோவிலுல நம்ம அப்பனையும் அம்மனையும் பார்க்க அலோ பண்ணணும்.''

''ஒங்கள ரொம்பத்தான் முடக்கிப் போடுறேனோ... செயிலுல வைக்கதுமாதிரி வைக்கேனா.''

''இல்லப்பா... நீதான் என் கபாலிச்சரம்! நீதான் என் அம்மன்! நீதான் என் வாக்கிங் ஸ்டிக்! நிசமாத்தாம்பா சத்தியமாப்பா.''

தாத்தாவும் பாட்டியும் ஒருவரை ஒருவர் மோவாய்கள் உரசும்படி சொல்லி வைத்ததுபோல் பார்த்தார்கள். எழுபது வயது தாத்தா அறுபதைத் தாண்டிய பாட்டியை நாற்பதாண்டுகளுக்கு முன் நிறுத்திப் பார்த்தார். அந்தப் பார்வையோடு பார்வையாக, அந்தக்கால கண்ணாடியில் பார்த்துக்கொண்ட தனது முகத்தையும் கண்ணாடி இல்லாமல் பெருமிதமாகப் பார்த்த தன் உடம்பையும் இப்போது அவை மாறாது இருப்பதுபோல் அனுமானித்தபடியே பாட்டியைப் பார்த்தார். பயித்தங்காய் போன்ற கலையம்ச விரல்கள் முக்கால் வட்டமாகவும், கால் செவ்வகமாகவும் உள்ள உருண்டு திரண்ட வித்தியாசமான அதேசமயம் அழகான முகம். இதோ சிரிக்கப்போகிறாள்... என்பது மாதிரியான உதட்டுக் குவியல். பேசப்போவது சரியாய் இருக்குமா என்பதுபோல் அங்குமிங்குமாய் பார்க்கும் குழந்தைத் தோரணை.

கீழே குதித்து விழப்போவது போன்ற கண்கள்... அவர் அவளை நெருங்கும்போதெல்லாம், சுற்றுச் சூழலை, தலையைச் சுற்றிப் பார்த்து "வேண்டாம்... இப்போ வேண்டாம்" என்று மெல்ல முனங்கியபடியே, முகத்தை கழுத்தோடு சேர்த்து இரண்டு தோள்களுக்கும் மேல படும் படி தலையாட்டும் லாகவம் கடிகாரப் பெண்டுலம் மாதிரி.

பாட்டியை அந்த அழகுக் காலத்தில், இருத்தி வைத்து விட்டு, பிறகு இந்த இறுதிக் காலத்திற்குக் கொண்டு வந்த தாத்தாவிற்கு, இப்போதும் அவள் அழகாகவே தெரிந்தாள். முகம், கொட்டைப்பாக்கு மாதிரி சுருங்கிப்போனாலும், அந்த மூக்கு மட்டும் இன்னும் முகத்துக்கே மூக்குத்திபோல் மின்னியது. தாத்தாவுக்குத்தான்.

தாத்தா, கடந்த காலத்திற்குள் மூழ்கி, முத்துக் களையும், சொத்தைகளையும் கொண்டு வந்தார். முத்துக்கள் அவரை முறுவலிக்க வைத்தாலும், சொத்தைகள் அவரைத் துளாவித் துளாவி கேட்க வைத்தன.

"இப்போ நினைச்சாக்கூட சங்கடமா இருக்கு. 'பாக்கி' சில சமயம் நானும் ஒன்ன படாதபாடு படுத்தியிருக்கேன்."

"இல்ல... இல்லவே இல்ல... விரல் விட்டு சொல்லுங்க."

"என்னப்பா மறந்துட்டியா... சிந்தாதிரிப் பேட்டையில பால்காரன் வீட்ல நாம ஒரு போர்ஷன்ல இருக்கப்போ, பெரிய பெண் வயித்துல இருந்தாள். மூணுமாசம். எங்கம்மா ஏதோ சொன்னத்துக்கு நீ திருப்பிக் கத்துனே. அம்மா என்னைக் கையாலாகாதவன்னு திட்டுனாள். உடனே பட்டுன்னு ஒன் கன்னத்துல... நான் நடந்துகிட்டதே சொல் றதுக்கே வெட்கமா இருக்கு!"

"நீங்களாவது என்ன அடிக்கறதாவது! சிந்தாதிரிப் பேட்டையில இல்ல, மயிலாப்பூர்ல! நீங்க லேசா கைய தூக்குனீங்க... உடனே கன்னத்த நேரா நிமுத்துனேன்.

உடனே ஒங்க கைய கதவுல வச்சு அடிச்சீங்க... அப்புறம் நைட்ல 'நல்லபடியா' இருக்கப்போ என் கையத் தூக்கி ஒங்க கன்னத்துல அடிச்சீங்க... இடத்த மாத்துனாலும் கதைய மாத்தப்படாது!''

''அது அப்புறம். மயிலாப்பூர்ல இல்ல அடிக்க வந்தது; திருவல்லிக்கேணில. அடிச்சது சிந்தாதிரிப்பேட்டையில.''

''ஒங்களுக்கு வயசாயிட்டுதா... நெனவு குழம்பிட்டு... என் ராசா, என்னை அடிச்சிருக்கார்... பிடிச்சிருக்கார்... கடிச்சிருக்கார்... ஆனால் எல்லாமே தாபத்துலதான்— கோபத்துல இல்லை.''

''சரி போவட்டும். ஒருதடவ சினிமாவுக்குப் புறப் பட்டோம். நீ டிரஸ் பண்ண டயம் எடுத்தே, நான் கரடியா கத்தியும் பிரயோசனம் இல்ல. உடனே நான் சினிமாவும் வேண்டாம், கினிமாவும் வேண்டாம்னு ஆபீஸைப் பார்த்து போயிட்ட காலத்துல பெத்த பிள்ளிங்கதானே பேரண்சுக்கு வசதிகள்... எப்படியோ பம்பாய் வசதியாய் இருக்குன்னு போயிட்டான். எனக்கும் பாக்கிக்கும் மனது கேட்க மாட்டக்கு... பம்பாய்க்கு அவனோட செட்டிலாயிட்லா முன்னால், அவன் கூப்புடல. ஓகே... ஏய் பாக்கியம் இன்னுமா கிட்சன் வேல முடியல?''

''பாக்கியம்மா! காபி கிடக்கட்டும், மொதல்ல வாங்க!''

பாக்கியப் பாட்டி வெளிப்படவில்லை. ராமநாதன் தாத்தா பாஸ்கரத் தோழனின் தோளில் கையூன்றியபடியே எழுந்து நடந்தார். சமையலறையில் பாட்டி இல்லை. பக்கத்து அறையை பரபரப்பாக எட்டிப் பார்த்தார். உள்ளே ஒரு கட்டிலில் பாட்டி குப்புறக் கிடந்தாள். மோவாய் கட்டில் சட்டத்தில் இடிக்க, தலையில் முக்காடு போட்ட படி கிடந்தாள். தாத்தா பயந்துபோனார்.

''ஏய்! என்னம்மா ஆச்சு...''

''ஓரே தலைவலி. எழுந்திருக்க முடியல!''

''யார் வந்திருக்கா தெரியுமா!''

''தெரியும். ஆனால் யாருக்காகவும் என்னால் எழுந்திருக்க முடியாது.''

''சரி அவன கூட்டிட்டு வாறேன்!''

''ஒங்களத்தான்... நில்லுங்க! யாரையும் நான் பார்க்கிறாப்போல இல்ல. ஒருத்ர கூட்டிட்டு வந்து அவமானப் படுத்தாதீங்க!''

ராமநாதன் தாத்தா தட்டுத்தடுமாறி பாஸ்கரத் தாத்தாவிடம் வந்து உளறுகிறார்.

''பாஸ்கரா... அவளுக்கு உடம்பு சரியில்லயாம்!''

''அய்யய்யோ! நான் போய் பார்க்கணும்.''

''வேண்டாம். அந்த இடியட்... நீ இப்போ பாக்காண்டாம். ஒன் அட்ரஸைக் கொடு. நானே வாறேன்.''

பாஸ்கரத் தாத்தா எழுந்தார். அவருக்கு எதுவுமே புரியவில்லையானாலும் எதிர்பார்ப்புக்களை ஏமாற்றங்களாய் பெற்ற அனுபவத்தில் ராமநாத சிநேகிதனை முதுகில் தட்டிக்கொடுத்தபடியே வெளியேறினார். அவர் கேட்டைத் தாண்டுவது வரைக்குக்கூட பொறுமை இல்லாத வீட்டுத் தாத்தா பாட்டியிடம் வேகவேகமாய் வந்தார். அவள் இன்னும் குப்புறக் கிடந்தாள்.

''ஏண்டி, கூஸ்... ஆயிரந்தான் உடம்புக்கு வரட்டும். வீடு தேடி வந்த ஒரு வயசான மனுஷன், அதுவும் என் பிராண சிநேகிதனை ஒரு வார்த்த உபசரிக்க முடியாமலா போயிட்டு...''

''சொன்னது மறந்துட்டோ...''

''அவன் என்ன சொன்னான். நான் என்ன சொன்னேன்!''

''இப்போ இல்ல... அப்போ... 1954ம் வருஷம் ஜனவரி பொங்கல் நாளு. டில்லிக்குப் போயிட்டு மத்தியானமா வந்தீங்க. நான் காபியக் கொடுத்துக்கிட்டே ''பாஸ்கர் எப்படி இருக்கார். பெண்டாட்டிய கிராமத்துல விட்டுட்டு டில்லில ஹோட்டலுல சாப்பிடுறாரே... உடம்பு இளைச்சிருக்குமேன்னு கேட்டேன். நீங்க என்ன சொன்னீங்க! '

''எனக்கு எதுவுமே ஞாபகத்துக்கு வரலே!''

''எப்படி வராமப் போகும்? ''என்னடி வந்ததும் வராததுமா அவனையே கேட்கிறே! இங்க இருக்கும்போது தான் கேட்டே! அங்கே போன பிறவுமான்னு கேட்கக் கூடாத குரலுல கேட்டிங்க. நீங்க அப்படிக் கேட்கும்போது நம்ம கண்ணப்பன் 'அப்... அப்னு' உங்களப் பார்த்து தவழ்ந்து வாரான். ரெண்டாவது மகள் குழந்தைய தன் சடைய வச்சே செல்லமா அடிக்காள். உடனே மூத்தவள் தம்பிய தூக்கமுடியாமத் தூக்கிட்டு தங்கச்சிய அடிக்கப் போறாள். அப்போதான் நீங்க கேட்டது. ஒருத்தர அண்ணன்னு சொல்லாட்டா... அவரு அண்ணன்னு இல்லன்னு அர்த்தமா... இப்போ எந்த முகத்த வச்சுட்டு கூப்பிடுறீங்க!''

''அப்போ அவன் போட்ட லட்டருங்கள...''

''நான்தான் கிழிச்சேன்னு வச்சுக்குங்களேன்.''

ராமநாதன் தாத்தா அதிர்ந்துபோனவர்போல், நிலை குத்திப் பார்த்தார். கால்களை ஒன்றின்மேல் ஒன்றாகத் தேய்த்தார். ஈரம் பட்ட மூக்குக் கண்ணாடியை துடைத்த படியே வெளியே வந்தார். அவரும் ஒரு குற்றவாளிதான்.

அந்தச் சம்பவம் அவருக்கு ஞாபகம் வரவில்லையா னாலும், அப்படிப்பட்ட ஒரு அரைகுறை எண்ணம் வந்தது நிசந்தான். அதிகமாகவும் இல்லை... அதிக நாளாகவும் இல்லை. ஆனால் பாட்டிக்கு...

பெண்ணுக்கு முதுமை உண்டு. ஆனால் பெண்மைக்கு ஏது?

# லவ் ஆல்

சென்னை நகரில், ஒரு சிக்கனப் பகுதி,

கள்ளப் பணம் வைத்திருப்பவர்கள்போல், வெளியே புறாக்கூண்டு போலவும் உள்ளே மொஸைக் தரை போட்ட பல்நோக்கு அறைகளைக் கொண்ட, பல மாடிக் குடியிருப்புப் பகுதி, கண்ணின் கணக்குக்கு வராமல், உணர்வின் உரைக் கல்லாக உள்ள அரசாங்கக் குடிருப்பு வளாகம். தீப்பெட்டி களை சதுர சதுரமாய், ஒன்றின்மேல் ஒன்றாய் அடுக்கியது போன்ற மாடிகள். அவற்றின் உச்சிகளில் சிலுவை போலிருந்த தொலைக் காட்சி ஏரியல்கள்.

ஈஸ்வரனின் ஆடல் பாதத்தில் அகப்பட்ட முயலகன் போல் சூரியச் சூட்டில் வீட்டிற்குள்ளேயே சிறை வைக்கப் பட்டிருந்த பலர் கடல் காற்று வீசத் துவங்கியதால், பால் கனிகளில் வந்து நின்ற நேரம். சில பெண்கள், மாடிப் படிகளைத் தாண்டி நான்குபுற கட்டிடச் சுவர்களுக்கு நடு நாயகமாக உள்ள மைதானத்தில் லேசாய் நடமாடிக் கொண்டிருந்த வேளை.

மைதான மத்தியில் ஏழெட்டு இளசுகளும், ஓரிரண்டு நடுத்தரவாதிகளும் இரண்டு கம்பங்களுக்கு இடையே, வாலி பால் நெட்டை கட்டிக்கொண்டிருந்தார்கள். இருபுறமும், ஆட்டத்தைப் பார்ப்பதற்காக, ஸ்கர்ட் சிறுமிசுளும், ஜீன்ஸ் பையன்களும், லேசாய் ஆடியபடி நின்றிருந்தார்கள்.

குப்பைத் தொட்டிக்கு அருகே நான்கைந்து சொறி நாய்கள், குட்டிகள் சகிதமாய், ஒன்றின் கழுத்தில், இன்னொன்று பொய்க்கடி கடித்தபடி கோலோச்சிக் கொண்டிருந்தன. மைதானத்தில் தலையை லேசாய்ப் பின்புறமாய் திருப்பியபடி படுத்துக் கிடந்த வெள்ளைப் பசு ஒன்று, அசை போட்டுக் கொண்டிருந்தது.

வாலிபால் நெட் கட்டப்பட்டது. தெற்கு அணியின் சதுரக் கோட்டின் மூலையில் சம்பத் கையில் பந்தை வைத்து உருட்டிக் கொண்டிருந்தான். 'கட்' அடிப்பதற்காக, நெட்டிற்கு முன்னால் இடது பக்கம் நின்றவர், கையைத் தூக்கி, நெட்டோடு நெடுகத் தாவி, வலது மக்கம் கையை கொண்டு போனார். உடனே எதிராளியும் அப்படியே துள்ளி, அப்படியே கையை அந்தரத்தில் துழாவினார். சர்விஸ் போட வேண்டிய சம்பத் ஆட்டத்தை மறந்து, ஆட்டக்காரி போல் நின்ற ஒரு பால்கனி பெண்மேல் பார்வை யைச் செலுத்திக் கொண்டிருந்தான். உடனே, அவன் அணியைச் சேர்ந்த ஒருவர், ''சர்வீஸ் போடேண்டா, ஆபீஸ் மாதிரியே இங்கேயும் அசமஞ்சமாய் நிற்கறியே'' என்லார். ஆபீஸ் என்றதும் பலருக்கு வாயாடியது.

''ஆமா மீதி அடிஷனல் டி. ஏ. எப்போ கிடைக்கும்?''

''எப்பவாவது கிடைக்கும்.''

''இல்லப்பா! ஒருவேளை ஜி.பி.எஃப்ல சேத்திடப் படாது பாரு.''

''நோ நோ. அப்படி வராது.''

''வெயிட் அண்ட் ஸீ.''

எதிரெதிர் அணியாய் நின்றவர்கள். நெட்டிற்கு அருகே கூடி அடுத்த பஞ்சப்படி, சேமிப்பு நிதியில் வைக்கப்படுமா அல்லது ரொக்கமாகத் தரப்படுமா என்று பட்டிமண்டபம் நடத்திக்கொண்டிருந்தார்கள். ஆட்டத்தை வேடிக்கை பார்க்க வந்த சின்னப்பிள்ளைகள் அவர்களை எரிச்சலோடு

பார்த்தார்கள். நாமே விளையாடலாமே என்பதுபோல் ஒரு பயல் சம்பத் கீழே போட்ட பந்தை எடுத்து 'புட்பால் ஆடப் போனான். இதைப் பார்த்த சர்விஸ் இளைஞன் "டேய் ஸ்கவுண்ட்ரல்" என்று அவனைத் துரத்தினான் பையனைப் பிடிக்க முடியவில்லையானாலும், அவனால் பந்தைப் பிடிக்க முடிந்தது. 'டி.ஏ.' விவாதத்தை முடித்து விட்டு, அவர்கள் அணி பிரியப் போனபோது ஒருவர் ஒரு விவரத்தை விவகாரமாக்கினார்.

"ராகவன் ஆபீஸ் காரை எப்படியெல்லாம் மிஸ்யூஸ் செய்றார் பாருங்க! பசங்களை ஸ்கூல்ல இருந்து கொண்டு போறதுக்கும் வரதுக்கும் ஆபீஸ் கார்தான். தோ, பாருங்க. மிஸஸ் ராகவன் கார்ல இருந்து முருங்கைக்காயோடு இறங்குறதை. சீ இப்படியா மிஸ்யூஸ் செய்யுறது."

"ஸாரி! இது மிஸ்யூஸ் இல்ல."

"அப்படின்னா?"

"அப்யூஸ்."

"ஒங்களுக்கு லிஃப்ட் கொடுக்கலன்னா மிஸ்யூஸ்ன்னு அர்த்தம். தேன் எடுத்தவன் புறங்கையை நக்கத்தான் செய்வான்னு சொல்றது ஏன் ஸார் புரியவில்லை? ஒங்களுக்கு எப்பவுமே டபுள் ஸ்டாண்டர்ட், டபுள் டச்சு."

"ஸாரி. ராகவன் ஒன்னோட அத்திம்பேர் என்கிறதை மறந்துட்டேன்!"

"நீங்ககூடத்தான் சுற்றுலா போறதாய் எல். டி. சி. போட்டு பில் காட்டிப் பணம் வாங்கினீங்களாம். பட், மெட்ராஸ் பெஸண்ட் நகரை விட்டுத் தாண்டவே இல்லையாம்."

"சைலன்ஸ்! ரிஷிமூலம், நதிமூலம் ஆபீஸ் மூலம் பார்க்கப்படாது. லெட் அஸ் பிளே ஏய் சம்பத்! சர்விஸ் போடுடா!"

சம்பத், பின்நோக்கிப் போய், முன் நோக்கி நின்றான். எல்லோரும் அவன் கையில் இருந்த பந்தையே பார்த்த போது, அவன் வலது கரத்தைப் பின்புறமாய்க் கொண்டு போய், இடது கரம் ஏந்திய பந்தை தூக்கிப் போட்டு 'மட்டையடி' அடித்தான். அவ்வளவுதான். அந்தப் பந்து விண்வெளிக்கலம் போல் மேல்நோக்கிப் போய், அப்புறம் அரை வட்டமாகி, கீழ்நோக்கிப் பாய்ந்துகொண்டிருந்தது. அந்த பந்து 'அவுட்டா' என்பதுபோல நோட்டம் பார்த்த எதிர் அணி சர்விஸ்காரர். இரண்டு கரங்களையும், விரல் பரவக் குவித்து, விழப்போகும் பந்தை, விழியாடாது குறி பார்த்துக்கொண்டிருந்தார்.

ஒரு பக்கம் நான்கைந்து பெண்கள், வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்த பழக்காரரிடம் பைசாக் கணக்கில் பேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். இன்னொரு பக்கம் பூக்காரக் கிழவியிடம் சில பெண்கள் முழம் போட்டு வாங்காமல் நாக்குகளை முழக்கணக்கில் காட்டிச் சரி பார்த்துவிட்டுக் கேட்டிருக்க வேண்டும். இல்லையானால் பூக்காரக் கிழவி அப்படித் தலையில் கை வைத்தபடி அவர்களைப் பார்த் திருக்கமாட்டாள்.

எப்படியோ வாலிபால் துள்ளத் துவங்கியது. பெண்கள் தலைகளில் பூச்சூடிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகள் சப்போட்டா பழத்தை சப்பிக்கொண்டிருந்தார்கள்.

திடீரென்று ஒரு பிளிறல் சத்தம். அந்த சத்தத்தை மூழ்கடிக்கும் நாய்களின் உறுமல் சத்தம். குப்பைத் தொட்டிக்கு முத்தம் கொடுத்துக்கொண்டிருந்த அதோ அந்த சொறி நாய்கள் வியூகம். எப்படியோ எங்கிருந்தோ வந்த ஒரு சின்ன பன்றிக்குட்டி சுவரோடு சுவராக நிற்கிறது. வெள்ளைப் புள்ளிகள் கொண்ட அழகான குட்டி. அதை அப்படியும் இப்படியும் தப்பிக்க முடியாதபடி நாய்கள் நெருங்கிக்கொண்டிருந்தன. ஐந்து நாய்களும், ஒருமுகப்

பட்டதுபோல் அல்லது ஒரு உடம்பில் ஐந்து முகங்கள் கொண்டவைபோல் பன்றியை நோக்கி சுவராஸ்யமாக நெருங்கின. நெருக்கியடிக்கப்பட்ட பன்றி 'த்தூ... த்தூ... என்று ஓலமிட்டது. தாய்ப் பன்றியை விட்டுத் தனியாக வந்த தலைவிதியை நோவதுபோல், தலையைச் சுவரில் வைத்துத் தேய்த்தது. துவக்கத்தில் மெல்லக் கத்திய அந்தச் சின்னக்குட்டி இப்போது, பிரளயத்தைப் பிரசவிப்பதுபோல் ஓலமிட்டது. அந்த ஓலம் வாலிபால் ஆர்ப்பாட்டத்தைக் கூட மிஞ்சியது. உடல் கடிபடு முன்னாலேயே உயிரோலம் போட்ட அதன் பார்வை, வாலிபால் வீரர்களையும் பூச்சூடிய பெண்களையும், பழம் தின்ற சிறுவர்களையும் மாறி மாறிப் பார்த்தது. அந்தப் பந்துபோல் சுருண்டு, பழம் போல் நசிந்து, பூப்போல் மடிந்து அது புலம்பிய புலம்பல் இருக்கிறதே, அதைப் பார்க்காதவர்கட்கு, கேட்காதவர் கட்கு விளக்கமுடியாது. உதவி கிடைக்கும் என்றோ அல்லது மரண பயத்தாலோ அது கத்திய கத்தலுக்குப் பாதி பலன் கிடைத்தது.

பூச்சூடிய பெண்கள் திரும்பிப் பார்த்தது உண்மைதான். ஆனால் திரும்பிய வேகத்திலேயே தலையைத் திருப்பிக் கொண்டார்கள். அரைகுறைப் பார்வையோ அல்லது அசுர மகிழ்ச்சியோ பையன்கள் ஸாடிஸ வடிவாக நின்றார்கள். வாலிபால் மைதானத்திற்குள் முக்கியத்துவமில்லாத இடங் களில் நிறுத்தப்பட்டிருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். ஆனாலும் பன்றியின் மரணப் புலம்பலுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

நாய்களுக்கும், பன்றிக்கும் ஒரு அடிதான் இடைவெளி. குட்டியின் கண்களில் இருந்து நீர் விழுந்தது. அதன் வெண் சிவப்பு வாயில் நுரை தள்ளியது. போராட முடியாத பதினைந்து நாள் குட்டி. கண்களை மூடியபடி அது பரிதாப மாய்க் கத்தியபோது,

சர்விஸில் அவுட்டான பந்து, அந்தப் பக்கமாய் உருண்டோடி வந்தது. சம்பத் அதை எடுப்பதற்காக ஓடி வந்தான். நாய்கள் தங்களைத்தான் அந்த மானுடன் துரத்த வருவதாக நினைத்து, சற்றுப் பின்வாங்கின. அதேசமயம் பன்றிக்குட்டி தப்பிக்கமுடியாதபடி இடைவெளிவிட்டுச் சூழ்ந்து நின்றன. ஓடி வருகிறவன் என்ன செய்கிறான் என்பதையும் பன்றிக் குட்டியையும் மாறிமாறி நோட்டம் விட்டபடி காதுகளை நிமிர்த்தி, வால்களை விறைப்பாக்கி நின்றன. மாட்டிக்கொண்ட பன்றிக் குட்டியும் அவனை எதிர்பார்ப்போடு பார்த்தது.

சம்பத் கீழே குனிந்தபோது அவன் கல்லை எடுப்பதாக நினைத்து, நாய்கள் முதுகைக் குனிந்து, முன்கால்களைத் தூக்கி ஓட்டமெடுத்துப் போயின. ஆனால் சம்பத் பந்தை எடுத்துக்கொண்டு பன்றிக் குட்டியையும் நாய்களையும் லேசாய்ப் பார்த்தபடியே திரும்பி ஓடியபோது, நாய்கள் நேரத்தை விரயமாக்க விரும்பவில்லை. குதிகால் பாய்ச்சலில் வியூகம் கலையாமலே பன்றிக்குட்டியை அகோரப் பசியோடு நெருங்கின. காலுக்கு ஒன்றும், தலைக்கு ஒன்றும், வயிற்றுக்கு ஒன்றும் குறிபார்த்தபடி, வாய் பிளந்து முண்டியடித்தன. இத்தருணம் எப்படியோ கிடைத்த இடைவெளிக்குள் பன்றிக்குட்டி பாய்ந்து ஓடியது. நாய் வியூகத்தில் இருந்து விடுபட்டு அது குதிக்கப் போனபோது—

ஒரு நாய், அதன் வாலைக் கவ்விப் பிடித்து இழுத்தது. இன்னொரு நாய் காலைக் கவ்வியது. குட்டியோ குய்யோ முறையோவாய்க் கூப்பாடு போட்டது. பூப்பெண்கள் பார்த்துக்கொண்டு நின்றதுபோல்தான் தெரிந்தது. வாலிபால்காரர்கள் காதுகளில், அதன் இறுதிக் குரல் விழுந்தது போல்தான் இருந்தது. என்றாலும் பன்றிக் குட்டியின் வாலைக் கவ்விய நாய், அதைத் தன் பக்கமாய் இழுத்துக் கொண்டிருந்தது. காலைக் கவ்விய நாய் இன்னொரு பக்கம் இழுத்தது. பன்றிக்குட்டி கோரமாய்க் கத்தியது. மானுட ஜீவிகளை விழி பிதுங்கப் பார்த்தபடியே ஓலமிட்டது.

'யார் எக்கேடு கெட்டால் எனக்கு என்ன' என்பது மாதிரி படுத்துக் கிடந்த அந்த வெள்ளைப் பசு சத்தம் கேட்டு தலையைச் சாய்த்தது. அவ்வளவுதான். எப்படி எழுந்தது, எப்படிப் பாய்ந்தது என்பதைச் சொல்லமுடியாது. கழுத்தை வளைத்து, கொம்புகளை அம்புகளாக்கி நாய்ப் பட்டாளம் மேல் பாய்ந்தது. தலையை அங்குமிங்கும் ஆட்டி கால்கள் தரையில் பதியாமல் அங்குமிங்குமாகக் குதித்தது. நான்கு பக்கமும் சிதறிய நாய்களை ஒன்றன்பின் ஒன்றாய்த் துரத்தியது. கட்டிட வளாகத்திற்கு அடியில், அவற்றை விரட்டிவிட்டு பன்றிக்குட்டியை லேசாய் சாய்த்துப் பார்த்துவிட்டு, மீண்டும் எந்த இடத்தில் எப்படிப் படுத்திருந்ததோ அந்த இடத்தில் அப்படி படுத்தது.

நகரத் திராணியின்றி குன்றிப்போய் நின்ற பன்றிக் குட்டி, தொலைவில் நான்கைந்து குட்டிகளோடு அங்குமிங்குமாய் அலைமோதிக் கொண்டிருந்த தாய்ப் பன்றியைப் பார்த்ததும் இது அதை நோக்கியும், அது இதை நோக்கியும் நெருங்கிக் கொண்டிருந்தன.

பூச்சூடிய பெண்கள் அரட்டையடித்துக் கொண்டிருந்தார்கள். வாலிபால் சம்பத் இப்போது வேறு பக்கம் நின்று சர்வீஸ் போட்டான். இப்படிச் சொன்னபடியே பந்தை எகிறவிட்டான்.

"'லவ் ஆல்.'"

❋

# கோமதியின் கதை

'உங்களிடம் ஒரு கதை இருக்கிறதா?' என்று குமுதம் கேட்டிருந்தது. ஏராளமான வாசகர்கள் தங்கள் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை எழுதியிருந்தார்கள்.

குமரி மாவட்டம் தக்கலையைச் சேர்ந்த கோமதி தன் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறியிருந்தார். அதை மையமாக வைத்து, சிறுகதையை எழுதியிருக்கிறார். இதற்காகவே தக்கலைக்குச் சென்று கோமதியைச் சந்தித்துப் பேசினார். சந்திப்புப் பற்றிச் சமுத்திரம் கூறுகிறார்:

"சின்னஞ்சிறிய வீடு—அதுவும் வாடகை வீடு. கோமதியும் அவரது குழந்தைகளும் அன்புடன் வரவேற்றார்கள். கோமதியிடம் அவரின் அனுபவத்தை மெல்லக் கேட்டேன். ஆரம்பத்தில் அதை இயல்பாக விளக்கிய அவர், இறுதியில் கண் கலங்கச் சொன்னார். ஒருமணி நேரத்திற்குப் பிறகு, விடைபெற்றுக் கிளம்பினேன். அந்தக் குடும்பத்தினர் காட்டிய அன்பை மறப்பதற்கில்லை. என்னைப்பற்றி எதுவுமே தெரியாத அவர்கள் காட்டிய பாசத்தில் முழுக்க முழுக்க, நனைந்தேன்.

ஒருவரை நேரில் சந்தித்து அவரது அனுபவத்தைக் கண்டறிந்து கதையாக எழுதுவது சாத்தியம்தானா என்ற சந்தேகத்துடன்தான் நாகர்கோவில் புறப்பட்டேன். ஆனால், ஓர் இயல்பான குடும்பத்தின் யதார்த்தமான தரிசனம், பல

இலக்கிய, சுகப்பிரசவ இன்பங்களைவிட அதிகமானது என்ற பெருமிதமான அனுபவத்துடனும், திருப்தியுடனும் திரும்பினேன்.''—சு. சமுத்திரம்

* * *

முக்கடல்கள் சங்கமித்த பகுதிக்கு அருகே, அவற்றின் சங்கநாதம் விழும் காதுப்பகுதி போல் இருந்தாலும், எந்தப் பகுதியுடனும் சங்கமிக்க விரும்பாததுபோல், துண்டித்ததாய், துண்டிக்கப்பட்டதாய் நின்ற கிராமம். நின்ற கிராமமல்ல, காகங்களின் கரவை குறட்டை ஒலியாகவும் பள்ளத் தரையைப் படுக்கையாகவும் கொண்டு கும்பகர்ணனைக் குல தெய்வமாகக் கொண்டதுபோல் படுத்துக் கிடந்த பகுதி. நிலமகளின் ஆழமான காயம்போல் நிரடு தட்டிய ஊர். மின்னொளி அங்கே பாயாத காலம். காலம் என்பதை அதன் மாறுதல்களை வைத்தே அனுமானிக்க வேண்டும் என்று வைத்துக்கொண்டால், பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு, பதினெட்டாவது நூற்றாண்டு ஆட்சி செய்ததாய் அர்த்தப்படுத்திக்கொள்ளவைக்கும் குக்கிராமம்.

சேவல்கள் கூவி முடித்துவிட்டு, கோழிகளைப் பார்த்து ஓடிய நேரம்.

வீட்டில் முக்கியமான காரியங்களை வெளியே போய் நடத்தத் தீர்மானித்ததுபோல், கோமதியின் மாமியார் வீட்டுச் சாவியை இடுப்பில் செருகிக்கொண்டு தொட்டில் சேலையை விளக்கி, பேத்தியை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டு, நடை வாசலுக்கு வந்தாள். புறக்கடையில் கட்டப்பட்டிருந்த கன்றுக்குட்டியை தாய்ப்பசுவிடம் சேர்த்துக்கொண்டிருந்த கோமதி கன்றின் கயிற்றை அவிழ்த்து விடும்போது குவிந்திருந்த விரல்களை நிமிர்த்தாமலே, மாமியாருக்குப் பின்னால் ஓடிவந்தாள். சத்தம் கேட்டுத் திரும்பிய மாமியார் பின்னோக்கித் திரும்பி, உடம்பைக் கேள்விக்குறி மாதிரி வளைத்துக்கொண்டு மருமகளைப் பார்த்தாள்.

மாமியாருக்கு அருகே நின்றுகொண்டு கோமதி தலையைச் சொறிந்தாள். பிறகு "அம்மாவைப் பார்த்துவிட்டு வந்துடட்டுமா?" என்றாள்.

மாமியார்க்காரி, "ஏன் பேசாமல் நிக்கறே" என்றாள்.

தான் சொன்னது, தனக்குத்தான் கேட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்ட மருமகள், அந்தப் பெரிய மனுஷியைப் புரியாதவள்போல் பார்த்துக்கொண்டு "அம்மாவை..." என்று சொல்வதற்காக அடித்தொண்டையை ஈரப்படுத்தியபோது "கன்றுக்குட்டி எவ்வளவு நேரமாய்ப் பால் குடிக்குது! அதத் தொழுவுல கொண்டு கட்டிப் போடு! உம்... சீக்கிரம்" என்று மாமியார் நிதானமாக உறுமியபோது மாமியார் சொன்னதைச் செய்துவிட்டு, அதற்குப் பிறகே அவளிடம் வரங்கேட்க நினைத்தவளாய்க் கோமதி கொல்லைப்புறம் போய், பசுங்கன்றை இழுத்துப் பிடித்து, இன்னொரு இடத்தில் குடியமரச் செய்துவிட்டு, ஓட்டமும் நடையுமாக நடைவாசலுக்கு வந்தாள்.

மாமியார் தெருக்கோடிக்குப் போய்விட்டார். பின் தொடர்ந்து போய்க் கேட்க முடியாது. கேட்டால், கேட்கக் கூடாத பதில் கிடைக்கும். 'வழிமறிக்க வந்துட்டியோ' என்று சொல்லலாம். 'நாங்கள்ளாம் ஆட்களாத் தெரியலியா?' என்று கேட்கலாம். அதுவும் தெருவில் உள்ள எல்லாரும் கேட்டுத்தான் ஆகவேண்டும் என்பதுபோல் மாமியார் சத்தம் தொடுக்கலாம்.

மாமியாரிடம் கேட்டுவிடுவது என்று விடியவிடிய நினைத்துத் தூங்குவதும், 'அம்மா' என்று சொல்லிக் கொண்டே எழுவதுமாக இருந்தவள். அம்மாவின் ஒருமணி நேரப் பிரிவில்கூட வாடி வதங்கியவள். போனவருடம் திருமணமாகி, கணவனுடன் இந்த ஊருக்குப் புறப்பட்ட போது, அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டே அழுதவள். அவளைப் பிரிய விரும்பாதவள் போலவும்,

அம்மாவையும் தன்னோடு கூட்டிக்கொண்டு போகிறவள் போலவும் இறுகப் பிடித்தவள். அப்புறம் இங்கே வந்து, கணவனிடம் தனித்துப் பேசும்போதுகூட, சொல்லுக்குச் சொல், வார்த்தைக்கு வார்த்தை 'அம்மா—அம்மா' என்று மட்டுமே சொன்னவள். கட்டிய கணவன் அதைத் தப்பாக எடுத்துக்கொள்ளவில்லையானாலும், மாமியார் சரியாக எடுத்துக்கொள்ளவில்லை. 'நானும் உனக்கு அம்மாமாதிரி தானம்மா...' என்று சொல்லவேண்டியவர், 'எப்பப் பார்த்தாலும் அம்மாதானா! இங்க பிடிக்கலன்னா, வெளிப்படையாச் சொல்லிடேன்,' என்று சொன்னதில் கோமதி அரண்டு போனாள். தன் மனத்துக்குள்ளேயே 'அம்மா' என்ற வார்த்தையைச் சொல்லிச் சொல்லி அந்த மனத்தைப் படலாக்கப் பார்த்தாள். முடியவில்லை.

கோமதி கருத்தரித்ததும் மாமியார் மகிழ்ந்து போனாள். கோமதியும் மகிழ்ந்துபோனாள். அம்மாவுடன் மூன்று மாதம் இருக்கலாம். ஏழாவது மாதத்திலே போய்விடலாம். மூன்று மாதமா... இல்லை, நாலுமாதம்... ஐந்து மாதம் முடியுமானால் ஆறுமாதம்.

குழந்தையின் பிறப்பில், தாயின் தரிசனம் கிடைக்கப் போவதில்லாமல் போன விரக்தியில் நிலைப்படியில் உட்கார்ந்தாள் அவள். இரவு முழுவதும் மாமியாரிடம் எப்படி நின்று எப்படிப் பேசவேண்டும் என்று மனக்கண்ணில் நிறுத்தி, தனக்குள்ளேயே ஒத்திகை பார்த்துக்கொண்டது மாமியாரின் ஒரு நிமிடப் பார்வையில் பஸ்பமாகிவிட்டது. ஆனால் தன் தாயை அன்றைக்குப் பார்க்கமுடியாது என்ற எண்ணம், நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம் என்ற ஆறுதலைத் தருவதற்குப் பதிலாக அன்றைக்கே பார்த்தாக வேண்டும் என்ற அசுர வேகத்தைக் கொடுத்தது.

அந்த வேகம் அவளை முன்னும் பின்னும் நகர்த்தியது. கண்ணில் நீராகவும் காதில் இரைச்சலாகவும் தலையில் பாரமாகவும் நெஞ்சில் நெருப்பாகவும் அந்த வேகம் அவளை

அலைக்கழித்தது. அம்மாவை, இன்னைக்குப் பார்த்தாணும். எப்படிப் பார்க்க முடியும்? இப்போ போற மாமியார் எப்போ வருவாளோ சொல்ல முடியாது. நாளைக்குப் பொங்கல். மறுநாளைக்கு மாட்டுப் பொங்கல். அம்மாவைப் பார்க்க முடியாது... அப்புறம் ரெண்டுநாள் வீட்டுக்குள்ள அடைபட்டுக் கிடக்கும் மாமியார் அதுக்குப் பிரதியா நாலு நாளைக்கு வெளிய போவாள். அப்புறம் கோவில் விசேஷம். ஒரு வாரம் அம்மா என்கிற பேச்சைக்கூட எடுக்க முடியாது. அப்படின்னா அம்மாவை எப்போ பார்க்கறது... எப்போ பார்க்கறது...'

திருவனந்தபுர நகரத்தில், ஆறு அண்ணன் தம்பிகளோடு ஒரே பெண்ணாக, செல்லமாக வளர்ந்தவள் கோமதி. அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டே ஆனந்தப் பட்டவள், பிரசவத்திற்காகத் தாய் வீடு போனாள். குழந்தை, பத்தாவது மாதத்தில் பிறக்காமல் பதினோராவது மாதத்தில் பிறக்க வேண்டும் என்றுகூட நினைத்துக் கொண்டாள்.

குழந்தை பிறந்த நாற்பத்தோராவது நாள், இந்த ஊருக்குப் புறப்பட்டபோது, அவள் அம்மா, "இனிமேல் தாம்மா ஒரு தாயோட தவிப்பு உனக்கு அதிகமாகப் புரியும். எனக்கு ஆஸ்த்மா அதிகமாகிக்கிட்டு வருது. எப்போ போகப் போறேனோ தெரியல. ஒரு தடவையாவது என்னை வந்து பாப்பியம்மா? பேத்திய எனக்குக் காட்டுவியாம்மா?" என்று ஒரு நாளும் அழாத அம்மா அன்று ஆசை தீர அழுதாள்.

கல்யாணமாகி ஒரு வாரத்திற்குள் பிறந்த வீட்டுக்கு வந்தபோது அம்மாவைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, 'அம்மா அந்த ஊரு எனக்குப் பிடிக்கலம்மா. லைட்டு இல்ல, பஸ் இல்ல... செருப்பு போட்டு நடந்தாக்கூட சிரிக்கிறாங்க." திருவனந்தபுரத்துல இருந்துட்டு, அங்க இருக்கக் கஷ்ட மாயிருக்கும்மா' என்று சொன்னபோது அவள் அம்மா 'நான்

பிறந்ததும் உன் புருஷன் ஊருக்குப் பக்கத்து ஊர்தாம்மா... இந்த டவுனுக்கு வரும்போது இது பிடிக்கல்ல... விஷயம் என்ன தெரியுமா? அப்போ, எனக்கு என் அம்மாகிட்ட இருக்க ஆசை. இப்போ உனக்கும் என்கிட்ட இருக்க ஆசை. சும்மா ஒப்புக்கு ஊர்மேல பழி போடுறே' என்று சொல்லிக் கொண்டு மகளுக்கு முத்தங் கொடுத்தபோதுகூட அழாத அம்மா, குழந்தையும் கையுமாகப் புறப்பட்டபோது அழுதாள்.

''கவலைப்படாதிங்க... இன்னும் ஒரு மாதத்துள்ள கோமதியைக் கூட்டி வரேன்'' என்று அருகே நின்ற கணவர் சொன்னார்.

ஆனால் இங்கே வந்து இரண்டு மாதமாகிவிட்டது. அம்மா வருவோர் போவோரிடம் சொல்லியனுப்புகிறார். ஆஸ்த்மாவின் கொடுமை தாங்கமுடியவில்லையாம். கடைசித் தடவையாய்ப் போய்ப் பார்க்கணுமாம். கோமதி கணவனிடம் சொல்லிப் பார்த்தாள். அவர், 'அம்மாகிட்டே கேக்குறேன்' என்றார். அப்பா இல்லாமல் அம்மாவால் வளர்க்கப்பட்ட அவர் தாயைப் பார்த்ததுமே ஆறு வயதுக்கு வந்துவிடுகிறார். ஒரு தடவை அம்மாவிடம் கேட்டுவிட்டு, ஒன்பதை வாங்கிக்கொண்டார். இறுதியில் தானே மாமியாரிடம் கேட்பது என்று தீர்மானித்துத்தான் கேட்கப் போனாள்.

கோமதி அரைமணி நேரமாக அப்படியே விக்கித்து இருந்தாள். பின்னர் அம்மா இருக்கும் திசையைக் கண்களால் கட்டிக்கொண்டு வருகிறவள்போல் வெறித்துப் பார்த்தாள். அடுத்த வாரம் பார்க்கலாம், அல்லது அடுத்த மாதம் பார்க்கலாம் என்று ஒரு நிச்சய நிலைமை இருந்தால் நாட்களை எண்ணிக்கொண்டு இருக்கலாம். எப்போது பார்ப்போம் என்பதே தெரியாமல் இருந்தால் அது நரக வேதனைப்பட்டவர்களுக்குத்தான் தெரியும்.

கோழியுடன் சென்ற குஞ்சுகளைக் கோமதி வெறித்துப் பார்த்தபோது திடீரென்று, தொட்டிலில் தூக்கம் கலைந்த குழந்தை கத்தியதில், கோமதி தூக்கத்தைக் கலைத்துக் கொண்டு எழுந்தாள். அவசரத்தில் கைகளை ஊன்றாமலே எழுந்ததால் சிறிது தடுமாறி, தள்ளாடும் கிழவிபோல் நடந்து பிறகு ஒரே தாவாகத் தாவி, குழந்தையை எடுத்தாள். மூன்று மாதக் குழந்தை. அன்னை திடீரென்று இருபத்திரண்டு வயது வாழ்க்கை முற்றுப்புள்ளியாகி விட்டதோ என்று மறுகியபோது, அந்தப் புள்ளியைக் கோடு கிழித்து 'கமாவா' ஆக்கியதுபோல், அழுத பிள்ளை அம்மாவைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியது.

குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்த கோமதிக்குத் தாய்மையின் பெருமிதத்தைவிட, தாய்ப் பாசத்தின் அடர்த்தி அதிகமாகிறது. நானும்... இப்படித் தானே அம்மாவிடம் பால் குடித்திருப்பேன். இவள், 'என்னை விடமாட்டேன்' என்பதுபோல், என் விலா எலும்பில் ஒரு கையையும் தோளில் ஒரு கையையும் வைத்துக்கொண்டு அழுந்தப் பிடிக்கிறாளே. அப்படித் தானே நானும் பிடித்திருப்பேன்?

திடீரென்று கோமதி இன்பதுன்ப எல்லைப் பரப்பைத் தாண்டிய பிரத்தியட்சத்தின் ஈர்ப்புச் சக்திக்கு அப்பாற் பட்ட ஒரு சுகமான கற்பனைப் போதையில் மிதந்தாள். குழந்தையைத் தன்னைப்போலவும், தன்னைத் தன் தாயைப் போலவும் கற்பனை செய்து பார்த்தாள். தானே தன்னைப் பெற்றுக்கொண்டாள். தானே தன்னைப் பிறப்பித்தவ ளானாள். பிறகு, பெற்றவளாகவும், பிறப்பித்தவளாகவும் கற்பித்துக்கொண்ட 'துவைதம்' போய் ஏதோ ஒருவித ஒருமை உணர்வில் குழந்தைக்குள் தாயையும் தாய்க்குள்ளே குழந்தையையும் காணும் 'அத்வைதத்தில்" அவள் இரண்டறக் கலந்தபோது—

கொல்லைப்புறத்தில் கன்றுக்குட்டி, 'ம்மா... ம்மா...'' என்று கூக்குரலிட்டது. அருகே இருந்தாலும் அரவணைக்க முடியாத அந்தக் குட்டியைப் பார்த்து, அந்தத் தாய்ப் பசுவும் 'ம்மா... ம்மா...' என்று திருப்பிக் கத்தியது.

கோமதி கனவிலிருந்து நனவுக்கு வந்தாள். வயிறு முட்டப் பால் குடித்த குழந்தை அதன் வாய்முட்ட, பால் துளிகள் பற்கள்போல் மின்ன அம்மாவின் தோளில் பற்றிய கையை எடுத்து அவள் கண்ணில் வைத்தது. இதற்குள் மாறிமாறி 'ம்மா... ம்மா...' என்று பசுவும் கன்றும் ஒரே சமயத்தில் கத்தின.

கோமதி குழந்தையை எடுத்து அவசர அவசரமாகத் தொட்டிலில் போட்டுவிட்டுக் கொல்லைப் பக்கம் போய், ''கொஞ்சம் பொறு... ஒன்னையாவது ஒன் அம்மாகிட்ட சேர்க்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே கன்றின் கயிற்று முடிச்சை அவிழ்க்கப் போனாள்.

அதற்குள் வாசல் பக்கம், ''கோமதி... கோமதி...'' என்ற குரல் கேட்டது. பெரியண்ணன் குரல் மாதிரி...

கன்றுக்குட்டியின் கட்டை அவிழ்க்காமலே வாசலுக்கு ஓடினாள். வாசல் வழியை மறிப்பதுபோல் ஒரு டாக்ஸி நின்றது. அதிலிருந்து பெரிய அண்ணன் மௌனமாக இறங்கி வாசலுக்கு வந்து கோமதியைப் பாதத்திலிருந்து கேசம் வரை உற்றுப் பார்த்தார். வாயடைத்தவளாய் அண்ணனையே பார்த்தாள் அவள். ஆனந்தமாகப் பார்த்தாள். பிறகு ''அம்மாவையும் கூட்டிக்கொண்டு வரப் படாதா?'' என்றாள்.

அண்ணன்காரர் எப்படிச் சொல்வது என்று புரியாமல் தங்கையைப் பார்க்காமல் வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டே, ''சீக்கிரமாய்ப் புறப்படும்மா...'' என்றார்.

கோமதி ஒன்றும் புரியாதவளாக அண்ணனின் தோளை உலுக்கிக்கொண்டே, ''என்னண்ணா... ஏன் இப்படிப் பார்க்கிறே?'' என்றாள்.

அண்ணன் மடமடவென்று ஒப்பித்தார். ''அம்மாவுக்கு ராத்திரி ஆஸ்த்மா அதிகமாகி... ஆஸ்பத்திரிலே சேர்த்திருக்கோம்... இனிமே... இனிமே... பிழைக்கறது கஷ்டம். ஒவ்வொரு மூச்சுக்கும் கோமதி கோமதின்னு புலம்பறாள். அவளோட அவஸ்தயப் பார்க்க முடியல... ஒன்னைப் பார்த்தால்தான் அவள் நிம்மதியாச் சாவாள்!''

கோமதி முன் நெற்றியில் கைவைத்து நிலைகுலைந்து, மறுகி நின்ற அண்ணனையே ஆறுதலாகப் பற்றிக்கொண்டு ஸ்தம்பித்தாள். அங்கே நின்ற அண்ணன், அவனைக் கொண்டுவந்த கார், ஓட்டிவந்த டிரைவர் அக்கம்பக்கத்து வீடுகள்—ஆகிய அனைத்துமே மாயமாய் மறைந்து, தன்னைப் பெற்றெடுத்த அம்மா மட்டுமே அங்கே விஸ்வரூபம் எடுத்தவளாய் வானுக்கும் பூமிக்கும் வளர்ந்தவளாய், அவளை 'வா வா' என்று இருகரம் நீட்டி அழைப்பவளாய்த் தோன்றினாள்.

சிறிது நேரம், ' அப்படியே அசையாது நின்றவள், அண்ணனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, ''அம்மா... அம்மா...'' என்று விம்மினாள். பிறகு ''என் அம்மாவைக் கொன்னுட்டாங்களா?'' என்று சம்பந்தா சம்பந்தமில்லாமல் கத்திவிட்டு அண்ணனை விட்டு அகன்று, வாசல் கதவில் தலையைக் கொண்டு போய் மோதினாள்.

அண்ணன் அவளைத் தூக்கி நிறுத்தி, தன்னோடு சேர்த்து வசோக அணைத்துக்கொண்டு, ''சரி... அழுது என்ன பிரயோசனம்? சீக்கிரமாய்ப் புறப்படு...'' என்றார்.

அப்போதுதான் ஓரளவு சுயநினைவுக்கு வந்த கோமதி, வீட்டின் உட்பக்கத்தை வெறுமையாகப் பார்த்தாள். பிறகு தன்னை மறந்தவளாய், ''அம்மா பிழைப்பாளா அண்ணா?

அவள... நான் உயிரோட பார்ப்பேனா? செத்துப்போனவள உயிரோட இருக்கிறதா பொய் சொல்றியோ? உள்ளத்த சொல்லிடு... உள்ளத்தச் சொல்லிடு'' என்று கத்தினாள்.

இரு கரங்களையும் கூர்வாள்போல் ஆக்கிக்கொண்டு தலையில் அடித்துக்கொண்டாள். தடுக்க வந்த அண்ணனை மூர்க்கத்தனமாகத் தள்ளினாள்.

இதற்குள் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் வெளியே வந்தார்கள். நிலைமையை யூகித்துக் கொண்டு ''பாவம்... எப்பப் பார்த்தாலும் அம்மா என்கிற சொல்லுக்கு அடுத்த சொல் சொல்லமாட்டாள். ஒரு மாசமா அம்மாவைப் பார்க்கணும் பார்க்கணுமுன்னு துடியாய்த் துடிச்சாள். துடிச்சு என்ன பிரயோஜனம்? ஜெயிலுல இருக்கிறவள் மாதிரி இருக்கிறவள்...'' என்று ஒரு பெண் கோமதியின் அண்ணனிடம் சொன்னாள்.

இன்னொருத்தி ''சரி, வீட்டைப் பூட்டிட்டுப் புறப்படு. உன் மாமியார் வந்தா நாங்க சொல்லிக்கிறோம்'' என்றாள்

கோமதி கண்ணீர் வெள்ளத்திற்கிடையில் பொய்யுருவங்களாய்த் தெரிந்த கூட்டத்தைப் பார்த்து, ''அவரு ஆபீஸ் போயிட்டார். மாமியார் திறவுகோலை எடுத்துட்டுப் போயிருக்கார். அம்மா... ஒன்னை உயிரோட பார்ப்பேனா? இந்தப் பாவி பார்ப்பேனா? என்னைப் பார்க்க முடியாத ஏக்கத்துலேயே நீ இளைச்சிருப்பே... ஒன்னை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது நான்தான்... நான்தான்'' என்று தலையில் அடித்துக்கொண்டாள்.

அவள் அண்ணன் கூட்டத்தைப் பொதுப்படையாகப் பார்த்துக் கேட்டார்.

''யாராவது ஒருத்தர் இந்த வீட்டைப் பார்த்துக்கணும். நான் கோமதியைக் கூட்டிக்கிட்டு போறேன். மாப்பிள்ளையையும் அவரு அம்மாவையும் உடனே வரச்சொல்லுங்க! சரி கோமதி, இனிமே அழப்படாது வண்டில ஏறு.''

கோமதி தள்ளாடிக்கொண்டே கீழே விழப் போனபோது அண்ணன் அவளைத் தாங்கிப் பிடித்து, டாக்ஸிக்கு அருகே நகர்த்திக்கொண்டே யாராவது உள்ளே போய்க் குழந்தையை எடுத்துக்கிட்டு வாங்க; ஒரு ஆளு வீட்ல இருங்க'' என்றார்.

மௌனமாக நின்ற கூட்டத்தின் சார்பில் ஒருத்தி அவருக்குப் பதிலளித்தாள். ''எந்த வீட்டப் பார்த்தாலும் இந்த வீட்டப் பார்த்துக்க முடியாது. நாங்க எதையாவது திருடிக்கிட்டோமுன்னு பழி போடுவாங்க! மருமகளை நம்புறது மாதிரி வீட்டைத் திறந்து போடுறது... நம்பாதது மாதிரி திறவு கோலக் கொண்டு போறது... இப்படி நடக்கிற பொம்பிளைகிட்ட நாங்க மாட்டிக்கிட்டால், அவ்வளவு தான்.''

அண்ணன் என்ன செய்வதென்று புரியாமல், கூட்டத்தை அதிசயமாகவும், அருவருப்பாகவும் பார்த்தார். வீட்டை இப்படியே போட்டுவிட்டுப் போனால் அந்த அம்மா வீட்டில் இருந்த நகைகளைத் தங்கச்சியோட உதவியுடன் நானே எடுத்துக்கொண்டு போனதாய்ச் சொல்லலாம். ஒரு தடவை எனக்குப் பெண் பார்ப்பதற்காகத் தங்கையைக் கூட்டிக் கொண்டுபோக வந்தபோது, 'அவளை அனுப்பமுடியாது, கூட்டிக்கிட்டுப் போவதாய் இருந்தால் ஒரேயடியாகக் கூட்டிட்டுப் போகலாம்' என்று சொன்ன மகாராணி. பக்குவமாய்த்தான் நடந்துக்கணும் என்ன செய்யலாம்.

யோசித்துக்கொண்டிருந்த அண்ணனைக் கோமதி உற்றுப் பார்த்துவிட்டு பிறகு அவர் மோவாயைப் பிடித்துக் கொண்டே, ''நீ இங்க இரு அண்ணா! நான் போய் அம்மாவைப் பார்த்துட்டு ஓடி வந்துடறேன். நான் போறேன் அண்ணா! என்னை அம்மாகிட்டே போக விடு அண்ணா!'' என்று புலம்பினாள்.

அவள்மீது பரிதாபம் கொண்ட ஒருசில பெண்கள் மாமியார்க்காரியை அசிங்கமாகத் திட்டினார்கள்! உடனே

டாக்ஸி டிரைவர் ''ஒருத்தரைக் குறை சொல்றோம்னா அவங்களால் ஏற்பட்ட வில்லங்கத்தைப் போக்குறத்துக்கு நாம தயாராய் இருக்கணும். சும்மா ஒண்ணுக்கும் உதவாமல் திட்டுறதுல அர்த்தமில்லை. ஏழு மணிக்குப் புறப்பட்டோம், இப்போ மணி பத்து. அந்த அம்மா பாவம்! இந்நேரம்...''

டிரைவர் சொன்னதை முடிக்க முடியாமல் திணறிய போது கோமதி ஓலமிட்டாள். பிரசவத்தின்போது கத்திய தைவிடப் பேரிரைச்சலான ஓலம். எலும்புகளை நெகிழ வைக்கும் அவல ஒலி.

அண்ணன்காரர், தங்கையின் கையைப் பிடித்துக் கொண்டார். ''சரிம்மா... நாகர்கோவில்ல போய் என் மதனியைக் கூட்டிட்டு வரேன். டிரைவர் அண்ணே!''

டாக்ஸி மின்னல் வேகத்தில் பறந்தது. கோமதி வண்டிக்குப் பின்னால் ஓடினாள். இரண்டு மூன்று பெண்கள் அவளைப் பிடித்து வீட்டுக்குள் கொண்டுவந்து உட்கார வைத்தார்கள்.

கலைந்த கொண்டை காற்றிலாட விழிநீர் கழுத்தில் தோரணமாக, கோமதி வீட்டுக்கும் தெருக்கோடிக்குமாக நடந்துகொண்டிருந்தாள். மாமியார் வருகிறாளா என்று பார்த்தாள். டாக்ஸி திரும்புகிறதா என்று எட்டி எட்டிப் பார்த்தாள். அவள் நடந்த நடையின் தூரத்தைக் கணக் கிட்டால் தொலைவில் உள்ள திருவனந்தபுரத்திற்கே போயிருக்கலாம்.

டாக்ஸி திரும்பி வந்தது. அண்ணன் மட்டும் வெறுமை யோடு வெளிப்பட்டார். ''என் மதனியைக் கூப்பிட்டேன். அவங்களால வ ர மு டி ய ா த ா ம். கையெடுத்துக்கூடக் கும்பிட்டுப் பார்த்தேன். முடியாதுன்னா முடியாதாம். அவருக்கு, மாறி மாறிப் பேசிப் பழக்கமில்லையாம்.''

கோமதி, அழுகையை அடக்கிக்கொண்டே, ''சரி... வாண்ணா போகலாம். வீடு எக்கேடாவது கெடட்டும். அவரு தள்ளி வைச்சால் வைக்கட்டும். அம்மாவை நான் பார்த்தாகணும்; என்ன நடந்தாலும் சரி,'' என்றாள்.

நாலும் தெரிந்த அண்ணன் அசையாமல் நின்றபோது, கோமதி ''டிரைவர் அண்ணா, உங்களுக்குக் கோடிப் புண்ணியம். என்னை இப்பவே அம்மாகிட்டே கொண்டு விட்டுடுங்க! தயவுசெய்து காரை எடுங்க. டிரைவர் அண்ணா உங்களைத்தான்... இனிமேலும் என்னால இருக்க முடியாது. இருக்கவே முடியாது'' என்று கத்தினாள்.

டிரைவர் கண்களைத் துடைத்துக்கொண்டபோது, அம்மாவின் ஆசை விமோசனம் தங்களுக்கு சாபமாகிவிடக் கூடாது என்பதில் குறியாக இருந்த அண்ணன் 'ஒரு மூட்டை நெல்லையும் ஒன் வாழ்க்கையையும் ஒரே தட்டுல நிறுத்துப் பார்க்கிறவள் உன் மாமியார். கொஞ்சம் பொறுத்திரு. உன் மாப்பிள்ளையை எப்படியாவது தேடிப் பிடிச்சுக் கொண்டு வரேன்... டிரைவர் வண்டிய எடுக்கிறீங்களா? இந்த வீட்டை இப்படியே போட்டுட்டுப் போனால், இவள் அப்புறம் இங்கே வரவே முடியாது.''

முப்பது மைல் தொலைவில் உள்ள இடத்தில் வேலை பார்க்கும் மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்கக் கார் பறந்தது.

கார் போவதையே பார்த்துக்கொண்டிருந்த கோமதி, வீட்டுக்குள் வந்து சமையலறையில் கல்லாய்ச் சமைந்தாள். இடம் பொருள் ஏவலென்று எதுவுமின்றித் தானிருப்பது தனக்குப் புரியாதவளாய், நடந்ததை நம்ப முடியாதவளாய் நம்புவதை நிராகரிப்பவளாய்க் காலத் துளியில் கரைந்து போனவள்போல், கண்ணீர் விடாமலே இருந்த இடத்தி லேயே இருந்தாள்.

தொட்டிலில் கிடந்த குழந்தை கத்தியது. அந்தக் கத்தல், அவள் காதில் விழவில்லை. எவளோ ஒருத்தி, குழந்தையை எடுத்துக்கொண்டு வந்து அவள் மடியில் திணித்துவிட்டு, ''மீனா பசியில துடிக்கிறாள்... பால் கொடம்மா'' என்றாள்.

கோமதி குழந்தையைப் பார்க்கவில்லை. அதைக் கொண்டு வந்தவளை நோக்கவில்லை. குழந்தை கத்தியது. ''நீயும் வாழப்படாது... நானும் வாழப்படாதுடி. உலகத்துல பெண்ணாய்ப் பிறக்கவே படாதுடி! பாலும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம். பேசாம சாகுடி'' என்று தன் பாட்டுக்குப் புலம்பினாள்.

குழந்தை கத்திய களைப்பில் மூச்சு வாங்கி முனகிய போது, தாய்மையின் ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டவள்போல குழந்தையைக் கைகளில் ஏந்திக்கொண்டாள்.

கோமதிக்கு இப்போது அண்ணனோடு போன கார் மறந்துவிட்டது. அதில் கணவனோ அல்லது அவன் அனுப்பும் சேதியோ அந்தக் காரில் வரும் என்ற எண்ணமில்லை. அவளைப் பொறுத்தமட்டில் மாமியார் என்ற ஒருத்தி மரித்தேபோய்விட்டாள். கணவன் என்ற ஒருவன் காணாமலே போய்விட்டான். வாழ்க்கை என்பது 'அம்மா' என்ற ஒருத்தியாக மட்டுமே ஆகிவிட்டது.

இடுப்பில் குழந்தையை ஏந்தியபடி திருவனந்தபுரம் இருந்த திசையை நோக்கி ஓட்டமும் நடையுமாக போய்க் கொண்டிருந்தாள். ❊

(18-9-80 குமுதம்)

# மாமனுக்கு ஆகாது

பிறப்பிற்கும் இறப்பிற்கும் அங்கே பெரும் போர் நடந்துகொண்டிருந்தது. 'இவள் வயிற்றில் இருந்து வரும் குழந்தை எனக்கே சொந்தம்' என்று பிறப்பும், 'நீ இப்படிப் பிடிவாதம் செயதால் குழந்தை மட்டுமல்ல, அதன் தாயும் எனக்கே' என்று இறப்பும், கெடுபிடிப் போரில் ஈடுபட்டது போன்ற ஒரு நிலைமை அங்கே உருவாகியிருந்தது. பாக்கியம் வலிதாளாமல் பல்லைக் கடித்துக்கொண்டிருந்தாள். ஆடைகளை அகற்றியதால் முதலில் ஏற்பட்ட இயல்பான நாணம், இப்போது வேதனை முனங்கலில் மறைந்து போய்விட்டது. 'நான் சாவோடு போகமாட்டேன் என்னைப் போகவிடாதிக... என்று சொல்பவள்போல் 'குடிமகளின்' கையைப் பற்றுக்கோடுபோல் பற்றிக்கொண்டாள்.

பாக்கியத்துடன் சேர்ந்து அவள் அம்மாவும் அழுதாள்.

"ஏல... முத்தையா... வண்டிய பூட்டுடா. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனாத்தான் முடியும். ஜல்திடா. என்றார் பக்கத்துவீட்டுத் தாத்தா."

முத்தையா கையைப் பிசைய, அந்தப் பிசைவின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட தாத்தா, "நான் பணம் தாரேண்டா. வண்டியைப் பூட்டு" என்று சொல்ல முத்தையா இரண்டடி நடக்கையில், 'குடிமகள்' உள்ளே

இருந்து கதவைத் திறந்துகொண்டே, ''கன்னிக்குடம் உடஞ்சிட்டுது... வண்டில போவமுடியாது. நல்லா சாமியக் கும்பிடுங்க'' என்று சொல்லிவிட்டு, மீண்டும் கதவைச் சாத்தினாள். இப்போது முத்தையாவும் தன் தந்தை அய்யாவுடன் சேர்ந்துகொள்ள மாடனைக் கும்பிட்டான்.

அய்யாவு மகளை வெளியூரில் சுமாரான இடத்தில் கொடுத்திருந்தார். தலைப்பிரசவத்திற்காக பாக்கியம் ஒன்பது மாதம் ஆனபோது அழைத்து வந்தாள். முத்தையா தங்கச்சியை 'டாக்டர்' பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்று சொன்னபோது அய்யாவு மறுத்துவிட்டார். கையில் காசில்லாத முத்தையாவும் அதிகமாக இதை ஆட்சேபிக்கவில்லை. ஒருநாள் தங்கை 'வயித்த வலிக்குதுன்னு' சொன்னதும், அய்யாவுக்குத் தெரியாமல் ஒரு ஹோமியோபதி டாக்டரைக் கூட்டிக்கொண்டு வந்தான். அவர் ஒரு 'அல்லோபதி' ஊசியைப் போட்டுவிட்டு, மேற்கொண்டும் பத்து ஊசிகளை போட்டுத்தான் ஆகவேண்டும் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். விஷயம் தெரிந்த அய்யாவு, சொள்ளமாடனை சாட்சியாக வைத்துக்கொண்டு குதித்தார். மருமகள்காரி முதன்முதலாக மாமனாருக்கு ஆதரவு தெரிவித்ததால் முத்தையாவால் அந்தக் கூட்டணியை வெல்ல முடியவில்லை. அதை முறியடிக்கும் முயற்சிக்குரிய 'டிபாஸிட்டும்' அவனிடம் இல்லை.

திடீரென்று ஒரு 'குவா குவா' சத்தம் கேட்டது. பிறந்தது ஆண்பிள்ளை என்பதற்கு அடையாளமாக 'பொம்பிளைகள்' மூன்று தடவை குலவை விட்டார்கள். முத்தையா அருகிலிருந்த தன் பையனை அணைத்துக் கொண்டான். அய்யாவு சொன்ன மாடனை நினைத்துக் கொண்டார்.

உள்ளே இருந்து வந்த 'குடிமகள்' திருமலைவடிவு யாரிடமும் பேசாமல் வெளியேறினாள். இந்தப் பிள்ளைக் காவது எனக்கு ஒரு சீல வேணும் நாடாரேன்னு' பல தடவை

சொல்லிப் பலன் பெறாத வடிவு, இந்தத் தடவை அப்படிக் கேட்காதது அய்யாவுக்கு ஆறுதலாக இருந்தது. இதற்குள், அம்மாக்காரி வெளியே வந்து ஒரு 'சாக்கை' எடுத்துப் போட்டுக்கொண்டு முடங்கினாள். முத்தையா மனைவியின் முகத்தில் வீடு முழுவதும் நிறைந்திருந்த ஈக்களில் ஒன்றுகூட ஆடவில்லை. பக்கத்து வீட்டுத் தாத்தாவுக்கு ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்பது மட்டும் புரிந்தது. முத்தையாவின் மகளைப் பார்த்து "உள்ள போயி பிள்ள எப்படி இருக்குன்னு பாத்துட்டு வாம்மா" என்று சொன்னார். அந்தச் சிறுமி பத்து நிமிடம் கழித்து வந்து "அத்த மவன் அழகா இருக்கான்... நான்தான் அவன கட்டிக்குவேன்." என்று சொன்னதில் அய்யாசாமி திருப்தியடைந்தாலும் முத்தையா திருப்தி அடையவில்லை. அம்மாவைப் பார்த்து, "என்னம்மா, ஒருமாதிரி படுத்திருக்கே? பிள்ளக்கி ஏதாவது..." என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு பேச முடியாமல் திணறினான். 'நொண்டி மூக்கறையா பிறந்திருக்குமோ!'

"பிள்ளக்கி என்ன... நல்லாத்தான் இருக்கு." என்று சொல்லிக்கொண்டே, அவன் அம்மாக்காரி வேறுபுறமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டு கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

ஒரு மணி நேரம் ஆகியிருக்கும்.

மருமகள்காரி, மாமியாரிடம் வந்தாள்.

"வாங்கத்தே சாப்பிடலாம் இந்த வயசுல பட்டினி கிடந்தா உடம்புக்கு ஆவாது. ஒரு வாயாவது சாப்பிடுங்க."

மருமகள்காரியின் கரிசனம், மாமியார்காரிக்குப் புரியவில்லை. "தின்னுட்டுப் படுக்கவேண்டியதுதான். சாப்புடுறதுக்குத் தாங்கணுமாக்கும்." மருமகளின் புதிய கரிசனம், சோகத்தைச் சற்றுக் குறைத்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். 'வட்டில்' உட்கார்ந்திருந்த மகன்

முத்தையாவின் தலையைக் கோதிவிட்டுக்கொண்டே, "நீ படேண்டா!" என்று அவள் சொன்னபோது, அவள் கண்ணீர் முத்தையாவின் தலையில் சூடாக விழுந்தது. முத்தையாவுக்கு என்னவென்று புரியவில்லை. கண்ணுங் கெட்டு, காதுங் கெட்ட அய்யாவுக்கோ எதுவுமே தெரியவில்லை.

கிழவி, மகனைக் கொஞ்சநேரம் விழுங்கிவிடுவதுபோல் பார்த்துவிட்டு "முத்தையா... ஜாக்கிரதையாப் படுடா. பூச்சி புழு இருக்கான்னு பாத்துப் படு! நாளைக்கித் தோட்டத்துக்குப் போக வேண்டாம்" என்று சொல்லிவிட்டு, சமையலறைக்குள் மருமகளோடு போனாள். குழந்தையின் தொப்புள்கொடி, மாலைமாதிரி கழுத்தைச் சுற்றி இருந்த காட்சி அவள் மனத்தை வதைத்தது.

நார்க்கட்டிலில், தன்னோடு ஒண்டிக்கொண்டு கிடந்த அந்த மான்குட்டியை, பாக்கியம் பார்த்துச் சிரித்துக்கொண்டாள். பிரசுரமான முதல் கதையைப் பார்க்கும் புதிய எழுத்தாளனின் பெருமிதத்தைப்போல் தலைப்பிள்ளையின் தலையைச் செல்லமாகக் கோதிவிட்டாள். கிழவி உள்ளே வந்தாள்.

"அம்மா... இந்தப் பயல பாரு! அய்யா காலு மாதிரியே இருக்கு பாத்தியா! காத பாரும்மா. அண்ணனோட காது மாதிரி... தாடையோட ஒட்டிக்கிட்டு இருக்கத பாரேன். முகம் யாரு மாதிரிம்மா இருக்கு?"

கிழவி பேச்சை மாற்றினாள்.

"பாக்கியம்... ஒன் அண்ணனுக்கு மூக்குல ஒரு துளை இருக்கே அது எதுக்குன்னு தெரியுமா?"

"என்னம்மா... பச்சைப் பிள்ளக்கிட்ட பேசறதுமாதிரி பேசுற! ஏழுபேரு செத்துப்போனாங்க. இவனாவது தங்கட்டுமுன்னு மூக்கில வளையம் போட்டதாயும்... அந்த வளையம் அப்புறம் விழுந்துட்டுதுன்னும் எத்தன தடவ சொல்லியிருக்க? எதுக்கும்மா கேக்குற?"

''ஒண்ணும் இல்லம்மா... நமக்குக் கறிவேப்பிலமாதிரி ஒருவன் இருக்கான், தங்கச்சின்னா உயிர விடுவான்.

''இத நீ சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா... உன் வீட்டு மருமவன் என்ன ஒருநாள் செல்லமா திட்டுனாரு. அண்ணாச்சிக்கு அதுகூடப் பிடிக்கல. 'அவிய' கூட பேசாம நேரா வீட்டுக்கு வந்துட்டாரு. அவியகூட அப்புறம் ஒரு மாசம் பேசலியே.''

''நீன்னா அவனுக்கு உசிருமா. ஆனால் அவன் உசிரு தான் இடையில போயிடும்போல தோணுதம்மா!'

''நீ... நீ... என்னம்மா சொல்ற! அண்ணாச்சிக்கு ஒண்ணுன்னா... முதல்ல நான் இருக்கமாட்டேன்! சீக்கிர மாச் சொல்லும்மா. அண்ணாச்சி உடம்புக்கு ஏதாச்சும்... சொல்லேன். சீக்கிரமாச் சொல்லித் தொலையேன்!'

''பிள்ள குலமழிச்சா பெத்தவ என்ன செய்வா?''

''உனக்கு அறிவிருக்கா! என்னம்மா நடந்தது? அண்ணாச்சிக்கு என்ன? ஐயோ சொல்லும்மா!''

''உன் மவன், மால சுத்தி பிறந்திருக்காம்மா! மாம னுக்கு ஆகாதே!''

பாக்கியம் ஸ்தம்பித்துப் போனாள். ஒருகணம், தன் பிள்ளையை வெறுப்போடு பார்த்தாள். அதனிடமிருந்து சிறுது விலகினாள். அவளை ஒட்டிப் படுத்துக் கிடந்த குழந்தை, இதனால் லேசாகப் புரண்டது. கை, உடம்புக்குள் சிக்கியது. பாக்கியத்திற்கு மனசு கேட்கவில்லை. குழந்தை யின் கையை எடுத்து சரி செய்துவிட்டுத் தன்னோடு அணைத்துக் கொண்டாள். அம்மாவை வெறித்துப் பார்த்தாள்.

''நான் பாவிம்மா... எனக்குக் கல்யாணமே ஆயிருக்கக் கூடாதம்மா. ஐயோ! கடவுளே! குழந்தை பிறக்கணுமுன்னு யாரு கேட்டா! பாவி கடவுளே! அண்ணாச்சி! அண்ணாச்சி!'

''ஏம்மா அழுவுற... நீ என்னம்மா பண்ணுவே, கவலைப் படாதம்மா. இந்த பிள்ள போனா, இன்னும் எத்தனையோ பிள்ளை பெத்துக்கிடலாம்மா... ஆனால் உன் அண்ணாச்சி போயிட்டா...''

''நீ என்ன சொல்ற?''

''இதவிட எப்படிம்மா சொல்லுவேன்! செவத்தியா புரத்துல ராமசாமி பேத்தியாளுக்கும் இப்படித்தான் மால சுத்தி பிறந்தது. கழுத்த நெறிச்சு...''

''அம்மா!'' என்று கத்தினாள் பாக்கியம். பிள்ளையை மார்போடு அணைத்துக்கொண்டாள். ஆழமான கிணற்றுக்குள் சிக்கிக்கொண்டிருப்பது போன்ற பிரமை. வாய்வழியாகக் கிணற்று நீர் உடல் முழுதும் வியாபிப்பது போன்ற கனம்.

''இதைச் சொல்ல உனக்கு எப்படிம்மா மனசு வந்தது?''

''பெத்த வயிறு கேக்கலம்மா!''

''என் பெத்த வயிறு மட்டும் எப்படிம்மா கேக்கும்?''

கிழவி குற்ற உணர்வில் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். பிறகு தலையில் அடித்துக்கொண்டே அழுதாள். மகள் அருகே சென்று அவளை அணைத்துக்கொண்டாள். பிறகு மெள்ள பேச்சைத் துவக்கினாள்.

''இந்தா பாரும்மா... எனக்கு அவன் பிள்ள இல்லியா! பேரு சொல்றவன் பேரன்பாங்க... ஆனால் உன் அண்ணாச்சி இந்த நாப்பது வயசுல... எங்களால தாங்கமுடியுமாம்மா?''

''நான் மட்டும் அண்ணாச்சிய விட்டுட்டுத் தாங்கிக்கிடுவேனா? நான் தங்கார புள்ளியா? (சுயநலவாதியா)''

''அதனாலதான் சொல்லுதேன். ஒன் பிள்ளக்கி பிறந்தவுடனே, கணச்சூடு வந்திட்டு, நாலு நாளையிலே போயிடுமுன்னு குடிமவா சொன்னா!''

''தானாச் சாவுறத, நீ எதுக்கும்மா சாகடிக்கணும்?'

''இந்த நாலு நாளுல முத்தையாவுக்கு ஏதாவது வந்துட்டா?''

பாக்கியம் காதுகளைப் பொத்திக்கொண்டாள். வேறு பக்கமாகப் படுத்துக்கொண்டு குலுங்கக் குலுங்க அழுதாள். கிழவியின் நடுங்கும் கைகள் குழந்தையின் கழுத்தை நோக்கிப் போயின. அப்போது—

முத்தையா தன் மனைவியை தரதரவென்று இழுத்துக் கொண்டு உள்ளே வந்தான். அவன் இடுப்பில் இருந்த மூன்று வயதுப் பையன் துரை, தூக்கக் கலக்கத்தில் அப்பனின் தோளில் விழுந்துகொண்டும், பிறகு தலையைத் திடுக்கிட்டு எடுத்துக்கொண்டும் இருந்தான். அய்யாவு தாத்தாவும் தள்ளாடிக்கொண்டு வந்தார். கிழவி கைகளைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டாள்.

முத்தையா, கிழவியின் கைகளைப் பார்த்துக்கொண்டே நிதானமாகப் பேசினான்:

''ஓஹோ! இவன் இருந்தா நான் இருக்கமாட்டேனா, அப்படின்னா தங்கச்சி மவன கொன்னுட வேண்டியதுதான். ஆனால் ஒண்ணு. இன்னா... இடுப்பில் இருக்கானே இவன் ஜாதகப்படி இவனுக்கு மூன்று வயசுல அப்பனுக்குக் கொள்ளி போடணுமாம். இவனுக்கு நான் கொள்ளி போட்டுட்டா அவன் எனக்குக் கொள்ளி போட முடியாது. அதனால இவனையும் கொன்னுடுறேன்!''

முத்தையா இடுப்பில் இருந்த மகனைத் தரையில் இறக்கிவிட்டு அவன் கழுத்தை நெறிப்பதுபோல் 'பாவலா' காட்டினான். அவன் மனைவி பதறிப்போய்ப் பையனைத் தூக்கிக்கொண்டு வெளியே போகப் போனாள். அப்படிப் போனவளின் தோளைப் பிடித்து நிறுத்திவிட்டு, ''உன்ன மாதிரிதாண்டி என் தங்கச்சிக்கும் இருக்கும். அறிவு

கெட்டவுளுகா... மாலை சுத்தி பிறந்தானாம். கொல்லணுமாம்...! அப்படியே நான் போனால் போறேன்! நாப்பது வருஷம் வாழ்ந்தாச்சு. என் தங்கச்சி மவன் சாகடிச்சிட்டு நான் வாழணுமா? அப்படியே நான் போயிட்டாலும் என் மருமவன் என் பேரச் சொல்லுவாண்டி. ஒன் பிள்ள ஒன் அண்ணன் மாதிரி முடிச்சிமாறிப்பய பிள்ள... என் தங்கச்சி மவன் இருக்கதுக்காக நான் இறக்க தயாருடி... அறிவு கெட்டவுளுகா...''

அய்யாவு, ''அப்படிச் சொல்லாதய்யா, சொல்லாதய்யா'' என்று அவன் தோளில் தலையைவைத்து குலுங்கிக் குலுங்கி அழுதார். பாக்கியம் விம்மினாள். கிழவி தன் விரல் களுக்கு 'சொடக்கு' விட்டுக்கொண்டே அழுதாள்.

முத்தையா அவர்களைப் பார்த்தான்.

''அம்மா, ஒனக்குத்தான் சொல்லுகிறேன். என் தங்கச்சி மவன ஏதாவது பண்ணிட்டே.... நான் ஒனக்கு பிள் ளயா இருக்கமாட்டேன்! எல்லாத்துக்கும் சொல்லுதேன்! ஏதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு நடந்துதுன்னா மூட்டைப் பூச்சி மருந்த சாப்பிட்டுட்டு யாரும் கண்டுபிடிக்க முடியாத இடத்துல போயி கிடப்பேன்! இது சத்தியமான வார்த்தை! குழந்தை கழுத்த பிடிக்காதம்மா... சொள்ளமாடன் காலப் போயி பிடி! பிள்ளய கொல்லப்போறாளுகளாம். அறிவு கெட்டவுளுக... என்னக் கொல்லணுமுன்னா பிள்ளயக் கொல்லு...''

முத்தையா போய்விட்டான். அய்யாவு தாத்தா மனைவியைப் பார்த்து, ''பிள்ளக்கி தற்செயலா ஏதாவது நடந்தாலும் நீதான் செய்துட்டன்னு அந்த குரங்கு பய மவன் எதையாவது குடிச்சிடுவான். அதனால குழந்தைய ஜாக்கிரதையா பார்த்துக்கடி. ஒப்பன மாதிரி பராக்கு பாக்காத.''

கிழவிக்குப் புரிந்தது. இப்போது. குழந்தையை எப்படிக் காப்பாற்றுவது என்பதுதான் அவள் கவலை.

''குடிமவளக் கூட்டிக்கிட்டு வாம்மா...கணைக்கு மருந்து குடுக்கணும். சீக்கிரம்மா... நான் சொன்னேன்னு கையோடு கூட்டியா.''

மாமியாரின் உத்தரவிற்கு என்றுமே கீழ்ப்படியாத மருமகள், இப்போது 'குடிமவளை' கூப்பிட ஓடிக்கொண் டிருக்கிறாள்.

# பகலில் சென்னை

அந்த பல்லவ பஸ்ஸுக்குள் என்ன காரணத்தாலோ ஏற்பட்ட கலாட்டா, வெளியேயும் பரவி அதன் பலனாக பஸ்ஸின் முன் கண்ணாடி கல்லெறிபட்டு பாளம் பாளமாக வும், சுக்கல் சுக்கலாகவும் தெறித்தபோது—

பயணிகளில் சிலர் தைரியசாலிகள் பஸ்ஸின் முன் வாயில் வழியாகக் குதித்தார்கள். 'மற்றும் பலரோ' வெளியே போகமுடியாமலும், உள்ளே இருக்க முடியாமலும் நிலை குலைந்து தவித்தார்கள். பெண்களின் ஒப்பாரியும், குழந்தை களின் கூக்குரலும் ஆண்களின் அலை மோதலுமாய் அமளி நிலவியபோது—

பஸ்ஸுக்கு உள்ளேயே தூக்கித் தூக்கிப் போடும் பின் னிருக்கையில் இருந்த வேதா, கிட்டத்தட்ட அழத் துவங்கி விட்டாள். கல்லூரியில் படிப்பவள். அரசியல் ஆர்ப்பாட் டங்களைப் பார்த்தவள். என்றாலும், இவ்வளவு நெருங்கிய தூரத்தில் கல்லெறி கலாட்டாக்களைப் பார்க்காதவள். வழியெங்கும் கண்ணாடித் தோட்டாக்கள் அவளை நோக்கிப் பாய்வது போலிருந்தது. ஒவ்வொரு கண்ணாடித்துண்டு பாய்ச்சலுக்கும் ஒவ்வொரு 'அம்மா' போட்டாள். இவ் வளவுக்கும் அவள் சிறுமியல்ல. பத்தொன்பது வயதுக்காரி. நோஞ்சானும் அல்ல. கல்லெறியை ஓரளவு தாங்கிக் கொள்ளும் அளவில் அமைந்த மேனிக்காரி. அவள் உச்சந்

தலையில் ஒரு கோலியை வைத்து, அதில் ஒரு நூலைக்கட்டி முகம் வழியாகக் கீழே தொங்கப்போட்டால், அந்த நூல் இரு சாண் இறக்கத்தில் மட்டும், லேசாய் மேடுபட்டு பிறகு நெளியாமலே பாதங்களுக்கு இடையே விழும். அப்படிப்பட்ட நேர்கோடு உருவக்காரியின் பாதங்களுக்கு மத்தியில் இப்போது நிசமாகவே ஒரு கல் விழுந்தது. உடனே அவள் எட்டுக்கால் பூச்சிபோல் உடம்பை வளைத்து 'எம்மாடாடி' என்று இருமொழியில் கூக்குரலிட்டு எழுந்தபோது—

அவளுக்கு இருபக்கமும் உட்கார்ந்திருந்த இரண்டு பெண்கள் அவளோடு அவளாய் எழுந்தார்கள். அவளை 'அச்சச்சோ' போட்டு பார்த்தபடியே ''நாங்க இருக்கோம். கவலைப்படாதே பாப்பா'' என்று சொன்னபடியே ஒருத்தி அவள் முதுகைத் தட்டிக்கொடுத்தாள். வேதா மாதிரியான 'பாப்பா வயதுக்காரி' ''நான் அழுகிறேனா... அழாதீங்க'' என்று தன்னையே முன்னுதாரணமாக்கி அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டாள். அந்த அன்பு வெள்ளத்தில் வேதா மெய்மறந்தபோது, அந்த இரண்டு பெண்களும் அவளை அவள் தோளில் தொங்கிய ஜோல்னா பையுடன் சேர்த்து அணைத்தபடியே பஸ்ஸின் பின்வாசல் வழியாக படிப்படியாய் இறங்கி தரையில் விட்டார்கள்.

வேதாவுக்கு உடலெல்லாம் புல்லரித்தது. இப்படிப்பட்ட அன்பை தாயிடம்கூட கண்டதில்லை. தந்தையிடம் பார்த்ததில்லை. அந்தப் பெண்களுக்கு நன்றி சொல்வதற்காக ஏறிட்டுப் பார்த்தாள். நான்குபுறமும் திரும்பிப் பார்த்தாள். அவர்களை எங்கேயும் காணோம். ஒருவேளை கூட்டத்திற்குள் சிக்கியிருப்பார்களோ என்று பயப்படாமல் அந்த வன்முறைக் கும்பலுக்குள் எட்டிப் பார்த்தாள். காணவில்லை. வேதா யோசித்தாள். புறநானூறில் ''உண்டால் அம்ம'' என்று வருமே அதுமாதிரி, கைமாறு கருதாமல் உதவக்கூடியவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

வேதா நடந்தாள். அதோ பாரிமுனை தெரிகிறது. நடக்க நடக்க, அது மலை மாதிரி போய்க்கொண்டுதான் இருக்கும். ஆனாலும் பதினைந்து நிமிடத்தில் நடந்துவிட லாம். இதுக்காக இன்னொரு பஸ் வேண்டாம். பாரிமுனை யில் இருந்து திருவான்மியூருக்கு நேரடி பஸ் இருக்கவே இருக்குது.

வேதாவுக்கு நடக்க நடக்க வலதுதோள் வலிப்பதுபோல் இருந்தது. அதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று ஐந்து நிமிடம் வரை யோசித்தபடியே தொடர்ந்து நடந்த வளுக்கு அப்புறம்தான் புரிந்தது. லேசாய் தனது மக்குத் தனத்தையே எள்ளி நகையாடுபவள்போல் சிரித்துக்கொண் டாள். வலது தோளுக்கு வலிகொடுத்த ஜோல்னா பையை இடதுதோளுக்கு மாற்றுவதற்காக அதை எடுத்தாள். உடனே—

கண்கள் பறிக்கப்பட்டவள்போல் அவற்றை உருட்டாமல் பிறட்டாமல் வைத்தபடியே அந்தப் பையைப் பார்த்தால், மேலே போட்டிருந்த ஜிப் என்னமோ மூடித்தான் கிடந்தது. ஆனால் அந்தப் பையின் மத்தியப் பகுதியில் சதுரமான ஓட்டை. ஒரு கையை உள்ளேவிட்டு, தாராளமாக வெளியே எடுக்கலாம். பைக்குள் வெள்ளை வாயில் புடவை இருந்த தால் அது ஓட்டை மாதிரி தெரியாமல், பேஷனுக்கு வெள்ளைத்துணி தைத்து வைக்கப்பட்டிருப்பதுபோல் தோன்றியது.

வேதா அவசர அவசரமாக ஜிப்பைத் திறந்தாள். கை போட்டுத் துழாவினாள். பர்ஸைக் காணவில்லை. ஐந்து ரூபாய் நோட்டுக்களையும், ஒரு இரண்டு ரூபாய் நோட்டை யும் உள்ளடக்கிய பர்ஸ். இல்லவே இல்லை. பைக்குள் இருந்த ஒவ்வொரு துணியாக வெளியே எடுத்து உதறினாள். இதற்குள், இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் எங்கேயும் கூடும் கூட்டம் அங்கும் கூடப்போனது. அவள் பைக்குள் துணி களை மீண்டும் பலவந்தமாய் திணித்துவிட்டு, ஓட்டமும்

நடையுமாக நடந்தாள். பிட்ஸஸ்... வுட்ஸஸ்... அந்த ரெண்டு ரூபாய் நோட்டையாவது வச்சிருக்கலாம். இப்போ வீட்டுக்கு எப்படிப் போவது? அடக்கடவுளே... கடவுள் எதுக்குடி... ஆட்டோ ரிக்ஷா இருக்குதே...''

வேதா எதிர்ப்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்களை கையாட்டியபடியே நடந்தாள். ஒருசிலர் கண்டுக்கவில்லை. ஆனாலும் ஒன்று வந்து நின்றது. அதுவும் கிழடு. அதன் டிரைவரும் கிழடு. வேதா இனிமையாகக் கேட்டாள்:

''திருவான்மியூருக்கு வாறிங்களா...''

''அய்யோ! திருவான்மியூரா! எந்த ஊருக்குப் போனாலும் போவேன். அந்த ஊருக்கு மாட்டேம்மா!''

ஆட்டோக் கிழடு போய்விட்டார். அதுபோன வேகத்தில் இன்னொரு ஆட்டோ சடன் பிரேக்கால் சக்கரங்கள் தரையில் கோடுகள் போடும்படி வந்து நின்றது. அவளை எங்கே வேண்டுமானாலும் கொண்டுபோகத் தயார் என்பது போல் குறுந்தாடி டிரைவர் அவளை குற்றேவல்காரர் போல் பார்த்தார்.

வேதா அந்த ஆட்டோ ரிக்ஷாவில் ஆனந்தமாகத்தான் ஏறப்போனாள். திடீரென்று ஆட்டோக் கிழவர் சொல்லி விட்டுப்போன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. சில திரைப்படங்களும், புத்தகங்களுக்குள் மூடி வைத்தும் படித்த மாத நாவல்களும், இப்போதைய பத்திரிகை செய்திகளும் நெஞ்சுக்குள் ஊடுருவி அவளைப் பயமுறுத்தின. இந்த டிரைவர் நல்லவராக இருக்கலாம். ஆனால் எதில் ரிஸ்க் எடுத்தாலும் கற்பில் ரிஸ்க் எடுக்க முடியுமா...

வேதா ஆட்டோவை நோககி முன்வைத்த காலைப் பின் வைத்தாள். ஆட்டோ டிரைவர் முனங்கியபடியே வண்டியை நகர்த்தினார். வேதா நடக்க நடக்க யோசித்தாள். பஸ்சுக்கோ பணமில்லை. ஆட்டோவோ அபாயம். வீட்டுக்கு

எப்படிப் போவது? திடீரென்று அவளின் படிக்காத சித்தப்பா சொன்னது நினைவுக்கு வந்தது. 'பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவாது' என்பார். டெலிபோனுக்கு உதவாதா என்ன... உதவும். வீட்டில் டெலிபோன் இருக்கு. அதுவும் பழைய படாதி டெலிபோன் அல்ல. பட்டன் கொண்ட டெலி போன். டாடிக்கு போன் செய்தால் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு ஓடி வரமாட்டாரா...

வேதா பர்மா பஜாரைத் தாண்டி டெலிபோன் இருக்கும் கடைகளைப் பார்த்தபடியே நடந்தாள். பல கடைகளில் ஏறி இறங்கினாள். ஒரு கடையில் டெலிபோன் அவுட்டாப் ஆர்டராம். இன்னொரு கடையில் ரெண்டு ரூபாயாம். மற்றொன்றில் சாவி இல்லையாம். இந்தக் கடைகளை விட்டுவிட்டு, அல்லது அந்தக் கடைகளால் கைவிடப்பட்டு அவள் ஒரு துணிக்கடைக்குள் நுழைந்தாள். ஆண் பெண் ஆடைகளைக்கூட ஒன்றாக சேர்ப்பதில் ரசனை கண்டவர் போல் சேலைமேல் பேண்ட் துணியை விரித்துப் போட்ட சேவகர் ஒருத்தர் அவளை வரவேற்றார். ''பாலிஸ்டரா? பாரினா? பட்டா?'' என்று அடுக்கடுக்காய் கேட்டார். வேதா முதல் தடவையாகப் பிச்சைக்குப் போனவள்போல் கேட்டாள்:

''வீட்டுக்கு ஒரு டெலிபோன் செய்யணும் சார்!''

''கொடுக்கிறதில்லம்மா...''

''பர்ஸ் பிக்பாக்கட் ஆயிட்டு சார். அப்பாவை ஸ்கூட்டர்ல வரச்சொல்லணும் சார்.''

''அய்யய்யோ! ஆனாலும் நான் ஓனர் இல்லம்மா.''

''அப்பா வந்ததும் நீங்க எந்தப் புடவையை எடுக்கச் சொல்றிங்களோ அதை எடுக்கிறேன் ஸார். அப்பாவையும் பேண்ட் பீஸ் எடுக்கச் சொல்றேன் ஸார்! டெலிபோன் பீஸையும் கொடுத்திடுறேன் ஸார்!''

''சரி, சரி, மடமடன்னு பேசு! நம்பர் சொல்லு. நானே டயல் செய்யுறேன். ஏன்னா சிலர் ரெண்டு ரூபாய்க்கு டில்லிக்கு எஸ்.டி.டி. போட்டு பேசிடுவாங்க. நீ அப்படி இல்லன்னு தெரியும். இருந்தாலும் கண்டிஷன்னு ஒண்ணு வச்சிருக்கோம் பாருங்க!''

வேதா உதடுகளைக் கடித்தபடி சேவகர் சொல்வதைக் கேட்டுவிட்டு, ஒவ்வொரு நம்பராகச் சொல்ல, அதற்கேற்ப அவர் டயலைச் சுழற்ற, அந்தக் கடையின் 'நம்பர் ஒன்' வழுக்கைத் தலை கல்லாவில் இருந்து குதித்து, அவர்களுக்கு இடையே வந்து கர்ஜித்தது:

''டெலிபோனுக்குக் காசு வாங்கினியா...

''வந்து ஸார்... இந்தப் பெண்ணோட...'

நீங்க ரெண்டுபேரும் கிசுகிசு பேசினதை நான் கவனிச்சுட்டுத்தான் வாறேன். அறிவுகெட்ட கம்மனாட்டி, இந்தக் காலத்து நாகரீகத் திருடு பற்றி ஒனக்குத் தெரியாதா! டெலிபோன் செய்யுற சாக்குல ஒரு பட்டையோ, பாலிஸ்டரையோ பைக்குள்ளே வச்சுட்டால் ஒப்பனா காசு தருவான். ஓம்மாவா திருப்பித் தருவாள்! எந்த அழகான பெண்ணும் ஒன் கண்ணுல பட்டுடப்படாதே! கடையையே தூக்கிக் கொடுத்திடுவியே! அடுத்த வாரம் ஒன் கணக்கைத் தீர்க்கேனா இல்லியான்னு பாரு! இந்தாம்மா, ஒன்னைத்தான். மொதல்ல இடத்தைக் காலி பண்ணு. காலங்காத்தாலே, பத்துமணிக்குக் கடையைத் திறந்தவுடனேயே கலாட்டாவா, உருப்பட்டாப்லதான். இந்தாடா இந்தப் பொண்ணோட பையை செக் பண்ணி அனுப்பு. ஒன்னை இல்லடா. நீ ஒரு துணியை அவள் பைக்குள்ளே வைச்சுக்கூட அவளை வழியனுப்புவே!''

பாண்டவர் காலத்தில் துச்சாதனனாகப் பிறந்திருக்கக் கூடிய கடைச் சேவகன் ஒருத்தன் வேதாவின் ஜோல்னா பையைத் துழாவினான். துணிகளை எடுத்து வெளியே

போட்டான். அப்படியும் திருப்தியடையாமல் ஒவ்வொரு துணியையும் உதறினான். அந்தப் பையைத் தலைகீழாகத் தூக்கினான். அவள் எதையும் ஒளித்து வைத்திருப்பாளோ என்று அவள் மார்பகத்தைக்கூட உன்னிப்பாய் பார்க்கப் போனான். வேதா கூனிக் குறுகினாள். பிறகு கோபத்தோடு திட்டப்போனாள். ஆனால் வாய்த்திட்டுக்களுக்குப் பதிலாக, கண்களில்தான் திட்டுத் திட்டாக கண்ணீர் வந்தது. அவன் நீட்டிய ஜோல்னா பையை வேண்டா வெறுப்பாய் வாங்கியபடியே வெளியேறினாள்.

வேதா அங்குமிங்குமாய் நடந்து அலைமோதினாள். ''வீட்டுக்கு எப்படிப் போவது?'' ஏன் போகமுடியாது? அதோ ''உங்கள் நண்பன்'' போலீஸ் ஸ்டேஷன் இருக்குதே. அப்பா செக்கரட்டேரியட்டில் அண்டர் செக்கரட்டரி. அவர் பேரைச் சொன்னாலே போதும். போதுமோ போதாதோ, இந்தமாதிரிச் சமயத்தில் உதவுவது போலீஸ் கடமையாச்சே!''

வேதா, அந்தக் காவல்நிலையத்திற்குள் வந்தபோது, லாக்கப்வாசிகள் சந்தோஷப்பட்டு எதையோ எழுதிக் கொண்டிருந்த ரைட்டரை ''ஸார்... ஸார்'' என்றார்கள். உடனே கோபத்தில் முகம் திரும்பிய ரைட்டர் மகிழ்ச்சியை முகமாக்கினார். பிறகு முகத்தை மீண்டும் கஷ்டப்படுத்திய படியே அவளை அதட்டலாகப் பார்த்தார். வேதா மன்றாடும் தொனியில் விளக்கப்போனாள்:

''ஸார் எங்கப்பா.

''ஓங்கப்பா யாரா இருந்தா என்ன, விஷயத்துக்கு வா!''

''என் பணத்தை பிக்பாக்கெட் செய்துட்டாங்க. திருவான்மியூர்ல வீடு. வீட்ல...'

ரைட்டர் 'ராங்கரானார்.' மனதுக்குள்ளேயே எப்ஐஆர் எழுதினார். பெண்ணோ அழகு, ஊரோ ஏடாகோடம். கேஸோ பிக்பாக்கெட்! மாதமோ கடைசி. நல்ல கேஸாத்தான் வந்திருக்கு. ஜாமின்லகூட விடப்படாது.

ரைட்டர் பதவித் தோரணையில் பேசினார்:

''இதோ பாரும்மா! நீ எது பேசணுமுன்னாலும் இன்ஸ்பெக்டர்கிட்டேதான் பேசணும்.''

"ஸார் நான் என்ன சொல்ல வந்தேன்னா..."

''சொல்லவேண்டியதை இன்ஸ்பெக்டர் கிட்டேதான் சொல்லணும்.''

''அவர் எப்போ வருவார்?''

இப்போ வரலாம்! சாயங்காலம் வரலாம்! வீட்டுக்குப் போனாரோ... பீட்டுக்குப் போனாரோ!''

''அப்போ!''

''அதுவரைக்கும் நீ இங்கேயே உட்காரணும்.''

''எங்கப்பாவுக்கு மட்டும் தெரிஞ்சா!''

''சரிதான் உட்காருமே! நீ யாரோ... எவேளா··· எது வேணுமுன்னாலும், இன்ஸ்பெக்டர் வந்து ரிகார்ட் செய்வார். இந்தண்ட அந்தாண்ட நகராமல் இங்கேயே இரு. இல்லன்னா உள்ளே தூக்கிப்போட்டுடுவேன்... ஏய் டூ நாட் ஒன்.''

வேதாவுக்கு, பயம் பிடித்தது. அந்த பயமே பீதியானது. கைகால்கள் ஓடப்போவதுபோல் ஆடின. இதற்குள் ஒரு டெலிபோன். ரைட்டர் இன்ஸ்பெக்டர் அறைக்குள் ஓடிப் போய் டெலிபோன் குமிழைத் தாவிப் பிடித்தபோது, லாக்கப்வாசிகள் அவளை 'போயிடு, போயிடு' என்பது போல் சைகை செய்தார்கள்.

வேதா, அந்த காவல் நிலையத்தை விட்டு பூனைமாதிரி நகர்ந்தாள். பிறகு போலீசுக்கு அகப்படாமல் இருப்பதற்காக சந்துபொந்துகளில் ஓடினாள். அப்போது ஒரு சிலர் அவளைச் சந்தேகமாகப் பார்த்தபோது, ஓட்டமும் நடையுமாக நடந்தாள். முட்டுச்சந்து, மூடச்சந்து, முடியாத சந்து என்று சந்து சந்தாகவும், ஒண்ணாவது தெரு, இரண்டாவது குறுக்கு, நாலாவது லேன் என்று தெருத்தெருவாகவும் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியும், அப்படித் திரும்பினால்,

அடையாளம் கண்டுகொள்ளப்படலாம் என்று திரும்பாமலும் ஓடினாள். கால்கள் தானாக நின்றபோது அவளுக்கு நின்ற இடமோ அதன் திக்கோ திசையோ தெரியவில்லை. இவ்வளவுக்கும் ஒரு ஐம்பது வயதுக்காரனிடம்தான், அவள் கேட்டாள்—திருவான்மியூருக்கு எப்படி வழி என்று. ஆனால் அந்த மனிதரோ, "என்கூட வா" என்று சொல்லி அவளுக்கு இணையாக நடந்தார். அவள் தந்தையோடு நடப்பதுபோல் நடந்தபோது, அவர் கையைப் பற்றியபடியே "ஹோட்டலுக்குப் போயிட்டுப் போகலாம்" என்றார். வேதா பீதியுற்றாள். அந்தப் பீதியுடன் இனந்தெரியாத தைரியமும் தானாய் வந்தது. அவரைக் கோபமாகவும், விரோதமாகவும் முறைத்துப் பார்த்தாள். மீண்டும் ஓட்டமும் நடையுமானாள். ஆங்காங்கே போலீஸாரைக் கண்டபோது மட்டும், தன்னைத்தானே மறைத்துக் கொண்டாள்.

எப்படியோ, கடற்கரைச் சாலையைக் கண்டுபிடித்து, கண்ணகி சிலையைக் கடந்து வானொலி நிலையத்தைத் தாண்டி வேகவேகமாய் நடந்தாள். வடசென்னையில் இருக்கும் சித்தியை கோபம் கோபமாய் நினைத்துக்கொண்டாள். 'நான் தனியாகவே திருவான்மியூருக்குப் போறேன்னு சொன்னது நிசந்தான். அதுக்காக, என்னைத் தனியாகவே விட்டுடுறதா... இனிமேல் வடசென்னைக்கே போகப்படாது! காலேஜுக்குக்கூட டாடியை ஸ்கூட்டர்லதான் கொண்டு போய் விடச் சொல்லணும். இல்லன்னா லூனா வாங்கித் தரட்டும்."

வேதாவுக்கு தாகம் எடுத்தது. உச்சிவெயில், உள்ளங்கால்களைக்கூடத் துளை போட்டது. தலை சுற்றியது. கீழே விழப்போவது போன்ற மயக்கம். பெற்றோரையும் உடன் பிறந்தோரையும் பார்த்துவிட்டுத்தான் உடல் சாய்க்க வேண்டும் என்ற உறுதி.

இடையிடையே இளைப்பாறாமலே, எந்தப் பக்கமும் கண்களைத் திருப்பாமலே, வேதா நடந்து நடந்து, வீடு

இருக்கும் தெருவுக்கு வந்துவிட்டாள். அங்கே அப்பா, அம்மா தம்பி, தங்கைகள் வாசலுக்கு வெளியே நின்றார்கள். அம்மா அங்கிருந்தபடியே இரண்டு கைகளையும் நீட்டினாள். அவள் தம்பி அவளை நோக்கி ஓடி வந்து வேதாவின் கையைப் பிடித்துக்கொண்டே கதைபோல சொன்னான்:

''எக்கா, எக்கா! அம்மா அழுதுட்டாங்க. நானும் அழுதுட்டேன். இந்த பாருதான் அழலக்கா. திருட்டுப் பொண்ணு, அவளுக்கு டி.வி.யில் இந்தி டிராமாவுக்கு அர்த்தம் சொல்லாதே. டாடி இப்படி பயந்து நான் பார்த்ததே இல்லை. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகப் போனார். மம்மிதான் தடுத்துட்டாங்க. எங்கக்கா போனே, சித்தி... நீ காலையில ஒன்பது மணிக்கே பஸ் ஏறிட்டதாய் போன் போட்டாள். ஏன் லேட் எனக்கு என்ன வாங்கீட்டு வந்தே!''

''என்னையே வாங்கிட்டு வந்திருக்கேன் ராஜா!''

வேதா, ஓடினாள். பெற்றோர்கள் மார்பில் சாயவோ, மனம்விட்டுக் கதறவோ ஓடினாள். தனக்காக அவர்கள் பட்ட வேதனையில், பாசத்தின் சாதனையைக் கண்டவளாய் சிரிப்பும் அழுகையுமாக அவள் ஓடியோடி வீட்டு வாசலுக்குள் நுழைந்தபோது—

'டாடி' அவளருகே நெருங்கி வந்தார். வேதா, தந்தையின் தோளில் சாயப்போனாள். ஆனால் அவரோ அவள் தலைமுடியை வலது கையால் பற்றினார். பற்றிய கையைச் சுற்றினார். அவள் சுருண்டு விழுந்தாள். விழுந்தவள் விலாவைக் காலால் இடறியபடியே அப்பாக்காரர் கத்தினார்:

''எச்சிக்கலை நாயே! வீட்டுக்கு எப்போ வேணுமுன்னாலும் வரலாம் என்கிற அளவுக்கு திமிரு வந்துட்டா? நாலுமணி நேரமாய் எங்கே போனே? பொட்டைக் கழுதைக்கு இவ்வளவு தைரியமா... ஏய் விடுடி என்னை... எல்லாம் நீ கொடுத்த செல்லம்.''

# 'வெட்டி' மனிதர்கள்

நரிகளின் ஊளை அடங்கி, காட்டுக் கோழியின் கேவலா அல்லது கூவலா என்று கண்டுபிடிக்க முடியாத ஏதோ ஒரு மிகையான ஒலி, அவனை உசுப்பியது. சிதம்பரம், அவிழ்ந்திருந்த வேட்டியை, படுத்தபடியே கட்டிக்கொண்டான். ஒரு கிலோ மீட்டருக்கும் சற்றுக் குறைவான கிராமத்தில் இருந்து, ஒரு கோழிச் சத்தம், அவனுக்கு நன்றாகக் கேட்டதென்றால், அது அந்த கோழியின் பெருத்த சத்தமென்று அர்த்தமாகாது. அந்த நொண்டிக் கோழியின் சத்தத்தைக் கேட்கும்படி எங்கும் நிலவிய நிசப்தம் அனுமதித்தது. வினாடிபோல் கழிந்த இரவின் இறுதிக் கட்டத்தில், யுகம்போல் எழும் பகலை எதிர்நோக்கிப் புரண்டான்.

சிதம்பரம், கண்களை கசக்கிக்கொண்டே எழுந்தான். சுவரோடு சேர்த்துப் போட்டிருந்த பெஞ்சில் தூங்கிக் கொண்டிருந்த தம்பியைப் பார்த்தான். அவனது ஒரு கால், தனியே கிடப்பதுபோல் தரையில் கிடந்தது. அரணைக் கயிறு கால் சட்டைப் பட்டைக்கு மேலே பாதியும், வயிற்றில் பாதியுமாக மிதந்தது. சிதம்பரத்திற்குத் தம்பியை எழுப்ப மனமில்லை. அந்தப் பையன், ஆயுள்காலத் தூக்கத்தையெல்லாம் அன்றே தூங்கிவிடப் போகிறவன் போலவும், வேலைமிக்க பகல்பொழுதைச் சந்திக்க மறந்தவன் போல

வும், மறுப்பவன் போலவும், தொடையில் கடித்துக்கொண் ருந்த கட்டெறும்பின் கடிமானம் தெரியாமல் கட்டையாகக் கிடந்தான். சிதம்பரம் கீழே விழுந்த காலைத் தூக்கி, பெஞ்சி யில் போட்டுவிட்டு, கட்டெறும்பை அந்தச் சிறுவனின் தொடையில் வைத்தே தேய்த்துவிட்டு, தட்டிக்கதவை திறந் தான். ஹரிக்கேன் விளக்கைப் பற்ற வைத்தான். தொலை வில் கம்பீரமாகத் தெரிந்த மலையுச்சிக் கோவிலில் ஆலய மணி அடிபட்டுக் கொண்டிருந்தது.

பாய்லரின் அடிப்பாகத்தைத் தட்டிவிட்டு, கரிப்படிமங் களை துடைத்துவிட்டு, 'ஸ்டவ்' அடுப்பைப் பற்றவைத்தான். பாய்லரில் கரியைப் போட்டுவிட்டு, அதன் மேல்வாய் வழியாக, சிமெண்ட் தொட்டியில் இருந்த தண்ணீரை, 'டப்பு மூலம் மொண்டு மொண்டு ஊற்றினான். ஸடவ்வில், இருபக்கமும் இரும்புக் கடுக்கன் போட்ட 'கடாயை' தூக்கி வைத்தான். அது சுட்டது. கடலையெண்ணெயை ஊற்றி விட்டு, சிறிது நேரத்திற்குப் பின்பு, இரவில் அரைக்கப் பட்டிருந்த மாவை, பிடித்துப்போட, அவை மசால் வடை களாக எண்ணெய்யில் மிதந்தன. தோசை சுடவேண்டும். தம்பியைப் பார்த்தான். அவன் படுத்துக்கிடந்த விதம் அவனுக்குக் கலக்கத்தைக் கொடுத்தது உண்மைதான். பயந்துபோனவன்போல், தம்பியின் அருகே போய், மூக்குப் பக்கத்தில், நான்கு விரல்களை சேர்த்தாற்போல் அடுக்கி, நேராகக் கொண்டு போனான். மூச்சு வந்துகொண்டுதான் இருந்தது.

இதற்குள் ஊருக்குள் அரவம் கேட்டது. சிலர் நடந்து வரும் சத்தமும் கேட்டது. முதலில் பால்காரர் வந்தார். கேனில் இருந்த பாலை அளந்து கொடுத்துவிட்டு, 'டீக்காக காத்திருந்தார். தூங்கிக்கொண்டிருந்த பையன், 'மரித் தெழுந்தவன் போல்' எழுந்து, நேராக ஸ்டவ் அருகே தோசைமாவுடன் வந்தான். அதிகப்படியாகத் தூங்கிவிட்ட குற்றவுணர்வில், அவன் 'ஒண்ணுக்குப்' போவதைக்கூட கட்டுப்படுத்திக் கொண்டான்.

பலர் வந்தது தெரியாமலே வந்துவிட்டார்கள். மூன்று இளம்பெண்கள் நான்கு நடுத்தர வயதுப் பெண்கள். இளம் பெண்களின் சேலைகள், மரப்பட்டைகள் போல் மங்கிப் போயிருந்தன. ஒருத்தி கொடுத்து வைத்தவளாக இருக்க வேண்டும். இல்லையானால், இரண்டு சேலைகளைச் சேர்த்துக் கட்டியிருக்கமாட்டாள். ஒன்றின் ஓட்டையை, இன்னொன்று அடைத்து நிற்க, அவள் அடைக்கமுடியாத கண்களால் வெளியே எட்டிப் பார்த்தாள். 'பனி இன்னும் கொட்டுதேன்'னு சொல்லப் போனவள், பசிக் கொட்டத்தில், அது ஒரு கொட்டே இல்லை என்று நினைத்தவள் போல் பேசாதிருந்தாள். ஒரு சில பெண்களின் தலையோரங்கள், காய்ந்துபோன அருகம்புல் போல் பழுத்துக் கிடந்தன. ஒரே ஒருத்தி மட்டும், 'கிடாயில்' துடித்த கடலெண்ணெய்யை சற்றுக்கோதி, உடம்பெங்கும் தேய்த்துக் கொண்டாள். பூச்சி புழுக்கள் கடிக்காது. ஆடவர்கள், கதகதப்பாக, பாய்லர் பக்கம் போய் நின்றுகொண்டார்ாள். மகாத்மா காந்தி எப்படி இருந்தார் என்பது தெரியாமலே, அவரைப் போல் ஆடை அணிபவர்கள். அவருக்காவது, தோளில் போர்வை மாதிரி துண்டு. இவர்களுக்கு, கோவணம் மாதிரி; கோவணம் துண்டாவதும், துண்டு கோவணமாவதும், இவர்களுக்கு, மலையில் ஏறுவது—இறங்குவது மாதிரி.

சிதம்பரம், ஒவ்வொருவருக்கும் 'டீ' போட்டுக் கொடுத்தான். ஆளுக்கொரு மசால் வடையை நீட்டினான். சிலர் காசு கொடுத்தார்கள். சிலர் கண்களால் கடன் சொன்னார்கள். ஆடவரில் ஒருவர் 'ரெண்டு தோசை போடு சிதம்பரம்' என்று 'தையலையை' சிதம்பரம் எடுக்கப் போனபோது, இன்னொருவர் ''டேய், மலைக்குப் போயிட்டுவந்து அரக்கிலோ அரிசியும், கால் கிலோ ஆட்டுக் கறியும் வாங்கி, குழந்தை குட்டியோட தின்னேண்டா! அனாவசியமா காசை கரியாக்குறான்'' என்றார். மௌனப் பூனைக்கு, அவர் மணி கட்டிவிட்டதால், பலர் சேர்ந்தும் தனித்தனியாகவும் பேசினார்கள்.

'பாவம் சாப்புடப் போன மனுஷன, தடுத்திட்டியே!'

'இவன் வாய அடச்சா, இவன் பிள்ளக்குட்டி வாய திறக்கலாம். நான் அதத்தான் செஞ்சேன்.'

'எப்பவுமா சாப்புடுறார்... ஏதோ இன்னையப் பாத்து ஆச வந்துட்டு...'

'நம்மள மாதிரி ஆளுங்களுக்கு, இந்தமாதிரி ஆச வரப் படாது சாமி! எனக்கு மட்டும் ஆசயில்லியா... பரிதாபத் துக்கு வேணுமுன்னால் வாரிகளா... முப்பது தோசய தின்னு காட்டுறேன்! நான் எதுக்கு சொல்லுரேன்னா... இன்னைக்கி தோசன்னா, அப்புறம் பீடி பிடிக்கது மாதுரி அது ஒரு பழக்க மாயிடும். அதனாலதான். ஏய்... வேணுமுன்னா சாப் புடுப்பா! என் காசுலயா சாப்புடுற!'

'வேண்டாம்பா, ஆசைய அடக்கணுமுன்னு நேத்துதான் வாரியார் கோவுலுல சொன்னாரு. நமக்கு இருக்க ஒரே ஆச பசியால வாட ஆசதான். நாமளும் நம்ம பங்குக்கு அது அடக்காண்டாமா? அடக்கியாச்சு. ஏ, வாடாப்பூ! நேத்து ஓங்கப்பன் ஒன்ன அடிச்சானா?'

'தப்பு மச்சான்! இந்தப் பயமவா அவர அடிச்சிருப்பா.

வாடாப்பூ, வட்டியோடு கொடுத்தாள்.

'மாமா, பொண்டாட்டிகிட்ட அடிபடுற பழக்கத்த எப்படிச் சொல்றாரு பாரு!'

'பொண்டாட்டிங்க எங்க அடிக்கிறா! அவளுவளவும் நம்மையும் சேர்த்து ரேஞ்சர்லா அடிக்கான்!'

'ஏ, வாடாப்பூ! நீயாச்சு; என் மாமாவாச்சு. என்னை ஏண்டி இழுக்கற; கல்யாணம் ஆவுமுன்னே ஒனக் கிருக்கிற ஆச இப்படியா இருக்கணும்! அது நான் செய்த தவாச சொல்லணும்!'

'சரி, பொறப்படுங்க. நேரமாவுதுல்லா. சீக்கிரமா வந்துருணும். வழில அவனுக பாத்துட்டா, அவனுக வீட்டு வரைக்கும் நம்மள நடக்க வச்சு, விறகுக் கட்ட விடுவாங் கல்லா...'

எல்லோரும் எழுந்தார்கள். திடீரென்று ஒருத்தி 'அதோ தேளு' என்றாள். குரலில் எவ்வித கலக்கமும் இல்லாமல், அவள் சொன்னவிதம் நல்ல பாம்பாக இருந்தாலும் அப்படித் தான் ஒருவேளை சொல்லியிருப்பாள். சிதம்பரம், தேளைப் பார்ப்பதற்கு முன்பே ஒருவர் ஓலையில் ஏறிய அதை ஓலை யோடு எடுத்து, வெளியே கொண்டு போனார். 'ஜாக்கிர தையா பிடி... இது கருந்தேளு! கடிச்சா. உயிருல நிக்கும்' என்றார் ஒருவர்.

எல்லோரும் எழுந்து புறப்பட்டார்கள். ஒவ்வொருவரும் கமண்டலம்மாதிரி அமைப்புள்ள பெரிய கம்பை வைத்திருந் தார்கள். ஒளிக்கற்றை ஊடுருவாத அதிகாலைப் பொழுதில் பூச்சிப்பொட்டுக்கள் இருக்கிறதா என்று முன்பாதைப் புதரை குத்திப் பாக்கவும், மலையில் இருந்து விறகுக்கட்டுக் களோடும், புல்கட்டோடும் இறங்கும்போது, தலைச்சுமை வலியாக மாறும்போது இந்த கம்பின் கமண்டலப் பகுதியில் சுமையை இறக்கி வைத்து சிறிது இளைப்பாறவும், இந்தக் கம்புகள் பயன்படுகின்றன.

சிதம்பரம் எதையோ நினைத்துக்கொண்டு, அந்த நினைவை உதறிவிடுபவன்போல், தலையை உசுப்பிவிட்டுக் கொண்டான். தோசை சாப்பிடப் போனவரை, இன் னொருவர் தடுத்தவுடனேயே, அவனுக்கு வியாபாரம் போய் விட்டதே என்பதைவிட, அதைப் பசிக்காரருக்கு பறிமாற முடியவில்லையே என்று வருத்தப்பட்டான். நினைத்துப் பார்த்தபோது, அவரின் உள்விழுந்த கண்களும், விழுது விட்ட மோவாயும், ஏக்கமான பார்வையும், அவனுக்கு என் னவோ போலிருந்தது. திடீரென்று ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல், தம்பியைப் பார்த்துப் பேசினான்.

'இன்னைக்கு மாவு ஆட்டாண்டாம்.

'ஏன்னா?'

'நம்மலிலெ... நாம்லமாதுரி இருக்கவங்களுக்கு ஆசவந்து இருக்கிற காசு போயிடப்படாது. நாளையில இருந்து மசால் வட மட்டும் போட்டா போதும்.'

சிறுவன் நெற்றியில் கோடுகள் விழும்படி புருவங்களை சுழித்துக்கொண்டிருந்தபோது, ஒரு போலீஸ்காரர் வந்தார். யூனிபாரத்தில் இரண்டு கோடுகளும், ஒரு நட்சத்திரமும் இருப்பதுபோல் தோன்றின.

'என்னடா... தோச ரெடியா!'

சிதம்பரம் பதிலளிக்காமல் இலையைப் போட்டான். போலீஸ்காரர் இலையைத் தின்னப்போகிறவர்போல், அதைத் தூக்கிப் பிடித்துப் பார்த்தார்.

'இல ஓட்டையா இருக்கு. வேற இல போடு!'

வேறு இலையில் வேறு வேறு தோசைகள் போடப்பட்டன. கொஞ்சம் சட்னி ஊத்துடா. ஏண்டா சட்னில காரம் இல்ல. தண்ணி கொடுடா. நல்ல தண்ணியா கொடுடா. வேற கிளாஸ்ல கொடு. இதுல ஒரே அழுக்கு.

போலீஸ்காரர் சாப்பிட்டுவிட்டுக் கையைக் கழுவிவிட்டு, 'கப் டீயா போடு' என்று சொல்லிவிட்டுத்தான் வாயைத் துடைத்தார். சிதம்பரம் இந்தத் தடவை கேட்டுவிடுவது என்று தீர்மானித்தான், எத்தனை நாளைக்கு இப்படி ஓசியில் தோசை போடுவது, பசிக்கிற மனுஷனுக்கு தோசை போட முடியல. தோசைக்காவே பசியை வரவழைக்கிற மனுஷன்கிட்ட கேட்கிறதுல என்ன தப்பு. அதோடு ஒரு மாசம் தினமும் இப்டி வந்து சாப்பிட்டா, இதே அளவு விறகு வெட்டப்போறவரு ஒருவர் சாப்பிட்டிருந்தா ஒரு ரூபாய் நாற்பது நயாபைசா கல்லாவுல விழுந்திடுமே!'

சிதம்பரத்திற்குக் கொஞ்சம் பயந்தான். காரைக்குடியில் நாட்டுக்கோட்டை செட்டியார் வீட்டில் பத்து ஆண்டுகள் சமையல் செய்துவிட்டு, இந்த மலையடிவாரப் பகுதிக்கு ஒரு மாதத்திற்கு முன்புதான் வந்தான் கையிலிருந்த கொஞ்ச நஞ்ச பணத்தை, இந்தக் கடையில் போட்டான். மண்சுவர்தான். ஓலைக் கூரைதான். பட்டா இல்லாத இடம். இருந்தும் ஐநூறு ரூபாய் கொடுத்து இந்த இடத்தை வாங்கினான். விற்றவன், அந்த ஐநூறை பட்டச் சாராயத்தில் போட்டு ஆயிரம் ஆயிரமாகப் புரட்டுகிறான். சில சமயம் அவரைப்போல் 'அம்போவாக' அருகிலேயே இருக்கும் பிள்ளையார் கோவிலுக்கும் சிலர் வருவார்கள். வந்தவர்கள் கலர் கிலர் குடிப்பார்கள் என்றாலும், அவனது நிரந்தர வாடிக்கையாளர்கள், மலைக்கு விறகுக்குப் போகிறவர்கள்தான். விறகுக் கட்டோடு கடனுக்குச் சாப்பிட்டு விட்டு, பிறகு விற்ற பணத்தை வீட்டுக்குக் கொண்டுபோகு முன்னாலயே இவன் கணக்கை முடிப்பார்கள். ஆனால் இந்தப் போலீஸ்காரரர்... இவருக்குக் கணக்கு தேவையில்லை. இவர் சாப்பிடுவதைவிட இவரே விடை கண்டுபிடிக்க முடியாத கணக்காகிவிட்டார். சிதம்பரம் சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு 'ஸார்' என்றான்.

'என்னடா...

'அய்யா தப்பா நினைக்கக்கூடாது. நான்... ஏழு...

''நீ சொல்லியாடா எனக்குத் தெரியணும்? தண்ணிக் குள்ளயும் தடம் கண்டுபிடிக்கிற ஆளு நான்! ஜாக்கிரதையா இருந்துக்க!'

'அய்யா என்ன சொல்றீக!

'வரவர ஒன் கடையிலேயே கள்ளச்சாராயம் கொண்டு வந்து சிலரு குடிக்கரதா கேள்விப்பட்டேன். ஜாக்கிரதையா இருந்துக்க. இல்லன்னா கடைய சீல் வச்சு ஒன்னையும் சீல் வச்சுடுவேன்!'

'சீல் வைக்கிறதுக்குக் கதவுகூட இல்லியே' என்று சொல்லப்போன சிதம்பரம், போலீஸ்காரர் உருட்டிய கண் களையும், லத்திக் கம்பையும் பார்த்து பயந்துவிட்டான். காசு கேட்கப்போனவன் கடன் கேட்கப் போனவனைப் போல் மிரண்டு பார்த்தான். போலீஸ்காரர் போய்விட்டார். நாளைக்குத்தான் வருவார். சிதம்பரம் தம்பியைப் பார்த்து 'சாயங்காலம் தோசைக்கு மாவு ஆட்டு'' என்றான். பையன் அவனை முரண்பட பார்த்தபோது சிதம்பரமே ஒரு ஈயப் பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, அரிசியை நனையப் போட்டான். போலீஸ்காரருக்கு தோசை போடவில்லை யானால், அவர் அவனை போட வேண்டிய இடத்தில் போட்டுவிட்டால்—தோசையைப் புரட்டுவது மாதிரி...

எவரும் அங்கே வந்து சாராயம் குடித்ததாக அவனுக்குத் தெரியவில்லை. ஒருவேளை தனக்குத் தெரியாமலே யாரும் போட்டிருக்கலாமோ என்று அவன் யோசித்துக்கொண் டிருந்தபோது, சைக்கிள் மணி அடித்தது. மணியோசை யுடன் 'சிதம்பரம்...சிதம்பரம்... ஒன்னத்தாண்டா...' என்று குரல். காட்டிலாகா அதிகாரி ஒருவர் சைக்கிள் பிடலை விட்டு காலை எடுக்காமலே, 'ஹாண்ட்பாருக்கும் சீட் டுக்கும் இடையே உடம்பைக் கொண்டுவந்து நிறுத்திக் கொண்டு, 'ஒரு கலர் எடுத்தா. கூடவே கொரிக்கதுக்கு ஒரு மசால்வடயும் எடு' என்றார். கடையில் உட்கார்ந்திருந்த ஒரு வாடிக்கைச் சிறுவன், 'கேட்டது ஓசி. இதுல மேற அதிகாரம்' என்று சத்தம் போட்டே பேசினான். காட்டிலாக் காக்காரர் அவன் சொன்னது கேட்டதுபோல் நிமிர்ந்தார்.

சிதம்பரத்திற்கும் எரிச்சலுக்கு மேல் எரிச்சல். 'இங்கே வந்து குடியேண்டா பிச்சைக்காரா' என்று மனதுக்குள்ளே அவன் சொல்லிக்கொண்டிருந்தபோது, அதிகாரி 'ஏய்! நான் சொல்றது காதுல விழல!' என்றார். சிதம்பரம் ஒரு கலர் பாட்டலை எடுத்துக்கொண்டே, பிச்சைக்காரன் மாதிரி ஓடினான். அதிகாரி அந்தக் கலர் பாட்டலை காலி செய்து

அவனுக்குப் பெரிய உபசாரம் செய்தது மாதிரிப் பார்த்தார். சிதம்பரம் தோசை சாப்பிட மனமிருந்தும், பணமிருந்தும் சாப்பிடாமல் 'வெட்டி'யாய்ப் போன விறகு வெட்டியை தன்னையறியாமலே நினைத்துப் பார்த்தான். அந்த நினைவு அந்த அதிகாரி மீதிருந்த பயவுணர்வை துரத்தியது. எத்தனை நாளைக்கி இப்படி ஓசியில கலர் குடித்து, அதுவும் ஒரு நாளைக்கு ரெண்டு தடவ. காட்ல முயல் கறியோட சாராயம் குடிக்கையில அஞ்சாறு சோடா அவுட்டாவுது. ஓசிக்கும் ஒரு லிமிட் வேண்டாமா. சரி, காலி பாட்டலுவளை யாவது சீக்கிரமா கொண்டுவந்து குடுக்கானா...

சித்ம்பரம் தைரியத்தை வலிய வரவழைத்துக்கொண்டு காசு கேட்கப் போனான். இதற்குள் அந்த அரசுப் பிரதிநிதி 'டேய்' ஒன் கடையில, சந்தனக் கட்டைங்கள குப்பன் கொண்டுவந்து அடுக்கி வைக்கதா கேள்விப்பட்டேன். நல்லா இல்ல! அவ்வளவுதான் சொல்லுவேன். ஜாக்கிரதை. அப்புறம் எங்க ஆபீசரு கேம்ப் வாரார். வந்தார்னா ஜீப்ப அனுப்புறேன். பத்து கலர் பாட்டலையும் ஆறேழு சோடா பாட்லயும் போடு. எவனையும் அண்டவிடாத. விறகுக் கட்டை எவனாவது போடுறான்னா... முடியாதுன்னு சொல்லிடு... ஏன்னா உள்ள சந்தனக் கட்ட இருக்கலாம். அப்புறம் ஒனக்குத்தான் காப்பு கிடைக்கும். சந்தனத்தை அரைக்கதுமாதிரி அரச்சுடுவோம்.

சிதம்பரத்திற்கு வியர்த்துக் கொட்டியது. ஒரு தடவை ஒரு சின்னஞ்சிறு சந்தனக்கட்டையை, வீட்டில் 'பெரியா ளான' மகளுக்காகக் கொண்டுவந்த ஒரு விறகு வெட்டிக் கிழவனை, இந்த அதிகாரி அடித்த அடி பார்த்த இவனுக்கே வலித்தது. அதிகாரி அனாவசியமாக நீட்டிய பாட்டலை பயத்தோடு வாங்கிக்கொண்டு சிதம்பரம் பாய்லருக்கருகே போனான். எவன் சந்தனக் கட்டையைக் கொண்டுவந்தான். யாருமே கொண்டு வந்ததா தெரியலியே... எதுக்கும் ஜாக் கிரதயா இருக்கணும். கேக்கிறபோதல்லாம் கலர் கொடுக் கணும். காலிபாட்லகூட நாமா கேக்கப்படாது.

இதற்குள் விறகுக் கட்டுகளுடன், மலையிலிருந்து மனித உருவங்கள் இறங்கின, கட்டை சுமந்து கட்டையாய்ப்போன அந்த மனிதர்கள். கடைக்கு வந்ததும் விறகுக்கட்டுக்களை இறக்கினார்கள். ஒருவன் பாய்லருக்கு அருகே கட்டைப் போட்டான். சிதம்பரம் ஏதோ சொல்லப்போனான். 'கட்டை எடுத்து வெளிய போடுய்யா' என்று கேட்கப் போனான். கட்டு கொண்டு வந்தவர், குனிந்து கால் பாதத்தில் தாங்கியிருந்த ஒரு முள்கட்டையை ஊக்கால் குத்திக்கொண்டே வலி பொறுக்காதவர்போல் 'எப்பாடி' என்றபோது, சிதம்பரத்திற்கு கேட்கப்போனதை கேட்க முடியவில்லை.

இதற்குள், காட்டிலாகா ஜீப் வந்து உறுமியது, சிதம்பரம். ஏழெட்டு கலர் பாட்டில்களோடும், ஆறேழு சோடா பாட்டில்களோடும் ஓடினான். ஒருவேளை இதுக்குக்கூடவா காசு கொடுக்கமாட்டாங்க. காசு கேக்கலாமா... தந்தா வாங்கிக்கலாம், கேட்டு அந்த கட்ட பிரிடான்னு கேட்டாங்கன்னா ஒருவேள அதுக்குள்ள சந்தனக்கட்ட இருக்கலாம்! முந்தாநாள் ராமசுப்புவ, போட்டு போட்டு பூட்ஸ் காலால உதச்சாங்களே.

ஜீப் போய்விட்டது. விறகுக் கட்டுக்களைச் சுமந்து வந்தவர்களும், டீயை குடித்துவிட்டு, பஜாரைப் பார்த்துப் போனார்கள். விறகுக்கு இந்த மலையேறிகளுக்கு மூன்று ரூபாய் கிடைக்கலாம். உட்கார்ந்த இடத்திலேயே உட்கார்ந்திருக்கும் 'கட்டைத் தொட்டிக்காரர்களுக்கு' ஆறு ரூபாய் கிடைக்கும். அவர்களுக்கும் சேர்த்து இவர்கள் மலையேறுகிறார்கள். இவர்களுக்கும் சேர்த்து, அவர்கள் சாப்பிடுகிறார்கள்.

பிறகு வெட்டி மனிதர்கள் போய்விட்டார்கள். உச்சி வெயில். இனிமேல் கூட்டம் கூடாது, சாயங்காலம் ஒரு சிலர் வருவார்கள், அவர்களுக்கு 'டீ' மட்டும் போதும். சிதம்பரம் 'பாய்லரை' இறக்கி வைக்கப்போனான். பிறகு 'டீ' குடித்து

விட்டு இறக்கலாம் என்று நினைத்தவன்போல் தம்பிக்கும் தனக்குமாக இரண்டு இரண்டு தோசைகளை எடுத்துக் கொண்டு உட்காரப்போனான். இருவரும் இரண்டுதடவை 'டீ' குடித்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.

திடீரென்று ஒரு அதட்டுக் குரல்.

'டேய்... சிதம்பரம்! காலையிலயே நாலு தோசை பார்ஸல் அனுப்புன்னு ஆள்மூலம் சொன்னேனே, ஏண்டா அனுப்பல?'

தேவஸ்தானத்தில் ஒரு சின்ன அதிகாரி. ஆனால் சிதம்பரத்திற்கோ பெரிய அதிகாரி. அதட்டினார். சைக்கிளை அனாவசியமாகப் பிடித்திருத்தார்.

'ஏண்டா பேசமாட்டங்கே! தேவஸ்தானம் நிலத்துல, கடை போட்டிருக்கே! லைசன்ஸ் இன்னும் கொடுக்கல. இதுக்குள்ள இவ்வளவு திமுறா! என்னடா, நினைச்சிக் கிட்டே! உங்களெல்லாம் வைக்க வேண்டிய இடத்துல வைக்கணும்!'

சிதம்பரம் ஒன்றும் நினைக்காதவன்போல், சாப்பிடப் போன நான்கு தோசைகளையும், சட்னியுடன் சேர்த்துப் பார்ஸலாகக் கட்டி சைக்கிளில், 'வைக்க வேண்டிய இடத்தில்' வைத்தான். கொடுக்கமாட்டேன் லைசென்ஸ் என்று சொல்லிட்டா, அதோட இவரு, போலீஸ்காரன், காட்டு அதிகாரி—இவங்களவிட நல்ல மனுஷன். வாரத்துல ரெண்டு தடவ, இல்லன்னா, மூணுதடவதான் தோசப் பார்ஸல் கேட்பாரு.

ஒருமாதம், ஓடுவது தெரியாமல் ஓடியது. சிதம்பரத் தால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. கலர் சோடா போடு கிறவர் அவற்றை நிறுத்தியதுடன் பாக்கியைக் கேட்டார். பால்காரர், வரவர தண்ணீர் பாலை கொடுக்கிறார். ஒவ்வோருவர் பாக்கிக்கும் ஒரு கிளாஸ் தண்ணீர். அரிசி வாங்க பணம் இல்லை. கடையில் பொறைகள் மட்டுந்தான்

இருந்தன. சிதம்பரத்தின் தம்பி, படுத்த படுக்கையாகக் கிடக்கிறான். எத்தனை நாளைக்கு வெறும் டீயையும் மசால் வடையையும் மட்டும் சாப்பிடுவது. சிதம்பரம், கடையை விற்கப் பார்த்தான். ஆளில்லை. செட்டியார் வீட்டுக்கும் போய்ப் பார்த்தான். வேலையில்லை.

அன்று எப்படியோ கஷ்டப்பட்டு தோசை போட்டிருந் தான். பகல் பதினொரு மணி. விறகுக்கட்டுக்கள் வெளி யேவும், அதைச் சுமந்தவர்கள், கடைக்குள்ளும் இருந் தார்கள். மனது பொறுக்காத ஒருவர் சிதம்பரத்தின் நிலையை அறிந்த ஆத்திரத்தில் 'ஒனக்கு முன்னால... கடை வச்சிருந்தவன், ஓசித் தோச கொடுத்து, காட்ல பாதிய அமுக்கி, கள்ளச்சாராயம் வடிச்சு, இப்போ பங்களா கட்டிட்டான்! நீ என்னடான்னா, இருக்கிற கடையைக் கூட தேய்ச்சுப்புட்ட!' என்றார்.

சிதம்பரம் எதுவும் பேசவில்லை. கலர் பாட்டில்கள் இருந்த 'ரேயை' வெறுமையாகப் பார்த்துக்கொண் டான். கடைக்குள்ளே கனல் கக்கப் பிதற்றிக்கொண்டிருந்த தம்பியை நிமிடத்திற்கு நிமிடம் நோட்டம் விட்டுக் கொண்டே பாய்லர் பக்கம் சுவரில் சாய்ந்துகொண்டு நின்றான். ஜீப்பில் போன கலர் பாட்டல்கள் இன்னும் திரும்பவில்லை. ஒரு தடவை கேட்டதுக்கு 'எந்த இடத்துல எதக் கேக்கணுமுன்னு இல்லியா! இரு! இரு' என்று எச்சரிக்கை.

திடீரென்று காட்டிலாகா அதிகாரியும், போலீஸ் காரரும், ஒரு பத்து வயதுச் சிறுவனை, அவன் கைகள் பின்னால் வளைக்கப்பட்டு ஒரு காட்டுக்கொடியில் கட்டப் பட்டிருக்க அவனை பிடறியில் அடித்துக்கொண்டே கொண்டு வந்தார்கள். சிறுவன் இடறி விழுந்தான். பிறகு கட்டையில் மோதி, அவன் நெற்றியில் காயம். யாரோ ஒருவர் தூக்கி விட்டார்.

அடித்த களைப்பு தீருவதற்காக, போலீஸ்காரரும், காட்டிலாகாவும் கடைக்குள் வந்தார்கள். 'மலையில போய், சந்தனமரத்தை வெட்டுறான். இந்த வயசுலேயே புத்தியப் பாரு! ஸ்டேஷனுக்கு வா! இனிமே நீ ஜென்மத்துலேயும் மலையேற முடியாமப் பண்றேன்' என்று போலீஸ்காரர் சபதம் போட, 'காட்டு' அதிகாரி கண்களால் அதை அங்கீகரிக்க இருவரும் உட்கார்ந்தார்கள். சிதம்பரம், இருவர் முன்னாலும் இலை போட்டு சுடச்சுட தோசை போட்டான். 'கப்' டீயாக போட்டுக் கொடுத்தான். ஒரு தடவை, காட்டிலாகா மனிதர் காதில் விழும்படி பேசிய அதே சிறுவன்தான், வெளியே கைக்கட்டோடு நின்றான்.

இருவரும் கை கழுவிவிட்டு, டம்ளர்களை காலியாக்கி விட்டு அந்தச் சிறுவனை 'நடடா... ராஸ்கல்! திருட்டுச் சோம்பேறி!' என்று சொல்லிக்கொண்டே கடைவாசலைக் கடக்கப்போனபோது சிதம்பரம் சாவகாசமாகக் கேட்டான்.

'ஸார்... காச வச்சிட்டு நடங்க!'

இருவரும் அவனைக் கோபத்துடன் பார்த்தபோது சிதம்பரம் சீறினான்.

'இப்ப சாப்பிட்ட காசு மட்டுமில்ல! இதுவரைக்கும் சாப்பிட்ட கணக்க தீர்க்காமல் ஒரு அடிகூட நகரக்கூடாது. யாருய்யா திருட்டுச் சோம்பேறி. ஒரு மாசமா என்னை மிரட்டி ஓசில சாப்பிட்ட நீங்க திருட்டுச் சோம்பேறியா! இல்ல, வயித்துக்காவ மலைக்குப்போன இந்தப் பையனா! இவனப் பிடிக்க, ஒங்களுக்கு என்னய்யா யோக்கியத இருக்கு? சரிசரி, காச வையுங்க இல்லன்னா தொப்பியக் கழட்டுவேன்.

போலீஸ்காரர் தன்னையறியாமலே கத்தினார்.

'யாருகிட்ட பேசுறோமுன்னு நெனச்சுப் பேசுடா... ஒன் கடைய குளோஸ் பண்ண அதிகநேரம் ஆகாது.'

சொன்னவர், தான் செயல்வீரர் என்பதை நிரூபிக்க கையை ஓங்கினான்.

திடீரென்று கூட்டத்தில் ஒருவருடைய குரல் கம்பீரமாக ஒலித்தது.

'ஒன்ன குளோஸ் பண்ணவும் அதிகநேரம் ஆவாது! எங்கள செக் பண்ண ஒங்களுக்கு என்னடா உரிமை இருக்கு.

இன்னொருவர் எழுந்தார்.

'ஏண்டா பேசுர... தேவடியா மவனுவள! தூணுல வச்சுக் கட்டுங்க! முந்தா நாளு, நம்ம... பொன்னம்மா கிழவிய அடிச்சிருக்கா. நேத்து நம்ம ராமன செருப்ப வச்சே மூஞ்சில அடிச்சிருக்கான். இவன் கடையை, ஓசில தின்னு தின்னே உருப்படாமப் பண்ணிட்டான். இனுமயும் நாம பொறுத்தால் இவங்க நம்மள அடிச்சத நியாயப்படுத்துறதா ஆயிடும்.

வேகமாக வெளியேறப் போன இரண்டு அதிகாரிகளையும் சிதம்பரம் 'இன்னைக்கி எல்லாக் கணக்கையும் தீர்த்தாகணும்' என்று சொல்லிக்கொண்டே கைநீட்டி வழிமறித்தான். இதுவரை மௌனத்தையே ஒரு பண்பாக போற்றி வந்த சிதம்பரத்தின் 'காடு தாங்காத' சினத்தில் தொத்திக் கொண்ட அத்தனை ஏழை—பாழைகளும் சேர்ந்தாற்போல் எழுந்தார்கள். ஒருவன் சிறுவனின் கைக்கட்டை அவிழ்த்து விட்டான். அந்தப் பயலோ ஒரே ஓட்டமாக ஓடலாமா அல்லது நிற்கலாமா என்று யோசிப்பதுபோல் நடந்து மீண்டும் திரும்பி வந்தான். இப்போது 'நான் மரத்துக் கிட்ட சும்மா நின்னேன். வெட்டல. வெட்டல' என்று எல்லோருக்கும் கேட்கும்படியாகக் கத்தினான்.

சுற்றிலும் மலைசூழ சூன்யமே சூழலாகச் சுழலும் அந்தக் காட்டுப் பகுதியின் ஆஸ்ரமம் போல் தோன்றும் சிதம்பரத்தின் டீக்கடைக்குள் சத்தம் வலுத்துக்கொண்டே போகிறது. குரல்கள் ஓங்கிக்கொண்டே போகின்றன. இது எதில் முடியும் என்று யூகிக்க முடியவில்லை. சம்பந்தப்பட்ட ஆசாமிகள் சின்ன அதிகாரிகள் என்றாலும், அவர்கள்தான்

அந்தப் பகுதிக்கு அரசின் ஆயுத பாணிப் பிரதிநிதிகள். மேல்மட்ட அதிகாரிகளை 'சப்ளை' என்ற பாசத்தாலும், சர்வீஸ்' என்ற பந்தத்தாலும் கட்டிப்போட்டிருப்பவர்கள்.

'மரம் வெட்டி' மனிதர்கள், 'மனித வெட்டி' அதிகாரிகளைச் சூழ்ந்துகொண்டார்கள்.

ஒருவேளை நாளைக்கு பிரபல பத்திரிகைகளைப் புரட்டினால் 'சாராய கோஷ்டி அதிகாரிகளைத் தாக்கியது—பலர் கைது' என்று செய்தி படிக்கலாம். ஒன்றும் சொல்வதற்கில்லை. என்றாலும் ஒன்று மட்டும் நிச்சயம். நாளைக்கு வரக்கூடிய அந்தச் செய்தி நாளையோடு முடிகிற செய்தியாக இருக்காது.

# பெங்களூர் தெரஸா

கர்நாடகத் தலைநகரில்—அதன் முதல் சொல்லுக்கு எதிர்மாறான பகுதி. கலைச்செல்வமிக்க பண்டைய திரைப் படங்களைப் பேணிக் காக்கும் பாதாமி இல்லத்திற்கும், நிஜச் செல்வம் கொழிக்கும் பல்மாடி அங்காடிக்கும் இடையே சிக்னல் விளக்குகள், விலங்குகளின் இரவுக் காலக் கண்கள் போல மின்னின. குறுக்குச்சால் ஓட்டும் சைக்கிள்களில் இருந்து, அகலக் கால் விரிக்கும் பஸ்கள் வரை புலியின் உறுமலுடன், பூனையின் பௌவியத்துடன், ஓட்டப்பந்தய தளத்தில் ஆயத்த நிலையில் நிற்கும் 'பி. டி. உஷா'க் களைப் போலப் பரபரத்து நின்றபோது—

ஒரு வரிசை வண்டிகளின் நடுப்பகுதியில் அந்த அரசாங்க அம்பாஸிடர் காரில் ஓட்டுநர் இருக்கையில் உட்கார்ந்திருந்த லிங்கையா எதையும் நோக்காமல் தனக்குள் தன்னையே நோக்கிக் கொண்டிருந்தான்.

அவன் மனச்சாட்சி தன் பக்கமும், மனைவியின் பக்கமும் பெண்டுலம்போல் ஆடியது. இந்த எட்டாண்டுக் கால சர்விஸில், கடந்த ஐந்தாண்டு காலமாக— அதாவது இப் போதைய அதிகாரி பதவியேற்ற பிறகு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், பெரும்பாலான அரசாங்க விடுமுறை நாட் களிலும் அதிகாரியின் வீட்டுக்குக் காரோடு போய், அவரின் மனைவி மக்களைச் சுமந்துபோவதையும், அரிசி மூட்டை, மளிகைச் சாமான்கள் 'அடிப்பதையும்' வாடிக்கையாக வைத்திருந்தான்.

அந்த வீட்டில் அதிகாரியின் இடத்தை அவர் மனைவி ஆக்கிரமித்துக்கொண்டதுடன், தன் உறவினர்கள் முன்னிலையில் அவர்கள் மெச்ச வேண்டும் என்பதற்காக லிங்கையாவை கால் கடுக்கக் காக்க வைப்பதையும், கன்னாபின்னா என்று திட்டுவதையும், அவள் பிள்ளைகள்கூட, 'டேய் லிங்கையா' என்று கூப்பிடுவதையும் தன் புது மனைவியிடம் உளறி விட்டான்.

அவ்வளவுதான். அவள் அவனுக்கு ஆணையிட்டுவிட்டாள். 'திட்டு வாங்குவதற்கு அவள் அதிகாரி—புருஷன் இருக்கப்போ ஒங்களுக்கு என்ன தலைவிதியா' என்று கேட்டதோடு, இனிமேல் அரசாங்கப் பணி நாட்களில் எப்படித் தொலைந்துபோனாலும் விடுமுறை நாட்களில், அவன் அதிகாரி வீட்டுப் பக்கம் தலையைத் திருப்பக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள்.

புது மனைவியின் கண்டிப்புக்கும், பழைய அதிகாரியின் 'முறை வாடிக்கைக்கும்' இடையே அல்லாடிய லிங்கையா, நேற்று அதிகாரி, 'நாளைக்குக் காலையிலேயே வந்துடுப்பா. என் வீட்டுக்காரி மாமியார் வீட்டுக்குப் போகணுமாம்' என்று சொன்னபோது, இனிமேல் லீவு நாளையிலே எல்லாம், எனக்கு வேலை இருக்கும் ஸார்' என்று பயந்து பயந்து சொன்னான். அதிகாரி அவனைப் பயமுறுத்துவதுபோல் பார்த்தாரே தவிர, எதுவும் பதில் சொல்லவில்லை.

இப்போது லிங்கையாவுக்கு உதறல் எடுத்தது. அந்த அதிகாரி தொலை தூரப் பகுதியான குல்பர்காவிற்கோ—பிஜாப்பூருக்கோ தன்னை மாற்றிவிடப்படாதே. ஒரு அதிகாரி நினைத்தால், ஏதாவது ஒரு காரணத்தைக் கற்பித்து சஸ்பெண்ட் செய்துவிடலாமே!

ஸ்டியரிங்கில் குப்புற முகம் சாய்த்தபடி கிடந்த லிங்கையா, 'காக்கா குருவி' போன்ற 'காச்சி மூச்சி' சப்தங்களைக் கேட்டுத் திடுக்கிட்டான். ஒருத்தன் 'சைடில்' ஆட்டோவை விட்டபடியே 'ஏய்... மவனே' என்றான்.

முன்னால் பார்த்தான். பல்வேறு வாகனங்கள் மஞ்சள் நிறம் மாறும் முன்பு, குறுக்கு நடைபாதையைக் கடக்கப் பறந்துகொண்டிருந்தன. பின்னால் பார்த்தான். ஏராளமான வாகனங்கள் அவன் காரை இடிக்காத குறையாய் ஹாரன் சப்தங்கள் மூலம் நச்சரித்துக்கொண்டிருந்தன. லிங்கையா, முன்னால் ஓடிய வாகனங்களை இடைவெளி கொடுக்காமல் எட்டிப் பிடிக்கும் நோக்கத்துடனோ என்னவோ... வேகவேகமாய்க் காரை ஓட்டி, சாலையின் மத்தியில் முள்வேலிபோல் வெள்ளைக் கோடுகள் போட்ட நடைபாதையைத் தாண்டப் போனபோது—

திடீரென்று காரின் முன்னால் தோன்றிய ஒருத்தி, 'எம்மா' என்ற கத்தலுடன் பின்பக்கமாய் விழுந்தாள். காரின் வலதுபக்கம் மல்லாந்து கிடந்தாள். வலது காலில் பலத்த அடி. கண்ணில் போட்டிருந்த கண்ணாடி சுக்கல் சுக்கலாகிப் பரவிக் கிடந்தது. அவள் 'எம்மா... எம்மா...' என்று மெல்ல முனங்கி, 'என் பிள்ளிங்க... என் பிள்ளிங்க' என்று பெரிது பெரிதாய் ஊளையிட்டு, ஓடப்போகிற உயிரைப் பிடிக்கப் போகிறவள்போல கைகளைத் தலைக்கு மேல் கொண்டுபோய் அங்குமிங்குமாய் ஆட்டினாள்.

லிங்கையா வண்டிக்குள் சிறிதுநேரம் மரத்துப் போய்க் கிடந்தான். வாகனங்களில் போனவர்கள் அவற்றை நிறுத்தாமலே அவனை வைதபடியே ஓட்டம் பிடித்தார்கள். நடைபாதை வாசிகள் சாலையின் ஒரு பக்கத்தை அடைத்தார்கள். அந்த அம்மாவை அனுதாபத்துடனும், அவனைக் கோபமாகவும் மாறி மாறிப் பார்த்தார்கள். 'ஓ... சர்க்கார் காரா... அதான்' என்று அரசு டிரைவராக செலெக்டாக முடியாமல் போன ஒருத்தன் உறுமினான். லிங்கையா சுதாரித்துக் கொண்டான்.

அடிபட்டவளைச் சூழ்ந்த கூட்டத்தை விலக்கியபடி உள்ளே போனான். வலியால் துடித்த வலதுகாலை இரு கரத்தால் ஏந்தியபடியே 'என் பிள்ளிங்க... என் பிள்ளிங்க...'

என்று தலையை அங்குமிங்குமாய் ஆட்டியபடி உழன்ற வளை காலோடு தலையாய் வாரியெடுத்து, பிளாட்பாரச் சுவர்ப் பக்கம் கொண்டுபோய் சுவரில் சாத்தினான்.

அவளை உற்றுப் பார்த்தான். ஐம்பது வயதிருக்கலாம். வெள்ளைப் பார்டர் போட்ட கறுப்புச் சேலை. நிர்மல மான கண்கள். பெங்களூர் நகருக்கே உரிய மிளகாய்ப் பூ போன்ற மூக்கு. 'நான் யாருக்கும் எதுவும் செய்யலியே' என்பதுமாதிரி எல்லோரையும் பார்த்தாள். பிறகு, 'எம்மோ... எம்மோ...' என்று வலது கால் வாதையை இடது காலைச் சுண்டியிழுத்து கட்டுப்படுத்த முயற்சித்தாள். இந்த முயற்சியோடு முயற்சியாய் 'என் பிள்ளிங்க...என் பிள்ளிங்க' என்ற வார்த்தைகள் உச்சரிப்புப் பெற்றன.

லிங்கையா வாதைப்பட்ட அவள் வலது காலை லேசாய்ப் பிடித்தான். அவள் வீறிட்டுக் கத்தியபடியே மீண்டும், 'என்... பிள்ளிங்க... என் பிள்ளிங்க' என்றாள். லிங்கையாவுக்கு அவளைப் பார்க்க பார்க்க இளமையில் காலமான தன் தாயைத் தரிசித்ததுபோல் தோன்றியது. வாய் தடுமாற, நெஞ்சம் நெகிழ அழாத குறையாய்ப் பேசினான்.

"கவலைப்படாதீங்கம்மா. உங்களுக்குப் பெரிசாய் எதுவும் ஆகலம்மா..."

"என் பிள்ளிங்க... என் பிள்ளிங்க..."

"நானும் உங்களுக்கு ஒரு பிள்ளை மாதிரிதாம்மா. என் உயிரை விற்றாவது உங்களைக் காப்பாத்துவேம்மா!"

அவள் லிங்கையாவை உற்றுப் பார்க்கிறாள். அத்தனை வாதனையிலும், அவள் உதட்டில் லேசான புன்னகை.

லிங்கையா அவளைத் தூக்கிக் காரின் பின்னிருக்கையில் கிடத்தினான். கார்க் கதவை மூடிவிட்டு, இருக்கையில் உட்கார்ந்து வண்டியை ஸ்டார்ட் செய்யப்போன போது,

"டேய்... அவங்களை நீ காப்பாத்தலாம். ஒன்னை யாருடா காப்பாத்துறது" என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான். வண்டிக்கு முன்னால் போக்குவரத்துப் போலீஸ்காரர்.

லிங்கையா வெலவெலத்தான். அவரோ, "உன் பேரு என்னய்யா. எத்தனை வருஷமாய் வண்டி ஓட்டுறே? எத்தனை தடவை கோர்ட்ல அபராதம் கட்டியிருக்கே? சொல்லுடா எல்போர்டு!"

"ஸார்! மொதல்ல இவங்களை ஆஸ்பத்திரியில சேர்க்கணும். வாதையில் துடிக்கிறதைப் பாருங்க."

"அது எனக்குத் தெரியும். அடிபட்டவங்களைக் கவனிக்காமல் அடித்தவனைக் கவனிக்கறதுதான் போலீஸ் டூட்டி. புரியுதா! இந்தாங்கம்மா ஒங்க பேரு என்னம்மா?"

அவள் தயங்கினாள். கான்ஸ்டபிள் முகம் கடுக்கக் கேட்டார்.

"என்னோட டூட்டியைச் செய்யவிடுங்கம்மா! உங்க பேரு என்னம்மா? அட்ரஸ் என்னம்மா?"

"என் பிள்ளிங்க... என் பிள்ளிங்க.'

"அவங்களைக் கூட்டிவரத்தான் கேக்கேன்!"

"தெரேஸா... சிவாஜி நகர்ல."

லிங்கையா கான்ஸ்டபிளைக் கையெடுத்துக் கும்பிட்டான்.

"ஸார் ஏற்கனவே ஒரு கேஸ் இருக்குது ஸார்! குடித்துவிட்டு மோட்டார் பைக்குல வந்த ஒருத்தன் என் கார்லே மோதித் தன்னோட கையை முறிச்சுக்கிட்டான். போலீஸ் என்மேலேயே கேஸ் போட்டிருக்கு! இந்தக் கேஸூம் சேர்ந்தால் வேற வினையே வேண்டாம். கோர்ட் மன்னிச்சாலும் என்னோட டிபார்ட்மெண்ட்லே மன்னிக்காது ஸார்!

நான் கார் தொழிலாளி, நீங்க போலீஸ் தொழிலாளி. நீங்களும் ஏழை, நானும் ஏழை. ஏழைக்கு ஏழை உதவா விட்டால் வேற யார் ஸார் உதவுவாங்க?''

கான்ஸ்டபிள் டிரைவர் லிங்கையாவை ஏடாகோட மாய்ப் பார்க்கத் துவங்கி இறுதியில் அந்தப் பார்வையை இரக்கத்தோடு முடித்தார்.

''இந்தா பாருப்பா! உன்னைக் காப்பாத்தறதுக்காக என்னைச் சாகடிச்சுக்க முடியாது. ஆனாலும் மனசு கேட்கலை. உன்னோட வேலையில் கோளாறு பண்ண விரும்பல. அதனால இந்தம்மாவை உடனடியாய் ஏதாவது நர்ஸிங் ஹோம்லே சேர்த்துடு. ஆக்ஸிடெண்டுன்னு சொல் லாதே! எடுத்துக்கமாட்டாங்க! ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகாதே! போலீஸுக்குப் போன் போடுவாங்க!''

லிங்கையா, அவரைக் கையெடுத்துக் கும்பிட்டபடியே, காருக்குள் வந்தான். வலதுகாலைக் குறுக்காய் மடிக்க முடியாமல் அல்லாடிய தெரேஸாவை, நேருக்கு நேராய்ப் பார்க்க முடியாமல், அவன் சாய்வாய்ப் பார்த்தான். ஒரு வார்த்தைகூட 'அடப்பாவி, இப்படிச் செய்திட்டியேடா'' என்று சொல்லாத அவளை அதிசயித்துப் பார்த்தான். அவளோ, ''என் பிள்ளிங்க... என் பிள்ளிங்களைப் பார்க் கணும். அங்கே கொண்டு போப்பா! அய்யோ என்னமாய் வலிக்குது. என் பிள்ளிங்க!'' என்று அரற்றினாள். லிங்கையா நினைத்ததைத்தான் சொன்னான்.

''நானும் உனக்குப் பிள்ளைதாம்மா!''

அவனைப் பார்த்த அவள் கண்களில் ஒரு மின் வெட்டு; உயரமாகிக் கொண்டிருந்த உதட்டோரம் ஒரு புன்னகை. வலியை மறைக்கும் வலிய வந்த குறுநகை.

லிங்கையா நீர் கொண்ட கண்களோடு வண்டியை பலமாக இயக்கினான்.

வழியில் முதலில் தோன்றிய பிரம்மாண்டமான அந்த நர்ஸிங் ஹோமின் முன்னால் வண்டியை நிறுத்தினான்' அதன் போர்ட்டிக்கோவே, இரும்புத் தூண்களும் யந்திர வாகனங்களுமாய் பெரிய அரண்மனைபோலத் தோன்றியது.

லிங்கையா, கைத்தாங்கலாகக் கொண்டுவந்த தெரேஸா வைப் பார்த்த டெலிபோன் மங்கை 'இவளுக்கென்ன இங்கே வேலை' என்பதுமாதிரி பக்கத்தில் நின்ற ஒருத்தியின் இடுப்பைக் கிள்ளி அவர்களைச் சுட்டிக்காட்டினாள். இந்தச் சமயத்தில் ஒரு டாக்டர் அந்தப் பக்கமாய் வந்தார், லிங்கை யாவை அதட்டிக் கேட்டார்.

''ஓ. ஆக்ஸிடெண்ட் கேஸா? கவர்மெண்ட் ஆஸ்பத்தி ரிக்குப் போ! போலீஸோடு நாங்க மாரடிச்சது போதும். உம், சீக்கிரமாய் போப்பா!''

லிங்கையாவுக்கு நாடி நரம்புகள் அடங்கிப்போயின. கடைசியில் போலீஸ் கேஸ்தானா? வேலை பறிபோய் வீதியில் நிற்க வேண்டியதுதானா? அந்த அம்மா அவன் தோளோடு தோளாய் நிற்க முடியாமல் ஊசலாடினாள். ''வலிக்குதே, வலிக்குதே'' என்று வேதனையோடு கத்தி னாள். லிங்கையாவின் மனத்தில் ஓர் உத்தி.

இப்போது இந்த அம்மாவைக் குணப்படுத்த வேண்டியது தான் முக்கியமே தவிர வேலையில்லை போலீஸ் கேஸா னாலும் பரவாயில்லை என்பதுபோல் அவளை மார்போடு மார்பாய்ச் சுமந்து கார்ப் பக்கம் போனபோது அவர்களை வினோதமாய் பார்த்தபடியே ஒரு வார்ட்பாய் எதிர்த் திசையில் இருந்து வந்தான். லிங்கையாவுக்கு ஒரு நைப் பாசை, கேட்டுவிட்டான்.

''இந்த அம்மா என் காரில் அடிபட்டுட்டாங்க! நீதான் இவங்களை எப்படியாவது இங்கே சேர்க்கணும் தம்பி!''

"என்னப்பா நீ! பெரிய பெரிய பங்களாக்காரங்களுக்கே இங்கே இடம் கிடைக்காது. அதோடு ஆக்ஸிடெண்ட் கேஸ். அதோடு நான் வெறும் வார்ட்பாய்!"

"ஆஸ்பத்திரிகளில் வார்ட்பாய் ஆதிக்கம்தானே தம்பி அதிகம். நீயும் ஏழை; நானும் ஏழை, இந்தம்மாவும் ஏழை. ஏழைக்கு ஏழை உதவப்படாதா? இவங்களை ஆஸ்பத்திரியில் சேர்த்தால் அரசாங்க டாக்டர்களால் இவங்க கால் போயிடும்! போலீஸ் கேஸானால் என் வேலை போயிடும். எப்படியாவது உதவு தம்பி பணத்தைப்பற்றிக் கவலையில்லை. என் பெண்டாட்டிகிட்டே தங்க நகை பத்து பவுன் வரைக்கும் இருக்குது."

வார்ட்பாய், லிங்கையாவை உற்றுப்பார்த்தான். காக்கி யூனிபாரத்தில் கண்ணீர் வழியக் கசங்கிப்போயிருந்த அவனைப் பார்த்ததும் அவனுள் ஒரு பச்சாதாபம் ஏற்பட்டது.

"ஒரு காரியம் பண்றேன்! ஆறாம் நம்பர் ரூமுக்கு ஓசைப் படாமல் கொண்டு வா! டெக்னிஷியன்கிட்டே எப்படியாவது சொல்லி எக்ஸ்ரே எடுக்க வச்சுடுறேன். டாக்டருங்க கருமிப் பசங்க! எக்ஸ்ரேக்கு காசு வசூலிக்கதுக்காவது அம்மாவை அட்மிட் செய்துடுவாங்க!"

வார்ட் பாய் தன் பாட்டுக்கு நடந்தான்.

அரைமணி நேரத்திற்குள் தெரேஸாவிற்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. வலது காலில் முறிவு ஏற்பட்டது கண்டு பிடிக்கப்பட்டு பாண்டேஜும் போடப்பட்டது. "எப்படி இந்தம்மா இங்கே?" என்று கத்திய டாக்டரிடம் "என்னைக் கேட்டால்?" என்று வார்ட்பாய் அமர்த்தலாய்ப் பதிலளித்து விட்டு தெரேஸாவை ஒன்பதாம் நம்பர் அறைக்குக் கொண்டு வந்தான். மாத்திரைகளைச் சாப்பிட்டதால் வாதை குறைந்த தெரேஸா லிங்கையாவிடம் கேட்டாள்.

"என்னவாம்?"

''வலதுகால் எலும்பு முட்டிக்குக் கீழே உடைஞ்சுட்டு தாம்மா! மூன்று மாதம் பெட் ரெஸ்ட் எடுக்கணுமாம். நான் பாவிம்மா! படு பாவிம்மா! என்னை மன்னிச்சிடுங்கம்மா!''

தெரேஸாவின் உதட்டோரம் மீண்டும் ஒரு புன்னகை.

''என் பிள்ளைங்களைக் கூட்டிவாப்பா அட்ரஸ் எழுதிக் கிறியா?''

தெரேஸா சொன்ன முகவரியைக் குறித்துக்கொண்ட லிங்கையா வெளியே வந்தான். டெலிபோன் பெண்ணுக்குக் கூழைக் கும்பிடு போட்டு அலுவலகத்திற்கு டெலிபோன் செய்து சமாசாரத்தைச் சொன்னான்.

சற்று நேரத்தில் காரியாலயத்திலிருந்து கார் ஓட்டத் தெரிந்த சௌக்கிதார் நண்பன் வந்துவிட்டான். அவனிடம் விவகாரத்தைச் சுருக்கமாகக் கூறிவிட்டு தெரேஸாவின் பிள்ளைகளைக் கூட்டி வரும்படி முகவரியையும் கார்ச் சாவியையும் கொடுத்துவிட்டு வெளியே போய் ஒரு பன்னீர் சோடாவுடன் தெரேஸாவின் அறைக்குள் வந்தான். தெரேஸா, குழந்தைமாதிரி கேட்டாள்.

''மூன்று மாதம் நடக்க முடியாதம்மே!''

லிங்கையா சோடாவை உடைத்து ஒரு குவளையில் ஊற்றி அவள் வாயில் சொட்டுச் சொட்டாய் விட்டான். ''என்னை மன்னிச்சிடுங்க அம்மா!'' தெரேஸா முகத்தில் ஒரு சின்னச் சிரிப்பு.

இந்தச் சமயத்தில்.

பூட்ஸ் சத்தங்களும், சலங்கைச் சத்தங்களும் கலவையான வினோத ஒலி கேட்டன. ''அம்மா, அம்மா'' என்ற அலறலுடன் இரண்டு ஆண்களும் மூன்று பெண்களும் தெரேஸாவைச் சூழ்ந்தார்கள். குஸ்தி பயில்வான் மாதிரி தோன்றியவன் அம்மாவின் தலையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டான். இன்னொருவன் அவள் காலைத் தூக்கி தன்

இடுப்போடு இணைத்துக்கொண்டான். இருபது வயது கொண்ட ஒருத்தி அம்மாவின் கையைப் பிடித்தபடி கதறினாள். இன்னொரு சிறுமி கீழே உட்கார்ந்து கட்டில் காலில் முகத்தை வைத்து மோதினாள். ஒரே ஒருத்தி மட்டும் மஞ்சள் கயிறு போட்டவள்—நிதானத்தை இழக்காமலே அழுதுகொண்டிருந்தாள். ''அம்மா அம்மா'' என்ற ஆண் பெண் கோரஸ் ஒலி பாசத்தின் பரிமாணங்களைக் காட்டும் வெளிப்பாடுகள். மொத்தத்தில் அந்த அறையே வாசலென்ற வாய்மூலம் ஓலமிடுவது போல் தோன்றியது.

எந்நாளும் இல்லாத இந்நாளில் ஏற்பட்ட சத்தம் கேட்டு டாக்டர்கள், நர்ஸ்கள் ஓடிவந்தார்கள். ஒரு ஏழைக் குடும்பத்தின் பாசப்பிடிப்பில் சிறிதுநேரம் கட்டுண்டு நின்றார்கள். பின்னர் அழுதவர்களை அதட்டினார்கள். அருகருகே இருந்த பணக்கார நோயாளிகள்கூடத் தட்டுத் தடுமாறி அங்கே வந்து ஆச்சரியமாகப் பார்த்தார்கள். இந்த நர்ஸிங்ஹோமில் எவராவது இறக்கும்போதுகூட இப்படிப் பட்ட அழுகை ஏற்பட்டதில்லை. பணம் ஏற ஏறப் பாசம் குறையுமோ, நாகரீகம் படப்பட பாசமும் 'பட்டுப்' போகுமோ.

லிங்கையா ஒடுங்கிப்போய், மூலையோடு மூலையாய் நின்றான். தெரேஸாவின் பையன்களைப் பார்க்கப் பார்க்க அவனுக்குப் பயமெடுத்தது. அம்மாவைப் பார்த்தே இந்த அழுகை அழுதவர்கள் அவனைச் சும்மாவா விடப் போகிறார்கள்?

அவன் எதிர்பார்த்ததுபோலவே, தெரேஸாவின் மூத்த மகன் அம்மாவின் தலைமாட்டில் உட்கார்ந்தபடியே லிங்கையாவைச் சூடாகப் பார்த்தான். பிறகு, ''நீங்கதான் டிரைவரா?'' என்றான். லிங்கையா பட்டும் படாமலும் தலையாட்டியபோது, இன்னொருத்தனும் அந்தப் பெண்களும், அவனை ஒட்டுமொத்தமாகப் பார்த்தார்கள்.

லிங்கையா கூனிக் குறுகி ஏச்சுக்கும், ஒருவேளை உதைகளுக்கும் தன்னை ஆயத்தம் செய்தபடி கண்மூடி நின்றான். அரை நிமிடமாகியும் எதுவும் ஏற்படவில்லை. கண்ணைத் திறந்து பார்த்தால் பிள்ளைகள் மீண்டும் தெரேஸா அம்மாவைச் சூழ்ந்தபடி, ஆழ்ந்த கவலையோடு நின்றார்கள். அவனை ஒரு பொருட்டாகக் கருதாததுபோல அம்மாவின் காலை மட்டுமே பார்த்தபடி நின்றார்கள்.

லிங்கையா தன்னை மறந்து, அந்தக் குடும்பத்தைக் கையெடுத்துக் கும்பிடப் போனபோது—

ஜல்ஜல் சத்தத்துடன் துருத்திய வயிற்றோடு சோடா பாட்டில் கண்ணாடியுடன் ஒருத்தர் உள்ளே வந்தார், அவனுடைய அதிகாரி!

அவரைப் பார்த்ததும் அவரிடம் ஆறுதல் நாடி லிங்கையா, அழப்போன போது அவரே அதட்டினார்.

"கடைசியில் இவங்களையும் அடித்துப் போட்டுட்டியா. உன்னை இப்படியே விட்டால் இன்னும் எத்தனை பேரை சாகடிப்பியோ! இந்தாங்கம்மா, நடந்ததை ஒரு ஸ்டேட்மெண்ட்டாய் கொடுங்க. இவனையும் தீர்த்துக் கட்டிட்டு, உங்களுக்கும் டில்லிக்கு எழுதி, பத்தாயிரம் ரூபாயில் இருந்து இருபதாயிரம் ரூபாய் வரைக்கும் நஷ்டஈடு வாங்கித் தரேன். சூட்டோடு சூடாய் எழுதித்தாங்க. ஏய் லிங்கையா வேர் இஸ் யுவர் லாக் புக் மேன். இந்தாம்மா நீ எழுது. அம்மா கையெழுத்து போடும். இரண்டு மாதத்துல பணம் வந்துடும்."

தெரேஸா நிச்சயமாக ஸ்டேட்மெண்ட் கொடுத்துவிடுவாள் என்ற நம்பிக்கையில் எந்தவிதச் சந்தேகமும் ஏற்படாமல் அதிகாரி, பூட்ஸ் காலைத் தூக்கித் தூக்கி அடித்தபடி நின்றார்.

கதி கலங்கிப் போன லிங்கையா எந்தவித உணர்வையும் காட்டாமல் கிடந்த தெரேஸாவையும் பார்த்தான். "அம்மா, அம்மா" என்று மனதுக்குள் கூவியபடியே

அவளை கண்கள் கெஞ்சும்படி பார்த்தான். தெரேஸாவின் முகத்தில் பழைய மாதிரியான ஒரு புன்னகை. அரும்பாகி மொட்டாகி மலரான குறுஞ் சிரிப்பு.

திடீரென்று தலைமாட்டில் இருந்த தன் மகனை நகரும்படிச் சொல்கிறாள். அவன் நகர்ந்த இடத்தில் லிங்கையாவை அமரும்படி சைகை செய்கிறாள். அவனைப் பார்த்து லேசாய்க் கையை ஆட்டிச் சிரிக்கிறாள். அவனை தன் பிள்ளைகளோடு சேர்த்துச் சேர்த்துப் பார்க்கிறாள். தயங்கி நிற்கும் லிங்கையாவை நோக்கி, தாய்போலக் கையை நீட்டுகிறாள்.

லிங்கையா புரிந்துகொள்கிறான்.

அவளின் தலைப்பக்கம் போகாமல், கால் பக்கம் போகிறான். அவளின் இடது பாத விரல்களுடன், தனது வலதுகை விரல்களைச் சேர்த்துக்கொள்கிறான். 'நான் ஒனக்கு பிள்ளையோ... இல்லியோ... நீதான் எனக்கு அம்மா! நீயே எனக்கு அம்மா!' என்று விம்முகிறான். புன்னகை மாறாத தெரேஸாவிற்குக் கண்ணீரால் பாத பூஜை செய்கிறான். ❋

# நூலிழையில் ஒரு பந்தம்

நாலைந்துபேர் சுமக்கமுடியாமல் சுமந்து முற்றத்தில் சாற்றி வைக்கப்பட்டிருந்த கட்டிலை இழுத்துப் போட்டு அதிலே வைரமணியைப் போட்டார்கள். அவன் கண்கள் மேல் நோக்கிச் சொருகிப்போயிருந்தன. வாந்தி எடுக்கப் போவது மாதிரி வாயைப் பண்ணிக்கொண்டிருந்தானே தவிர, வாந்தி வரவில்லை. வேட்டி சட்டை அனைத்தும் தெப்பமாக நனைந்திருந்தது. நேராகப் பார்க்கும் ஆட்டுக் கிடாமாதிரி கூர்மையான அந்தக் கண்கள் ஒடுங்கிக் கொண்டும், வைரம் பாய்ந்திருந்த அவன் உடம்பு ஆடிக் கொண்டும் இருந்தன. அவனுக்கு இருபத்தைந்து வயதிருக் கலாம்.

அப்போதுதான் மாட்டை அவிழ்த்துக்கொண்டிருந்த அவன் தந்தை மாடசாமி மாட்டை அப்படியே விட்டுவிட்டு மகனிடம் ஓடி வந்தார். அவரால் எதுவும் பேச முடிய வில்லை. அவன் கண்களைப் பார்க்கப் பார்க்க ஏதோ ஒரு உண்மை புலப்பட்டதுபோல் தலையில் அடித்துக்கொண்டே ''ஐயோ... என் பிள்ளைக்கு கண்ணு சொருகுதே!'' என்று கத்தினார்.

சமையல்கட்டுக்குள் துவையல் அரைத்துக்கொண்டிருந்த அவன் அம்மா, அலறி அடித்துக்கொண்டு ஓடி வந்தாள். மகன் படுத்திருந்த கட்டில் காலில் தலையை மோதிக்

கொண்டே "என் ராசா! ஒனக்கு என்னடா பண்ணிட்டு, பண்ணிட்டு" என்று கதறிக்கொண்டிருந்தாள். அவன் தம்பி இருபத்திரண்டு வயது கனகராஜ் அண்ணனின் கைகால் களைத் தடவி விட்டுக்கொண்டே விம்மிக்கொண்டிருந்தான்.

தோட்டத்தில் இருந்து அவன் தலையை ஒருவர் தோளிலும் கால்களை இன்னொருவர் தன் தோளிலும் வைத்திருக்க நடுவில் இரண்டுபேர் தத்தம் கைகளால் அவன் முதுகையும் வயிற்றையும் சுமந்துகொண்டு பிள்ளையார் கோவில் வழியாக வந்தபோது அவர்கள் பின்னால் ஊரே திரண்டு வந்தது.

சொல்லமுடியாத கூட்டம். "வழி விடுங்கல... காத்து போகட்டும்" என்று சொல்லிக்கொண்டே ஐயாசாமி தாத்தா முண்டியடித்துக்கொண்டு முன்னே போனார். அவன் கையைப் பிடித்து 'நாடி' பார்த்தார். "நாடி விழுந்து கிட்டே இருக்கு! சீக்கிரமா ஆஸ்பத்திரிக்குத் தூக்குங்க" என்றார்.

"அதுவரைக்கும் தாங்காதே மாமா!" என்றார் ஒருவர்.

"ஆமாம் இன்னும் பத்து நிமிஷத்துல என்ன பண்ணுமோ! அதைப் பண்ணிடனும் இல்லன்னா..."

ஐயாசாமி சொல்லவந்ததை முடிக்க முடியாமல் திணறிக்கொண்டிருந்தபோது, வைரமணியின் மனைவி லிங்கம்மா தோட்டத்தில் 'ஒடிச்ச' அவுத்திக்கீரைகளைத் தோளில் வைத்துக்கொண்டு பரக்கப்பரக்க விழித்தவாறு அங்கே மெதுவாக வந்துகொண்டிருந்தாள்.

"எதையும் தின்னுருப்பானா?"

"இருக்காது; விஷத்தைக் குடிச்சிருந்தா! இதுக்குள்ள உயிரு போயிருக்கும். ஏதாவது கடிச்சிருக்கும்... வாயிலே கூட நுரை வருது பாருங்க"

'பாம்பு' என்ற வார்த்தையை 'ஏதாவது' என்ற புற்றுக்குள் ஒளித்து வைத்துப் பேசியவர் மீண்டும் ''இன்னா அவன் வீட்டுக்காரியே வந்துட்டா! அவள்கிட்ட கேளுங்க'' என்றார்.

இதற்குள் ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்த அம்மாக்காரி ''புருஷன் துள்ளத் துடிக்கக் கிடக்கான். நீ அவுத்திக் கீரையை வச்சிக்கிட்டு... ஆடி அசைஞ்சா வார... சண்டாளி. ஒன்ன என்னைக்குக் கைப்பிடிச்சானோ அன்னைக்கே என் பிள்ளை அர உயிரா ஆயிட்டான். காளியம்மா இந்த மூளியலங்காரி மூதேவி சண்டாளியத் தந்துட்டு நான் பெத்த மவன எடுத்துக்கிட்டுப் போகப் பாக்கியே... இது ஒனக்கே நல்லா இருக்கா? நல்லா இருக்கா?'' என்று அழுகுரலை அதிகமாக்கினாள்.

''தோட்டத்தில் என்னம்மா நடந்தது?'' என்றார் ஒருவர். லிங்கம்மா பேசாமல் இருந்தாள்.

''சொல்லித் தொலையேம்மா... ஒன்னையும் கூட்டிக்கிட்டு தோட்டத்துக்கு நல்லாத்தானே போனான். என்ன நடந்தது... மூதேவி... வாயில கொழுக்கட்டையா வச்சிருக்க. சொல்லித் தொல... இல்லன்னா... வெள்ளச் சேல கட்டணும். சொல்லேன். நாய்ப்பய மவள...'' என்றார் அப்பாக்காரர். மகன் நிலைமை மேலும் மோசமானதால் அவளைத் திட்டுவதை விட்டுவிட்டு, பெற்ற பிள்ளையின் முகத்தைப் பார்த்துக்கொண்டே ஏங்கி ஏங்கி அழுதார்.

லிங்கம்மாவை இரண்டு பேர் ஏதோ கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவள் பரக்கப் பரக்க விழித்தாளே தவிர, பதில் சொல்லவில்லை. புலன் விசாரணை செய்தவர்கள் கோபத்தை அடக்கமுடியாமல் தவித்துக்கொண்டிருந்த போது ஐயாசாமி தோன்றினார்.

''பேய்ப் பய மக்கா... அவள் 'கூறுதான்' ஒங்களுக்கே தெரியுமே... அவளப் போயி மிரட்டுனா எப்படி? போங்கல. போயி வைத்தியரக் கூட்டிக்கிட்டு வாங்க! லிங்கம்மா பயப்

படாதே. நீ நல்ல பொண்ணு. ஒன் புருஷன் தோட்டத்துல என்ன பண்ணினான்? சொல்லும்மா என் ராசாத்தி, சும்மாச் சொல்லு... அட ஒன்னத்தாம்மா! சொல்லு. நீ சொன்னாத்தான் அவனைக் குணப்படுத்த முடியும்! என்ன பண்ணுனான்?''

''பாத்தி போட்டுக்கிட்டு...''

''சரி! பாத்தி போட்டுட்டு... என்ன தின்னான்?''

''எதையோ தின்னாரு... பச்சை நிறத்துல, உருண்டை உருண்டையா!''

''நீ என்ன பண்ணுன?''

''எனக்கு ஒண்ணு தாங்கன்னேன்.''

''தந்தானா?''

''இல்ல! உன் வேலயப் பாருன்னு கத்துனாரு.''

''அவன் தின்னது தங்கரளிக்கொட்டையா? இல்ல... வேற எதுவுமா?''

''நான் சரியாப் பாக்கல.

வைரமணிக்கு நுரை அதிகமாகத் தள்ளிக்கொண்டே போனது. வைத்தியரைத் தேடி ஒருவர் பின் ஒருவராக நான்கைந்து பேர் போய்விட்டனர்.

'மயினிக்காரி' பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த தம்பிக்காரன் கனகராஜால் தாளமுடியவில்லை. வெறிப் பிடித்தவன்போல் லிங்கம்மாவின் முடியைப் பிடித்துக் கொண்டு கன்னத்திலும் முதுகிலுமாக அடித்தான்.

''செருக்கி மவளுக்குப் புத்தி இருக்கா? கட்டுன புருஷன் செத்துக்கிட்டு கிடக்கான். என்ன தின்னான்னு பாக்கலியாம். புருஷன் மேல அவ்வளவு அக்கறை.''

ஐயாசாமி அடித்தவனுக்கு ஒரு அறை கொடுத்துவிட்டு ''ஒனக்கு அறிவிருக்கா? அவள் சங்கதிதான் தெரிஞ்ச விஷயமாச்சே! போடா... அந்தப் பக்கமா'' என்றார்.

"விடும்மாமா. அவன்கூட இவளையும் சேத்துப் புதைக்கணும். புருஷன் தலைவிரி கோலமா கிடக்கான். இவள் இன்னும் இந்த அவுத்திக்கீரையைக் கீழே போடாம நிக்கிறத பாரும்!"

கனகராஜ் ஐயாசாமியை ஒரு பக்கமாகத் தள்ளிவிட்டு, லிங்கம்மாவைக் காலால் மிதித்தான். அவன் சக்தி வாய்ந்த கால் இடுப்பில் பட்டதால், அப்படியே சுருண்டு விழுந்த லிங்கம்மா சிறிதுநேரம் அசைவற்று இருந்துவிட்டு, பிறகு சிதறிக் கிடந்த அவுத்திக்கீரைகளை எடுத்துக்கொண்டிருந்தாள்.

கனகராஜ் மேலும் அடித்திருப்பான். ஐயாசாமியைத் தவிர வேறு யாரும் அவனைத் தடுத்திருக்க மாட்டார்கள். அதற்குள் வைரமணி அந்த அரைக்கண் மயக்க நிலையிலும், தன் சட்டைப்பைக்குள் விரலைக் கொண்டு போனான். உடனே ஒருவர் அவன் பைக்குள் கையை விட்டார்.

"தங்கரளிக்கொட்டையைத் தின்னுருக்கான்."

"இருபது... இருபத்தஞ்சு முட்டையை உடச்சு... வெள்ளக்கருவை மட்டும் எடுத்துக்கொடுங்க. ஒரு நொடில முறிச்சிடும். சீக்கிரமாக் கொண்டு வாங்க."

ஒவ்வொரு வீட்டிலும் 'உறி'யில் வைக்கப்பட்டிருந்த முட்டைகள் அங்கே குவிந்தன.

வைத்தியர் ஒரு பச்சிலையை ரகசியமாக வைத்துக் கொண்டு வரும்போது, 'சச்சுவேசன் வைத்தியர்' கொடுத்த யோசனையில் வைரமணிக்கு முட்டைகள் உடைக்கப்பட்டு வெள்ளைக்கரு வாயில் ஊட்டப்பட்டது. பத்து நிமிடத்தில் நுரை வருவதும், கண் சொருகுவதும் நின்றுவிட்டன. ஆள் பிழைத்துவிடுவான் என்ற நம்பிக்கையில் பலர் பேசத் துவங்கினார்கள். எல்லோருக்கும் அவன் தற்கொலை செய்துகொள்ளப் போனதற்குரிய காரணம் தெரியும். இருந்தாலும் அதை வெளிப்படையாகக் கூறாமல் தீர்ப்புகளை வழங்கிக்கொண்டிருந்தார்கள்.

''நீ எதுக்குடா சாவணும்? ஆம்பிள ஆயிரம் பொண்டாட்டி கட்டிக்கலாம்.''

''பொண்டாட்டி பிடிக்கலன்னா இன்னொரு பொண்டாட்டி கட்டிக்கறது. இதுக்குப் போயி... பைத்தியக்காரன்... என்ன மாமா நான் சொல்றது?''

'என்ன மாமா'வான மாயாண்டி இரண்டு பெண்டாட்டிக்காரர் மட்டுமல்ல. இதனால், ஆப்பசைத்த குரங்கு மாதிரி ஆனவர். ஆகையால் தன்னை விழித்து, தன் அங்கீகாரத்திற்காகச் சொல்லப்பட்ட வார்த்தையால், சொல்லொண்ணா துயரத்தில் ஆழ்ந்தவர்போல் பேசினார்.

''ஏண்டா உனக்கு இந்தப் புத்தி? பொண்டாட்டி என்கிறவளும் ஒரு மனுஷிதானே. கட்டினவளுக்குத் துரோகம் பண்ணப்படாது. ஒருத்தியைத் தாலி கட்டிட்டு இன்னொருத்தியை வச்சிக்கலாமே தவிர கட்டிக்கக்கூடாது.''

''நீரு கிடயும். எல்லாம் எங்க பெரியப்பாவால வந்தது. சரியான ஹூரஸைக் கட்டிவச்சிட்டாரு. இன்னும் இந்த வீட்ல என்னெல்லாம் நடக்கப்போவுதோ.''

ஐயாசாமியால் பேசாமல் இருக்க முடியவில்லை. வைரமணியின் நாடியைப் பார்த்துக்கொண்டே ''ஏய் லிங்கம்மா! இங்க வாம்மா, உன்னோட தாலி பாக்கியத்தால தான் இந்தப் பயல் பிழைச்சிக்கிட்டான். இல்லன்னா இவன் இவ்வளவு தின்னதுக்கு எப்பேர்ப்பட்ட டாக்டராலும் காப்பாத்த முடியாது. உன் தாலி கெட்டியான தாலிதான். அங்கே ஏம்மா நிக்கிற? அவுத்திக்கீரையைப் போட்டுட்டு வா. வாம்மா இவன் காலைப் பிடிச்சுவிடு.''

லிங்கம்மா அவுத்திக்கீரையைப் பிரிய மனமில்லாதவள் போல் தயங்கி வைத்துவிட்டு, புருஷனின் கால்களைப் பிடித்து விட்டாள். கூட்டத்தினர் ஏதோ ஒருவித குற்ற உணர்வின் சுமை தாங்கமாட்டாதவர்கள் போல் நழுவிக் கொண்டிருந்தார்கள்.

வைரமணியின் குடும்பம், அந்தக் கிராமத்தில் வசதியுள்ள பிறருக்குக் கடன் கொடுக்கக்கூடிய நிலையில் உள்ள குடும்பம். அவன் தந்தை 'வழக்காளி.' வெளியூர்களில் இருந்துகூட 'விவகாரம்' பேசுவதற்காக அவரை 'வில் வண்டி'யில் வைத்து அழைத்துப் போவார்கள். பிறர் மனதில் இருப்பதைப் பக்குவமாக வரவழைத்துத் தெளிவாக 'பைசல்' செய்வார். அப்படிப்பட்டவர் மகனுக்குப் பெண் பார்த்தபோது, 'அய்யா' சொல்லுக்கு அடுத்த சொல் சொல்லாத வைரமணியும், பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று ஜாடை மாடையாகக்கூடச் சொல்லவில்லை.

ஆனால்—

மணமேடையில் அவன் பெண்ணைப் பார்ப்பதற்கு முன்னதாகவே "போயும்... போயும் இவள்தானா கிடைச்சாள்" என்று சொந்தக்காரர்கள் அவனிடம் பேசத் துவங்கினார்கள். இதனால் பாதி உயிர் போனவன்போல் துடித்த வைரமணி, பெண்ணைப் பார்த்ததும் முழு உயிரும் போனவன்போல், தலைக்குமேல் வெள்ளம் போன இயலாமையில் ஒரு ஜடமாகவே உட்கார்ந்திருந்தான். அவனைச் சுற்றி ஏதோ ஒரு வேடிக்கை நடப்பதுபோலவும், அவனுக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லாதது போலவும் அவனை அறியாமலே அவன் மனம் பாவித்துக் கொண்டது.

அவனவள்—அதுதான் லிங்கம்மாவும் அசைவற்று உட்கார்ந்திருந்தாள். குச்சிக் கால்கள்; குச்சிக் கைகள்; முற்றிப் போன டி.பி. நோயில் விழுந்தவள் போன்ற உடல்; குறுகிப் போன கழுத்து; லேசாகக் கூன் விழுந்த முதுகு; உள் நோக்கிப் பாய்ந்த கண்கள்; நெற்றி எது, தலை எது என்று அடையாளம் காணமுடியாத தலை.

திருமணம் முடிந்த மூன்று மணி நேரத்தில் அவள் தோற்றத்தில் மட்டுமல்ல, குணபாகத்திலும் குறைவானவள் என்பது பிள்ளை வீட்டாருக்கு நிரூபணமாகியது.

அவள் யாரிடமும் பேசமாட்டாளாம். ஒரு கேள்வியை மூன்று தடவை கேட்டால், லேசாகத் தலையை ஆட்டுவாளாம். அதட்டிக் கேட்டால்தான் பதில் சொல்லுவாளாம். உட்கார்ந்த இடத்தில் 'பிடித்து வைத்த பிள்ளையார்' மாதிரி, அசைவற்று உட்கார்ந்திருப்பாளாம். அதே நேரத்தில், அவளால் யாருக்கும் எந்தவிதமான தீமையும் ஏற்படாதாம். தெருவில் நடக்கும்போதுகூட, அவள் ஒருத்தியைத் தவிர, உலகத்தில் எதுவுமே இல்லாதது மாதிரியே போய்க் கொண்டிருப்பாளாம்.

அப்படி இப்படியாகச் சேகரித்த இந்தத் தகவல்கள் அவனிடம் கூறப்பட்டபோது அவன் அதிர்ச்சியடைய முடியாத பேரதிர்ச்சியில் மூழ்கிப் போயிருந்தான். முதலிரவிலேயே அவளைப் பற்றிய சங்கதிகள் அத்தனையும் உண்மை என்பதையும் புரிந்துகொண்டான்.

அறைக்குள் போன அரைமணி நேரத்திற்குள், அவன் அழுதுகொண்டே வெளியே வந்து படுத்துக்கொண்டான். அவன் தந்தையால் அவனை நேருக்கு நேராகப் பார்க்க முடியவில்லை. இன்னொரு 'வழக்காளி'யை நம்பிப் பெண்ணைப் பார்க்காமல் மோசம் போய்விட்டோமே என்று தனக்குள்ளேயே குமைந்துகொண்டார்.

ஓரிரு மாதங்கள் ஓடின.

ஊரில் உள்ளவர்கள் வைரமணியிடம் துக்கம் விசாரிக்கத் துவங்கினார்கள். 'மாடசாமி நாடார் மவன் வைரமணி மாதிரில்லா இருக்கணும்' என்று ஒரு காலத்தில் சொன்ன தந்தைமார்களிடம் 'நான் பொண்ணைப் பாக்காமக் கட்ட முடியாது. அப்புறம் வைரமணிக்கு வந்தது மாதிரித்தான் முடியும்' என்று இளைஞர்கள் வாதாடினார்கள்.

அந்த ஊரில் வைரமணியின் கதை, நல்லதங்காள் கதை. பஞ்சபாண்டவர் வனவாசம் மாதிரி மேற்கோள் காட்டப்படும் அளவுக்குப் போய்க்கொண்டிருந்தது. மகன் மன

துக்குள் வெந்துகொண்டிருப்பதை அறிந்த மாடசாமி நாடார், 'வழக்கு' பேசப் போவதையும் நிறுத்திவிட்டு, தனக்குள்ளேயே அடிக்கடி 'வழக்குப்' பேசிக்கொண்டார்.

வைரமணி ஒரு முடிவுக்கு வந்தான். 'இரண்டாவது கல்யாணம்.' அம்மாவிடம் தனக்கு இரண்டாவது கல்யாணம் செய்து வைக்க வேண்டுமென்று அரைகுறை வார்த்தைகளால் அவன் சொன்னபோது, "அன்னைக்கு எழுதுனத அடிச்சி எழுத முடியுமா? உன் தலையெழுத்து அப்படி ஆயிட்டு... சட்டியா பானையா... மாத்தரதுக்கு" என்று சொல்லிவிட்டாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் வைரமணி தோட்டத்துக்குப் போய், அங்கே தங்கரளி மரத்தில் இருந்த காய்களைப் பறித்துத் தின்றுவிட்டான். தீராத பிரச்னைக்கு தற்கொலை முயற்சியை ஒரு தீர்வாக நினைத்தான்.

ஒரு வாரம் ஆகியிருக்கும். ஒருவாறு தேறி, மீண்டும் தோட்டத் துறைகளுக்குப் போகத் துவங்கினான். அவனுடன் அவன் தம்பிக்காரனும் மெய்க்காவலாளன்போல் போய்க்கொண்டிருந்தான். அண்ணன் மொச்சைக் கொட்டையைத் தின்றால்கூட, "காட்டு பார்க்கலாம்" என்று கட்டாயப்படுத்துவான்.

இதற்கிடையே இன்னொரு நிகழ்ச்சி.

வைரமணியின் அம்மா இன்னொரு ஊரில் 'துஷ்டி' கேட்கப் போயிருந்தாள். அவன் அப்பா உடம்பெல்லாம் வீங்கி, படுத்த படுக்கையாகக் கிடந்தார். லிங்கம்மாவைக் 'காவலுக்கு' வைத்துவிட்டு அண்ணன், தம்பி இருவரும் வயலுக்குப் போயிருந்தார்கள். திரும்பி வந்து பார்த்தால் மாடசாமி நாடார் கால் கை விறைத்துப்போய், வாயில் ஈக்கள் மொய்க்கக் கிடந்தார். லிங்கம்மா, கட்டிலில் சாய்ந்து கூரையை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். இரண்டு மணி நேரத்திற்கு முன்னதாகவே அவர் இறந்திருக்க வேண்டும்.

கொஞ்ச நேரம் ''அய்யா அய்யா'' என்று அழுத வைரமணி, ''நீயில்லாம்... ஒரு பொம்பிளையா... செத்துப் போயிருக்காரு. அதக்கூட அக்கம்பக்கம் சொல்லணுமுன்னு தெரியலியா? நீயும் அவரோடப் போயிடு'' என்று சொல்லி பயங்கரமாக அடித்து, முதன் முறையாக அவளைத் 'தொட்டபோது' தம்பிக்காரன் அவனைப் பிடித்துக்கொண்டான். பிறகு மயினிக்காரியைக் கையைப் பிடித்து இழுத்து வெளியே கொண்டு வந்தான். ''மரியாதியா ஒப்பன் வீட்டப் பாத்துப் போயிடு. நீ இங்க... ஆவாது'' என்று சொல்லி விட்டு, ஒரு பையனிடம் கையில் பத்து ரூபாயைக் கொடுத்து, லிங்கம்மாவை பிறந்த வீட்டில் கொண்டுபோய் விட்டுவிடும்படிச் சொல்லிவிட்டான்.

போகிறோமே என்று வருத்தப்படாமலும், போகச் சொல்லிவிட்டதற்காகச் சந்தோஷப்படாமலும் லிங்கம்மா பஸ் ஏறினாள். ஒருவேளை, அவள் மனதுக்குள் ஏதேனும் நடந்துகொண்டிருந்ததோ... என்னவோ?

வைரமணி மீண்டும் வயல் வரப்புக்குப் போகத் துவங்கியபோது, அவன் அம்மாக்காரி கிட்டத்தட்ட படுத்த படுக்கையாகிவிட்டாள். இதுவரை 'ரெண்டாவது கல்யாணம் நம்ம குடும்பத்து பழக்கமல்ல' என்று வாதாடியவள், ''நொண்டியோ... மூக்கரையோ... நம்மள சதமுன்னு வந்ததை நாம தள்ளி வைக்கலாமாய்யா?'' என்று எதிர்க் கேள்வி கேட்பவள், இப்போது ''நான் கண்ண மூடுமுன்ன நீ ஒரு நல்ல பொண்ண கல்யாணம் பண்றதப் பாக்கணும்'' என்று அடிக்கடி சொன்னாள்.

வைரமணிக்கும் அம்மா சொல்வது நியாயமாகவே பட்டது. 'அம்மா பிழைக்கணுமுன்னா நாம ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கணும்' என்று அவன் புறமனம், அடிமன அபிலாஷையை நாகரிகமாக வெளிப்படுத்தியது.

'பொண்ணு இருக்கா... பொண்ணு இருக்கா'ன்னு தண்டோரா போட்டால்கூட விஷயம் அப்படிப் பரவியிருக்காது. ஏற்கனவே வைரமணி கதையை வாசித்துக்கொண்டிருந்த ஊரார்கள், இந்தப் புதிய அத்தியாயத்தைப் பட்டிதொட்டியெங்கும் பரப்பினார்கள். ''சே! ஒரு பொண்ண தள்ளி வச்சிட்டு இன்னொரு பொண்ணு வாழணுமா?'' என்று நினைத்துக்கூடப் பார்க்காமல் பல பெண் வீட்டார் போட்டியிட்டார்கள்.

வெளியூர் என்றாலே கிலி பிடித்துப் போன வைரமணி உள்ளூரில் ஏழைக் குடும்பத்துப் பெண் ஒருத்தியை மணக்கச் சம்மதித்தான். நல்ல அழகு, நல்ல குணம்.

நிச்சயதாம்பூலமும் ஆகிவிட்டது.

இதற்கு முன்பு கல்யாணம் என்ற ஒன்று நடக்காதது மாதிரி, ஏற்பாடுகள் தடபுடலாக நடந்துகொண்டிருந்தன. பந்தலுக்கு அட்வான்ஸ்; மேளத்துக்கு அட்வான்ஸ்; ஆக்கிப் போடுபவர்கள்—இப்படியாக தினமும் இரண்டு கட்டு வெற்றிலை செலவாகும் அளவிற்கு சதா ஏதாவது ஒரு கூட்டம் இருந்துகொண்டேயிருந்தது.

திருமணத்திற்கு ஒரு நாள் இருந்தது.

வைரமணி 'டெய்லரிடம்' சட்டைக்கு அளவு கொடுத்துக்கொண்டிருந்தவன் தேள் கொட்டியவன்போல் துள்ளிக் குதித்தான்.

லிங்கம்மாவும் அவள் தந்தையும் வந்துகொண்டிருந்தார்கள். வைரமணி ஆத்திரத்தோடு ஏதோ பேசப் போனான். ஆனால் மாமனார் வரும்போதே பேசிக்கொண்டு வந்தார்.

''ஒங்க கல்யாணத்தை நிறுத்தறதுக்காக வர்ல மாப்பிள்ளை. நான் கோர்ட்டுக்குக்கூடப் போயி உங்கள ஜெயிலுல போட முடியும். ஆனால் நான் செய்யப்போறதில்ல. ஏன்னா உங்க நிலைமை எனக்குப் புரியுது. இவ

ளோட அம்மா எட்டாவது வயசில இறந்துட்டா. ஊருப் பயலுவ பேச்சைக் கேட்டு ரெண்டாவது கல்யாணம் பண்ணு னேன். அந்தப் பாவி பிள்ளையை அதட்டி அதட்டியே உருப்படாமப் பண்ணிட்டா. எட்டு வயசு வரைக்கும் ஓடுற பாம்பைப் பிடிக்கிற மாதிரிதான் இந்தப் பய மவள் இருந்தாள். இவள் தலையெழுத்து நான் ரெண்டாவது பண்ணிக்கிட்டேன்.

ஒங்க நெலைமையிலே யாரு இருந்தாலும் ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கத்தான் செய்வாங்க! அதை நான் தப்புன்னு சொல்லல. ஆனால் இவள என் வீட்ல வைக்க முடியல. அன்னாடு குத்துப்பழி, வெட்டுப்பழிதான். இவள, எனக்கு 'வாச்ச' கைகேயி கைநீட்டி அடிக்கிறத என் கண்ணால பார்த்ததுக்கப்புறமும் நான் உயிர் வாழ்றேன்னா நான் ரோஷங் கெட்டவனாகத்தான் இருக்கணும்.

அதனால மாப்பிள்ளை, நீரு மகராஜனா கல்யாணம் பண்ணிக்கிடும், ஆனால் இவளையும் இங்கேயே வச்சிக்கிடும். அடிச்சாலும் சரி, அணைச்சாலும் சரி ஒம்ம இஷ்டம். ஒங்க வீட்ல எத்தனையோ மாடுக இருக்கு. ஆடுங்க இருக்கு. அதுலே இவளையும் ஒண்ணா நெனச்சி கஞ்சி ஊத்தும்; ஒம்மமேல் எனக்கு எந்தவித கோபமும் கிடையாது. வரேன் மாப்பிள்ள, வரேன் மாப்பிள்ள... வரேன் லிங்கம்மா!''

மாமனார் போய்விட்டார். லிங்கம்மா அய்யா போவதைக்கூடத் திரும்பிப் பார்க்காமல் புருஷனுக்கு அருகே போய் நின்றாள். வைரமணிக்கு என்னவோ போலிருந்தது.

இரவு வேளை வந்தது. விடிந்தால் திருமணம்.

முற்றத்தில் போடப்பட்டிருந்த பந்தலில் உள்ளூர் மேளம் வெளியூருக்கும் கேட்கும்படி ஒலித்துக்கொண்டிருந்தது. வைரமணி புது வேட்டி சட்டை கட்டி, துண்டை எடுத்துத் தோளில் போடப்போனபோது ஐயாசாமி தாத்தா

வந்தார். இந்தத் திருமணம் தேவையா, தேவையில்லையா என்று சொல்ல முடியாத நிலையில் இருந்தார். 'முன்னால் போனால் கடித்து, பின்னால் போனால் உதைக்கும்' இந்தக் 'கழுதைப் பய விஷயத்துல' அவரால் ஒரு திட்டவட்டமான முடிவுக்கும் வர முடியவில்லை. எப்படியோ மாப்பிள்ளைகளை சுடலை மாடசாமி கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போகிறவர் அவர்தான். கைராசிக்காரர் என்பதோடு சுடலையாண்டி அவர் பிரார்த்தனையைத் தட்டமாட்டான் என்று ஊரார் மட்டுமல்லாமல் அவரும் நம்பினார். அந்த நம்பிக்கையில் மாப்பிள்ளையை அதட்டினார்.

''முட்டாப்பய மவன! துண்டை தோளுல போடாதடா! இடுப்பில எடுத்துக்கிட்டுக் கோவிலுக்குப் பணிவா போவணும்! இல்லன்னா மாடன் கோவிச்சுக்குவான். ஆமாம் மாலை எங்கேடா?''

''உள்ள இருக்கு.''

''உள்ள என்னடா சத்தம்?''

''அவ தான்!''

''அவன்னா யாரு?''

''என் சம்சாரம்''— வைரமணி தலையைக் குனிந்து கொண்டான்.

''லிங்கம்மாவா! அதுவும் நல்லத்துக்குத்தான். ஏய் லிங்கம்மா! அந்த மாலையை எடுத்துக்கிட்டு வாம்மா... வா நேரமாவுது.''

லிங்கம்மா மல்லிகைச் சர மாலையைக் கையில் ஏந்திக் கொண்டு வந்து நின்றாள். முகத்தில் எந்தவித சலனமுமில்லை. ஐயாசாமி தாத்தா அழுகையை அடக்கிக் கொண்டார்.

''உன் புருஷன் கழுத்திலே நீயே மாலையைப் போடு.''

போட்டாள். மாலையோடு கையையும் அவன் தோளில் வைத்துக்கொண்டு அதை எடுக்க வேண்டும் என்ற எண்ண மில்லாமல் நின்றாள்.

''லிங்கம்மா எதுக்கு மாலை போடுறேன்னு தெரியுமா? சொல்லும்மா, உன்னத்தாம்மா எதுக்கு?''

''அவியளுக்குக் கல்யாணம்.

''நாளைக்கு நீ அவங்க ரெண்டுபேருக்கும் திருநீர் பூசணும். அவங்க நல்லா இருக்கணுமுன்னு சாமியைக் கும்பிடணும். சரிதானே சொல்லும்மா.''

''சரிதான்.''

லிங்கம்மா மீண்டும் உள்ளே போய்விட்டாள். ஐயா சாமி, வைரமணிக்குத் தெரியாமலும், வைரமணி ஐயா சாமிக்குத் தெரியாமலும் தத்தம் கண்களைத் துடைத்துக் கொண்டார்கள்.

''மாமா!''

''என்னடா ராஜா?''

''அவளையும் கோவிலுக்குக் கூப்பிடும்.''

''இல்ல நீரே கூப்பிடும்.''

''லிங்கம்மா உன்னத்தாம்மா... நீயும் கோவிலுக்கு வா, வாம்மா! சீக்கிரம்... நாழியாவுது.''

உள்ளே ஏதோ சத்தம் கேட்டதே தவிர அவள் வர வில்லை. என்னமோ ஏதோன்னு வைரமணி உள்ளே போனான்.

லிங்கம்மா பூனைக்குட்டி ஒன்றை மடியில் எடுத்து வைத் திருந்தாள். வெளி வீடுகளில் சுற்றாமல் அங்கேயே முடங்கிக் கிடக்கும் வெள்ளை முதுகும் மஞ்சள் கழுத்தும் கொண்ட அழகான சின்னக்குட்டி. அதன் காலில் ஏதோ ஒரு காயம். லிங்கம்மா சோற்றை அந்தப் புண்ணில் அப்பி, ஒரு துணியை எடுத்து அதன்மேல் கட்டிக்கொண்டிருந்தாள். வைரமணி

அவளையும், அந்தப் பூனைக் குட்டியையும் மாறி மாறிப் பார்த்தான். போனவனைக் காணாமல் ஐயாசாமியும் அங்கே வந்தார்.

"பாத்தியாடா! அவள் பூனைக்குட்டியை எவ்வளவு பாசமா வச்சிருக்கா! இவளுக்குப் பாச பந்தமே இல்லன்னு நினைச்சது எவ்வளவு பெரிய தப்பு பாரு! அவள் மனசுல பாசம் இருக்கு. ஆனா வாயுள்ள பிராணிங்ககிட்டே அதைக் காட்ட பயந்துக்கிட்டு வாயில்லாப் பிராணிங்ககிட்ட காட்டுறா. எல்லாம் மாடன் செயல். சரி சரி. நேரமாயிட்டு புறப்படு."

"அவளைக் கூப்பிடும் மாமா!"

"லிங்கம்மா எழுந்துரு, கோவிலுக்குப் போவலாம்."

லிங்கம்மா பூனைக்குட்டியை மடியில் வைத்துக் கொண்டே புறப்பட்டாள்.

"பூனைக்குட்டிய கீழே விடும்மா. கோவிலுக்கு அது வரக்கூடாது. சீக்கிரமா விடு."

லிங்கம்மா விடவில்லை. அந்தப் பூனைக்குட்டி இல்லாமல் கோவிலுக்குப் போக விரும்பாதவள்போல் மீண்டும் கீழே உட்கார்ந்தாள். அதை அவர்கள் பிடுங்கிவிடுவார்கள் என்று பயந்தவள்போல் குட்டியை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள். அதன் கால் புண்ணில் வாயால் ஊதினாள்.

வைரமணி அந்த வாயில்லாப் பிராணியையும் வாயுள்ள பிராணியையும் பார்த்துக்கொண்டே நின்றான். அப்போது ஒலிபெருக்கியில் 'ஆயிரத்தில் ஒருத்தியம்மா' என்ற பாடல் ஒலித்தது.

வைரமணி நெஞ்சைப் பிடித்துக்கொண்டே சிந்தித் தான்.

'இந்தப் பச்சைக் குழந்தையைத் தள்ளிவிட்டு, இன்னொரு வயது வந்தவளைப் பிடித்து வாழவேண்டியது அவசியந்தானா? பூனைக்குட்டிக்கு அடைக்கலம் கொடுத்த

அவளுக்கு யார் அடைக்கலம்? இந்த ஊரில் இருப்பவர்கள் வேலை பார்ப்பது, கல்யாணம் செய்வது, பிள்ளை பெறுவது, வயல் தோட்டங்களை விற்பது அல்லது வாங்குவதைத் தவிர வேறு எதைக் கண்டார்கள்? எத்தனையோ பேர் வாழ்ந்துவிட்டுப் போன இந்த ஊரில் என்ன மிஞ்சி இருக்கு?

நாம ஏன்... இவளோட வாழக்கூடாது? 'மாடசாமி நாடார் மவன் மாதிரி மாட்டிக்க மாட்டோமு'ன்னு சொல்லுற இளைஞர்களிடம், 'மாடசாமி மவனப் பாருங்கல... கிடைச்சவள வச்சிக்கிட்டு எவ்வளவு சந்தோஷமா இருக்கான்' என்று ஊர்க்காரர்கள் சொல்லும் படி நாம ஏன் முன்னுதாரணமா வாழக்கூடாது?

தென்காசிக்குப் போயிருக்கும்போது, கிருபானந்த வாரியாரோ கிருஷ்ணவாரியாரோன்னு ஒருவர், நளாயினி, குஷ்டரோகம் பிடிச்ச புருஷனைக் கூடையில் சுமந்ததாகச் சொன்னாரே, நாம ஏன், குணரோகம் பிடிச்ச இவள திருத்தக்கூடாது?

வீட்டு நாய்கிட்ட, அது நாயுங்கறதுக்காக ஆசை வைக்காமலா இருக்கோம்? இவளும் ஒரு மனுஷிதான். 'இளையோடியா'கிட்ட அவஸ்தபட்டதுல மிரண்டு போயிருக்காள். இன்னொரு கல்யாணம் பண்ணி அவள்கிட்டேயும் இவள் அவஸ்தைப்படணுமா? இவள் அவஸ்தையிலே கிடைக்கிற கல்யாணம், அதுலகிடைக்கிற சுகம் ஒரு சுகமா?

பிறந்தாலே சாவு இருக்குன்னு அர்த்தம். சாவப்போற நாம ஏன் அதுவரைக்கும் இவளுக்காக வாழக்கூடாது? நமக்குப் பேசின பொண்ண ஏன் தம்பிக்குக் கட்டி வைக்கக் கூடாது? அப்படித்தான் செய்யணும்.

சிந்தித்துக் கொண்டிருந்த வைரமணியின் தோளைத் தட்டி ''நேரமாவுதுடா'' என்றார் ஐயாசாமி.

''மாமா... ஒங்ககிட்ட ஒரு விஷயம் பேசணும். நீங்க தான், தம்பிகிட்ட பேசி... அவனைச் சம்மதிக்க வைக்கணும்...''

ஐயாசாமி அவனை ஆச்சரியமாகப் பார்த்தார்.

வைரமணி ஐயாசாமி தாத்தாவின் கண்களை முதன் முதலாக நேருக்கு நேராகப் பார்த்தான். அவனுக்கே தான் ஒரு 'பிடி' அதிகமாக வளர்ந்துவிட்டது போன்ற எண்ணம் ஏற்பட்டது. மார்பு பரிசுத்தமாக நிமிர்ந்து நிற்பதுபோன்ற ஒரு பெருமிதம். மூச்சு எந்தவித இடர்ப்பாடுமில்லாமல் கம்பீரமாக விரிவது போன்ற உணர்வு. சாதாரணமான மனிதர்களைவிட, தான் அசாதாரணமானவன் என்கிற நினைப்பு. ஏதோ ஒருவித தியாகத்தினால், இழப்பு ஏற்படாமல் இன்பம் ஏற்பட்டிருப்பது போன்ற தெம்பு. வாழ்க்கையில் முடியாமல் நிற்கும் ஆன்மாவை அடையாளம் கண்டு கொண்ட ஞானோதயம். வாழ்வின் முழுப் பொருளையும் அறிந்துகொண்டது போன்ற ஒரு தெளிவு.

வைரமணி சொல்லச் சொல்ல, ஐயாசாமி தாத்தாவால் தன் மகிழ்ச்சியையும் கண்ணீரையும் அடக்க முடியவில்லை. ''ஏல, கனகராஜ் ஓடியாடா, ஓடியாடா'' என்று சொல்லிக் கொண்டே பிள்ளை இல்லாத அந்த வீட்டில், தாத்தா துள்ளி விளையாடிக் கொண்டிருந்தார்.

வைரமணி லிங்கம்மாவை புதிய பாசத்தால் புன்னகை தவழ பார்த்துக்கொண்டே இருந்தான்.

அப்போது—

லிங்கம்மா தன் தோளில் நகத்தை வைத்துச் செல்லமாகப் பிராண்டிக் கொண்டிருந்த பூனைக்குட்டியை பொய்க் கோபத்தோடு பிடிப்பதற்கு முயற்சி செய்தாள்.

அந்தப் பூனைக்குட்டியும் அவளுக்குச் சளைக்காதது போல், அவள் கழுத்தில் தொங்கிய மங்கல நாணை வாயால் கௌவி, மகிழ்ச்சியோடு சேலைக்கு மேலே கொண்டுவந்து வைரமணிக்குக் கம்பீரமாகக் காட்டிக்கொண்டிருந்தது. ❋

# காமதேனு

தலையில் ஒரு 'அம்பாரம்' புல்கட்டோடும், அதன் மேல் கவிழ்த்து வைக்கப்பட்ட மண்வெட்டி 'காம்பை' ஒரு கையில் பிடித்தபடியும் இன்னொரு 'கக்கத்திற்குள்' அகத்திக்கீரைக் கட்டை விலாவோடு சேர்த்தபடியும், முத்து லிங்கம் அந்த ஓலை வீட்டிற்குள் ஆவேசமாக வந்தான். மண் வெட்டியை அவன் தூக்கிப்போட்ட வேகத்தில் அது முற்றத் தில் பள்ளம் பறித்தது. வெள்ளை வெளேரென்று பனை நாரால் இருபுறமும் இறுக்கிக் கட்டப்பட்டதால், நடுவில் துருத்திக்கொண்டிருந்த பச்சை பசேலென்ற புல்கட்டு, மேளம் போலவே தோன்றியது. இதனால்தானோ என்னவோ கம்மாகரையில் உலா போட்ட புது பணக்காரப் பயல்கள் ''என்னடா முத்துலிங்கம் தலையிலே மேளத்தைச் சுமந்துகிட்டு போறே, அதை வயித்துலல்லா தொங்கப் போடணும்'' என்று கிண்டலும் கேலியுமாய் கேட்டிருக் கிறார்கள்.

புல்கட்டை இறக்க முத்துலிங்கம் கைகளை அதன்மேல் போட்டபோது அந்தப் பயல்களின் கிண்டல் அவன் காதில் பலமடங்காய் இப்போது ஒலித்தது. நளினமாய் இறக்கப் போன புல்லை, இரண்டு கரங்களாலும் தூக்கிப் பிடித்து, பொத்தென்று போட்டான். போதாக்குறைக்கு மேளம் அடிப்பதற்கு முன்பாக அந்த மேளத்தைத் தடவிப் பார்ப் பார்களே—அந்த மாதிரியான தடவல் ஓசையோடு புல்கட்டு

சத்தம் போட்டு கீழே விழுந்தது. அந்தச் சத்த அதிர்ச்சியில் 'செருவைப்' பக்கம் குஞ்சுகளோடு மேய்ந்துகொண்டிருந்த கோழி 'கள்ளப்பிறாந்து' வந்துவிட்டதாய் நினைத்து குஞ்சுகளுக்கு அபயக்குரல் கொடுத்து, அவற்றைத் தம் இறக்கைகளுக்குள் உள்வாங்கிக் கொண்டது. தொழுவத்தில் கட்டப்பட்டு இருந்த கன்றுக்குட்டி, 'ம்மா...' என்றது. குங்குமச்சிவப்பான அதன் உடம்பில் ஆங்காங்கே தோன்றிய வெள்ளைப் புள்ளிக் கோலங்களும் அதன் மதர்ப்பான பார்வையும், கன்றுக்குட்டியை மான்குட்டிபோலக் காட்டியது. முத்துலிங்கம் அதன் அருகே வழக்கம்போல் சென்று, அதன் முகத்தை நிமிர்த்தி மோவாயில் தடவிவிடாமல் 'உஷ்' என்று தன்பாட்டிற்கு ஓர் உதட்டுப் பிதுக்கல் ஓசையை எழுப்பியபடி தொழுவத்தை ஒட்டிக் கட்டப்பட்ட திண்ணை மேட்டில் கேழ்வரகு, சோளம், தினை போன்ற தானிய வகைகளைத் திரித்து மாவாக்கும் 'திருவல்' மேல் போய் உட்கார்ந்தான்.

கீழே உள்ள அகன்ற வட்டக்கல்லின் மத்தியில் நேராக இருந்த இரும்புக் கம்பியில் பொருத்தப்பட்ட சின்ன வட்டக் கல்லின் மேல் ஒரு காலைத் தூக்கி வைத்தபடி தலையில் 'சிம்மாடு' போல் பாம்புப் பெட்டிமாதிரி வட்ட வட்டமாய் மடித்து வைத்திருந்த துண்டை எடுத்து நீளமாக்கி உதறினான். பிறகு அதனால் வேர்வைத் துளிகளைத் துடைத்துக்கொண்டான். தொழுவத்து கன்றுக்குட்டி ''எனக்குப் புல் முக்கியமல்ல நீதான்'' என்று சொல்லாமல் சொல்வதுபோல் புல்லும் அவனும் தனியாய்ப் பிரிந்தபோது, அது அவனையே பார்த்து, அவன் நடந்த இடம் நோக்கிப் பார்வையை நகர்த்தி இப்போது முகத்தை தெற்குப்புறமாய்த் திருப்பி ''ம்மா, ம்மா'' என்றது. 'பெரிய' ஓலை வீட்டில் 'பெருச்சாளி' பிடித்த காலை அமுக்கிப் பிடித்தபடி முடங்கிக் கிடந்த திருமலையம்மா, மகனுக்குக் கஞ்சி ஊற்றிக் கொடுக்கக் கும்பாவை எடுத்துக்கொண்டு எழுந்தாள். எழுந்தவள், மகன் புல்லை எடுத்து 'அளியில்'

போடாமல் திருவல்மேல் உட்கார்ந்து இருப்பதை அதிசய மாகப் பார்த்தாள். பின்னர் நடுமுற்றத்திற்கு வந்து நின்ற படி, அவனிடம் கேட்டாள்.

''புல்லை எடுத்து கன்றுக்குட்டிக்குப் போட்டா என்னடா?''

"போட்டா போச்சு! என்ன அவசரம்.'

''ஏண்டா ஒருமாதிரி இருக்கே!''

''ஒண்ணுமில்லே!''

''சரி... கஞ்சி குடிக்க வா!''

''கஞ்சியும் வேண்டாம், கிஞ்சியும் வேண்டாம்.

திருமலையம்மா, மகனையே பார்த்தாள். இப்போது 'பாரும்மா! உன் மகன் என்னைப் பார்க்கமாட்டேங் கிறான்' என்பதுமாதிரி அவளிடம் முறையீடு செய்வதுபோல் கன்றுக்குட்டி ''ம்மா... ம்மா...'' என்று கத்தி தாயையும் மகனையும் மாறி மாறிப் பார்த்தது. அதன் வயிறு 'கொலுக் காய்' கிடப்பதைப் பார்த்தாள் திருமலையம்மா. உரக்கக கத்தினாள்.

''ஏய் கமலசுந்தரி எங்களா தொலைஞ்ச?''

அண்ணனை புல்கட்டோடு பார்த்ததும், வீட்டுககு வெளியே வேப்பமரத்தடியில் பதுங்கிக்கொண்டிருந்த கமல சுந்தரி, இருக்கவும் முடியாமல் எழுந்திருக்கவும் முடியாமல் தவித்தாள். ''சீக்கிரமா தோட்டத்துக்கு வா... இரண்டு பேருமா சேர்ந்து புல் வெட்டினால், கொஞ்சத்தை விக்க லாம்''முன்னு அண்ணன் சொல்லிவிட்டு அதிகாலையிலேயே போய்விட்டான். அவளுக்கு ஏனோ போக மனமில்லை. அதுவும் 'ப்ளஸ் டூ' படித்துவிட்டு தோட்டத்துக்குப் பூப் பறிப்பதற்குப் போவதற்குப் பதிலாகப் புல் பறிக்கப் போக அவளுக்கு மனமில்லை. அண்ணனிடம் சொல்லவும் பயம். பொதுவாய் 'உம்' என்றாள். ஆனால் போகவில்லை.

இப்போது, அவன் முகத்தில் விழித்தால் பார்வையாலேயே எரிப்பான். எள்ளும் கொள்ளுமாய் வெடிப்பான். என்ன செய்யலாம்...''

தில்லையம்மாவின் சத்தம் கூடிக்கொண்டேயிருந்தது. 'கமலசுந்தரி, கமலசுந்தரி' என்று அவள் வேகவேகமாகக் கத்தியது. 'சுந்தரி கமலம் சுந்தரி கமலம்' என்றுகூட ஒலித்தது. மகள்காரி எழுந்தாள். இன்னும் போகவில்லையானால் அம்மா அங்கேயே வந்து எட்டு ஊருக்குக் கேட்கும்படி கத்துவாள். கண்டபடி திட்டுவாள். திட்டு என்பது அவளுக்குப் புட்டுமாதிரி. வயசுக்கு வந்த மகளாச்சே என்று கூடப் பார்க்கமாட்டாள்.

கமலசுந்தரி நகர்ந்து நகர்ந்து, நடந்து நடந்து, வீட்டிற்குள் காலடி வைத்தாள் அண்ணனைப் பார்க்காமல் முகத்தை வேறுபுறமாகத் திருப்பிக்கொண்டு உள்ளே போகப் போனாள். பதுங்கிப் பதுங்கி வந்தவள்—அண்ணனின் பார்வை படாமல் இருப்பதற்காக தலையைச் சாய்த்து, கொண்டையால் முகத்தை மறைத்தபடி வந்தவள் ஆச்சரியப் பட்டாள். அவளை எதேச்சையாகப் பார்த்த முத்துலிங்கம் பேசாமல் இருந்தான். அவளை கோபமாகப் பார்க்காமல், குரோதமாகக் கேட்காமல் முற்றத்தில் வெட்டப்பட்ட மண்ணை விழுங்கிக்கொண்டிருப்பதுபோல் தோன்றிய மண்வெட்டியை அணில்மாதிரி பார்த்தான்! கமலசுந்தரி மகிழ்ச்சி தாங்கமுடியாமல் குதித்து நடந்தபோது அம்மாகாரி அண்ணனின் குறையைத் தீர்த்து வைத்தாள்.

''எங்களா போனே மூதேவி! உடம்பு மட்டும் வயசுக்கு வந்துட்டா போதுமாளா? வெளிலே என்ன பண்ணின? இந்தப் புத்தியாலதான் ஒப்பன மூணு வயசிலே துள்ள துடிக்க விழுங்கிட்ட! இவன் கவர்னர் மவன்... என்ன சொன்னாலும் கேட்கமாட்டான். நீயாவது அந்த வாயில்லா ஜீவனுக்கு புல்லை எடுத்துப்போடேன்! நாம மட்டும் சாப்பிட்டா போதுமா!''

கமலசுந்தரி அம்மாவை சட்டை செய்யாமல், புல் கயிற்றை அவிழ்க்கப்போனாள். இதற்குள் திருமலையம்மா சின்ன வீட்டிற்குள் போய், சோளக்கஞ்சியையும் வேகவைத்த அகத்திக்கீரையையும் கும்பாவில் கலந்து நான்கைந்து மிளகாய்களையும் உப்புக் கொத்தையையும் கையில் பிடித்த படி மகனிடம் வந்தாள்.

"திருவோல விட்டு இறங்குல; இந்தா."

"எனக்குக் கஞ்சி வேண்டாம்முன்னு ஒன்கிட்டே ஒரு தடவை சொன்னா போதாது?"

"இன்னிக்கு... ஒனக்கு என்னல வந்துட்டு..."

"இனிமே என்ன வரணும், என்ன ஊர், என்ன பயலுக..." நம்மால இனிமே ஒரு நொடிகூட இந்த ஊர்லே இருக்க முடியாது."

"என்னடா விசயம்?"

"சொன்னா நீ மட்டும் என்ன பண்ணிடப் போறே..."

"சொல்லித் தொலையில... ஏழா... கவுகண்ணி... புல்ல ஏன் அளிக்கு வெளியே போடுறே... ஒழுங்கா போடு மூதேவி... ஏலே...முத்துலிங்கம் சொல்லுடா. அம்மாகிட்டே சொல்லாமல் யாருகிட்டே சொல்லுவ?"

முத்துலிங்கம் கைகள் இரண்டையும் முஷ்டிகளாக்கி அவற்றை ஒன்றோடு ஒன்று குத்த வைத்துக்கொண்டான். உதடுகளைப் பிதுக்கிக்கொண்டான். பிறகு கோபாவேச மாய் ஒப்பித்தான்.

"தோட்டத்துலே இருந்து நான் பாட்டுக்கு சிவனேன்னு இந்தச் சுமையோடு வரேன். மெட்ராசில் இருந்து அம்மன் குடைக்காக ஊருக்கு வந்திருக்கிறான்னுவ பாரு! சிவ சைலமும், தங்கமுத்தும்... இவன்களும படிச்சுட்டு வேலை வெட்டியில்லாம ஊர்ல காலித்தனமா சுத்துற மேலத் தெரு

ராமய்யா மவனும்... மொச்சைக் கொட்டை மவன் பிள்ளை யாரும், சும்மா கரையிலே நின்னு, என்னைப் பார்த்து முகத்தை ஆட்டி ஆட்டி காட்டி இளக்காரமா சிரிச்சாங்க. அப்புறம் மெட்ராஸ் பயல் தங்கமுத்து பேண்ட் சட்டை போட்ட திமிர்ல ''என்னடா மேளத்தைத் தலையிலே சுமந்துகிட்டுப் போறேன்'னு கேட்கிறான். என் தலைவிதி, இந்தப் பயலுக்கு நான் இளக்காரமா போயிட்டேன்!''

திருமலையம்மா கொதித்துக் கேட்டாள். அவள் போட்ட கூச்சலில் இரு காதுகளிலும் தொங்கிய ''தடயங்கள்'' குதித்துக் குதித்து ஆடின.

''யாரு...ஊர்லே இருந்து ஆட்டுக்குட்டியை தூக்கிட்டுப் போய், சந்தையிலே வித்துட்டு மெட்ராசுக்கு ஓடுனானே... அதாண்டா... தெக்குத் தெரு கடாயை திருட்டுத்தனமா பிடிச்சுட்டு ஓடுன அந்தப் பயலா உன்னைப் பார்த்து இந்த மாதிரிக் கேள்வியை கேட்கிறான்? நீ அதுக்கு என்ன பதில் சொன்ன?''

''என்னத்த சொல்ல... என்னோட நிலமை அவனை அப்படிச் சொல்ல வைக்குது!''

''ஏமுலே பேசாம வந்த? இந்த உடம்ப வச்சுக்கிட்டு சும்மாதான் வந்தியாக்கும்... அந்த ''வந்தட்டி பய மவனே'' நாக்குப் பிடுங்கிறது மாதிரி நாலு வார்த்தை கேட்காமல் பேசாமல் வந்துருக்கான் பாரு!''

''இந்தப் பயலுகளுக்கு சொல்லிக் காட்டப்படாது. செய்து காட்டணும். கடவுளா பார்த்துத்தான் அண்ணனை இந்த மாதிரி லெட்டர் எழுத வச்சுக்கிறார்... இனிக்கே மெட்ராஸ் போகப் போறேன்... மளிகைக் கடை போட்டு, இல்லேன்னா கோணிக் கடை போட்டு, இந்தப் பயலுக கண் முன்னாலே பேண்டும், சட்டையும் உடுத்தி வரேன பாரு! நம்மளாலே ஒரு நொடிகூட இந்த ஊர்லே இருக்க முடியாது!''

திருமலையம்மா அதிர்ந்துபோனாள்; ஆனால், அதை வெளியே காட்டிக்கொள்ளாமலே சுருதி குறைந்து பேசினாள்.

''கொசுவுக்குப் பயந்து கோட்டை கட்டணுமாக்கும்... அந்தப் பயல்... அற்பனுக்கு பவுசு வந்தால் அர்த்தராத்திரி கொடை பிடிப்பாங்கிறது மாதிரி அப்படிப் பேசிட்டான். விட்டுத் தள்ளு.''

''செருக்கி மவன்'' மேளக்காரன்லா சொல்லிட்டான்.''

''மேளம் அடிக்கிறதும் ஒரு தொழில்தானடா... நீ கூலிக்குக் கமலை அடிக்கலியா, உழவு உழ போகலியா, அது மாதிரி அதுவும் ஒரு தொழில்தாண்டா. விட்டுத்தள்ளு. சந்திரனைப் பார்த்து நாய் குலைச்சு என்னவாகும்?''

''என்ன ஆவுமோ! நான் சந்திரன் மாதிரி மின்னிக் காட்டப்போறேன்! என்னை அவங்க பார்த்துட்டு, வேட்டை நாய் மாதிரி குலைக்கப்படாது...சொறி நாய் மாதிரி குன்னிப் போகணும்.''

திருமலையம்மா மகனை வாயகல, பல் விலகப் பார்த்தாள். அவன் பேச்சின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டாள். சுருள் சுருளான முடியோடு, மாநிற மேனியோடு, பெரிய மனிதத் தோரணையோடு, எலும்பும் தோலும் வேறு வேறானவை என்று சொல்ல முடியாதபடி, 'அந்த மனுசனைப்போலவே இறுகிப்போயும், எழில்பட்டும் தோன்றிய மகனையே திக்குமுக்காடிப் பார்த்தாள். இப்போதான் அவனுக்குப் பால் கொடுத்தது மாதிரி இருக்குது. எப்படி வளர்ந்துட்டான். வளரட்டும்... ஆனால் வளர வளர புத்தி ஏன் கட்டையா போவுது? அவளுக்கு நெஞ்சு சுட்டது; உணர உணர வாய் சூடாகியது; மூத்த மகனைத் திட்டினாள். ''அந்த நொறுங்குவான் குடும்பத்தைக் காப்பாத்துவான்னு அவனை காலேஜ்ஜிலே படிக்க வைச்சேன். கடைசியிலே அவன் குடும்பத்தைப் பிரிக்கத்தான் படிச்சிருக்கான்.''

இதுவரை பொறுமையாக இருந்த முத்துலிங்கம், இப்போது பூகம்பம்போல் வெடித்தான்.

"எம்மா என்னைப்பத்தி வேணும்னா பேசு! அண்ணனைப்பத்தி பேசினால் கெட்ட கோவம் வரும். பெரிசா படிக்கவச்ச மாதிரி பேசிறியே. கவர்ண்மெண்டு பணத்துலேதான் அவன் படிச்சான், கஷ்டப்பட்டு படிக்கிற வங்க வேலை கிடச்சதும், கஷ்டத்தை நீக்குறதுக்குப் பதிலாகக் கஷ்டப்பட்ட தங்கள் குடும்பத்தையே நீக்குற காலம் இது. பெரிய இடத்திலே பெண்ணை கட்டிக்கிட்டு, அப்பா, அம்மா குடும்பத்துகாரங்களை சின்ன இடமாய் நினைக்கிற காலம் இது. கீழத்தெரு பெருமாள்பாண்டி அப்பன் அவனோட ஆபீசுக்குப் போயிருக்கும்போது, அவரை வேலைக்காரன்னு அடுத்தவங்ககிட்டே சொன்னானாம். அந்த மாதிரியா நம்ம அண்ணன்? மாசா மாசம் இருநூறு ரூபாய் அனுப்பறான். நாலாயிரம் ரூபாய் சேர்த்துவச்சுக் கிட்டு, என்னை மெட்ராசிலே கடை போட கூப்பிடறான்... அவனைப் போயா இந்தக் கேள்வி கேட்கிறே?"

"உனக்கு அவன் உபகாரம் செய்யறதால அண்ணன். ஆனால், எனக்கு அவன் கொடுத்தாலும், கொடுக்காவிட் டாலும் பிள்ளை. இதை மறந்திடாதல! ஒரு வருஷமா அவனை பார்க்கமுடியாம நான் படுற பாடு, உனக்கு என்ன தெரியும்? நான் பெத்த பிள்ளை என் கண்ணுக்குள்ளே நிக்கான். இந்தச் சமயத்திலே உன்னையும் விட்டுட்டு நான் எப்படிடா இருக்க முடியும்?"

"உன்னை யாரும்மா இருக்கச் சொல்றது? உன்னையும், தங்கச்சியையும் வரச்சொல்லித்தான் லெட்டர் போட்டான் மெட்ராசிலே ஒரே குடும்பமா இருக்கலாமில்லா? கேட்கியா? நீதான வரமாட்டேக்க."

"எருது நோவு காக்காக்கு என்னடா தெரியப்போகுது? இந்த ஊரையும், வீட்டையும், நிலத்தையும் விட்டுட்டுப் போவ முடியுமா?"

"யாருக்காவது நிலத்தை குத்தகைக்கு விட்டுடலாம். வீடு சும்மா கிடக்கட்டும் பெரிய பங்களா பாரு!"

"அறிவில்லாமப் பேசாதல. நீங்கள்ளாம் எனக்கு பிள்ளைங்கனால், நம்ம வயலும், தோட்டமும் எனக்கு, என்னைப் பெத்த அப்பா—அம்மா மாதிரி. உனக்கு அது வெறும் மண்ணா தெரியலாம்... ஆனால், எனக்கு அது பூமா தேவி... என்னை சின்ன வயசிலே தாங்கிக்கிட்ட முத்துப் பல்லாக்கு. இதே மாதிரிதான், இந்த வீடும். உனக்கு என்னமோ, இது மண் சுவரும் பனை ஓலையுமாய் தெரியலாம். ஆனால், எனக்கு இதுதான் உயிரு. என் மவராசாவும், நானும் கொஞ்சி குலாவுன கோயில் இது! நீங்கல்லாம் பிறந்த இடம் இது! அதோ நிக்குதே வேப்ப மரம், அதுதான் ஒங்களோட தொட்டில தாங்கின சீதேவி... இதெல்லாம் விட்டுட்டு மெட்ராசுக்கு வாரதை என்னாலே நினைச்சுகூடப் பார்க்க முடியாது!"

"நீ நினைக்காண்டாம். அப்படி நினைக்கிற என்னையாவது போகவிடேன்!"

"என்ன விட்டுட்டு உன்னாலே இருக்க முடியுமாடா?"

"நீ ஒன் அம்மாவை விட்டுட்டு, இந்த வீட்டுக்குக் கல்யாணமாகி வந்தியே... அப்புறம் அந்த வீட்டைப்பத்தி நெனச்சியா... அதுமாதிரிதான் எல்லாம். ஒரு மாசத்துக்கு மெட்ராசிலே உன்னைப் பார்க்க முடியலியேன்னு கஷ்டமாதான் இருக்கும். அப்புறம் சரியாயிடும். சரி, இன்னிக்கே நான் போகப்போறேன்! அண்ணன் இன்னோர் ஆள் பேருக்கு அம்பது ரூவா அனுப்பி என்கிட்டே கொடுக்கச் சொல்லியிருக்கான். அவர் பணமும் கையுமாய் நிக்கிறார்."

தில்லையம்மா தள்ளாடினாள்; அவனைத் தளர்வோடு பார்த்தாள்; ஐம்பத்தைந்து வயதில், கறுப்புப் புடவையில், 'பட்டரைச் சட்டம்' போல் படர்ந்த உடம்பும், குவிந்த முகமும், விசாலமான மார்பும், நீண்ட கை கால்களுமாய்

கம்பீரத்தோடு காட்சியளித்த தன் உடம்பை குறுக்கிய படியே மகனை விடாது பார்த்தாள். அவன் இப்படிப் பேசியபிறகு அவள் எப்படிப் பேசுவது? பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பது எவ்வளவு சரியாப்போச்சு? பதினைந்து ஆண்டுக்கு முன்னாலேயே, 'அந்த மனுசன்' துள்ளத்துடிக்க ஒருவார காய்ச்சல்ல இருந்த இடம்தெரியாம கட்டமண்ணா போனபிறகும்... நண்டும் சிண்டுமாய் இருந்த இதுகளை எப்படில்லாம் வளர்த்தேன். பெரியவனை எப் படில்லாம் கஷ்டப்பட்டு படிக்க வச்சேன். இதோ, எதுவுமே நடக்காததுமாதிரி கல்லுளி மங்கியா பார்க்கிற இவளையும் படிக்க வைச்சேனே... பூமி பொய்யானபோது, கூலி வேலைக்குக்கூடப் போயிருக்கேனே... 'அந்த மனுஷனை தான்' கடைசிவரைக்கும் பார்க்க முடியலே. அவர் தந்த பிள்ளையளையாவது கடைசி காலத்திலே கண்குளிரப் பார்த்துட்டுப் போகலாம்முன்னு இருந்தால் இவன் கண்மண் தெரியாமல் பேசுறானே... தாலி அறுத்தவள் என்கிற இளக் காரத்திலே சொத்தைப் பறிச்சுடலாம்னு, பல பயலுவ வம்பு சண்டைக்கும், வரப்பு சண்டைக்கும் வந்தப்போ இந்தச் சொத்தை எப்படில்லாம் காப்பாத்தினேன். இப்ப அவங் கள்ளாம் மரியாதையாய், என்னைப் பார்க்கிற காலத்துலே, இவன் அவமரியாதையா பார்க்கிறானே... என் மன்னவன் உலாத்தின இந்த வீட்டை எப்படில்லாம் தினமும் கை யெடுத்துக் கும்பிடுறேன். வெறும் மண்ணையும் சுவரையுமே நான் இப்படிப் பார்க்கும்போது, நான் இவன்களை எப்படிப் பார்த்து இருப்பேன். என் வயித்துலே மண்ண அள்ளிப் போட்டுட்டுப் போறேன்னு சொல்லுதானே! போவட்டும். பட்டாத்தான் தெரியும். அடியே மாரியம்மா, என்ன வார்த்தை பேச வச்சுட்டே!''

திருமலையம்மா மகனை மவுனமாகப் பார்த்தாள். பிறகு தொழுவத்திற்குப் போய், கன்றுக்குட்டியின் அருகே சாய்ந்து கிடந்தாள். முத்துலிங்கம் இன்னும் கஞ்சி குடிக்

காமல் இருப்பதைப் பார்த்துவிட்டு ''ஏ கமலசுந்தரி அவனை கஞ்சி குடிக்கச் சொல்லுளா'' என்று சொல்லவும் அவள் மறக்கவில்லை.

கமலசுந்தரி சொல்லவில்லை; முத்துலிங்கம் சாப்பிட வில்லை. மெல்ல எழுந்தான். 'பெரிய' வீட்டிற்குள் போய், கொடியில் கிடந்த கரைபோட்ட நாலு முழ வேட்டியைக் கட்டிக்கொண்டான். அண்ணன் எடுத்துக் கொடுத்த சிலாக்கைப் போட்டுக்கொண்டான். இதர துணிகளை ஒரு கைப்பைக்குள் திணித்தபடியே, வெளியே வந்தான். கமல சுந்தரி அண்ணனின் கைப்பையைப் பிடுங்கப்போனாள். அவன் அவள் கையைப் பிடித்தபடியே பேசினான்:

''கமலசுந்தரி... அம்மாமை ஜாக்கிரதையா பார்த்துக் கள.ர. போன வருஷம் குளம் பெருகல. இந்த வருஷம் பெருகப்போறதா இல்ல. மானம் பார்த்த பூமிலே என்ன பண்ணமுடியும்னு அம்மாவுக்குத் தெரியமாட்டேங்குது, தீனி போடமுடியாமல் உழவு மாட்டையும் வித்து, பசுமாட் டையும் வித்தாச்சு. கட்டாந்தரையா கிடக்கிற நிலத்தை நம்புனால் நாம கட்டாந்தரையாப் போகவேண்டியதுதான். அண்ணன் ஏன் போறேன்னு அம்மாவுக்குப் புரியாட்டாலும், ஒனக்குப் புரியும். ஒன்னையும் ஒரு நல்ல இடத்திலே சேர்க் கணும்னா நான் இந்த இடத்துலே இருக்கப்படாது! ஏமுளா அழுவறே! நான் எனக்காக மட்டுமா போறேன்... ஒனக்காக வும் போறேன். அம்மாவை நல்லா பார்த்துக்க. நானும் கடை போட்டுட்டா, மாசா மாசம் இன்னும் அதிகமாவே பணம் அனுப்புவோம். எம்மா, நான் போறேம்மா ஒன்னைத் தான்... எம்மா... எம்மா.''

மகன் பேசுவதைக் கேட்க மறுத்து, அவனைப் பார்க்க மறுத்து, சொட்டுச் சொட்டாய் கண்ணீர் கன்றுக்குட்டியின் தலையில் தெறிக்க, கீழே கிடந்த புல் குவியலையே திருமலையம்மா பார்த்துக் கிடந்தாள். மகன் சத்தம்

ஒலிப்பது நின்றதும், படபடத்துப் பார்த்தாள். போய் விட்டானோ என்பதுபோல் பரபரப்பாய்ப் பார்த்தாள். அவள், ஏறிட்டுப் பார்த்தபோது முத்துலிங்கம் அம்மாவைப் பார்த்தபடியே நின்றான். தாயால் தாளமுடியவில்லை. மகனுக்கு முன்னால் வந்து மன்றாடினாள்.

“நான் சொல்றதை நல்லா கேளு ராசா! கொளம் பெருகலதான்... ஆனால் குற்றாலத்து சித்தாரைக் கொண்டு வர கால்வாய் வெட்டுறாங்க. அடுத்த வருஷத்துலே இருந்து குளம் பெருகப் போகுது. பூமியிலே பொன்னு விளையப் போகுது. சொல்றத கேளுடா!”

“சரி. இந்த ஒரு வருஷம் வரைக்குமாவது போறேன்!”

திருமலையம்மா மகன் முகத்தைப் பார்த்தாள். ‘அந்த மனுஷன்’ மாதிரியே அது உறுதிப்பட்டுக் கிடந்தது. புரிந்து கொண்டாள். இவனைத் தடுக்க முடியாது; அவள் தனக் குள்ளே வெம்பி, தன்னைமீறி தாவி வந்த வார்த்தைகளை பல்கட்டி சிறையிட்டாள். கண்களை மூடிக்கொண்டாள். முத்துலிங்கம் குரலிட்டான்.

“போறேம்மா...”

திருமலையம்மா விம்மலோடு வெடித்தாள்; “போறதே போறே... போயிட்டு வாறேன்னாவது சொல்லிட்டுப் போடா... அடியே ஆயிரம் கண்ணுடையாள் மாரியம்மா! ஞாபகம் இருக்காடி ஒனக்கு... இருபது வருஷத்துக்கு முன் னாலே இப்போ துள்ளுற இவன் வயித்துலே அவதிப்படுத் துறான்னு உனக்கு மாவிளக்கு ஏத்துறதா கோயிலுல வந்து நேர்ந்தேன். நீயும் இந்தப் பயல பொறுமையாக்கித்தந்த... அதுக்குப் பிறகு, இவன் நாலு மாசத்துல வயித்துக்கு வெளியே இருந்தாலும் என் வயித்துக்குள்ளே இவன்... ஒரேயடியாய் மீளமுடியாம உதைக்கிறது மாதிரி இருக்குதே! உனக்கு என்ன தாயே குறை வச்சேன்?”

முத்துலிங்கம் அழுதுவிட்டான். இன்னும் அங்கே நின்றால், தலையிலடித்து அழுவோம் என்று பயந்து ஓடி விட்டான்; வெளியேறிவிட்டான் மெட்ராசைப் பார்த்து...

ஒரு மாதம் ஓடியது.

திருமலையம்மா மலைப்பில் இருந்து விடுபட்டு, பாசப் பிடியில் இருந்து விடுபட முடியாமல் இருந்த வேளை; வெளி யூருக்கு ஏதோ ஒரு 'துஷ்டி' கேட்கப் போய்விட்டு, வருகிற வழியில் கன்றுக்குட்டிக்கு புல் வெட்டிக்கொண்டு வீட்டிற்கு சுமையோடு திரும்பிக்கொண்டிருந்தாள். தோட்டத்தில் அவளால் நிற்க முடியவில்லை. சரல் குவியலில் மகனின் தோற்றம்; 'கமலைக் கிடங்கிலும்' அவனே. தென்னை மரத்தைப் பார்த்தால், அங்கேயும் அவன் தொத்திக் கிடக் கிறான். திருமலையம்மா புல்லிதழ்களால் கண்ணீரைத் துடைத்தபடி வீட்டுக்குள் வந்து, முன்பு மகன் போட்டது மாதிரியே புல் கட்டை வேகமாகப் போட்டாள்.

ஏதேச்சையாக 'திருவோலையைப்' பார்த்தவள் திடுக் கிட்டாள். கமலசுந்தரி அண்ணன் மாதிரியே உட்கார்ந்தபடி இருந்தாள். ஒரு கையில் நோட்டுக் கத்தைகள். இன்னொரு கையில் ஒரு கடிதம். திருமலையம்மா இப்போது மகளை அதிகமாகத் திட்டுவதில்லை. அவளையே மகனாகவும் பாவித்துக் கொண்டிருந்தாள். மகளிடம் அழாக்குறையாகப் புலம்பினாள்.

''எப்பாடி... வரவர என்னாலே அஞ்சு மைல் ஒழுங்கா நடக்கமுடியல. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்குது. அண்ணன் மார் என்ன எழுதியிருக்காங்க. மெட்ராஸ்ல எப்படியிருக் காங்களாம்... எவ்வளவு ரூபா அனுப்பியிருக்காங்க?''

கமலசுந்தரி அம்மாவைப் பார்க்காமலே பதிலளித்தாள்

''சின்ன அண்ணன் கடை போட்டுட்டானாம். தனியா ஒரு வீடு எடுத்து சமைச்சு சாப்பிடறாங்களாம். என் படிப்பு வீணாயிடக்கூடாதாம். மெட்ராசுக்கு நானும் போகணு

மாம். டைப்பிங்லே சேரணுமாம். அண்ணன் எனக்கு வேலை வாங்கிக் கொடுத்துடுவானாம். டிக்கெட்டுக்கும் சேர்த்து பணம் அனுப்பியிருக்காங்க. நாளைக்கு வடக்கு தெரு சீமையம்மா மகனைப் பார்க்க மெட்ராஸ் போகப் போறாங்களாம். நானும் அவங்களோடு போகணுமாம். முடியும்னா உன்னையும் கூட்டிக்கிட்டு வரச்சொல்லி எழுதியிருக்காங்க.''

அம்மாக்காரி கத்தினாள்.

''ஒன்னாலேயும் முடியாது. என்னாலேயும் முடியாது''ன்னு எழுதிடு. என்ன நினைக்காங்க! முட்டாப் பயலுவ! ஒரு நல்ல மாப்பிள்ளை பார்க்க துப்பில்ல. வேலை பார்த்துக் கொடுப்பாங்களாம்... வேலை. அம்மாவுக்குத் தண்ணி கொண்டு வாளா...''

கமலசுந்தரி ஒரு சொம்பு தண்ணீரோடு அம்மாவை நெருங்கினாள். அம்மாவிடம் சாவகாசமாகக் கேட்டாள்:

''அப்படின்னா நீ வரலியாம்மா...''

''நீ சொல்றத பார்த்தால்...''

''நானும் மெட்ராஸ் போறதுன்னு தீர்மானிச்சுட்டேன்! ஒனக்காகத்தான் காலையில இருந்து காத்திருக்கேன்! சீமையம்மாவ பார்க்கணும்.''

''நீயே ஒரு முடிவுக்கு வந்தபிறகு எனக்கு எதுக்காவ காத்திருக்கணும்!''

''என்னம்மா நீ! உன்ன மாதிரியே நானும் இந்த மண்ணுல புரண்டு, வயலுல விழுந்து உருப்படாமப் போவணுமா? படிச்சதுக்கு அர்த்தமில்லாமல் கிடக்கணுமா? யோசித்துப் பாரு. எனக்குன்னு ஒரு வாழ்க்கையை அமைக்க வேண்டாமா. மெட்ராஸ்லே டைப் கத்துக்கிட்டா நல்ல வேலையாவது கிடைக்கும். இந்த வீட்டையும் மாட்டையும் எத்தனை நாளைக்குச் சுத்தறது?

"இந்த ரெண்டோடு என்னையும் சேர்த்துக்கடி. என்னை ஏன் விட்டுட்டே... சொல்லுரதை நல்லா கேளுடி. என் தலை கீழே விழுந்தாலும், நான் வரமாட்டேன். சிங்கத்துக்கு வாலாய் இருக்கிறதைவிட, நாய்க்குத் தலையாய் இருக்கிறதே மேல். இதத்தான் நான் விரும்புறேன்!"

"எதை வேணுமின்னாலும் விரும்பு. நான் போகக் கூடாதுன்னு மட்டும் விரும்பாத. சரி, சீமையம்மா வீட்டுக்குப் போயிட்டு வரேன்! எனக்குச் சேர்த்து டிக்கட்டு எடுக்கும்படி பணம் கொடுத்துட்டு வரணும்."

திருமலையம்மா திகைத்தாள். கடைசி பெண் என்பதால் மூன்று வயது வரைக்கும் தன்னிடம் பால் குடித்த மகள் காட்டிய முதுகையே பார்த்தாள். அவளை மாதிரியே உடல்வாகு. பவுன் நிறம். அச்சடித்தது போன்ற உடம்பு. மகள்காரி, தன்னைத் திரும்பிப் பார்க்காமலே வாசலைத் தாண்டி குதித்து, எம்பி நடப்பதைப் பார்த்தாள். திருமலையம்மாவுக்கு எல்லாமே பொய்யாய், பழங்கதையாய் மாயையாய் தோன்றின. வீடு மட்டும் அல்ல. தானும் வெறுமையாகத் தெரிந்தது. தனிமையில் தவித்தாள். மனதில் இனம் தெரியாத பயம் கவ்விக்கொண்டது. மகள் அப்போதே போய் விட்டதுபோல், அவள் உள்ளம் சூனியப்பட்டது; தலையில் கை வைத்தாள். எவ்வளவு நேரம் ஆடாமல் அசையாமல் இருந்தாளோ... திடீரென்று ஒரு குரல் அவளை ஆட்டுவித்தது.

"ம்மா... ம்மா... ம்மா..."

திருமலையம்மா, கன்றுக்குட்டியைப் பார்க்கிறாள். முட்டுகளில் கை ஊன்றியபடியே எழுந்து, முற்றத்திற்கு வந்து, கொஞ்சம் புல்லை உருவி தொழுவத்திற்குப் போகிறாள். கன்றுக்குட்டியின் வாயில் அதைத் திணிக்கிறாள். அந்த பேசத் தெரியாத உயிரோ புல்லைத் தின்னாமல், அவளையே பார்க்கிறது. அவள் கையை முகர்

கிறது. முகத்தை நகர்த்துகிறது. அவள் முகத்தை நாக்கால் தடவுகிறது. ''ஒருநாள் முழுவதும் நீ எங்கே போனே'' என்பதுபோல் அவளை மாறி மாறி செல்லமாகப் பொய் முட்டு முட்டுகிறது.

திருமலையம்மாவுக்கு அந்தக் கணத்தில், எல்லாமே மறக்கின்றன. சூனிய மனதிற்குள் சுக்கிலபாசம் பாய்கிறது. அவள் தாய்மையைத் தூண்டுகிறது. மறுபிறவி எடுக்காமலே, அவளைக் காமதேனுவாக்குகிறது. இதுவும் நான் பெறாமல் பெத்த பிள்ளை—என்னைவிட்டுப் போக நினைக்காத பிள்ளை. போக மறுக்கும் பிள்ளை.

திருமலையம்மா அந்தக் கன்றுக்குட்டியின் கழுத்தை தன் முகத்தோடு சேர்த்துக்கொள்கிறாள். கண்ணீரால் அதன் முகத்தைக் குளிப்பாட்டுகிறாள். அதன் நெற்றியிலும், கழுத்திலும் மாறி மாறி முத்தமிட்டுக்கொண்டு இருக்கிறாள்.

❋

# காதல் புறாக்கள்

அந்த வீட்டுப் புறவாசலில் இருந்து கும்மாளம்மா வெளிப்பட்டாள்.

புறவாசலுக்குக் கதவுபோல் தோன்றும் பச்சைக் குடை விரித்த வாகை மரத்தில், தலைகீழாய்ப் பாய்ந்த ஒரு அணில் வேரில் தத்திக்கொண்டிருந்த சிட்டுக்குருவிகளைத் துரத்தியதையோ, கரிச்சான் குருவிகளை கரக்கிளையில் தாங்கிக் கொண்டு காற்றோட்டத்தில் அவற்றைக் குலுக்கி குலுக்கித் தாலாட்டும் வாதமடக்கி மரத்தையோ பார்க்காமல், நேராய் அந்த புறாக்கூண்டை நோக்கியே போனாள். அதன் அருகே குடைபோல் குவிந்து கிடந்த கோழிக்கூட்டை, கால் தற்செயலாய் இடறி, உள்ளே கிடந்த தாய்க்கோழி புலிப் பாய்ச்சலில் உறுமியபோது, அவள் அதையும் பொருட்படுத் தாமல் அந்தக் கூண்டுக்கு அருகே கீழே குனிந்து பக்கவாட் டில் கையை நீட்டினாள்.

அவளைப் பார்த்தவுடனேயே உள்ளே கிடந்த புறாக் கள் கும்மாளமிட்டன. துள்ளித் துள்ளிக் குதித்தன. இரும்புத்துவாரங்கள் வழியாக உடம்பைத் திணிக்கப் பார்த்தன. கையிலிருந்த ஒரு கிண்ணத்தையும், தூக்குப் பையையும் புறாக்கூண்டுக்குக் கீழே வைத்துவிட்டு, அவள் அதன் கதவைத் திறந்துவிட்டாள். மூன்று அடுக்குகள் கொண்ட கூடு. ஒவ்வொன்றிலும் நான்காக மூந்நான்கு

பன்னிரண்டு பலகைக் "குடில்களிலிருந்து" ஜோடிப் புறாக்கள் வெளிப்பட்டன. இரண்டே இரண்டு பலகைக் குடில்களில்தான் இரண்டு புறாக்கள் தனிக்குடித்தனம் நடத்தி வந்தன.

கும்மாளம்மா சுவரில் குப்புறச் சாய்த்து வைக்கப்பட்ட தட்டை எடுத்து வந்தபோது, அத்தனை புறாக்களும் அங்கே கூடிவிட்டன. அந்தத் தட்டை அங்கே வைத்துவிட்டு தூக்குப் பைக்குள் இருந்த கேழ்வரகு, கம்பு தானியங்களை அந்தத் தட்டின் அடிவாரம் மறையும்படி படரவிட்டாள். பெரும்பாலான புறாக்கள் தானியங்களைக் கொத்திக் கொத்தி உடைத்து, துகள்களாக்கி உள்ளே போட்டுக்கொண்டிருந்தன. அந்தப் பக்கமாய் வந்த காகங்களைத் துரத்தின. அணில்களைப் பார்த்து அலகுகளால் எச்சரித்தன. இந்தப் புறாக் கும்பலுக்கு இடையே ஒரு சின்னப் புறா. பெரிய புறாக்களுக்கு இடையே முந்தியடித்து தானியங்களைக் கொத்தப்போன போது—

கும்மாளம்மா தான் பெற்ற பிள்ளைகளைப்போல் அந்தப் புறாக் குவியலையேப் பார்த்துக் கொண்டிருந்தாள். வண்ணத்துப்பூச்சிகள், பறவைகளாய் உருமாற்றம் ஆனது போன்ற காட்சி. உலகில் தெரியும் அத்தனை வண்ணங்களையும் காட்டும் அலங்கார கலாபங்களானது போன்றத் தோற்றம். ஒளிப்பிழம்புகளை ஒன்று முதல் பத்து வரை உள்ள எண்களை மாற்றி மாற்றிப் போட்டும், இன்னும் அது தோற்றுவிக்கும் எண்களுக்கு எப்படி முடிவு காணவில்லையோ, அப்படி ஏழு வண்ணங்களும், ஏழேழு வண்ணச் சாயல்களும் கூடியும், குலவியும் தேடியும், திரட்டியும் வண்ணக் கூட்டுக்களை சுமக்கும் மேனிகள்.

திருமணமான பத்து மாதங்களுக்குள்ளேயே எட்டு மாதத் தாய்மைப்பேறைப் பெற்ற கும்மாளம்மா, அந்த புறாக் கூட்டத்தில் தனது செல்ல பிள்ளையைத் தேடினாள். அது இல்லையோ என்பதுபோல் அடிமடியில் கை வைத்தாள்.

பிறகு இருக்கிறது என்பதுபோல் தலையாட்டினாள், அந்த சின்னப் புறாவும், அவளைப் பார்த்துச் செல்லமாகத் தலையாட்டியது. உடனே இவள் கிண்ணத்திலிருந்து ஊறவைத்த கடலையை கல்வம்போல் இருந்த கல்லில் படரவிட்டு அதனைக் குரல் கொடுத்துக் கூப்பிட்டாள். ஆனால் அவளது அந்தச் செல்லப் புறா ''நான் பெரிய மனுஷி ஆயுட்டேனாக்கும். என்னால இந்த கேழ்வரகைக் கொத்தித் தின்ன முடியுமாக்கும்'' என்பதுபோல் இதரப் புறாக்களுடன் முந்தியடித்தது. உடனே, இவள் அந்தப் பக்கமாய்ப் போய் அந்தப் புறாச் சிறுமியைப் பிடித்துக்கொண்டாள். அதன் நீலக் கண்களில் மாறிமாறி முத்தமிட்டாள். பதில் முத்தம் கொடு என்பதுபோல் அதைப் பார்த்துவிட்டு, பிறகு அதன் அலகை எடுத்து தனது கன்னத்தில் தடவிவிட்டாள். 'பறந்து காட்டு' என்பதுபோல் கையிலிருந்து உயரமாக அதைத் தூக்கிவிட்டபோது, அது பறந்துபோய் அவள் வீட்டு ஓட்டில் போய் உட்கார்ந்தது.

கும்மாளம்மா புறாக்களை எண்ணிப் பார்த்தாள். இருபதுக்கு ஒன்று குறைந்தது. அந்தச் சமயம் பார்த்து ஒரு இருமல் சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்துக்காரர் புறாக் கூண்டுக்குப் பக்கத்தில் போடப்பட்ட ஒரு வட்டக் கல்லில் உட்கார்ந்திருந்தார். அந்த ஆசாமிதான் ஒன்றை அமுக்கியிருக்க வேண்டுமென்று அவளுக்கு ஒரு சந்தேகம். அதை பட்டும் படாமலுமாகக் கேட்டாள்.

''என்ன தாத்தா, காலங்காத்தாலேயே இங்க வந்து ஒக்காந்துட்டீரு? ஒரு புறாவ வேறக் காணல. உம்மேல பழிவரப்படாது பாரும்!''

அடியும் தலையும் ஒரே மாதிரியான குச்சிபோல் அமைந்த அந்த எழுபது வயது தாத்தா அவளை மேலும் கீழுமாகப் பார்த்துக்கொண்டு பதிலளித்தார்.

''இந்தா பாரு தாயீ... சும்மாப் பூடகமாப் பேசாத... நீ கல்யாணம் ஆயி ஊருக்கு வந்த புதுப்பொண்ணு. அதனால் தான் தராதரம் தெரியாம அப்படிப் பேசற. தராசும் படியும் ஊருல. வேணுமின்னா என்னைப்பத்தி ஊருல கேட்டுப் பாரு... ஆஸ்துமா கோளாறு... ஊதக்காத்துல மேல்மூச்சும் கீழ்மூச்சும் ஒண்ணா முட்டுது. புறாக் காத்துப் பட்டா கொஞ்சம் சொகம் கிடக்கும். அதுக்காவ வந்தேன். வேணாமின்னா போயிடறேம்மா...''

கும்மாளம்மாவுக்கு என்னவோபோல் இருந்தது. ஊருக்கு வந்திருக்கும் களக்கூத்தாடிகளில் ஒருவன் கையில் நேற்றொரு புறா இருந்ததாக நாத்தனாக்காரி சொன்னதும் நினைவுக்கு வந்தது. உடனே அவரிடம் ''ஒக்காருவதுக்கு மணக்கட்டடத் தரட்டுமா'' என்றாள். எழப்போன அந்தப் பெரியவர் மீண்டும் உட்கார்ந்துகொண்டே அவளை அன்போடு பார்த்துக்கொண்டு பேசினார்.

''அதோ கோழிக்கூண்டுக்கு பக்கத்துல ஒரு புட வச்சிருக்கே! அது என்னன்னு தெரியுமா? தெரியாதுன்னா தலையாட்டுற? இறப்பாளி பய மவளே... கீரி பூமிக்குக் கீழே கால்வாய் மாற்றி குடஞ்சிட்டுகிட்டு வருது. கோழிக்கூட்டுக்குள்ள கீழே இருந்தே கன்னம் வச்சி ராத்திரிக்கு ஒரு கோழிய கவ்விக்கிட்டுப் போறதுக்குப் பிளான் போட்டிருக்கு. இது தெரியாம என்னமா கோழிப்புறா வளக்க? பேசாம தாத்தாக்கிட்ட ஒரு மம்புட்டிய கொடு. கீரி பிள்ளையா இருந்தா ஒரே வெட்டா வெட்டறேன். இல்லாட்டாலும் அந்தப் புடைய வெட்டிப் போடறேன்!''

கீரியின் தந்திரத்தால் சிறிது அசந்து. பிறகு ஆத்திரப்பட்ட கும்மாளம்மா மண்வெட்டியை எடுக்கப் போனாள். இதற்குள் எல்லாப் புறாக்களும் வடக்கு நோக்கிப் பறந்தன. அவளது செல்லப் புறா மட்டும் அவள் வீட்டு ஓட்டுக்குத் தாவி அவளையே பார்த்தது. அவள் 'வந்துவிடு வந்துவிடு'

என்பதுபோல் கையாட்டினாள். ஆனால், அதுவோ இன்றைக்கு அவங்ககூட போகப்போறேன்' என்பதுபோல் பறந்தது. அவள் எவ்வளவு கூப்பிட்டும் அவளை எட்டிப் பார்த்ததே தவிர திரும்பவில்லை அவளும் அலட்டிக்கவில்லை. முந்தாநாள்கூட ஒரு கிலோ மீட்டர் போய்த் திரும்பிவிட்டது. இன்றைக்கு இரண்டு கிலோமீட்டர் வேண்டுமானால் போகலாம்.

பின்தங்கிப்போன அந்தப் புறாச் சிறுமி, பெரியவர்களோடு இணையாகப் பறப்பதற்கு இறைக்கைகளை மாறி மாறி அடித்து இறுதியில் அவற்றுடன் சேர்ந்துகொண்டது. ஐந்து கிலோ மீட்டர் பறந்ததும், லேசாய் மூச்சு வாங்கியது. ஆனாலும் கிழடுகளுக்கு இளக்காரமாகிவிடும் என்பதற்காக அது எட்டிப் பறந்தது. மரங்களுக்கு மேலே ஆகாயத்தின் அந்தரத்தில் கீழே தெரிந்த அத்தனை மனித உருவங்களும் அவளுக்குச் சிறியதாய்ப்போன ஒரு சந்தோஷம். பத்துப் பதினைந்து கிலோமீட்டர் தாண்டியதும், பெரிய புறாக்கள் ஆங்காங்கே உள்ள மரங்களில் உட்கார்ந்தன. ஆனால், இந்தப் புறாச் சிறுக்கி தனது தனித்தன்மையைக் காட்ட வேண்டும் என்பதுபோல் மேலும் பறந்துகொண்டே பாய்ந்தது. இறுதியில் கிளைகளில் இருந்த அந்தப் புறாக்கள் கண்படும் தொலைவில் உள்ள காட்டுப் பகுதிக்குள் இறங்கி ஒரு நாணல் புதர்மேல் உட்கார்ந்தது. அங்குமிங்குமாய் நோட்டம்விட்டது.

எதிரே உள்ள மூங்கில் புதரில் உட்கார்ந்திருந்த இன்னொரு இளம் புறா, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைப்போல் ஆகாயத்தில் பாய்ந்து கும்மாளம்மாவின் புறாப் பக்கம் வந்து உட்கார்ந்தது. அந்தப் புறாவும் அங்கே போய் இன்னொரு விழுதில் உட்கார்ந்து இதையே முறைத்துப் பார்த்தது. இதைத் தாங்கமுடியாத கும்மாளம் மாவின் புறா மீண்டும் புல்வெளியில் வந்து குதித்தது.

உடனே அந்தப் புறாவும் சிறிதுநேரம் அந்தவிழுதில் இருந்து விட்டு அங்கே வந்து பக்கத்தில் அமர்ந்தது. இறக்கைகளைத் தூக்கிக்கொண்டு செந்தூரம் தெறித்தது போன்ற உடம்பைக் காட்டிகொண்டு கழுத்தை அறைவட்டமாக்கிக் கொண்டு 'கெக் கெக்' என்று ஒலி எழுப்பிக்கொண்டே இருந்தது.

கும்மாளம்மாவின் செல்லப் புறா ஏறிட்டுப் பார்த்தது. அந்த ஆண் புறா எழுப்பிய ஆண்மைச் சத்தமும் கம்பீரப் பட்ட முகமும், நீண்ட கீழ் அலகை நீட்டி குட்டையான மேல் அலகைத் தூக்கி, ஜோதியான நாக்கை அங்குமிங்கும் ஆட்டிய அதன் தோரணையில் இதற்குக் கிறக்கம் வந்தது. இதுவரை கண்டிராத இன்ப அதிர்வுகள் உடலெங்கும் வியாபித்தன. இப்போதுதான் இது ஆண் புறா ஒன்றைப் பார்ப்பதாக அர்த்தமில்லை. கூண்டிலும் இரண்டு பிரம்மச் சாரிகள் உள்ளன. ஆனால் ஆண்கள் என்றாலும் அசல் பொட்டைகள். இதேபோல் காட்டுப் பெண் புறாக்களில் முரட்டுத்தனத்தைக் கண்ட அந்த ஆண்புறாவிற்கும் இந்த 'குடும்பப்பாங்கான' புறாவைப் பார்த்ததும், ஒரு மயக்கம் ஏற்பட்டுவிட்டது. மீண்டும் 'கெக்கெக்' என்று ஆண்மையை வெளிப்படுத்தும் கம்பீரச் சத்தத்தை எழுப்பியது. பிறகு மெல்ல மெல்ல தனது இறகைத் தூக்கி கும்மாளம்மா புறாவின் கழுத்தில் லேசாய்த் தடவியது. அதற்கு உடன் பட்டதுபோல் கும்மாளம்மாவின் புறா, சும்மாயிருந்த மௌனச் சம்மதத்தால் அந்தக் காட்டுப்புறா அதை நெருக்கி யடித்துக் கால்மேல் கால்சாத்தி, கழுத்துமேல் கழுத்தைப் போட்டு அதன் அலகை தனது அலகால் தடவிவிட்டுக் கொண்டிருந்தது.

எதிர்பாராது கிடைத்த இந்த காதல் அனுபவத்தில், இரண்டு புறாக்களும் முகங்களை ஒட்ட வைத்துக்கொண்டு அங்குமிங்குமாய் பார்த்தன. புல் தரையில் உட்கார்ந் திருந்த அவற்றிற்குப் புல்லிதழ்களில் காதலர்களின் வருகைக்

காகக் காத்திருக்கும் பெண் மின்மினிப் பூச்சிகள் கண்ணில் பட்டன. இந்தப் பாவப்பட்ட மின்மினிப் பெண்களுக்கு பறக்கும் சக்தி கிடையாது. ஆகையால் உடம்பிலே ஒளி சிந்தி ஆண்களை வரவழைக்க வேண்டும். அதற்காகக் காத்திருக்கின்றன. அப்படிப்பட்ட அவசியம் தங்களுக்கு இல்லை என்பதுபோல் இந்தப் புறாச்ஜோடி பெருமையோடு தலைகளை ஆட்டிக்கொண்டன. அருகே ஒரு புகைவண்டிப்புழு, தரையிலுள்ள சிவப்புப் புள்ளிகளில் மரக்குச்சி ஒன்று விழுந்ததால், உடம்பெல்லாம் பச்சை நிறமாக ஒட்டிக்கொண்டிருந்தது. இந்த சைவப்பிராணிகள் அதை எதுவும் செய்யவில்லை. ஆனாலும்—

கும்மாளம்மா புறா, அந்த இடத்தை நோட்டமிட்டது. கிராமத்துக்காரன் நகரத்துக்கு வந்தது போன்ற திகில். வாகை மரங்கள், பூவரசுகளுடன் குலவிக்கொண்டிருந்தன. செடியாகவும் மரமாகவும் இல்லாத வேலிக்காத்தான்கள் வெள்ளை, சிவப்பு மலர் முகங்களைக் காட்டிக்கொண்டிருந்தன. பேருக்கு எதிர்மாறான நச்சுக்கொட்டைமரம், மெல்லிய கீரைகளை வெளிப்படுத்திக்கொண்டு தென்னை மரத்தோடு உரசிக்கொண்டிருந்தது. சின்னச் சின்ன பனைகள் முள்ளம்பன்றிகள் போல் சிலிர்த்துக்கொண்டு இருந்தன.

"ஆமா... என்ன அது?"

அருகே ஒரு பள்ளம். அங்கே தண்ணீர்க் காடு. அது வெளியே ஒரு பகுதியை விட்டுக்கொண்டிருந்ததால், சுத்தமாக இருப்பதுபோல் தெரிந்தது. அங்கே ஒரு பூனை ஒரு கல்லில் பதுங்கிக்கொண்டு முன்காலில் ஒன்றை எடுத்து தண்ணீருக்குள் நீட்டுகிறது. திடீரென்று அதை மேலே தூக்கிக் காலில் கவ்விய மீனை பாறையில் மோதி அங்கு மிங்குமாகச் சிதறடித்துபிறகு வாய்க்கு கொண்டுபோகிறது.

இதைப் பார்க்கப் பயந்த கும்மாளம்மாவின் புறா, நடுங்கிவிட்டது. அதை மறைப்பதற்காக ஆகாயத்தைப் பார்த்தது. அங்கே ஈச்சமரத்தில் தம்புராமாதிரி ஒரு கூடு.

மேலே ஒரு பறவை—அதுதான்—நல்லாப்பாடுமே அது! ஒரு கிளையில் உட்கார்ந்திருக்கிறது. கூட்டிலிருந்து, ஆகாய விமானம் மாதிரி உள்ள வால் குருவி வெளியே பறந்ததும் இந்தக் குயிலு அந்தக் கூட்டுக்குள் போகிறது. ஒரு முட்டையை வாயால் கவ்விக் கீழே போட்டு உடைக்கிறது. பிறகு பின்பக்கமாகத் திரும்பி உடம்பின் பின்பகுதியை அந்த கூட்டுக்குள் கொண்டுபோகிறது. அப்புறம் பறக்கிறது. இப்படியா அட்டூழியம் செய்யறது? அதென்ன?... அடுத்தவள் வீட்டுக்குள்ள போயி... அவ முட்டையை ஒடச்சிட்டு, தன் முட்டையைப் போடறது.

கும்மாளம்மாவின் புறாவிற்கு வெறுப்பு வந்துவிட்டது. அதோடு அவளின் ஞாபகமும் வந்துவிட்டது. அதற்கு வீட்டிற்குப் போகவேண்டும்போல் தோன்றியது. அருகே அணைத்துக்கொண்டிருந்த ஆசைக் காதலனை ஏறிட்டுப் பார்த்துக் காலால் இடறியது. "நா போகப் போறேனாக்கும்."

முன்கால்களை வளைத்து, பின்கால்களை அது லேசாகத் தூக்கியபோது, அந்த ஆண்புறா, அது போக வேண்டாம் என்பதுபோல் அதன் முன்னால் போய் நின்று தன் கழுத்தைக் கொடுத்து அலகை நிமிர்த்தியது. இங்கேயே குடித்தனம் செய்யலாம் என்பதுபோல் மீண்டும் 'கெக்கெக்' என்று சத்தம் போட்டு அந்தப் பெண்புறாவிற்கு இன்ப அதிர்வுகளைக் கொடுத்தது. தாய்க்காரி கும்மாளம்மாவை தனது ஜோடியோடு காட்ட வேண்டும் என்று அந்தப் புறாச் சிறுமிக்கு ஒரு ஆசை. நீயும் வாயேன் என்பதுபோல் 'கெக் கெக்' புறாவிற்கு இணையாக ஒரு சத்தம் போட்டது. ஆனாலும், அது தன்னோடு வராது என்று புரிந்து கொண்டதுபோல் நான்கடி தாவி, அதை திரும்பிப் பார்த்தது. பிறகு ஜெட் விமானம்போல் நேராக ஆகாயத்தில் எம்பிப் பறந்தது. மீண்டும் மனம் கேட்காமல் திரும்பி வந்து அந்த ஆகாயத்தையே ஏக்கமாகப் பார்த்த காதலனை

நோக்கி வட்டமடித்தது. அதற்கும், அந்த ஆண்புறா அசைந்துகொடுக்காமல் இருந்ததைப் பார்த்துவிட்டு, இதற்கும் ஒரு வைராக்கியம் திரும்பிப் பாராமலேயே பறந்தது.

உயரே பறந்துகொண்டிருந்த புறாச்சிறுமிக்கு மேலே ஒரு உருவம் தென்பட்டது. அதன் நிழலில் பார்வை சற்று மங்கியது. புறா இனத்தின் எதிரியான வைரிக்குருவி, இப்படி ஆகாயத்தில் இரைக்கு மேல் பறந்து தனது நிழலை வைத்து அதை திக்குமுக்காட வைத்து, இறுதியில் கொன்றுவிடும் என்பதை அதன் உள்ளுணர்வு உணர்த்தியது. ஆகையால் பயந்துபோய், கூக்குரலிட்டபடியே, தாழப்பறந்து அது ஓலமிட்டபோது, அதற்கு இணையாக ஒன்று பறந்தது. "அடடே நீயா? நீதான் இப்படி பயப்படுத்திட்டியா? சரி வா! அம்மாகிட்ட போகலாம்!"

அந்த இரண்டு புறாக்களும், தாங்களே ஆகாயத்தில் ஒரு சொர்க்கத்தை சிருஷ்டித்துக்கொண்டே போவதுபோல் ஒன்றையொன்று சிணுங்கிச் சிணுங்கிப் பார்த்தபடியே பறந்தன. அந்தரங்கமான காதலை அந்தரத்தில் விடப் போவதில்லை என்பதுபோல் நூலிழைகூட பிசகாமல் ஒரே சீரில் பறந்தன.

காட்டுப்புறாவும், வீட்டுப்புறாவும் அந்த வீட்டின் கூரை மேல் ஜோடியாக உட்கார்ந்தன. பிறகு சேர்ந்தாற்போல் ஒரு மாமரத்தின்மீது குவிந்தன. அந்தப்புறா, இன்னும் வராதது கண்டு தலையில் கை வைத்தபடியே புறாக்கூட்டின் பக்கம் நின்ற கும்மாளம்மா அதைப் பார்த்த உடன் வரவேற்பதுபோல் கையை ஆட்டினாள். அங்கே வந்த லுங்கிக்காரனிடம் அது கூட்டி வந்திருக்கும் ஜோடியைக் காட்டினாள். உடனே அவன் ஏதோ சொல்ல, இவள் அடிக்கப்போவதுபோல் கையை ஓங்கினாள். "வா வா அம்மா கிட்ட போகலாம்" என்று புறாச்சிறுமி சொன்னதைக்

கேட்ட காட்டுப்புறா அங்கிருந்து பாய்ந்து கும்மாளம்மாவின் காலடியில் உட்கார்ந்தது. அவள் பூக்கரத் தடவலில் மெய் மறந்தபடியே மாமரத்திலிருந்த காட்டுப் புறாவை கண் சிமிட்டிப் பார்த்தது. பிறகு தனது கூட்டின்மேல் ஏறி உட்கார்ந்தது. எதிரே மரத்தில் உட்கார்ந்திருந்த புறாவை வா வா என்று அழைத்தது. காதல் சமிக்ஞை தொக்கி நிற்கும் வினோத ஒலியை எழுப்பியது.

அங்கே போகலாமா, வேண்டாமா என்பதுபோல், அந்தக் காட்டுப்புறா யோசித்தது. சுற்றுமுற்றும் பார்த்தது. அதற்கு எதுவுமே பிடிக்கவில்லை. கும்பலாக வந்த மாடுகள் ஒன்றையொன்று முட்டிக்கொண்டு நின்றன. பச்சையாக இருந்த செடியில் முளைத்திருந்த சப்பாத்திப் பூக்களைப் பார்த்துவிட்டு, சில மாடுகள் மிரண்டு ஓடின. ஒரு பூனிக் குருவியை ஒரு காகம் கிட்டத்தட்ட கொல்லப்போன சமயம், உடனே ஒரு பூனிக்குருவி பட்டாளமே அந்த காகத்தின்மீது மோதிக்கொண்டிருந்தது. இன்னொரு பக்கம் ஒரு மாட்டின் முதுகில் இரண்டு பக்கமும் கயிற்றைப்போட்டு அமுக்கிக் கீழே தள்ளுகிறார்கள். பிறகு அதன் முன்னங் கால்களையும், பின்னங் கால்களையும் கட்டிப்போடுகிறார்கள். யாரோ ஒரு மனிதன், ஒரு ஆணியையும், சிப்பி அளவுக்கான லாடங் களையும் கொண்டு அதன் காலில் அறைகிறான். காட்டுப் புறா கண்ணை மூடிக்கொண்டது. ஐயோ இது என்ன கொடுமை... இன்னொரு பக்கம் திரும்பிப் பார்க்கிறது. அங்கே கொல்லர் ஒருவர் எதையோ ஒன்றை அமுக்கி அமுக்கி ஒரு குழியில் தீப்பிழம்புகளை எழுப்புகிறார். இன்னொரு இடத்தில் மேட்டுப்பகுதியில் ஒரு குழாயை நாலைந்து பெண்கள் மாறி மாறி அடித்து யாரையோ வாய்க்கு வந்த படி திட்டுகிறார்கள். இது போதாதென்று ஒரு நாய், புறாக் கூட்டின் இரும்பு வாய்களுக்குள் மூக்கைவிட்டு மோப்பம் பிடிக்கிறது. ஐயய்யோ ராத்திரி நிம்மதியா தூங்கமுடியாது போலிருக்கே. அந்த லுங்கிக்காரன் பார்வை வேற சரி யில்லை. என்னை ஏன் ஏக்கமா பாக்குறான்.

காட்டுப்புறா, காதலியிடம் விடை பெறப்போவது போல் இறுதியாகப் பார்த்துவிட்டு மாமரத்திலிருந்து ஒரு புன்னை மரத்தில் உட்காருகிறது. இதைத் தாளமுடியாத புறாச்சிறுசு அங்கே அதன் முன்னால் போய் வழிமறிக்கிறது. தனது கழுத்தால் அதன் அலகை தாங்கிக்கொள்கிறது. ஆனாலும் அந்த ஆண்புறா பிடிவாதமாகக் காட்டுப்பகுதியையே பார்ப்பதைப் பார்த்து இதற்கு அழுகை வருகிறது. அவலம் ஏற்படுகிறது. 'என்னோடு வா' என்று காதலன் கூப்பிடுவது அதற்குக் கேட்கிறது. ஆனாலும் கும்மாளம் மாவை விட்டுப் பிரிய அதற்கு மனமில்லை. புறாத் தோழர்களை விட்டு நீங்கவும் இஷ்டமில்லை. இருதலைக் கொள்ளி எறும்பு மாதிரியான நிலைமை. மனதை கல்லாக்கிக்கொண்டு மீண்டும் அந்தக் கூட்டின் மேல் உட்காருகிறது. பிறகு அதன் வாசல் வழியாக உள்ளே புகுகிறது. அந்தப் புறாவிற்கு மீண்டும் ஒரு தடவை அழைப்பு விடுக்கிறது. பிறகு முதல் தட்டின் மத்தியிலுள்ள தனது பலகை வீட்டில் குதித்து ஏறிக் கொள்கிறது. அந்த ஆண்புறாவைப் பார்த்து 'இதுதான் என் வீடு! நீயும் ஏன் இதை உன் வீடாக்கிக் கொள்ளக் கூடாது?' என்பதுபோல் பார்க்கிறது. பிறகு அது வராது என்று அனுமானித்து அதற்கு முகத்தை மறைக்கும் வகையில் பின்பக்கமாகத் திரும்பித் தலையை அங்குமிங்கும் ஆட்டுகிறது. தாளாத சோகச்சுமையை தட்டின் மரச்சுவரில் சாய்க்கிறது.

அந்த ஆண் புறா திரும்பிப் பாராமல் பறந்தது. அப்போது கூட்டுக்குள்ளிருந்த வீட்டுப் புறா இறக்கைகளைத் தட்டி மாரடித்தது. இதற்குள் ஒரே பாய்ச்சலாய் ஆகாயத்தில் 'றந்த ஆண்புறா மீண்டும் அங்குமிங்குமாய்ப் பறந்தது. ஒரு கோழியை ஒருத்தன் தலைகீழாகப் பிடித்துக்கொண்டு போவதைக் கண்டு திகைத்தது. நாலைந்து பெண்கள் ஒருவர் மீது ஒருவர் மண்ணை வாரிக்கொண்டு காட்டுக் கத்தலாகக் கத்துவதைப் பார்த்துப் பயந்தது. நாலைந்து சிறுவர்கள் புட்டான்களை நூலில் கட்டி அங்குமிங்குமாக

ஆட்டிக்கொண்டு போவதைப் பார்த்து அசந்தது. ஒரு வண்டியில் கழுத்தைக் கொடுத்திருந்த இரண்டு மாடுகளை அந்த வண்டியிலிருந்தவன் சாட்டைக் கம்பால் விளாசுவதைப் பார்த்துவிட்டு அதிர்ந்தது. ஒரு பன்றியை யாரோ ஒரு பயல் பெரிய கல்லைத் தூக்கி எறிய அது அவலச் சத்தம் எழுப்பிக்கொண்டே ஓடுவதைப் பார்த்து தானும் ஓடப் போவதுபோல் கால்களைக் குவித்தது. இதற்குள் எதிரே தென்பட்ட கூட்டில் நடுப்பகுதியில் ஒரு ஓரமாக சாய்ந்து கொண்டு தன்னையே பார்த்த அவளை விட்டுப்போகவும் அதற்கு மனமில்லை. காடு சுதந்திரமானது என்றாலும், அந்த சுதந்திரத்தை அருமைக் காதலிக்காக விலையாய்க் கொடுக்கலாம் என்பது போன்ற ஒரு காதல் வேகம். கிருஷ்ணனைப்போல் கூண்டுக்குள்ளே பிறந்த காதலியுடன் கூட்டாக இருக்க வேண்டும் என்ற ஒரு ஆசை.

அந்தக் காட்டுப்புறா அதற்குப் பிறகு எதுவுமே யோசிக்கவில்லை.

ஆகாயத்திலிருந்து நேராக தரையிறங்கியது. லாடம் அடிப்பதற்காகக் கிடத்தப்பட்ட மாட்டை நோட்டம்விட்டுக் கொண்டே முதலிரவுக்குப் போவதுபோல் மெல்ல மெல்ல நடந்தது. கூட்டை நெருங்கியதும் ஒரே குதியாய்க் குதித்து காதலி இருந்த தட்டில் போய் நின்றது. ஆனந்த அதிர்ச்சியில் சிறிதுநேரம் ஒலியற்று நின்ற பெண் புறா ஆனந்தமாய்க் குதித்தது. காதலனின் கழுத்தை தனது அலகால் கோதிவிட்டது. பிறகு என்னையும் அப்படியே இயக்கு என்பதுபோல் அதையே பார்த்தது. பயந்து நடுங்கிக்கொண்டிருந்த அந்த ஆண்புறா இப்போது எல்லாவற்றையும் மறந்து ஒன்றை மட்டும் நினைத்தபடி சத்தம் எழுப்பியது. கும்மாளம்மா வந்து அந்தக் கதவைப் பூட்டினாலும் அந்த பாதிப்பைப்பற்றி கவலைப்படாமல் அந்தச் சிறையையே ஒரு சிங்காரச் சோலையாய் நினைத்து சத்தம் எழுப்பியது. எழுப்பிக்கொண்டேயிருந்தது.

'கெக்கெக்... கெக்கெக் கெக்கே...'

❋

# தலைக்குனிவு

அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தவன் 'காலிங் பெல்' சத்தம் கேட்டு கண் விழித்தான். பட்டப்பகல் பன்னி ரெண்டு மணியளவில், சுகமான தூக்கத்திற்கு துக்கமணி அடிப்பதுபோல், மீண்டும் காலிங்பெல் சத்தம்; அவனுக்கு எரிச்சலாக இருந்தது. காலிங்பெல் அழுத்தப்படும் விதத்தை வைத்தே வந்திருப்பது அந்நியர் என்பதைப் புரிந்துகொண் டான். பால்காரராக இருந்தால் கதவைத்தான் தட்டுவார், மனைவியாக இருக்கமுடியாது. அவளாக இருந்தால், காலிங் பெல்லில் வைத்த கையை விடாமலே, ஒற்றைக்காலை தரை யிலும், ஒரு விரலை பெல்லிலும் வைத்தபடி பிடிவாத மணி யடிப்பவள் வேறு யாராக இருக்கும்? யாராவது இருந்து விட்டுப் போகட்டும். எவனும் கொடுத்த கடனை 'இந்தா ருங்கள் ரொம்பத் தேங்க்ஸ்' என்று சொல்லி வரப்போவ தில்லை. கடன்காரனாக இருந்தால் திறக்கவேண்டிய அவசியமில்லை. தபால்காரராக இருந்தால் கதவுக்கு கீழே இருக்கும் இடைவெளியில் கடிதங்களைப் போட்டுவிட்டுப் போவார். ஏதாவது டொனேஷன் கிராக்கிகளாக இருக்கும். இதுகளுக்காக இயற்கையின் டொனேஷனான தூக்கத்தை விட அவன் தயாராக இல்லை.

அவன் மீண்டும் படுத்தான். மின்விசிறியை தட்டிவிட்டுக் கொண்டு, போர்வையை உச்சிமுதல் உள்ளங்கால் வரை மூடிப் படுப்பதில் உள்ள சுகத்திற்கு ஈடாக எதிலும் குறைந்த

பட்சம் அப்போது இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. கலைத்திருந்த போர்வையை கலக்கி, உடல் முழுதும் போர்த்திக் கொண்டு சுருண்டு படுத்தான். காலிங் பெல் சத்தம் கேட்கவில்லை; ஆறுதலாகவும் அனாவசியமாகவும் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று மீண்டும் மணியோசை.

ஆத்திரத்தோடு எழுந்தான். யாராக இருந்தாலும் 'ஒனக்கு மூளை இருக்கா... அப்படியிருந்தால் நீயும் இப்போ தூங்குவே' என்று சொல்லிவிடுவது என்று உறுதியுடன், தன் தூக்கத்தை யாராலும் தடுக்கமுடியாது என்ற தைரியத்தில், போர்வையை மடித்து வைக்காமல் பனியனை சட்டையால் மறைக்காமல், வேட்டியை லுங்கியால் மாற்றாமல், தூக்கக் கலக்கம் போய்விடலாகாது என்பதற்காக முகத்தை அலம்பாமல் எரிச்சலோடு கதவைத் திறந்தான். ஆள் எதுவும் உள்ளே வரமுடியாத அரையடி இடைவெளியில் கதவை வைததுக்கொண்டே "யாரது" என்று அதட்டினான்.

அவன் கண்ணுக்கு முதலில் ஒரு சிவந்த கரமும், அப்புறம் வளையல் பதித்த சதை வட்டமும் அப்புறம் ஒரு நீலப்புடவையும் தோன்றியது. கதவு அளவுக்கும் மீறிய அகலத்தோடு பிரிந்தது.

வந்தவள் அவனை எதிர்பாராததுபோல் திடுக்கிட்ட குரலில் திரும்பிப் போகப்போகிறவள்போல் படபடப்போடு பேசினாள்.

"மிஸ்ஸஸ் சேகர் இல்லிங்களா..."

சேகர் யோசிக்காமல் பதிலளித்தான்.

"பிளீஸ்... கம் இன் பஸ்ட்..."

"மிஸ்ஸஸ் சேகர் இல்லிங்களா..."

மிஸ்ஸ்ஸ் சேகர் இல்லை என்று சொல்லாமலும், இருக்கிறாள் என்று பேசாமலும், பெட்ரூமைப் பார்த்தான். உடனே அவள் இருக்கிறாள் என்று அனுமானித்தவள்போல உள்ளே வந்தாள்.

''எனக்கு யாரையும் நிற்க வைத்துப் பேசுறது பிடிக்காது... பிளீஸ் சிட்டவுன்'' என்று புன்னகை பீடிகையோடு இன்மொழிந்தான் சேகர்.

அவள் ஷோபாவில் உட்கார்ந்தாள். சேகர் உள்ளே போனான். மனைவியை எழுப்பப் போகிறான் என்று நினைத்தபடி, அவள் வரவேற்பு அறையில் மாட்டியிருந்த புத்தருடைய படத்தையும், திராட்சைக் கொத்துபோல் திரண்டிருந்த கடல்பாசிக் குவியலையும், பல்வேறு வண்ணங்களில் எளிமையான கம்பீரத்தால் ஆங்காங்கே சுவர்களில் மாட்டப்பட்டிருந்த கடல் சிப்பிகளையும் பார்த்துக்கொண்டிருந்தாள். காலடிச் சத்தம் கேட்டு, ''ஹலோ மிஸ்ஸஸ் சேகர்'' என்று கூவப்போனவள், கோழியைக் காணும் சேவல் தன் இரு இறக்கைகளையும் அடிப்பதுபோல், சேகர் சட்டையின் இருபுறத்தையும் இழுத்து இழுத்துவிட்டுக் கொண்டே அவள் முன்னால் தோன்றினான்.

மிஸஸ் சேகர் இல்லிங்களா?''

''என்ன சொன்னிங்க?''

''ஒங்க ஒய்ப் இல்லிங்களா?''

''சொந்தக்காரங்களைப் பாத்துட்டு இதோ வரேன்னு போனாள். இன்னிக்குத்தான் இதோ என்கிறதுக்கு எவ்வளவு நேரமுன்னு அவள் மூலம் தெரிஞ்சிக்கணும்...''

அவள் பயப்பட்டவள்போல் புன்னகைத்தாள்.

''சரி, அப்படின்னா... நான் அப்புறமா வாரேன்.''

''ஒரு டென் மினிட்சில வந்துடுவாள்... இருந்துட்டு...''

''பரவாயில்ல... நான் பக்கத்துலதான் இருக்கேன்... அப்புறமாய் பார்த்துக்கலாம்...''

''நீங்க மிஸஸ் பாஸ்கரன்தானே!''

அவள் அவனை வியப்போடு பார்த்துவிட்டு தலையாட்டினாள்.

''டில்லியிலிருந்து இப்போதுதான் வந்திருக்கீங்க, இல்லியா...டில்லியைப் பிடிக்கலன்னு...அந்த 'லைப்' பிடிச்ச ஹஸ்பண்டை நச்சரிச்சு டிரான்ஸ்பர் கேட்டு வரவழைச்சிட்டிங்க. இல்லியா? இப்போ அங்கு உங்களை அவரு நச்சரிக்கிறார். தில்லிக்குப் போகலாம் என்கிறார். அம் ஐ கரெக்ட் மேடம்!''

மிஸஸ் பாஸ்கரன் அவனே வியப்படையும்படி வியப்பால் பார்த்தாள். பிறகு வாயகல ''ஒங்க மிஸஸ் எல்லாத்தையும் சொல்லிட்டு—தா...'' என்றாள்.

''எடிட் பண்ணித்தான் சொல்லியிருப்பான்னு நினைச்சேன்! பட் டில்லி 'லைப்' அருமையான லைப்பாச்சே மேடம். அங்கே போனதும் நாம இன்டலெக்சுவலோ இல்லியோ... நமக்கே அறிவாளி என்கிற எண்ணம் வருமே! இங்கே ஜாதி உட்ஜாதி மாதிரி ஒரு வட்டத்துல சுற்றிச்சுற்றி வார நமக்கு அங்கே இந்த ஜாதி ஈர்ப்பு சக்திக்கு மீறிய ஆகாயத்தில் மிதக்குறதுமாதிரி ஒரு பீலிங் வருமே... சர்தார்ஜிகள், பெங்காலிகள், ஜாட்டுகள், சிந்திகள், மெட்ராஸ்கள் இப்படி எல்லாரையும் ஒரு சேரப் பார்த்து... ஒரு சேர வாழும்போது ஏதோ ஒருவித விவரிக்க முடியாத மோசமான பீலிங் வருமே... ஒங்களுக்கு வர்லியா மேடம்!''

'மேடம்' சிரித்துக்கொண்டே பதிலளித்தாள்.

''நீங்க சொல்றது சரிதான்... எனக்கும் டில்லி லைப் பிடிச்சது. ஆனால் வின்டர் ஒத்துக்கல. அதோட ஆகாயத்துல சுத்துனாலும், அடித்தளத்துக்கு வந்துதானே ஆகணும். இங்கேன்னா ஒரு 'பிளாட்' வாங்கி, ஏதாவது கட்டலாமில்லியா... பிரபஞ்சத்தை ரசிக்கனுமுன்னால்கூட, நாம நிக்கிறதுக்கு ஸ்பேஸ் இருக்கணுமில்லியா? ஒன்னுல நின்னுதானே, இன்னொன்ன பார்க்க முடியும்.''

''பரவாயில்லியே! நீங்க பிராக்டிக்கலாவும் பேசுறீங்க! பிலாஸபிக்கலாவும் பேசுறிங்க.''

''நோ... நோ! எல்லாம் என்னோட ஹப்பியோட டியூஷன்! ஒருநாளைக்கு ஒய்போட வீட்டுக்கு வாங்க. அவருக்கு ஒங்களப் பிடிக்கும். நான் வாரேன் ஸார்! மிஸஸ் சேகரை என் வீட்டுக்கு வரச்சொல்லுங்கோ!''

''பை தி பை ஒங்க பேரு... ஸாரி தப்பா நினைக்காதீங்க! எனக்கு கணவர்பேர்ல மனைவியைக் கூப்புடுறது பிடிக்காது. என் மனைவியோட பெயர் லட்சுமி. உங்க பெயரைச் சொல்றதும் சொல்லாததும்...''

அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். பிறகு எழுந்து கொண்டே ''நீங்க சொல்றது மாதிரிதான் என் வீட்டுக்காரரும் சொல்வார். என் பெயர் ரமா. நான் வாறேன் ஸார்!''

''ஓ.கே. மேடம்... எனக்கும் தூக்கம் வருது. என்னோட சரிபாதி எப்போ வாராள்னும் தோணல. அவள் வந்தவுடனே சொல்றேன்!''

''ஸாரி...ஒங்க தூக்கத்தைக் கெடுத்துட்டேன்.''

''நோ நோ! நீங்க வரும்போது சவுண்ட் தூக்கத்துல தான் இருந்தேன். அதாவது ஒரு சவுண்ட்ல கலையும்படியான தூக்கம்.''

ரமா உடல் விட்டுக் குலுங்கி, வாய்விட்டுச் சிரித்து, கண் பொங்கப் பார்த்து, கால் பெயர்ந்தாள். சேகரும் சடாரென்று கதவைத் தாழ்ப்பாள் போட்டான். பால்கனி வரைக்கும் சென்று வழியனுப்பவில்லை. கூடாது. ஒருத்தியை விடாமல் பிடிக்கவேண்டும் என்றால், முதலில் விட்டுப்பிடிக்க வேண்டும். இதுதான் டெக்னிக். தயக்கமாக வந்தவளை சகஜமானவளாக மாற்றியாகிவிட்டது. சகஜம் உரிமையாவதற்கு நாட்களைத்தான் எண்ண வேண்டும்.

டெலிவிஷனில் சினிமாப்படத்திற்கு இடையில் செய்தியைப் பார்ப்பவர்கள் முகம் சுழிப்பதுபோல் மூன்று மாத காலமாக வாழ்வில் சுழித்த அவனுக்கு மீண்டும் இன்னொரு 'அட்வென்சர்' கிடைக்கப்போகிற ஆனந்தம். போர்வையை மடித்து வைத்துவிட்டு, போகிறவளையே மனதில் உருவகித்தான். மஞ்சள் சிவப்பு; சற்று உயரம்; பரவாயில்லை. மடியாத சதைப்பிடிப்பு உயரத்தைக் குறைத்துக்காட்டி அழகைக் கூட்டிக் காட்டுகிறது. சொல்லுக்குச் சொல் 'அவர் அவர்' என்றாளே பரவாயில்லை... அந்த 'அவர்' சொல்லும் பல பெண்களின் சங்கதிகள் தெரிந்ததுதானே! அவர் என்பது ஒரு கேடயம்... கேடயம் போர்க்களத்தில்தான் போடப்படும். ஆயுள் முழுதும் உணர்ச்சியில் போராடும் பெண்கள் உச்சரிக்கும் கேடய வார்த்தைதான் 'அவர்'. பல 'இவர் களை' மறைப்பதற்காக ஒரு 'அவர்' அவ்வளவே.

சேகர் திருப்தியோடு அசுரத்தனமான அமைதியோடு ஒரு செய்திப் பத்திரிகையைப் புரட்டினான். வாரப் பத்திரிகை ஒன்றைப் புரட்டினான். சிறுகதை ஒன்றைப் படித்தான். அதைப் படித்து முடித்ததும், அப்போது அவள் வீட்டுக்கு ஓட வேண்டும்போல் தோன்றியது.

இரவு மனைவியோடு பேசுகையில், வேண்டா வெறுப்பாகச் சொல்லி வைத்தான். கண்டவர்களை எல்லாம் கண்ட நேரத்துக்கு, வரும்படிச் சொல்லி கண்டபடி பேசலாகாது என்று தன் கண்கண்ட மனைவியிடம் சொல்லி வைத்தான். "பாவம்! அவள் ரொம்ப நல்லவள். அவளோட ஹஸ்பெண்ட் எப்பவும் டூர்ல இருப்பார். வீட்டுக்கு வந்தால் டூர்ல இருந்துவந்த களைப்புல இருக்காராம்! இப்போ நான் தான் அவளுக்கு ஆறுதல்" என்று மனைவி சொல்லி முடித்ததும், ''அவளுக்கு நீ ஆறுதல்...ஒனக்கு நான் ஆறுதல் ஆளப்பாரு! தொணதொணன்னு பேசிக்கிட்டு தூங்கவிடு' என்று சொன்னான். தூங்காமலே இரவைக் கழித்தான்.

நான்கைந்து நாட்களுக்குப் பிறகு சேகர் மனைவியின் நச்சரிப்புக்குத் தாளாதவன்போல், மிஸ்டர் பாஸ்கரன் 'வீட்டுப் பேமிலி'யோடு போனான். ஞாயிற்றுக்கிழமை காலை. மிஸ்டர் பாஸ்கர் சனிக்கிழமை மாலையிலேயே 'கேம்ப்' போய்விட்டாராம். ரமா தலையை உலர்த்திப் போட்டபடி சோபாவில் உட்கார்ந்திருந்தாள். வலது பக்கமாய் சற்று ஒயிலாகத் தலையைச் சாய்த்து இடதுகையால் கூந்தலை ஆட்டி ஆட்டி, அவள் கேசத்தை உலர்த்திய விதத்தில் சேகர் ராட்டினத்தில் சுற்றுவதுபோல் கிறுகிறுப்பானான். அவர்களைப் பார்த்ததும் அவள் எழுந்து கூந்தலுக்கு ஒரு முடிச்சுப் போட்டாள். முடிச்சுக்குக் கீழே தொங்கிய முடிக்கற்றை ஸ்டாண்டில் பொருத்தப்பட்ட மெல்லிய ஊதுபத்தி கொத்துபோல் தோன்றின. அவை, அவள் போட்டிருந்த சிவப்பு ஜாக்கெட்டில் தொட்டு எரிந்து கொண்டிருப்பதுபோலவும் தோன்றியது. இப்படி கூந்தலை முடிச்சுப் போட்டுவிடும் பெண்களை பின்பக்கமாக 'டை' கட்டுபவர்கள் என்று முன்பு கணவன் தன்னிடம் சொன்னதை நினைத்து மிஸஸ் சேகர்—அதுதான் லட்சுமி. இப்போது சிரித்தாள். ரமா... குதூகலமாகக் கூவினாள்.

''வாங்கோ! வாங்கோ!''

''அடடே... மிஸ்டர் பாஸ்கர் இல்லியா?''

''நேற்று டூர் போயிட்டார்.''

''ஏய் லட்சுமி! இதை என்கிட்டே சொல்றது என்ன?''

''சும்மா பிகு பண்ணாமல் உட்காருங்க ஸார். லட்சுமி! ஒங்களோட 'ஹிப்பியை' ரொம்பதான் டாமினேட் பண்ண விட்டிருக்கீங்க.''

லட்சுமி ஏதாவது பேசினால் அது மூதேவித்தனமாக இருக்கும் என்று நினைப்பவள்போல், சேகர் எடுத்த எடுப்பிலேயே பதிலளித்தான்.

''ஒங்க வீட்ல எப்படியோ.''

''அதிர்ந்து பேசமாட்டார், பெர்பெக்ட் ஜென்டில் மென்!''

''ஒங்களுக்குத் தெரியுமா மேடம் மனைவிகிட்ட எந்த கணவனும் ஜென்டில்மேனாய் இருக்க முடியாது! இருக்கப் படாது... டு யு அண்டர் ஸ்டாண்ட்.''

லட்சுமிக்கு அண்டர்ஸ்டான்ட் ஆகாததால், அவள் மேஜைமீது ஏறியிருந்த ஒரு ஸ்டாண்டில் உள்ள அலங்காரப் பொருளைப் பார்த்தாள். ரமா புரிந்துகொண்டவள்போல், லட்சுமியைச் சங்கடத்தோடு பார்த்து அவனை சலிப்போடு பார்த்தாள். சேகர் உதட்டைக் கடித்தான். பிறகு "மேடம்! நான் ஒரு லேட்டர் பாக்ஸ். உள் அர்த்தம் வச்சுப் பேச வராது" என்று சொல்லி தன் பேச்சின் உள்ளர்த்தத்தைக் கோடிட்டுக் காட்டினான்.

திடுக்கிட்டவள்போல் கூந்தலைப் பிடித்த ரமா, மீண்டும் சகஜமானவள்போல லேசாகச் சிரித்தாள். பிறகு ''டிரிங் கூலா... ஹாட்டா வேணுமா' என்றாள்.

''கூலா பேசாமலும், ஹாட்டாய் வெடிக்காமலும் இருக் கிங்களே! அதுவே எனக்குப்போதும்'' என்று சேகர் சொல்லி விட்டு, தான் சொன்னதைப் புரிந்துகொண்டாளா என்பது போல் ரமாவைப் பார்த்தான். அவள், லேசாக உட்சிரிப் பாகச் சிரித்துவிட்டு உள்ளே போனாள்.

ரமா டிரேயில் குளிர்பானம் கொண்டு வந்தாள். அவர் களுக்குக் கொடுத்துவிட்டு, தனக்கும் எடுத்துக்கொண்டாள். சேகர் கொடுத்ததை அவள் உதட்டைப் பார்த்தே பருகிக் கொண்டே, ''மேடம், செல்பில நிறைய புத்தகம் இருக்கே'' என்றான்.

''நான் நிஜமாகவே படிக்கிறவள் ஸார்! அழகுக்கு அடுக்கி வைக்கல.''

''இஸ் இட்.''

''நான்... இங்கிலீஷ் லிட்டரேச்சர்ல போஸ்ட்கிராஜுவேட். கல்யாணத்துக்கு முன்னாடி ஒரு பிரைவேட் காலேஜில, அஸிஸ்டெண்ட் புரொபஸராய் இருந்தவள். அது மறக்கமுடியாத நாட்கள்.''

''இப்பகூட வேலைக்குப் போகலாமே!''

''அவருக்குப் பிடிக்கல.''

'வீக்' பாயிண்டை சொல்லிவிட்டவள்போல், ரமா முகம் சுளித்தாள். அவளை வீக்காக்குவதற்கு ஒரு பாயிண்ட்டைக் கண்டறிந்தவன்போல் சேகர் தன்னையறியாமலே சப்புக் கொட்டினான். லட்சுமி இப்போது மேஜையிலிருந்த ஸ்டாண்டை விட்டு விட்டு சுவரில் மாட்டியிருந்த ஒரு திரைச்சீலை ஓவியத்தைக் கண்களால் பிடித்துக்கொண்டிருந்தாள். இந்தச் சமயத்தில் வெளியேயிருந்து ஒருவன் வந்தான். பாராட்டும்படியான உருவமோ, பழிக்கும்படியான தோற்றமோ இல்லாதவன். இருபத்திரண்டு வயது இருக்கலாம். நடுவழியில் தயங்கி நின்றவனைப் பார்த்து ரமா, ''உட்காருடா'' என்றாள்.

பிறகு—

''இவன்தான் என்னோட ஒரே தம்பி கோபால். என்ஜினியரிங் பைனல் படிக்கிறான். இவ்வளவு நாளும் ஹாஸ்டல்ல இருந்தான். இப்போ இவன்தான் எனக்குக் காவல். அதோட ஆறுதல்! இவரு, நான் சொல்லலே. அவர் தாண்டா மிஸ்டர் சேகர். இவரும் என்ஜினியர்தான்.''

அந்தப் பையன் சேகரை மரியாதையோடு பார்த்து விட்டு, 'வணக்கம் ஸார்' என்றான்.

''வணக்கம்! நீங்க மெக்கானிக்கலா ஸிவிலா?''

''எலெக்ட்ரிகல் ஸார்!''

''குட்... நானும் எலெக்ட்ரிக்கல்தான். பாடத்தில் சந்தேகம் வந்தால் என்கிட்டே கேளுங்க.''

'தேங்க் யூ ஸார்'

மூன்றாவது ஆள் ஆக்கிரமிப்பில் சேகரால் ரமாவுடன் இச்சையோடு பேச முடியவில்லை. புறப்படலாம் என்பது போல், லட்சுமியின் கரத்தை வலிக்கும்படிக் கிள்ளினான். பிறகு ''தேங்க் யூ மேடம்... நீங்களும், அவரோட எங்க வீட்டுக்கு வாங்க'' என்று சொல்லிக்கொண்டே எழுந்தான்.

ஒரு மாத காலத்திற்குள், ஓராண்டு கால பழக்கம் ஏற்பட்டது. 'பாஸ்கரன்களும்', 'சேகர்களும்' மாறி மாறி ஒருத்தர் வீட்டுக்கு இன்னொருவராக வந்து சந்திப்புக் களையும் சமையல்களையும் பரிமாறிக்கொண்டார்கள். சேகர், மிஸ்ஸஸ் பாஸ்கரனை, ரமா என்று அழைக்கும் அளவிற்குப் போய்விட்டான். அதை, அவளோ அவள் கணவனோ பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. சிலசமயம் (A) ஜோக்குகள்கூட அடித்தான். அவனிடம் ரமாவும், தன் கணவனின் ஏனோதானோ போக்கைச் சொல்லி குறைபட் டிருக்கிறாள். அப்போதெல்லாம் அவன் ஆறுதலாகப் பேசுவான். லட்சுமிகூட, அவனிடம் 'நீங்க... ரமாகிட்ட ஓவராப் பேசுறீங்க! நேற்றுகூட, ஆபாசமாக ஜோக் அடிக்கி றீங்க! தப்பா எடுத்துக்கப்போறாள்' என்று தெரிவித்தாள். உடனே சேகர், 'எடுத்துக்கப்போறாள்' என்பதை இன்னும் எடுக்கவில்லை என்பதாக அர்த்தப்படுத்திக்கொண்டு, 'நீ ஒரு அசடுடி... ஒரு பெண்கிட்ட சகஜமாய் பேசுறதுல தப்பில்ல... இன்னும் சொல்லப்போனால், அப்படி சகஜமாய் பேசினால் தான், தப்பான எண்ணம் வராது' என்று அடங்கா ஆசை யுடன் மனைவியை அடக்கி வைத்தான். 'ஒனக்குத்தான் ஸோஷியலாய் பழகத் தெரியல! இவ்வளவுக்கும், நீயும் காலேஜ்ல குப்பை கொட்டினவள்' என்று தூங்கியவளை எழுப்பிச் சொன்னான்.

நாளாக நாளாக நட்பிற்கு ஆண்டுக்கணக்கில் வயதா கியது. ரமாவின் தம்பிக்கு வலியப்போய் பாடங்களை போதித்தான். மற்றவர்கள் சந்தேகப்படக்கூடாது என்பதற்

காக, அவனைத் தன் வீட்டுக்கும் வரவழைத்து 'டியூஷன்' போட்டான். அவனை 'வாடா போடா' என்று சொல்லு மளவிற்கும் வந்தான்.

காய் கனிவதுபோல் தோன்றியது. ஓரிரு தடவை, ரமாவை தண்ணீர் வாங்கும் சாக்கில் தொட்டுப் பார்த்தான். அவள் விலகவும் இல்லை. விரையவும் இல்லை. அதேசமயம் அவள் அன்னியோன்னியமாக பழகுபவள்போல் அவனைப் பார்க்கும்போது மாராப்புச் சேலையை மூடவில்லை. தலை முடியை ஒதுக்கிக்கொள்ளவில்லை. பேசும்போதுகூட தம்பி யிடமோ, கணவனிடமோ பேசும் சகஜ நிலையிலேயே பேசினாள். அவன் முன்னால் சில பாடல்களைக்கூட முணு முணுத்தாள். அதுவும் டூயட் பாட்டுக்களை.

ரமா தன்னுடைய பெருந்தன்மையில்தான் இன்னும் விடப்பட்டிருக்கிறாள் என்ற மிதப்போடு நினைத்த சேகர், தானாக தேடாமல் அவளாக வரட்டும் என்ற தோரணையில் சிறிது பொறுமையாகக்கூட இருந்தான். அன்று அவனுக்கு டில்லி "கேம்ப்". மனைவி சூட்கேஸை நிரப்பி மூடியபோது, சேகர் பூட்ஸ் லேஸைக் கட்டிக்கொண்டிருந்தான். கோபால் விடுவிடுவென்று ஓடிவந்தான்.

"சார்... போகிற வழியில ஸிஸ்டர் ஒங்களை பார்த்துட்டுப் போகச் சொன்னாங்க."

"என்னவாம்?"

"சொன்னாத்தானே எனக்குத் தெரியும். அவள் சொல்லல..."

ஏதோ சலிப்போடு போகிறவன்போல் முகத்தைச் சுழித்துக்கொண்டே எழுந்தான். ஒரு வார காலம் கேம்ப்பில் இருக்கப்போகிறவன். அவள் இங்கே வந்து வழியனுப்ப வருவாள் என்று நினைத்து அவள் வராததால் எரிச்சலடைந்த அவனுக்கு அவள் அழைப்பு மாபெரும் கர்வத்தைக் கொடுத்தது. சூட்கேஸைத் தூக்கிக்கொண்டு புறப்படப்

போனபோது, கோபால் ''ஸார்! ஓங்க பழைய நோட்ஸை தரேன்னு சொன்னீங்களே... இப்போ கிடைக்குமா?'' என்றான்.

''ஒனக்கு சமயம் சந்தர்ப்பம் தெரியாது... கேம்ப்ல இருந்து வந்ததும் தாரேன்!''

''ஸாரி ஸார்! அர்ஜண்டா தேவையா இருக்கு.

''இவன் ஒருத்தன்... எனக்கு இப்போ நேரமில்ல. ஆபீஸ் போயிட்டு ஸ்டேஷன் போகணும். இந்தா லட்சுமி... இவன் ஏதோ கேட்கிறான். எது கேட்டாலும் தேடிக்கொடு! சரி நான் வரட்டுமா?''

மனைவி மிரட்சியான பார்வையோடு பிரிவாற்ற முடியாத சோகத்தோடு வழியனுப்பி வைக்க, சேகர் சூட் கேஸோடு தெருவில் ஓடினான். ரமா அவனை எதிர்பார்த்த வள்போல வாசல் பக்கமே நின்றாள். ''ஓங்கள சூட் கேஸோட பாக்கறதுக்கு ஆர்ம்ஸ்டிராங் மாதிரி இருக்கு'' என்றாள்.

''வரச்சொன்னிங்களாமே...''

''ஆமாம். தில்லியில... ஒரு பஞ்சாபி பிரண்ட் இருக்காள். ஓங்களை மாதிரியே என்கிட்ட பழகுவா. குளோஸ் பிரண்ட். அவளுக்கு குங்குமச்சிமிழ் 'பாக்' செய்திருக்கேன். பேக்கிங்கிலே அட்ரஸ் இருக்கு. கரோல்பாக்குல சென்னா மார்க்கெட்...''

''எனக்கு பிரசண்ட் இல்லியா...''

''அய்யோ... கேட்டா வாங்குறது?''

''ஓங்களை ஒரு வாரம் பார்க்க முடியாதது போர் அடிக்கும்.''

''நீங்க சொல்லிட்டிங்க... நான் சொல்லல!''

சேகர் உணர்ச்சிவசப்பட்டு விட்டான். ''ரமா, என்னை ஒன்னால பிரிந்திருக்க முடியாது. 'ஒன்னையும்' என்று

பேசிக்கொண்டே போனவன், 'என்னால' என்ற வார்த்தையை விழுங்கிவிட்டு, 'பிரிந்திருக்க முடியாது' என்பதை வார்த்தையாகச் சொல்லாமல் செயலாகக் காண்பித்தான்.

ரமா தனது இரண்டு தோள்களிலும் விழுந்த மன்மதக் கரங்களை தன் கையாலேயே தூக்கி வீசியடித்தாள். அவனையே வெறித்துப் பார்த்தாள். நடந்ததை நம்பமுடியாதவள்போல் வாய் திறந்து, வலதுகரம் விரல் பிரிந்து. முகத்தில் குவிய ஸ்தம்பித்து நின்றாள். அரை நிமிட உஷ்ணமான மௌனத்திற்குப் பிறகு ''இட் இஸ் திஸ் நான்சென்ஸ் ஸார்... நீங்க உள்ளன்போட பழகுறீங்கன்னு நினைச்சேன்! கடைசில உடலன்போட பழகியிருக்...''

''ஐ ஆம் ஸாரி ரமா...''

''சேய் மிஸஸ் பாஸ்கரன்...''

''ஐ அம் ஸாரி... மிஸஸ் பாஸ்கரன்... இந்தக் காலத்துல செக்ஸ் மூலவிக்ரஹம் இல்ல. வெறும் உற்சவமூர்த்திதான். நீங்க நாகரீகமான பெண் என்கிறதுனாலே, நீங்ககூட ஒரு சமயம் செக்ஸ் இஸ் லைக் பொட்டட்டோன்னு சொன்னதால... ஐ ஆம் ஸாரி!''

''ஓஹோ! ஒங்க கருத்துப்படி செக்ஸ் ஒரு உடல் தேவைன்னு சொல்ற பெண்ணுல்லாம் உடனே வாரவள், ஆணுக்குச் சரிநிகர் சமமாய் பழகுற பெண்களெல்லாம் ஒருவன் கூப்பிடுறதுக்காக காத்திருக்கிறவள். என்னை தப்பா புரிஞ்சிக்கிட்டீங்க ஸார்! இப்பவும் சொல்றேன், செக்ஸ் ஒரு உடல்தேவைதான். அதாவது கணவன் மனைவிக்கு, ஒங்க அம்மாவுக்கும் அப்படித்தான். எனக்கும் அப்படித்தான். பேமிலிமேனான நீங்க இப்படி நடக்கக்கூடாது ஸார்! கணவன் மனைவி என்கிற வரம்பும், கற்பு என்கிற நெறியும் இருக்குறதுக்குக் காரணம், ஒருவனும் ஒருத்தியும் ஒருவருக்கு இன்னொருவர் தன்னை இழந்து பிறிதொருவரைப் பெறுவது என்கிறதுக்காகத்தான்... நீங்க சொல்லலாம். உணர்ச்சிவசத்துல தப்பு நடக்கிறது சகஜமுன்னு... அது கணவனுக்கு துரோகமாகாதுன்னுகூட வாதாடலாம்.

சந்தர்ப்பவசத்துல தப்புச் செய்கிறவங்களை அனுதாபத்தோடு பாக்கலாம். ஆனால் அதையே நம்முடைய தப்புக்கு அங்கீகாரமாய் எடுத்தால், அந்த அனுதாபமே போலித்தனமாகிவிடும். தேவை என்கிற அளவில் செக்ஸ் ரொம்ப சாதாரணம். அதுக்கும் கற்புக்கும் சம்பந்தமில்ல ஆனால் அதை வேற வகையிலயும் பாக்கலாம். உதாரணமாய் நம் தேசக்கொடி பொறித்த துணியை ஏற்றும்போது எதுக்காக எழுந்து வணங்குகிறோம். அதை ஏன் தோளுல துண்டாவோ நாப்கினாவோ பயன்படுத்தணும்னு தோணமாட்டேங்கறது! காரணம் துணியென்றாலும் துணியல்ல; ஒரு நாட்டோட ஆத்ம அறிகுறி. அறுபது கோடி மக்களோட சிம்பல். இதேமாதிரிதான் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள கற்பு. அதுவெறும் செக்ஸ் கட்டுப்பாடு அல்ல. கணவனுக்கும் மனைவிக்கும் இருக்கிற உறவை உருவகப்படுத்தும் ஒரு சிம்பல்... இதை ஒரு அயோக்கியனால் புரிஞ்சிக்க முடியாது. ஸாரி... பார் புரூட்டலி பிராங். நானும் ஒங்களுக்கு சலனம் ஏற்படும் வகையில் நடந்தால் மன்னிங்க. இனிமேல் நீங்க தனியா வரப்படாது. அதுக்காக வராமலும் இருக்காதீங்க. ஒய்போட வாங்க. நானும் அவரோட வாரேன்! லெட் அஸ்பி பிரண்ட்ஸ்! ஓகே... காபி சாப்பிடுறீங்களா..."

சேகர் வியர்த்துப்போனது உண்மைதான் என்றாலும், வெந்துபோகவில்லை. எப்படியோ மழுப்பிவிட்டுப் புறப்பட்டான். அவனுக்கு வருத்தத்திற்குப் பதிலாகக் கோபம் வந்தது. தன் ஆண்மைக்கும், கவர்ச்சித் திறனுக்கும் அவள் சவாலிடுவது போலிருந்தது. 'என்னடி நினைச்சிக்கிட்டே... என்னோட சைக்கலாஜிகல் தாக்குதலை இனிமேல் பயன்படுத்துகிறேன் பாரு. ஒன்னால தாக்குப்பிடிக்க முடியுமான்னு பாரு. ஒரு வாரம் விசுவாமித்திரர் மாதிரி இருந்து காட்டுறேன். நீ மேனகையா வராமல் இருப்பியான்னு பாத்துடலாம்! ஒன்னைமாதிரி எத்தன பொண்ணுங்க இப்படி என்கிட்ட புலம்பி இருக்கிறாங்க! அப்புறம் பொறுத்துப் பாருடி! லெட் அஸ்பி பிரண்ட்ஸ்ன்னு சொன்ன

துலேயே, ஒன் வீக்பாயிண்டை புரிஞ்சுட்டேன்! ஒன்னை நீ டிலேய் பண்ணமுடியும்; டினை பண்ண முடியாது. இது சவால் மேடம்!

சேகர் தன்னையறியாமல் சிறிது சத்தம் போட்டுக்கூட கத்தினான். தெரு மூலைக்குப் போனவன் அவள் வாசலி லேயே நிற்பதை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு திரும்பிப் பார்க்க விரும்பாதவன்போல் நடந்தான். அலுவலகத்திற்கு வந்ததும் கேம்பில் செய்யவேண்டிய வேலைகளுக்கு 'பைல்' களைத் தேடி ஒன்றுசேர்த்தான். அப்படியும் இப்படியுமாய் இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. ரயில் நிலையத்திற்குப் புறப்படப் போகிற நேரம். ஆக்ரா கேன்டோன்மென்ட்டில் ஏற்பட்ட ரயில் விபத்தால் அவனை இப்போது வரவேண் டாம் என்று தில்லியிலிருந்து டெலக்ஸ் செய்தி வந்தது.

சேகர் வீட்டைப் பார்த்துப் புறப்பட்டான். வழியில் ஒரு சினிமா தியேட்டர். 'பெண்களை வசப்படுத்துவது எப்படி?' என்ற தலைப்பு. 'மென் அண்ட் உமென்' என்ற ஆங்கிலப் படத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. சேகருக்கு ஒருவேளை, தானும் இந்த விவகாரத்தில் கற்க வேண்டியது ஏதாவது இருக்கலாம் என்று நினைத்தான். அதோடு, அங்கேகூட, இந்த ரமாவைவிட அழகான ஒருத்தி கிடைக் கலாம்.

தியேட்டர் கவுண்டரில் டிக்கெட்டை வாங்கிக்கொண்டு உள்ளே போனான். வெளிச்சம் விலகிக்கொண்டிருந்த சமயம், ஒளியை இருட்டு விழுங்கிக்கொண்டிருந்த வேளை; இனிய நாதத்தை 'நொய்ங் நொய்ங்' சத்தம் துரத்திக் கொண்டிருந்த நேரம். அப்போது பழக்கப்பட்ட குரல்களைக் கேட்டுநிமிர்ந்து பார்த்தான். அவன் இருந்த இடத்திற்கு முன்வரிசையில்—

லட்சுமியும், கோபாலும் ஒருவர் தலையில் இன் னொருவர் தலைபட, ஒருவர் தோளில் இன்னொருவர் கை பட...

❋

# வரம்பு மீறிகள்

"நீங்கெல்லாம் எதுக்காக அப்பா சாமி கும்பிடணும்... தெரியாமத்தான் கேட்கேன்."

அரசாங்கக் கடனில் கட்டப்பட்டதால், 'கடனே' என்று காட்சி காட்டும் சின்னஞ்சிறிய அந்த வீட்டின் விசாலமான முன்புறத்தில், அந்த இடத்தின் ஒரே ஓர் அலங்காரமாய்த் தோன்றும் பூச்செடிகளில் மலர்களைக் கொய்து, கையில் இருந்த பூக்கூடையை அந்த மலர்களாலேயே, பொங்கி வழியவிட்டு, வீட்டுக்குள் வந்த இசக்கியா பிள்ளை ஓர் ஓரமாய் உள்ள பூஜை அறைக்குள் வழக்கமான வேகத்தோடு தான் போகப் போனார். சமையலறையைத் தாண்டி, அவள் இருந்த அறையின் நினைவே இல்லாமல் அகலப் போனவரை, அந்தக் குரல் கட்டிப் போட்டது. டேப்புகளால் பின்னப் பட்ட கட்டிலில், கரங்களைப் பின்னி, அந்தப் பின்னலையே தலையணையாக்கி, குப்புறக் கிடந்த மகளை 'சிவசிவ' என்று மனதுக்குள் ஓலமிட்டு மருண்டபடி பார்த்தார். அடியற்றுக் கிடந்த அவளோ, தோள்களை நிமிர்த்தாமலே கழுத்தை வளைத்து தந்தையையே பார்த்தாள்.

இசக்கியா பிள்ளைக்கு அவள் தனது கழுத்தில் தொங்கும் உத்திராட்ச மாலையையே பார்ப்பதுபோல் தெரிந்தது. அதைப் பறிக்கப்போவது போன்ற பார்வை... உடனே அவர், மார்பின் முடிவிற்கும், வயிற்றின் தொடக்கத்திற்கும்

எல்லைக்கோடான நெஞ்செலும்புக் கூட்டின் இடைவெளியில், ஒற்றை உத்திராட்சக் கொட்டையுடன் முற்றுப்பெற்ற மாலை முனையை ஒரு கையில் பிடித்து, அந்த மாலையைக் கழற்றாமலே சுருட்டிக்கொண்டார். ஒரு கைக்குள்ளேயே மறைத்துக்கொண்டார். இப்போது, அவள் இன்னொரு கையிலுள்ள பூக்கூடையைப் பார்ப்பதுபோல் இருந்தது. கையசையமாலே அந்தக் கூடை ஆடியது. அவள் கண்களே அதை ஆட்டி வைப்பதுபோல் தோன்றியது.

இசக்கியா பிள்ளை கால்களை அங்குமிங்குமாய்த் தேய்த்தபடி, சிறிதுநேரம் காலடி வட்டத்திற்குள்ளேயே ஒற்றைக்காலில் சுற்றினார். பிறகு அவள் சொன்னதைக் கேட்காததுபோலவும், அவள் பார்த்தது கண்களில் படாதது போலவும், பாவனை செய்தபடியே பூஜை அறை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். மகளின் இன்னொரு கேள்வி அவர் உடம்பைக் குலுக்கியது.

''பூஜை அறை இருக்கறதுக்கு, இந்த வீட்டுக்கு என்ன யோக்கியதை இருக்குது?''

இசக்கியா பிள்ளை பூஜையறையில் துணிக்கதவு போலான அந்தத் திரைச்சீலையைப் பார்த்தார். ஒரு கையில் திரிசூலமும், மறுகையில் உடுக்குமாய்க் காட்சி காட்டும் அந்தச் சீலையில் பொறித்த திரிபுர சுந்தரியையே பார்த்தார். மகளை மாதிரியே அம்மாவின் முகம். 'ஒன்னைத்தான் பார்க்கிறேன்' என்பது மாதிரியான பிரிந்தும் பிரியாதது போன்ற உதட்டோரச் சிரிப்பு. அழுத்தமான பார்வை. அங்கேயே அப்படியே அசைவற்று நின்றார். 'அம்மா எனக்கு பூஜை செய்ய யோக்கியதை இல்லையாம்மா... சொல்லம்மா!'

அம்மாவே சொல்ல வந்ததுபோல், சமையலறையில் இருந்து, முகத்தில் பவுடர்போல் அப்பிய கோதுமை மாவோடு காமாட்சி வெளிப்பட்டாள். கணவருக்கு முன்பே

காரியம் ஆற்றுபவள் என்பதைக் காட்டுவதுபோல் ஈரத் தலை... நெற்றியை ஒளியடிப்புச் செய்யும் விபூதி... நெற்றிப் பொட்டை மறைக்கும் பெரிய குங்கும வட்டம்.

காமாட்சி மகளைப் பார்த்து ஓடினாள். ஓரடி துள்ளி, ஈரடி நடந்து மூன்றடியில் நின்றவண்ணம், மகளையும் அவளைக் கொடுத்தவரையும் மாறி மாறிப் பார்த்தாள். காது வளையங்கள், கட்டிலின் அணிகலன்கள்போல் தோன்றும்படி கட்டில் சட்டத்தில் முகத்தை அழுந்தப் போட்டிருந்த மகளைப் பார்த்தாள். பூஜை அறைக்கு வெளியே நிற்கமுடியாமலும், உள்ளே போக முடியாமலும் தவிக்கும் அவரைப் பார்த்தாள். அவர் பிடித்த பூக்கூடை சரிந்து, மலைமகளுக்கான செம்பருத்தி மலர்களும், கலை மகளுக்கான வெண்பருத்தி மலர்களும் கீழே விழுந்து கிடந்தன. பின்னிக் கிடந்தவை பிரிந்து கிடந்தன. உயர மானாலும், ஒட்டடைக் கம்பின் அழுத்தம்கூட இல்லாமல், பூஞ்சை உடம்போடு பூப்பாரம் சுமக்க முடியாமல் வந்து நின்ற கணவனைப் பார்த்தாள். தாய்மையைக் கண்ணகித் தன்மை விரட்டியதை சாட்சி கூறுவதுபோல், குரலில் முன் பாதியில் கனிவையும், பின்பாதியில் கடுமையையும் கலந்த படி பேசினாள்.

"ராகுகாலம் வரப்போகுது... நீங்க மொதல்ல உள்ளே போங்க. ஏய் இந்திரா வாய் ரொம்ப நீளுது..."

"அவன் கை நீண்டதைக் கேட்கத் துப்பில்லாமல் என் வாயை அடைக்க வந்துட்டிங்களா! பரவாயில்ல... மகளுக்கு ஏத்த அம்மாவாய் இருக்கமுடியாவிட்டாலும், புருஷனுக்கு ஏத்த பெண்டாட்டியாய் இருக்கறதுல சந்தோஷந்தான்..."

காமாட்சி, பாயைச் சுருட்டுவதுபோல் தன்னைச் சுருட்டிக்கொண்டு தொட்டு எழுந்து அந்த அறைக்குள் அங்கு மிங்குமாய் சுற்றும் மகளையே பார்த்தாள். அவளோ, அவளை அங்கீகரிக்காமலே ஒரே சுற்றாய் ஆனவள்போல், பல சுற்றாய்ச் சுற்றினாள்.

தாயும், மகளும் மௌனித்ததை தடங்கல் தீர்ந்ததாய் நினைத்துக்கொண்டு இசக்கியா பிள்ளை பூஜையறைக்குள் போனார். திரைச்சீலையை ஒரு பக்கமாய் தள்ளுவதற்கு மறந்து, அதை இரண்டாய் மடித்து நிலைப்படிக் கம்பியில் செருகினார். அதில் திரிபுரசுந்தரி காலும் கையும் குறுக்கப் பட்டு குறுகிக் கிடந்தாள்.

பூஜையறைக்குள் வந்த இசக்கியா பிள்ளை, எந்தச் சோதனையிலும் பூஜை நிறுத்தம் ஏற்படக்கூடாது என்று கடுக்கன் போட்ட அப்பா கிராமத்தில் உபதேசித்ததை நினைவுக்குக் கொண்டுவந்து அந்த அறையே ஆகாயமும் பூமியும் என்பதுபோல் அண்ணாந்தும், தலை தாழ்த்தியும் பார்த்துக்கொண்டார். அந்த அறை அனைத்தையும் உட்கொண்ட பிரபஞ்ச அறையாய்த் தோன்றியது. வீட்டைக் கட்டும்போது அறுநூறு சதுர அடிக்குள்ளேயே தனியாய் ஒரு பூஜை அறை கூடாது என்றாள் மனைவி. இவர்தான் அவள் காலில் விழாத குறையாக விழுந்தார். அவள் மசியவில்லை. ஒருநாள் அவள் வெளியூர் போனபோது, மேஸ்திரிக்குக் குடிக்கப் பணம் கொடுத்து, இந்தச் சின்ன அறையைக் கட்டி விட்டார். ஆயிரம் ரூபாய்க்கு ஒரு கடப்பா பளிங்குக்கல்லை வாங்கியும் பொருத்திவிட்டார். அது நட்சத்திரக் குவியல் களைக் காட்டும் ஆகாய நிறத்தில் மின்னிக்கொண்டிருந்தது. இரண்டடி உயரத்தில், ஐந்தடி நீளத்தில் மூன்றடி முன் நோக்கிய அந்தப் பளிங்குக்கல்லில் மூன்று தெய்வப்படங் களைக் கொண்ட ஒரு படம். வலப்பக்கம் சுப்பிரமண்யர் ஆலய மூர்த்தியாக ஆதிசேஷ முருகன் பாம்பின்மேல் இருக்கிறார். இடப்பக்கம் உடுப்பி கிருஷ்ணர். நடுப்பக்கம் தர்மஸ்தலா லிங்கம். பக்கவாட்டில் ஒரு பக்கம் அய்யப்பன் மறுபக்கம் திருத்தணி முருகன். இரு சுவர் மடிப்புகொண்ட ஒரு மூலையில் மூகாம்பிகை. அம்மாவின் அருகே பிள்ளை யார். இன்னொரு மூலையில் பஞ்சமுக அனுமான். அதற்கு அருகே இரு கரத்தில் வீணையும், ஒரு கரத்தில் உத்திராட்ச மாலையும், மறுகரத்தில் எத்தனையோ மகான்களும்

கவிஞர்களும், மாமேதைகளும் படைத்த தத்துவக்கடலை ஓர் ஏட்டுச்சரமாய்க் கொண்ட இன்னொரு கரமும் கொண்ட சரஸ்வதி தேவி.

இசக்கியா பிள்ளை ஒவ்வொரு தெய்வப்படத்தின் முன்னாலும், ஒவ்வொரு மந்திரத்தைச் சொல்லிக்கொண்டார்.

ஓம் வக்ர துண்டாய நம:
ஓம் சரவணபவ...
ஓம் நமோ நாராயணாய...
ஓம் நமசிவாய நம:
ஓம் விஸ்வமாதா ஜகத்தாத்ரி...
ஓம் சரஸ்வதி தேவி நம:
சர்வரோக பாப நிவாரணி நம:

'புத்திர் பலம்' என்று சொல்லிக்கொண்டே பஞ்சமுக அனுமார்மேல் பூச்சூடப்போன இசக்கியா பிள்ளை, கைப் பூவை, ஆஞ்சநேயரின் உச்சந்தலையில் சூட்டியபடி, அந்தக் கையை எடுக்காமலே, வெளியே தாய்க்கும் மகளுக்கும் நடக்கும் வாக்குவாதத்தை உற்றுக் கேட்டார்.

"எத்தனை தடவ ஒனக்குச் சொல்றது... அந்தக் கம்ப்யூட்டர் சென்டர் இல்லாட்டால் இன்னொரு சென்டர். கட்டுன பணம், வீணாச்சேன்னு அப்பாவோ நானோ வருத்தப்படுறோமா?"

"ஒங்களுக்கு எப்படிக் கட்டுன பணம் வீணானதிலே வருத்தம் இல்லியோ, அப்படி அந்தப் பிரின்ஸ்பால் பயல் என் கையைப் பிடிச்சு இழுத்ததுலயும் வருத்தமில்லை இல்லியா?"

"துஷ்டனைக் கண்டால் தூர விலகித்தான் ஆகணும். காலம் கலிகாலம்."

"அப்போ இனிமேல் கலியுக வரதான்னு ஆகாயத்தைப் பார்த்துப் பேசாதீங்க!"

"கவலைப்படாதம்மா... நாம் கும்புடுற தெய்வம் அவனைக் கவனிச்சுக்கும்."

"தெய்வமுன்னு இருந்தால் முதல்ல அது ஒங்களைத் தான் கவனிக்கும். எப்படியோ பன்றிக்குட்டிமாதிரி பெத்துப் போட்டுட்டிங்க! பன்றியாவே இருக்கச் சொல்றீங்க, ஆனால், என்னால... என்னால."

இசக்கியா பிள்ளைக்கு மகளின் விசும்பல் சத்தமும், அதற்குப் பதிலாக மனைவியின் விக்கல் சத்தமும் கேட்டன. அதன்பிறகு மௌனம். "நீங்களே கேளுங்க, நான் பாடும் பாட்டைக் கேளுங்க' என்று அத்தனை படங்களையும் அனுசரணைக்காய்ப் பார்த்தார். பிறகு பத்மாசனம் போட்டார். அந்தப் பளிங்குக்கல்லின் மத்தியில் படங்களை மறைக்காமல் உள்ள சின்ன குத்துவிளக்கை ஜோதியாக் கினார். 'ராமலிங்காய' என்று சொல்லிக்கொண்டே இதயத்தில் இருந்து, தொண்டைக் குழியில் தெறித்து, காதில் விழுந்த சுயம்பு வார்த்தைகளைத் தனக்குள்ளேயே கேட்டார்.

"எச்சோதனையும் இயற்றா தெனக்கே...
அச்சோ ஏற்றருள் அருட்பெருஞ் ஜோதி."

இசக்கியா பிள்ளை வள்ளலார் அருளிய அருட்பெருஞ் ஜோதி அகவல் புத்தகத்தை எடுத்தார். திருவடிப் புகழ்ச்சியை ஓதிவிட்டு, அகவலைப் படித்தார். ஐம்பூத இயல்வகை, மண்ணியல், நீரியல், தீயியல், காற்றியல், வெளியியல், அகப்புறம், ஐம்பூதக் கலப்பு, வெளிவகை, அண்டப்பகுதி, கடல்வகை, மலைவளம், வித்தும் விளைவும், ஒற்றுமை, வேற்றுமை, ஆண் பெண் இயல், காத்தருள் வேண்டுதல் போன்ற பாக்களைப் பாடல்களாக்கினார்.

மீண்டும் தாய் மகள் யுத்தம் தொடங்கியதால் அவரால் தொடர முடியவில்லை. காது கொடுத்துக் கேட்டார்.

"ஏதோ நம்ம நல்ல காலம்... தலைக்கு வந்தது தலைப் பாகையோட போனமாதிரி கையைப் பிடிச்சதோட விட்டுட் டானே! நினைத்துக்கூடப் பார்க்க முடியாதது நடந்திருந் தால்... எப்படியோ அப்பாவோட பூஜா பலன், ஒன்னைக் காப்பாத்திட்டு. ஆண்டவன் அவனுக்குக் கூலி கொடுப்பான். இந்தத் தப்புல தப்பிச்சாலும் அடுத்த தப்புல மாட்டிக்கு வான்!"

"ஒரு தப்புச் செய்தால் அந்தத் தப்புக்குன்னு தண்டனை கிடைக்கணும். அப்போதான் அந்தத் தப்பே அப்புறம் நடக்காது. இன்னும் விவரமாய் விளக்கம் கேட் டால் தப்புச் செய்தவன் நல்லது செய்யும்போது—அந்த நல்லதே தப்பாகி, தண்டனை கிடைக்குமுன்னு சொல்வீங்க. அதனால கெட்டது ரெட்டிப்பாகும். நல்லது ஓடிப்போகு முன்னு நானும் பதில் சொல்ல வேண்டியது வரும்!"

"சரி, பல்லை விளக்கு. நேத்து ராத்திரியே சாப் பிடலை."

"எப்படிம்மா சாப்பிட முடியும்? லைப்ரரியில் ஒரு புத்தகத்தைப் புரட்டிக்கிட்டு நின்ன என்னை, அந்தப் புத்தகத்தைப் பார்க்கிற சாக்கில், கழுத்தில் முகம் போட்டு அதன்பிறகு ஓடப்போன என்னை கையைப் பிடிச்சு... அந்தப் பயலை அடக்கவே முடியாதா?"

இசக்கியா பிள்ளையின் காதுகளில் மேற்கொண்டு எந்த வார்த்தையும் விழவில்லை. மாறாக மனைவியின் அழுகைச் சத்தம் கேட்டது. அவர் துள்ளிக் குதித்து எழப்போனார். அதற்குள் அவள் சத்தமடங்கி, தைரியப்பட்டதுபோல் தோன்றியது. மகளும் மறுவார்த்தை பேசாததில் இருந்து, விவகாரம் தீர்ந்துவிட்டதாய் நினைத்து அருட்பா அகவலைப் படிக்கத் தொடங்கினார். ஓதுவார் போலவே தாள லயத் தோடு ஓசை உயிரோடு ஓதிக்கொண்டிருந்தார்.

"மதம்புரை மோகமும் மற்றவும் ஆங்காங்கு
அதம்பெற அடக்கு அருட்பெரும் ஜோதி."

மீண்டும் தாய்—மகள் சொற்போர். சொற்போர் என்பதைவிட ஒருவிதமான கெடுபிடிப்போர்.

"போலீஸ் ஸ்டேஷன்ல கம்ப்ளெயிண்ட் கொடுக்கிறதுல என்னம்மா தப்பு?"

"தப்பு கம்ப்ளெய்ண்ட்ல இல்ல! போலீஸ்ல இருக்குது! கோர்ட்ல இருக்குது! இந்தச் சமுதாய அமைப்புல இருக்குது!"

"தட்டிக் கழிக்கணுமுன்னா எதை வேணுமுன்னாலும் தட்டிக் கழிக்கலாம்."

"ஒனக்கு பட்டறிவு போதாது. அதனாலதான் இப்படிப் பேசுறே! போலீஸ்ல புகார் கொடுத்தால் மொதல்ல அவங்க கேட்கிற கேள்விகளே கற்பழிக்கப்பட்டதைவிடப் பயங்கரமா இருக்கும். உடலுக்குப் பதிலா உள்ளத்தையே கற்பழிச்சுடுவாங்க. அப்படியே அவங்க நடவடிக்கை எடுத்தால்... எடுத்தால்... என்ன, எடுக்கலாம். ஏன்னா, அவங்களுக்கும் பொண்ணுங்க இருக்குமே. அந்தச் சண்டாளப்பயலைக் கைதுசெய்து லாக்கப்புல வைக்கிறதாய் அனுமானம் செய்துக்கோ! இப்படிப்பட்ட வழக்குக்கு, ஜாமீன் கொடுக்கத்தான் கோர்ட் இருக்கே! கோர்ட்டுல அந்தப் பாவிப்பயல் மட்டுமா கூண்டுல நிற்பான். நீயும் நிற்கணுமே... அவன் வக்கீல், 'நீதான் அவனை ஒன் வலையில சிக்க வைக்கப் பார்த்தேன்னு கேட்டால்... இல்லன்னா நீண்ட நாள் பழக்கத்தில அவன் அப்படிச் செய்தான். அன்றைக்குன்னு கட்டுன மனைவி பார்த்துட்டாள். அதனால் நீ பயந்துட்டேன்னு அடிச்சுப் பேசுவான். அவன் பொண்டாட்டியும் புருஷனுக்கு சாட்சி சொல்லுவாள். இந்த ஏழை தமிழாசிரியை என்ன செய்ய முடியுமம்மா?"

"ஒங்களால் முடியும்! மதுரையை எரித்த கண்ணகியைப் பற்றிப் பேசுறதை நிறுத்த முடியும். 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று சூளுரைத்தானாமே நக்கீரன்—அதனைப் பற்றிப் பாடம் நடத்தாமல் இருக்க முடியும்!"

மனைவியின் பதிலுக்காக ஆவலுடன் காத்திருந்த இசக்கியா பிள்ளை மீண்டும் நெடிய மௌனம் நிலவியதைக் கண்டார். தெய்வ வழிபாடு, இப்படிப்பட்ட லோகாயத விவகாரங்களால் தடைப்பட்டதற்கு வருந்தி, தம்பணம் போட்டுக்கொண்டார். அபிராமி அந்தாதியை எடுத்தார். கம்பெனி சகாக்களுடன் ''தெய்வப் பயணம்'' மேற்கொண்ட போது வாங்கிய புத்தகம். திருக்கடவூர் அபிராமிதேவியை அபிராமி பட்டர் பாடியதைப் பாடும்போதெல்லாம் இவரது குரல் தழுதழுக்கும். எலும்புருகிப் போகும். உடல் முழுதும் ஜோதியாவது போல் தோன்றும். அந்த அபிராமி பட்டருக்கு வராத துன்பமா? அவர் பட்ட பாட்டில்... என் பாடு சிறு பாடு...

''பரிபுரச் சீரடி பாசாங்குசை பஞ்சபாணி இன்சொல்
திரிபுரச் சுந்தரி; சிந்துர மேனியள்; தீமை நெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக்குனி பொருப்பு சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே''

தடுத்தது இசக்கியா பிள்ளையின் பக்திப் பரவசத்தை. மீண்டும் தாய்—மகள் யுத்தம்.

''போராடும் முன்னாலேயே தோல்வியை ஒப்புக்கொண்டால் என்னம்மா அர்த்தம்? இன்ஸ்பெக்டர்கிட்டே சொல்லுவோம்! அவர் கேட்காட்டா அஸிஸ்டெண்ட் கமிஷனர்! அவரும் சரிப்படாட்டா டெப்டி கமிஷனர்! அப்புறம் கமிஷனர்! டைரக்டர் ஜெனரல்! இவங்களாலயும் முடியாவிட்டால் முதலமைச்சர். இல்லாத பொண்ணுங்களை என்ன வேணுமுன்னாலும் செய்யலாமுன்னு நினைக்கிறாங்க பாருங்க! இந்தமாதிரிப் பயல்களை விடப்படாதும்மா!''

''அம்மாவுக்கு ஒன்னைவிட யாரும்மா முக்கியம்? அப்படியே போலீஸ் மூலமாய் கோர்ட்டுக்குப் போய், நீ வெற்றி பெற்றாலும் அந்த வெற்றி, தோல்வியைவிட மோசம்மா... ஆமாம்மா. ஒரு பெண்ணோட பேரு நல்லவிதமாக்கூட அடி

படக்கூடாதுன்னு நினைக்கிற சமுதாயம் இது. ஒன் பெயர் பேப்பருல வந்தால், நீ ஒரு போராட்டக்காரின்னு படிக்கிறவன் நினைப்பான். ஆனால், ஒன்னைக் கட்டிக்க வரவன் அப்படி நினைக்கமாட்டான். நீதான் ஏதோ செய்யக்கூடாத தப்பைச் செய்ததாய் நினைத்து ஓடிப்போயிடுவான். அப்புறம் நீ அந்த மணிமேகலை மாதிரி காலமெல்லாம் கன்னியாய்... இப்பவாவது புரியுதாம்மா!''

இசக்கியா பிள்ளை அபிராமி அந்தாதியை அங்குமிங்குமாய் ஆட்டியபடியே ஒட்டுக் கேட்டார். மகளுக்கு அம்மா சொல்வது புரிந்துவிட்டதுபோல் தோன்றியது. அவளிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. அபிராமிவல்லி 'அவள்' மூலம் அவளுக்கு உபதேசித்துவிட்டாள். ''அம்மா தாயே! தயவே... என் மகளுக்கு நல்ல புத்தியைக் கொடு.''

இசக்கியா பிள்ளை அந்த அந்தாதியின் ஒரு பகுதியைப் படித்துவிட்டு, நாளை விட்ட இடத்திலிருந்து தொடர்வதற்காக ஒரு மல்லிகைப்பூவை, படித்த—படிக்காத பக்கங்களுக்கு இடையில் வைத்துவிட்டு தேவாரத்திரட்டை எடுத்து 'வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டனை' ஞான சம்பந்தரின் கோளறு பதிகத்தில் ஓசைப் பிழையின்றி அட்சர சுத்தமாய்ப் பாடினார். பாடிக்கொண்டே இருந்தார். பிறகு அப்பர் அருளிய பகுதிக்கு வந்தார்.

''நாமார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம்.''

வெளியே இப்போது அஞ்ச வைப்பது போன்ற வார்த்தைப் பிளிறுகள்... இந்திரா, ஏதோ ஒரு நாற்காலியை உடுக்காக்கி, காலடி தரை மோதிச் சத்தம் எழுப்ப ஊழிக் கூத்தாய்—காளிக் கூத்தாய் சாடிக்கொண்டிருந்தாள்.

''பெண்மைக்குக் களங்கம் வரக்கூடாது என்கிறதுக்காகப் போராடுற என்மேல் களங்கம் நினைக்கிற எந்தப் பயலும் எனக்கு வேண்டாம். கல்யாணம் என்கிறது ஒருத்த

னோட சம்மதத்தில் மட்டுமில்ல. ஒருத்தியோட சம்மதத் துலயும் இருக்குது என்கிறதை மறந்துடாதீங்க! அத ஏதோ... ஒருத்திக்கு ஒருத்தன் கொடுக்கிற சலுகை இல்லே. நல்லவ னோட கல்யாணம் நடக்கணும் என்கிறதுக்காக அயோக்கிய னுக்கு அஞ்சி, ஒடுங்கி இருக்கப்படாது. அந்தப் பிரின்ஸிபால் பயலுக்குக் கொடுக்கிற பாடத்தைப் பார்த்துட்டு, அவனை மாதிரியான பயல்களெல்லாம் பெட்டிப் பாம்பாய் ஆகணும்!''

''நான் எதுக்குச் சொல்லுதேன்னால்...''

''சத்தியத்தைத் தேடுறதுதான் மெய்யான பக்தின்னு டியூஷனுக்கு வார பிள்ளைங்ககிட்டே காசு வாங்கிட்டுக் கத்த மட்டுந்தான் ஒங்களுக்குத் தெரியுமா? ஒருத்தன் ஒரு பெண்ணோட வரம்பை மீறும்போது, அந்தப் பெண் தன் னோட வரம்பை அடக்கிக்கிட்டு இருக்கறதுதான் தமிழ்க் கற்பா! குப்பையில போடுங்க கொண்டு.''

''நீ இப்போதான் இளமையின்...''

''நாலு நாளைக்குள்ளே நான் கிழவியாய் ஆயிட் டேம்மா. சரி. எப்படியோ தொலையுங்க! காலமெல்லாம் நான் கூனிக்குறுகியே கிடக்குறேன். அவன் தொட்ட இந்தக் கைகூட ஏதோ விபத்துல விழுந்துட்டாலும் அவன் தந்த விபத்த என்னால் மறக்க முடியுமா? வலியவனைக் கண்டு அவனோட வம்பையும் பொறுத்துக்கிட்டு மெலியவர் இருக் கிறதுதான் நியாயமுன்னு அநியாயமாய்ப் பேசுறீங்க... ஓர் அநியாயத்தை வெளில பேசுறதுகூடத் தப்புன்னால் அது அந்த அநியாயத்துக்கு உடன்போவதாய் ஆகாதா? அதோ அப்பா 'நாமார்க்கும் குடியல்லோ'முன்னு ரொம்பத்தான் கத்துறார். அவருக்கு அதோட அர்த்தம் தெரியாது. தமிழா சிரியையான ஒங்களுக்காவது 'தெரியுமா! நாமார்க்கும் குடியல்லோமுன்னு... ஓதி... அப்பர் பாடுவதைக் கொச்சப் படுத்தாண்டாமுன்னு அப்பாகிட்டே போய்ச் சொல்லு.

அர்த்தம் தெரியாமல் எந்தப் புனித வரியையும் வாசிக்கிறது அந்தப் புனிதத்தையே அவமதிக்கிறது மாதிரி. கையைத் தானே பிடித்தான்னு, அதுக்குப் பின்னால இருக்கிற ஆணவத்தை, அகந்தையைத் தெரியாமல் இருக்கீங்களே, அதேமாதிரிதான்!''

இசக்கியா பிள்ளையின் கண்ணீர் நாமார்க்கும் குடியல் லோம் வாசகங்களை நனைத்தது. அந்தப் பாடலை, அப்பர் பிரான் பாடிய சூழலை எண்ணிப் பார்த்தார். அப்பரே அங்கே வந்து... அவரையே ஒரு எதிர் பக்தியாளனாய், தன்னைக் கடலில் கல் கட்டித் தூக்கிப்போட்ட அந்த மன்னனின் மறுவுருவமாய்ப் பார்ப்பதுபோல் தோன்றியது. இந்தப் பாடலின் மெய்யான தாத்பரியம், அவர் இதுவரை யந்திரகதியில் ஓதிவரும் மந்திரங்களுக்குப் 'புதிய அர்த்தத் தைக் கொடுத்தது. புத்திர்பலம், யசோர் தைரியம், நிர்ப் பயத்துவம்... ஆம், பயம்தான்... பயப்பட வேண்டும். கொத்துதிரி சூலிதிரி குலச ஓங்காரி... ஆங்காரி... ஓங்காரி போன்ற சொற்கள், புதுப்பொருளைக் கொடுத்த சூலாயுதம் என்பது பாலாபிஷேகம் செய்வதற்காக மட்டுமல்ல, நாமார்க்கும் என்பது ஓதுவதற்கும், உச்சரிப்பதற்கும் மட்டும் அப்பர் பெருமான் ஆக்கவில்லை.

இசக்கியா பிள்ளை மகளையே ஒரு துர்க்கையாக அனு மானித்தார். தன்னுள்ளே ஒரு கடல் பொங்குவதைக் கண்டார். அதிலே திரிசூலமும், உடுக்கும் எழுவதைப் பார்த்தார். நாமார்க்கும் குடியல்லோம்... ஆமாம்... அஞ்சி ஒடுங்கி வாயில்லாப்பூச்சியாய் இருப்பது அப்பர் பிரானை அவமதிப்பதற்கு ஒப்பாகும். சட்டம் என்ற கல்லைக் கட்டி, நீதிமன்றம் என்ற கடலில் போட்டாலும், நாமார்க்கும் குடி யல்லோம்.

இசக்கியா பிள்ளை கற்பூரத்தை ஏற்றினார். ஆறுமுக மாய்ச் சுடர்விட்ட ஜோதியை அங்குமிங்குமாய் ஆட்டினார்.

பிறகு, அதை அப்படியே ஒளிரவிட்டு வெளியே வந்தார். ஓயர் கொடியில் தொங்கிய தேய்க்காத சட்டையைப் போட்டுக்கொண்டே மகளிடம் வந்து, படுத்துக் கிடந்தவளைத் தூக்கி நிறுத்தினார்.

"எழுந்திரும்மா போகலாம்! ஆரம்பம் போலீஸ் ஸ்டேஷன்! அப்புறம் எதுவரைக்கும் வேணுமுன்னாலும் போகட்டும். ஒன்னை மகளாய் நினைச்சுக் கூப்பிடலே. அம்பாளாய் நினைச்சுக் கூப்பிடுறேன். எழுந்திரு நாமார்க்கும் குடியல்லோம் எழுந்திரும்மா... ஆமாம் இப்படித்தான் எழுந்து நிற்கணும்."

❋

# சுமைதாங்கிகள்

அந்தக் கூட்டத்தைப் பார்த்த உடனேயே, சுலோச்சனா தன்னையறியாமலேயே பெருமிதப்பட்டாள். அவளே அந்தக் கட்டடமாக உயிர்ப்புடன் உருமாறியது போன்ற ஒரு உணர்வு. அந்தக் கட்டடம் தன்னையே பார்த்து, ''என்னைக் கட்டிமுடித்தவள் கீதா; அதற்குக் காரணமானவள் நீதான்'' என்று சொல்வதுபோல் அவளுள்ளே ஒரு குரல் கேட்டது. 'இது என்ன... எனக்கு பயித்தியமா...' என்று உள்ளத்தில் ஒலித்த வார்த்தைகள் உதட்டோரம் சிரிப்பாக உருவெடுக்க, அவள் நின்ற இடத்தி லேயே நிலை இழக்காமல் நின்றாள். இவ்வளவுக்கும் அது சின்னக் கட்டடம்தான். ஆனாலும், அவள் மைத்துனி மாதிரியே அழகான கட்டடம். இந்த மழைக்காலம் நின்றதும் மாடி கட்டி, அதில் பிரசவ சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்தப் போவதாக கீதா அவரிடம் சொன்னது நினைவிற்கு வந்தது.

சுலோச்சனா, அந்தக் கட்டடத்தில் காக்கா பொன்நிறத் திலான நான்குப் படிக்கட்டுகளை இரண்டு இரண்டாகத் தாவி, கடப்பா கற்களால் மஞ்சள் பிரகாசத்தில் மின்னிய வராண்டாவில் நடந்து கீதாவின் அறைக்கதவைத் திறக்கப் போனாள். உள்ளே சத்தம் கேட்டது. போதாக்குறைக்கு 'டாக்டர் ஈஸ் இன். பிளீஸ் பீ சீட்டட்' என்ற வாசக பலகை கண்ணில் முட்டியது. அதோடு, அவள் வரிசையை கலைப்ப

தாக நினைத்து அறை முழுதும் மொய்த்த நோயாளி கும்பல் அவளைப் பார்த்து முனங்கின. அதைப் புரிந்துகொண்ட சுலோச்சனா, வரிசையின் வால்பக்கம் வந்து அமர்ந்தாள்.

சுலோச்சனா அங்கிருந்த நோயாளிகள் கூட்டத்தை நோட்டமாய் பார்த்தாள். இந்த வயதிலும் கண் துல்லியமாகத் தெரிவதில் அவளுக்கு சந்தோஷம். அதோ அந்த சிறுமி மாதிரிதான் என் கீதாவும் ஒடுக்கு துணிப்போட்டு இருமுவாள். இதோ இந்த பயல்மாதிரிதான் சுரேஷும் 'மெட்ராஸ்' ஐ தாங்கமுடியாமல் ஊளையிட்டான்.

சுலோச்சனா காத்திருந்தாள்.

உள்ளே கீதா பேசப்பேச இவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. "வயதானவர்களுக்கு உடல் வலி வருவது முதுமையின் இயல்பு என்று டாக்டர்கள் சொல்வது மூடத்தனம். மனித உடம்பில் எந்த வயதிலும் வலியில்லாமல் ஜீவனுடன் இருக்க நவீன மருந்துகள் இருப்பதைத் தெரிந்து கொள்ளாததால் ஏற்பட்ட அறியாமை. இதைத்தான் நான் கான்ப்ரன்ஸில் பேசப்போறேன்" என்று கீதா ஆங்கிலத்தில் வெளுத்துக்கட்டியது, சுலோச்சனாவிற்குப் பெருமையாக இருந்தது. உள்ளே இருப்பவர்கள் வெளியே வந்ததும், உடனடியாக கீதாவைப் பார்த்தாக வேண்டும்; தான் சொல்லப்போகிற நல்ல செய்தியைக் கேட்டு, கீதா முகத்தில் படரும் மகிழ்ச்சியை ரசிக்க வேண்டும்... சும்மா சொல்லக் கூடாது. கீதா நல்ல ரசனைக்காரி. நல்ல செய்தியைக் கேட்டதும் அல்லிப்பூ விரிவதுபோல அவள் முகம் விரியும்.

சுலோச்சனாவிற்கு இருப்புக் கொள்ளவில்லை. உள்ளே இருந்த டாக்டர்கள் அறுத்துக்கொண்டிருப்பதில் அவளுக்குக் கோபம். அந்த மகிழ்ச்சியான செய்தியை பிரசவ வலிபோல் தாங்கிக்கொண்டாள். நல்லவேளையாக உள்ளேயிருந்து உதவிப் பையன் வந்தான். எல்லா கிளினிக்குகளிலும் அலட்டலாக இருப்பான்களே, அப்படிப்பட்ட பையன்தான்.

அவளைப் பார்த்துவிட்டு அவசரமாக உள்ளே போனான். அதே வேகத்தில் திரும்பிவந்து அவளிடம், ''சொல்லிட்டேன்'' என்று சொன்னான். சுலோச்சனா அவள் கூப்பிடப் போகிற ஒரு நிமிட கால அவகாசத்தைப் பயன்படுத்திக் கொள்வதுபோல், அவசர அவசரமாகக் கண்பக்கம் விழுந்த முடியை தலைப்பக்கம் கொண்டுபோனாள். கண்களைத் துடைத்துக்கொண்டே வாசல்பக்கம் வந்து நின்றாள். அவள் எதிர்பார்த்ததுபோல் கீதா வெளியே வந்து, ''என்ன அண்ணி, இங்கேயே நிக்கறீங்க?'' என்று கேட்க வரவில்லை.

சுலோச்சனா காத்து நின்றாள்... காத்து நின்றாள்... கடிகாரம் அரைவட்டம் அடிக்கும் அளவிற்கு காத்து நின்றாள். கீதாவோ கூப்பிடவில்லை. உள்ளே இருந்த சத்தமோ ஓயவில்லை. ராகுகாலம் வருவதற்குள், வீட்டுக்குப் போயாக வேண்டும். இப்படி நின்றால், ராகுகாலம் போய்ச் சேர்ந்து, எமகண்டமும் வந்துவிடும். ஆபத்துக்குப் பாவமில்லை. அவசரத்திற்கு இங்கிதங்கள் தேவையில்லை.

சுலோச்சனா, கதவைத் திறந்துகொண்டு நிதானித்துப் பார்த்தபடி, உள்ளே போனாள். சுழல் நாற்காலியில் உட்கார்ந்திருந்த கீதா ஒரு வார்த்தையைப் பாதியில் முடித்தபடி அவளைப் பார்த்தபோது எதிர் இருக்கைகளில் இருந்த மூவர் அவளை நோயாளியைப் பார்ப்பதுபோல் நோகடித்துப் பார்த்தனர். கீதா கேட்டாள்:

''கொஞ்சம் வெளியில் இருங்களேன் கூப்பிடுறேன்.''— இன்டர்நேசனல் கான்ப்ரன்ஸ்பற்றிப் பேசும்போது டொமஸ்டிக் பெண் வந்துவிட்டதில் லேசான கோபம். சுலோச்சனா தயங்கியபடியே சொன்னாள்:

''நேரம் இல்லம்மா. அதோட நல்ல சமாசாரத்த நாலுபேர் முன்னால சொல்லறதுல தப்பு இல்ல.''

''விடமாட்டீங்களே, சரி சொல்லுங்க!''

''உன் மருமகள் மல்லிகாவிற்கு நல்ல வரன் வந்திருக்கும்மா. மாப்பிள்ளை பெங்களூரில சொந்தமா கம்பெனி நடத்துறார். அவங்க அப்பா எனக்கு தூரத்து சொந்தம். அவங்களே வந்து நகை நட்டு வரதட்சணை எதுவும் தேவையில்லன்னு கேக்கறாங்க!''

''அப்படியா... அப்போ மாப்பிள்ளைக்கு ஏதாவது கோளாறு இருக்கப்போறது?''

''நல்லா விசாரிச்சிட்டோம். எதுவும் கிடையாது. ஆனாலும்... நீ வந்து அப்ரூவல் கொடுத்த பிறகுதான் ஆக்ஷன். இன்னிக்கி 12 மணிக்கு வறாங்க.''

''எனக்கு எங்கே நேரம் இருக்குது? அம்மாவோட திதிக்கே வரமுடியல! ரொம்ப பிஸி... நீங்க பார்த்தா சரிதான்.''

சுலோச்சனா கீதாவை உற்றுப்பார்த்தாள். பச்சை சேலையில், சிவப்பு சிவப்பாய் மின்னிய அவளைப் பெருமையோடும், சிறுமையோடும் பார்த்தாள். பிறகு ''எதுக்கும் டிரை பண்ணு!'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தாள். உள்ளே கீதா மீண்டும் பேசினாள்: ''இவங்க எங்க அண்ணி. நான் எம்.பி.பீ.எஸ். படிக்கக்கூடாதுன்னு அண்ணா குதிச்ச போது இவங்கதான் என்னை விடாப்பிடியா படிக்க வைச்சாங்க'' என்றல்ல; ''இன்டர்நேசனல் கான்பிரன்ஸை பேஸ் பண்றதுக்கு நர்வஸா இருக்கு டாக்டர். என் பேப்பர் டிஸ்கஷனுக்கு வரும்போது யாரெல்லாம் என்ன சொல்லப்போறாங்களோ!''

பஸ் நிலையத்தை நோக்கி நடந்த சலோச்சனா கண் முன்னால் ஒரு பல்லவன் பஸ் ராகுகாலம் மாதிரி வந்து நின்றது. 'அய்யய்யோ... இந்நேரம் பிள்ளை வீட்டார் வந்திருப்பாங்களே' —சுலோச்சனா எதிரே வந்த ஆட்டோவில் ஏறியபடியே, ''திருவல்லிக்கேணி'' என்றாள். அந்த

ஆட்டோ துடித்ததுபோல், அவள் மனம் துடித்தது. அது உறுமிக்கொண்டே ஓடியதுபோல் அவள் மனம் பொருமியது.

'கொஞ்சநாளா கீதா ஒருமாதிரிதான் இருக்காள். ஆனால், உட்காருன்னு சொல்லாத அளவிற்கு இப்போதான் மாறிப்போனாள். அம்மாவின் திதியாம், அம்மாவின் திதி! இருபத்தியெட்டு வருடங்களுக்கு முன்பு நான் அவரோட கையைப் பிடித்தபோதே ஒரு காலுல பக்கவாதம் பட்டு முடங்கிக் கிடந்தவர் மாமியார். அம்மாவைக் கவனித்தால் படிப்புக் கெட்டுவிடும் என்று ஒப்புக்கு சும்மா பார்த்தவள் கீதா, தப்பு... தப்பு... நானும் அவள் படிப்பு கெடக்கூடாது என்பதில் குறியாய் இருந்தேன். இவளோட அம்மா—என்னோட மாமியார் போன வருஷம் உயிருக்குப் போரா டினப்போ இவளோட நர்சிங்ஹோமில் சேர்க்காமல், பிள்ளைத்தாச்சியான இவளுக்கு சிரமம் கொடுக்கப்படா துன்னு ஆஸ்பத்திரில சேர்த்து ராவும், பகலுமா நடந்தவள் நான். அவளோட முக்கல் முனங்கல்களையும் கோபதாபங் களையும் சுமந்தவள். மாமனாரோட எஜமானத்தனத்தை தாக்குபிடிச்சவள். இவளையும் இவள் தம்பி சுரேஷையும் காலையில் எழுப்பி விடுவதிலிருந்து இரவில் படுக்க வைப்பது வரைக்கும் எல்லாமே செய்தவள். அவரோட வாதாடி இரண்டுபேரையும் படிக்க வைத்தவள். அவர் கொடுக்கிற 600 ரூபாய்ல வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி படாதபாடு பட்டவள். அதுவும் வயிற்றை எப்படிக் கட்டினேன்? சொந்தக் குழந்தை, அந்த குழந்தைகளுக்கு குறுக்கே நிற்கக் கூடாது என்பதற்காக வயித்திலே கரு வளராமல் கட்டிப் போட்டவள். ஏழாண்டு திட்டத்திற்குப்பிறகுதான் மல்லிகா உற்பத்தியானாள்! இதனால்தான் பேத்திக்குக் கல்யாணம் செய்து பார்க்கவேண்டிய இந்த வயதில், மகளுக்கு மாப் பிள்ளை பார்க்கிறேன்!'

ஆட்டோ ராயப்பேட்டை வந்து பாரதி சாலைக்குள் நுழைந்து டிரைவர், "வீடு எந்தப் பக்கம்மா?' என்று கேட்டபோதுதான் சுலோச்சனா சுயமானாள். தன்னையே

தண்டித்துக் கொள்வதுபோல் உதடுகளை கடுமையாகக் கடித்தாள். எதைச் சொல்லிக் காட்டினாலும் ஒருவருக்குச் செய்யும் உதவியை சொல்லிக் காட்டக்கூடாது, மனசுக்குள்ளகூடப் பேசிக்கக்கூடாது.

அவள் காட்டிய வீட்டின் முன்னால் ஆட்டோ நின்றபோது அவள் அவசர அவசரமாக இறங்கினாள். எதிரே வீட்டுக்கும் வாசலுக்குமாய் துடித்துக் கொண்டிருந்த 'அவர்' ஓடிவந்தார். அந்த வயதிலும் அட்டகாசமான கம்பீரம்.

''ஏன் இவ்வளவு லேட்டு? பிள்ளை வீட்டிலேர்ந்து வந்துட்டாங்க.''

''ஐய்யய்யோ... சரி சரி... ஆட்டோவுக்குப் பணம் கொடுங்க, நான் உள்ளே போய் ஆகவேண்டியதைக் கவனிக்கிறேன்!''

சுலோச்சனா அவசர அவசரமாக உள்ளே வந்தாள். நான்கைந்து போர்ஷன்களைத் தாண்டி, இறுதியாக இருந்த இட வாசலுக்குள் நுழைந்தாள். ஆச்சரியத்தோடும், ஆனந்தத்தோடும் வட்டமிட்டுப் பார்த்தாள். 'பிள்ளை நல்லாத்தான் இருக்கான். யோகாசன பயிற்சி செய்தது போன்ற உடம்பு. வெளுத்துப் போகாத சிவப்பு. அதோ அவன் அப்பாவும், அம்மாவும் இவனை உரிச்சுவச்சது மாதிரியே இருக்காங்க. அடடே... சுரேஷ்கூட வந்திருக்கானே!'

சுலோச்சனா அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக வணக்கம் போட்டாள். பிறகு, ''எப்போ சுரேஷ் வந்தே!'' என்று கேட்டபடியே பிள்ளையின் அப்பாவிடம், ''இவன் என் பிரதர்-இன்-லா. பேராசிரியர் சுரேஷ். மைசூர் பல்கலைக் கழகத்துல காமர்ஸ் டிப்பார்ட்மெண்டில் ஹெட். மனோ வந்தாளா, சுரேஷ்!''

''லாட்ஜில் இருக்காள்.''

''என்னப்பா இது!''

ஒரு செமினாருக்காக வந்தோம். அவங்களே அசோகா ஓட்டல்ல ரூம் போட்டாங்க. அண்ணா போன் செய்ததும் அவளும் வாறதாத்தான் இருந்தது. ஆனால் திடீர் தலை வலி. நான்கூட சீக்கிரமாய் போகணும். அவள் தனியா இருப்பாள்.''

சுலோச்சனா சித்தப்பாவின் பக்கம் அடக்கமாக நின்று கொண்டிருந்த தனது பிளஸ்-டு மகன் சங்கரை கண்களால் சுட்டிக்காட்டியபடியே கேட்டாள்:

''இவனுக்கு உங்க யுனிவர்சிட்டில இன்ஜினியரிங் சீட் தேடற முயற்சி எப்படியிருக்கு?''

''எனக்கென்னமோ அண்ணி சங்கரை டைப்பிங்ல சேர்த்துட்டா நல்லதுன்னு தோணுது. அப்புறம் வேலையில் சேர்ந்துகிட்டே ஏ.எம்.ஐ.ஈ. படிக்கலாம்!''

''உன் அண்ணா உனக்குச் சொன்னதை நீ இவனுக்குச் சொல்றீயா?''

''என்ஜினீயரிங் படிப்பு உங்க சக்திக்கு மீறினதாச் சேன்னு சொல்ல வந்தேன்!''

''கவலப்படாதப்பா... உன்னையே இந்த அளவுக்கு ஆளாக்கின எங்களுக்கு, எங்க பிள்ளையையும் அதே அளவுக்கு ஆளாக்கத் தெரியும். உன்கிட்ட உதவி தேடி வர மாட்டோம்!''

''சரி நான் வர்ரேன்... அவளுக்கு எப்படியிருக்குதோ!''

''பிளீஸ் டு அட்டென்ட் ஆன் ஹர்!''

சுரேஷ் தர்மசங்கடமாக எழுந்து கோபத்தோடு வெளி யேறினான். உடனே பிள்ளையின் அம்மா அந்தச் சூழலை மாற்ற நினைத்தவள்போல் கேட்டாள்:

''உங்களுக்கு இங்கிலீஷ் நல்லா வருதே...''

சுலோச்சனாவின் பிளஸ்-டூ மகன் சங்கர்— மைசூரில் சித்தப்பா வீட்டில் தங்கி பொறியியல் படிக்கலாம் என்று கனவு கண்ட அந்தச் சின்னஞ்சிறுசு, இப்போது யதார்த்த சூட்டில் பெரிய மனிதன்போல் விளக்கம் அளித்தான்:

''எங்கம்மா அந்தக் காலத்திலேயே கிராஜுவேட். ஸ்டேட்ஸ்லேயே மூணாவதா வந்தாங்க. கை நிறைய சம்பளம் வாங்கி வேலை பார்த்தவங்க. தாத்தா, பாட்டிக்காகவும், அதோ போகிற சித்தப்பாவுக்காகவும், தியாகராய நகர் டாக்டர் அத்தைக்காகவும் நோயாளியாய் ஆனவங்க!''

சுலோச்சனாவிற்கு மகனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழவேண்டும்போல் இருந்தது. மகனே... மகனே... உன்னை ஆளாக்கிக் காட்டறேண்டா' என்று அரற்ற வேண்டும்போல் இருந்தது. அதற்குள் பிள்ளையின் அப்பா சமயோசிதமாகப் பேசினார்.

''அடடே... நீயே உங்க அம்மாவைப் பெத்தது மாதிரி பேசறியேப்பா...''

''தயவுசெய்து என்னை மன்னிச்சிடுங்க. உங்கள விட்டுட்டு, அவன்கிட்ட பேசி குடும்ப விவகாரத்த கிளப்பி விட்டது தப்புதான் ''

''நீ என்னம்மா... உன்னைப்பற்றி இன்னிக்குத்தான் தெரியும் என்கிற மாதிரி பேசறியே! எனக்கு எல்லாம் புரியுது. உங்க குடும்பத்துல சம்பந்தம் வைக்க எனக்குக் கொடுத்து வைக்கணும், எங்க குடும்பம் பெரிய குடும்பம். உங்க பொண்ணு சொத்துக்களையும், எங்களையும் கவனிச்சுக்கிட்டா போதும். பொண்ண கூட்டிட்டு வாம்மா!''

சுலோச்சனா வருங்கால சம்பந்தியை கண்களால் கும்பிட்டபடியே உள்ளே போனாள். போகும்போதே மனம் பின்னுக்குச் சென்றது. இதேமாதிரிதான் 28 ஆண்டுகளுக்கு முன்னால் 'அவரோட' அப்பா சொன்னார். மனைவியோட

பக்கவாத நோயைப் பற்றிச் சொல்லி, மகனுடைய அரசாங்க வேலையைச் சுட்டிக்காட்டி விவாகத்திற்குப் பிறகு, வேலையில் இருக்கமுடியாது என்று சொல்லிவிட்டார். இவளுக்கும் சம்மதம்தான். ராணி மாதிரி வந்து கடைசியில் தேனீ மாதிரி... சீ... சீ... உழைத்ததை சொல்லிக் காட்டக்கூடாது. மனசுக்குள்ளகூட...

சுலோச்சனா உள் அறைக்குள் போனாள்.

அம்மா அலங்காரம் செய்வதற்குப் பதிலாகத் தனக்குத் தானே சிங்காரித்துக் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டதற்காக மல்லிகா கத்தினாள்:

"நாத்தனாரோட கொஞ்சிக் குலாவ இன்னிக்குத்தான் நேரம் கிடைச்சுதா?"

"என்கிட்ட எதையும் கேக்காதம்மா. 'அம்மாவோட திதிக்குகூட வரமுடியல. இதுக்கு எப்படி வரமுடியுமு'ன்னு மூஞ்சில அடிச்சாப்பல சொல்லிட்டாம்மா!"

தாய் மகளாகி, மகள் தாயாகி நின்றபோது—

சுலோச்சனாவின் 'அவர்' வந்தார். பிள்ளை வீட்டாருக்குக் கேட்காத குரலில் கஷ்டப்பட்டுக் கத்தினார்:

"இன்னிக்கு என்னடி வந்துடுத்து உனக்கு? என் தம்பி கிட்டதட்ட அழுதுகிட்டே போறான். அவன்கிட்ட என்ன பேசின? நம்ம பேமலி ஒரு பேராசிரியரோட பேமிலின்னு பிள்ளை வீட்டுல நினைக்கிறதுக்காக, நானே அவன் இருப்பிடத்த கண்டுபிடிச்சி கூட்டிவந்தேன்... துரத்திட்டேயே..."

"அதை அப்புறம் பேசலாம். முதல்ல இவளைக் கூட்டிக்கொண்டு போவோம்!"

"ஆட்டோ ரிக்ஷால வேற வந்து தொலைச்சே. பஸ்ஸுல வந்தா என்ன கேடு? ஒரு ரூபாய் செலவ 15 ரூபாயா இழுத்து வைச்சிட்டுயே! நீ வெளிய போய்

சம்பாதிச்சா உனக்கு பணத்தோட அருமை தெரியும். வேல வெட்டி இல்லாமல் வீட்டுக்குள்ளேயே இருக்கிறவளுக்கு என்ன தெரியும்? சரி, சரி, அவளைக் கூட்டிக்கிட்டு வா!''

''நில்லுங்க அப்பா...''

வெளியே போய்க்கொண்டு இருந்தவர் திடீரென்று நின்று, மகள் மல்லிகாவை ஏறிட்டுப் பார்த்தார். அவள் காபி தம்ளர்களையும், பிஸ்கட்டுகளையும் சுமந்த டிரேயைக் கீழே வைத்துவிட்டுத் தந்தையை நோக்கினாள். தந்தையிடம் சொன்னாள்:

''எனக்கு இந்த கல்யாணத்துல இஷ்டம் இல்ல! நீங்களா போய் சொல்றீங்களா... நானே சொல்லட்டுமா...?''

''என்னம்மா இது? உனக்குமா கோளாறு...''

''கோளாறு இல்லப்பா! அது தெளிஞ்சிருக்கு... உங்களையும், உங்க பெற்றோரையும் தஞ்சமுன்னு வந்து, கடைசில உங்க குடும்பத்துக்கே தஞ்சம் கொடுத்த அம்மாவ சம்பாதிக்காதவள்ன்னு சொல்லி ஒரு டாக்டரையும், பேராசிரியரையும் உருவாக்கின அவளோட உழைப்பை உதாசீனப் படுத்திட்டீங்க. கிராஜுவேட் அம்மாவுக்கே இந்த நிலைமைன்னா, அண்டர்-கிராஜுவேட்டான எனக்கு எந்த நிலையோ? படித்து முடித்து வேலைக்குப் போகாமல் இந்தப் பையனைக் கட்டி வீட்டுக்குள் முடங்கி உங்ககிட்டே அம்மா வாங்கிக் கட்டிகிட்டதுமாதிரி நான் வாங்கிக்கத் தயாரா யில்ல!''

''உங்கம்மா, சித்தப்பாவ துரத்தினது உனக்கு பெரிசா தெரியல!''

''துரத்தவேண்டிய ஆசாமியைத்தான் அம்மா தொரத்திட்டாங்க! நன்றி கெட்டவங்களுக்கு இந்த வீட்டுல இடம் கிடையாது.''

''எனக்கு வாரக் கோபத்துக்கு உன்ன...''

''சும்மா நிறுத்துங்கப்பா... ஆரம்பகாலத்திலேயிருந்தே சித்தப்பாவுக்கும் அத்தைக்கும் எங்கம்மா செய்த பணி விடையை, அவங்க சேவையா நினைக்காமல் வேலைக்காரத் தனமாய் நினைக்கும்படியா நீங்க நடந்துக்கிட்டீங்க. அவங்க முன்னாலேயே இந்த அப்பாவியை இந்த 'தெரே சாவை' விரட்டி விரட்டி அவங்க மனசுல தங்களுக்கு இவள் சேவை செய்யுறது, நாய் வாலை ஆட்டுறதுமாதிரி ஒரு சாதாரண காரியம் என்கிற எண்ணத்தை ஏற்படுத்தினீங்க. இதனால வீட்டுநாயான இவள்தான் நன்றியோட இருக்கணும். நாம நன்றியோட இருக்க வேண்டியதில்ல என்ற எண்ணத்தை அவங்ககிட்டே ஏற்படுத்தினீங்க. நீங்க கணவனா நடந்துகிறதுக்குப் பதிலாய், ஒரு ஆணாய்தான் நடந்துகிட்டிங்க! நான் இப்போ மகள் என்கிற முறையில் பேசாமல் ஒரு பெண் என்கிற முறையில் சொல்றேன். படித்து வேலைக்குப் போய் சொந்தக்காலில் நிற்கும்வரை எனக்கு எந்தக் கல்யாண சொந்தமும் தேவையில்ல!''

தந்தை தத்தளித்தார். மகளைப்பற்றி அவருக்குத் தெரியும். பிடித்தால் ஒரே பிடிதான். அவர் மனைவியை எங்கோ தொலைந்துபோனவள்போல் தன்னைத்தானே தேடிக்கொண்டிருப்பவள்போல் தோன்றிய சுலோச்ச னாவை—கண்களால் கெஞ்சினார். யாசகக் குரலில் கேட்டார்:

''சுலோ... உன் மகள்கிட்ட சொல்லுடி! நல்ல இடம்டி! புத்தி சொல்லுடி!''

சுலோச்சனா வாயில் புடவையை இழுத்துச் சுற்றினாள். நொய்ந்துபோன உடம்பை நிமிர்த்தினாள். அவரை வழக் கத்திற்கு மாறாக, நேருக்கு நேராய்ப் பார்த்து அடுத்த பேச் சுக்கு அவசியம் இல்லை என்பதைப்போல் அதட்டலாகப் பதிலளித்தாள்.

"புத்தி சொல்லவேண்டியது அவளுக்கில்ல. அவள் சொன்னது சரிதான்! இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லைன்னு நீங்களா சொல்றீங்களா... இல்ல நானே போய் சொல்லட்டுமா? வீட்டுக்குள்ளேயே ஒரு லாக்கப்பில்—அதுவும் ஜாமீன் இல்லாத ஒரு லாக்கப்பில்—அவள் மாட்டிக்க எனக்கு சம்மதம் இல்லை. போய் சொல்லுங்க!"

'அவர்' நொண்டியடித்துப் போய்க்கொண்டிருந்தார்.

# நிசமான பத்தினி

அறுவடை முடிந்துவிட்டதால் வயக்காடு ஓய்வெடுத்துக்கொண்டிருப்பதுபோல், சீனியம்மாவும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள். பஞ்சாயத்துப் பழைய தலைவர், பழைய உறுப்பினர்கள், நிரந்தரமான மணியம், கர்ணம் போன்ற 'பெரிய இடத்து' வீடுகளுக்கு முன்னால் போடப் பட்டிருந்த அரசாங்க வாரியக் குழாய்களில் நீர் பிடிக்க முடியாமல் குழாய்கள் கடந்த ஆறுமாத காலமாகப் பழுதடைந்து தேடுவாரற்றுக் கிடந்ததால், அவள் காலையிலேயே எழுந்து 'தோண்டிப்பட்டையும்' குடமுமாக ஊர் கிணற்றிற்குச் சென்று ஐந்தாறு குடந் தண்ணீரைப் பிடித்து விட்டு, அதே கையோடு சாணந் தெளித்து, முற்றத்தைப் பெருக்கிவிட்டு, பிறகு அந்த ஓலை வீட்டின் தரையையும், திண்ணையையும் சாண நீரால் மெழுகிவிட்டு, செல்லமாக வளர்க்கும் கன்றுக்குட்டிக்கு அருகாமையில் இருந்த 'தோட்டந் தொலைவில்' போய்ப் புல்லை வெட்டிக் கொண்டுவந்து போட்டுவிட்டு, ஓடைக்கருகே நின்ற கருவேல மரக்குச்சிகளை ஒடித்து விறகாகக் கொண்டுவந்து, சோறு பொங்கி, படுத்த படுக்கையாகக் கிடக்கும் அய்யாவுக்கு 'அன்னப்பாலை'க் கொடுத்துவிட்டு 'ஒதுங்குமிடமாக' இருந்த சுற்றிலும் பனையோலைகளால் மறைக்கப்பட்ட 'செருவையில்' இற்றுப்போயிருந்த ஓலைகளை எடுத்துவிட்டு ஒடிந்த கம்புகளை நீக்கி, வாதமடக்கிக் கம்புகளைக் கட்டி,

புதிய ஓலைகளை அந்தக் கம்புகளோடு கோத்துக் கட்டி விட்டு எங்கேயோ 'துஷ்டி' கேட்டுவிட்டு வந்த அம்மா குளிப் பதற்காக மீண்டும் இரண்டு குடந் தண்ணீரைக் கொண்டு வந்து கொட்டிவிட்டு மீண்டும் என்ன செய்யலாம் என்று யோசித்தாள்.

இத்தனை வேலைகளையும் 'போனஸாகச்' செய்து விட்டு, நாள் முழுவதும் வயக்காட்டில் கூலி வேலைக்குப் போகும் அவளுக்கு, அன்று கையைக் காலை கட்டிப் போட்டதுபோல் இருந்தது. 'ஓய்வு' அவளை ஓய்ந்துபோகச் செய்தது.

இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்கு வேலை இருக் காது. கம்மாவில் விதைப்பு வேலையும் நஞ்சை நிலமான வயலில் 'பல்லாரி' நடவும் துவங்க மூன்று நாட்களாவது ஆகும். அதுவரைக்கும் எப்படிச் சும்மா இருப்பது? வீட்டு வேலைகளைத் தவிர, வேறு வேலை இல்லாமல் எப்படிப் பொழுதை ஓட்டுவது? சாயங்காலத்தில் கன்றுக்குட்டிக்குப் புல் வெட்டப் போகலாம். மீண்டும் தண்ணீர் பிடிக்கப் போகலாம். மீண்டும் முற்றத்தைத் தெளிக்கலாம், மீண்டும் அடுப்பைப் பற்ற வைக்கலாம். ஆனால் அந்த மத்தியானப் பொழுது போகமாட்டங்கே? 'கரி முடிவாங்க' சீக்கிரமா வயல் வேலயத் துவக்கினால் என்ன? நமக்குன்னு ஒரு வயலு இருந்தால்... இப்பவே போய் நடலாம். இந்த ஊர்க்காரங்க அறுவடைய தின்னப் பிறவுதான் வயல நினைப்பாங்க போலுருக்கு.

படுத்த படுக்கையாகக் கிடக்கும் அய்யாவுக்கு, வெந்நீர் ஒத்தணம் கொடுக்கலாமா என்று நினைத்து பிறகு மத்தி யான வெயிலுல கொடுக்கலாம் என்று அவள் யோசித்துக் கொண்டிருந்தபோது பக்கத்துக் காரை வீட்டிற்கருகே இருக்கும் வேப்பமரத்தடியில் இருந்து பெண்களின் சிரிப்பு சீறிக்கொண்டு வந்தது. எதுக்கு இப்படிச் சிரிக்காளுவ... போயித்தான் பாப்போம்.

வேப்பமரத்தடியில், ஏழெட்டு இளம் பெண்கள், மூன்று நடுத்தர வயதுப்பெண்கள் வட்டமாக உட்கார்ந்து, "நீ ஆயிரம் சொல்லு, நாகேஷ் மாதிரி வராது பிள்ள." என்று ஒருத்தி சொல்ல, இன்னொருத்தி "நீ பழயகாலத்துக் கர் நாடவம்! முப்பது வயச தாண்டுனவ... ஒனக்கு சினிமாவப் பத்தி என்னழா தெரியும்" என்று எதிர் வழக்காட, இதரப் பெண்கள் அவர்களை உசுப்பிவிட்டு வேடிக்கை பார்ப்பது போல் சிரித்தார்கள். வாய்கள் என்னதான் பேசினாலும், கண்கள் எங்கேதான் பார்த்தாலும், நினைவுகள் டூரிங் தியேட்டர்களுக்குப் போனாலும், ஒவ்வொருத்தியின் கை களும் தத்தம் மடியில் உள்ள வட்டமான தட்டில் இருந்து பழுத்துப்போன ஆலிலை போலிருந்த பீடி இலைகளை, கத்திரிக்கோலால் லாகவமாக, சதுரஞ் சதுரமாய் வெட்டு வதும், ஒவ்வொரு இலையையும் இடது கையில் வைத்து, தட்டில் குவிந்திருந்த பீடித்தூளை எடுத்து, இலையில் அளவோடு போட்டு, நளினமாக உருட்டி, தென்ன நாரால் கட்டி, ஊசியாகக் குவிந்த இடத்தைப் பிடித்துக்கொண்டே, உருளையாகத் திரண்ட பகுதியை மடித்து, பீடியைப் போலவே அமைந்த தேக்குக்குச்சியை வைத்து அழுத்தி, அனாயாசமாகக் கீழே போட்டுவிட்டு, மீண்டும் இலையை எடுப்பதும், மடிப்பதுமாக இருந்தார்கள்.

சீனியம்மாவைப் பார்த்ததும், ஒரு பதினாறு வயதுக் காரி, "இந்தா சீனியக்கா வந்துட்டா! இவாகிட்ட கேட்டா தெரிஞ்சிட்டுப்போவுது. எக்கா கமலஹாசன் நடிப்பு நல்லா இருக்குமா, இல்ல ரஜனிகாந்த் நடிப்பா சொல்லுக்கா" என்றாள். உடனே "ஆமாம் அவதான் பொருத்தமாச் சொல்லுவா" என்று இன்னொருத்தி சொல்லிவிட்டுச் சிரித் தாள். உடனே எல்லாப் பெண்களும் சிரித்தார்கள்.

சீனியம்மாவுக்கு வெட்கமாகிவிட்டது. அந்தப் பெண்கள், சினிமா கினிமா என்று நாலுந்தெரியாத தன் கர்நாடகத்தைச் சுட்டிக்காட்டுகிறார்கள் என்பதைப் புரிந்து

கொண்டு அவர்களைச் சங்கடத்துடன் பார்த்தாள். அவள் சங்கடப் பார்வையால் சங்கடப்பட்ட, அவளது பெரியய்யா பேத்தி தன் அத்தைக்காரியைப் பார்த்து ''பின்ன என்ன அத்த, நீ சினிமா... சினிமாவாகப் பாருன்னு சொல்லல. ஆடிக்கு ஒரு தடவ, அமாசைக்கு ஒரு தடவையாவது பாக்காண்டாமா... பாத்தா, இவளுவ இப்படி நாக்குமேல பல்லப்போட்டுப் பேசுவாளுவளா... உக்காரு'' என்றாள்.

இந்தமாதிரி அந்தப் பெண்கள், சீனியம்மாவைக் கிண்டல் செய்வது வழக்கந்தான். அப்போதெல்லாம் 'போங்கடி... புண்ணாக்கு மாடத்திகளா...' என்று பதில் பேசும் சீனியம்மை அன்று ஏனோ வேறுவிதமாகவே பதிலளித்தாள்.

''ஆமாம்... இவளுவ சினிமாவுக்குக் கூப்புட்டாளுவ... நான் வரமாட்டேன்னுட்டேன்.''

''அப்படின்னா இன்னைக்கி போறோம்... வாறியா?''

''எத்தனாவது ஆட்டத்துக்கு?''

''முதல் ஆட்டத்துக்கு.''

''ரெண்டாவது ஆட்டத்துக்குன்னா வரமுடியும். கண்ணுக்குட்டிக்கு புல்லை வெட்டிப் போட்டுட்டு வந்துடுவேன்...''

''நீ புல்லு மட்டுமா வெட்டுவ? வெட்டுன புல்ல தின்னு கூடப் பார்ப்ப...''

''எதுக்குடி எங்க அத்தைய மாடுன்னு குத்திக் காட்டுறிய? அத்த! நீ இதுக்காவது எங்ககூட சினிமாவுக்கு வரணும்!''

சீனியம்மை அப்படியும் சொல்லாமல், இப்படியும் பேசாமல், அவசர அவசரமாகக் காட்டுப் பக்கம் போனாள். ''இவள... போயி கூப்பிட்ட பாரு'' என்று ஒருத்தி மோவாயில் இடிக்க, மற்றொருத்தி தோளை மோவாயில் இடித்தாள்.

ஆனால் சாயங்காலம் பீடிப் பெண்கள் புறப்பட்டபோது சீனியம்மையும் அழுக்காய் இருந்த தன் புடவையை உட் பக்கமாக மாற்றி மடித்து உடுத்திக்கொண்டு, தலையில் இரண்டு தங்கரளிப் பூக்களை வைத்துக்கொண்டு தயாராக இருந்தாள். அவள் முதலாவது ஆட்டத்திற்குப் போவதால், மத்தியானம் வெட்டிய புல்லில் கன்றுக்குட்டி 'மேட்னி' ஆட்டம் போட்டது.

அந்தக் குக்கிராமத்தை அடுத்து. இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருந்த டூரிங் தியேட்டரை நோக்கி அந்தப் பெண்கள் நடைபோட்டார்கள். சினிமா நடிக—நடிகைகளில் இருந்து, பீடிக்கடையில் உள்ள கணக்கப் பிள்ளை வரை அலசிக்கொண்டே போனார்கள். சீனியம்மைக்குக் கூச்சமாக இருந்தது. மற்றப் பெண்கள் 'முன் கொசுவம்' வைத்த நைலக்ஸ் புடவைகள் கட்டியிருந்த போது, தான்மட்டும் பின் கொசுவம் வைத்து அச்சடிப் புடவையைக் கட்டியிருப்பதற்காகச் சிறிது வெட்கப்பட்டவள் போல் காலைத் தேய்த்துத் தேய்த்து நடந்தாள். அவளுக்கும் முன் கொசுவம் வைத்துக் கட்ட ஆசைதான். இருந்தாலும் கூச்சம். அவர்கள் கேலி செய்வார்கள் என்கிற பயம். அந்தப் பெண்கள் முகத்திற்குப் பவுடர் போட்டிருப்பதைப் பார்த்ததும், அவள் முகம் பவுடர் மாதிரி வெளுத்தது. அவர்கள் காலில் கலர் செருப்புக்கள். இவள் காலில் செருப்பைப் போன்ற காய்ப்புக்கள். ஒவ்வொருத்தியும் இடுப்பின் ஒரு பக்கத்தில் ஒரு கைக்குட்டையையும், இன்னொரு பக்கத்தில் ஒரு சின்ன மணிபர்ஸையும் வைத்திருந் தார்கள். நடந்துகொண்டே அவர்கள் நடந்து முடிந்த சினிமாக்களை விமரிசனம் செய்தபோது, சீனியம்மையால் நடக்க முடியவில்லை. நொண்டினாள்.

'பெஞ்ச்' டிக்கெட் எடுத்தார்கள். பீடிக்கடைப் பையன் களில் சிலர் அவர்களின் வரவால் ஆச்சரியப்படாமலும், அதேசமயம் ஆனந்தப்பட்டும், 'ஏன் இவ்வளவு லேட்டு...'

என்பது மாதிரி கண்களால் பார்த்தபோது, கண்கொத்திப் பாம்பு போன்ற ஒருத்தி, ''வார்படம் (அதாவது செய்திப் படம்) முடியட்டுமுன்னு மெதுவா நடந்தோம்... அப்படியும் இந்தச் சனியன் முடியல பாரு...'' என்றாள். உடனே ஒருவன், ''அதுதான் பாக்கோமே'' என்றான். எல்லார் சார்பிலும் உடனே சிரிப்பு. ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு வனைப் பார்த்துச் சிரித்தபோது சீனியம்மை சிரிக்க முடியாமல் திண்டாடியபோது, ஒரு பயல் ''சினிமாவுலயும் புது முகம். இங்கேயும் புதுமுகண்டா'' என்றான். சீனியம்மைக்கு சினிமாவில் புதுமுகம் என்றால் என்ன என்பது தெரியாத தால், அவள் முகம் எந்தவித மாறுதலும் இல்லாமல் பழைய முகமாகவே இருந்தது.

படம் துவங்கியது. பீடிப் பெண்கள் 'டயலாக்' முடி வதற்கு முன்பே டயலாக்கைச் சொன்னார்கள். ஒவ்வொரு திரைமுகத்தையும் பெயர் சொல்லி அழைத்தார்கள். ''இப்போ கமலஹாசன் வருவான் பாரு... பாரு...'' என்று படத்தைப் பார்க்காமல் பக்கத்துப் பிரிவில் இருந்த பையன் களைப் பார்த்தார்கள். பெண் பெஞ்சுக்கும் ஆண் பெஞ் சுக்கும் இடையே ஒரு மூங்கில் கழி கட்டப்பட்டிருந்தது. நல்லதுக்குத்தான்.

சீனியம்மை இப்போது அதிகமாக வெட்கப்பட்டாள். அந்தப் பெண்கள் பேசப் பேச, தன் அறியாமையை நொந்து கொண்டாள். இன்னும் தான் நாகரிகப்படாமல் போனதற் காக வருத்தப்பட்டாள். நடிக—நடிகையர்களின் பெயர் களைப் பற்றித் தெரியாமல் பொன்னி, ஐ-ஆர் எட்டு, போஸ் கலப்பை போன்ற உருப்படாத பெயர்களை மட்டுமே தெரிந்து உருப்படாமல் போனதற்காக, தன் உருவத்தைக் கூனிக் குறுக்கிக்கொண்டாள். இந்த நிலம கூடாது. இவளுவள மாதிரியே முன் கொசுவம் கட்டணும். இவளுவள மாதிரியே சினிமா நடிகர்கள் பெயரைத் தெரிஞ்சி வச்சிக் கிடணும். இனுமேயும் கர்நாடவமாய் இருக்கப்படாது. இருக்கப்படாதுன்னா இருக்கப்படாதுதான்.

சினிமா பார்த்து மூன்று நாட்களாகிவிட்டாலும், சீனியம்மைக்கு அந்த சினிமா படமே கண்ணில் திரைபோட்டது. அது கண்ணில் திரை போட்டது என்றால் அந்தப் பெண்களின் பேச்சும், பேச்சுக்கேற்ற முன் கொசுவமும், கொசுவத்திற்கேற்ற புடவையும் கருத்திற்குத் திரை போட்டன.

சீனியம்மை தன் உள்ளங் கைகளைப் பார்த்தாள். அப்போது சினிமாவில் கதாநாயகன் நாயகியின் கையைப் பிடித்து, 'இந்த மென்மையான கையைப் பிடிக்க என்ன தவம் செய்தேனோ' என்ற வார்த்தை நினைவுக்கு வந்தது. அது வரவர, அவள் தன் உள்ளங்கையை நிமிர்த்திப் பார்த்தாள். வலதுகையின் ஆள்காட்டி விரலின் மத்தியில் கறுப்பு நிறத்தில் ஒரு காய்ப்பு. பெருவிரல் 'படத்தில்' மண்வெட்டிக் கணைபட்ட தடயம். உள்ளங்கையின் சரிந்த உட்பகுதியில், திட்டுத் திட்டாகக் காய்ப்புக்கள். இந்த ஆள்காட்டி விரலால் வாய்க்கால் மண்ணை எடுத்து, பல் தேய்த்ததால், அந்தக் காய்ப்பில் சின்னச் சின்னப் புள்ளிகள். அந்தப் புள்ளிகளில், கடைவாய்ப் பல்முனை பட்டு லேசான கீறல்கள். அந்தக் காய்ப்பும், புள்ளியும் கீறலும் சீனியம்மைக்கு அவமானச் சின்னங்களாகத் தோன்றின. சீ! சினிமாவுல வாரவளோட கையி எப்படி இருக்கு! இலவம் பஞ்சு மாதுரி... சினிமாக்காரி எதுக்கு? இன்னா பீடி சுத்தறவளுவ கையிகூட எவ்வளவு 'மெதுவா' இருக்கு. நாளக்கி நம்மள கட்டறவனே இந்த கைய சினிமாவுல வாரவன் பிடிக்கது மாதிரி ஒருவேளை பிடிச்சால்...? ஒருவேளை என்ன? நிச்சயம் பிடிப்பான். அப்போ இந்த காய்ப்பப் பார்த்தான்னால்...? சீ, மண்வெட்டியப் பிடிச்சுப் பிடிச்சு என் கையி மண்வெட்டி மாதிரியே ஆயிட்டு... முன் கொசுவம் வச்சிக் கட்ட முடியல. உள்ளங்கைய சினிமாவுல சொன்னதுமாதிரி ரோஜாப்பூ மாதிரி ஆக்கணும்.'

சீனியம்மைக்கு, திடீரென்று ஒரு சபலம் ஏற்பட்டது. முப்பது வினாடிகளுக்குள் அந்தச் சபலம் எண்ணமாகி பிறகு அதுவே ஒரு வைராக்கியமாக வைரப்பட்டது.

'ஆமாம். இனிமேல் பீடிதான் சுத்தணும். பழகிட்டா, ஒரு நாளைக்கு முப்பது வண்டல் சுத்தலாம் (வண்டல் என்றால் ஆங்கில பண்டில்), மொத்தம் வயல் வேலையில் கிடைப்பதைவிட அதிகந்தான் கிடைக்கும். நைலக்ஸ் புடவ கட்டலாம். அதுவும் முன் கொசுவத்துல. ஒரு கைக் குட்டையை இடுப்பில வச்சிக்கிடலாம். ஆடாம அசையாம இருந்த இடத்தில இருந்தபடியே சம்பாதிக்கிற வேல. வயக் காட்டு சகதியில புரளாண்டாம். வாய்க்கால் மண்ணுல பல் தேய்க்காண்டாம். நிழலுலயே இருக்கலாம். அப்போதான் வெயிலுல வேலபாத்து வேலபாத்து கறுப்பாப்போன என் சிவந்த உடம்பு... ரத்தச் சிவப்பா மாறும். தண்ணீல நின்னு நின்னு அழுகுனது மாதுரி ஆன இந்தக் காலு சும்மா கலர் செருப்புமாதிரி மின்னும்.

பீடி சுற்றிப் பழக, எப்படியும் பதினைந்து நாள் ஆகும் அதுவரைக்கும் சீனியம்மாவால் வேலைக்குப் போகாமல் வெறும் பயிற்சியிலேயே நாளைக் கடத்த முடியாது அறுவடைக் கூலியாய் கிடைத்த பத்து மரக்கால் நெல்லில், மழைகாலத்தில் வாங்கிய கடனுக்கு வட்டியாக மூன்று மரக் காலும் அசலுக்கு முதல் தவணையாக இரண்டு மரக்கால் நெல்ல வித்து அம்மாவுக்கு ஒரு சேலையும், அய்யாவுக்கு ஒரு வேட்டியும் வாங்கியாச்சு. மெட்ராஸ்ல மளிகக் கடையில வேலபாக்குற தம்பி பணம் அனுப்புவான்னு நம்பி, இருந்தத வித்தாச்சு. அவன் என்னடான்னா ஒரு 'வாச்சி' வாங்கியாச் சுன்னு எழுதுறான். மொத்தத்தில் வேலைக்குப் போனால் தான் சாப்பாடு.

அவள் தட்டுத்தடுமாறி வயல் வேலைக்குப் போனாள்.

சீனியம்மை வேலைக்குப் போய்விட்டுத் திரும்பியதும் அம்மாவை கன்றுக்குட்டிக்குப் புல் போடச் சொல்லிவிட்டு, காலையில் தோளில் வைத்துச் சுமந்துகொண்டுபோன மண் வெட்டியை மாலையில் அருவருப்பாகப் பார்த்துக்கொண்டே கீழே போட்டுவிட்டு, வேப்பமரத்தடிக்கு வந்து மின்சார

விளக்கின் ஒளியில் பீடி சுற்றும் அந்தப் பெண்களிடம் வந்து இலை வெட்டிப் பழகினாள். முதலில் காகிதங்களை வெட்டிப் பழகி, பிறகு இலைகளை வெட்டினாள். படிப்படியாக இலைகளைச் சுற்றுவதிலும், தூள்களை வைப்பதிலும், சுருட்டி மடக்குவதிலும் தேர்ச்சி பெற்றாள். ஆரம்பத்தில் அவள் எங்கே தங்கள் இலைகளை வீணடித்துவிடுவாளோ என்று அஞ்சிய பெண்கள், ''அவா இலையை வெட்ட என் இலைதானா கிடச்சுது'' என்பார்கள். சீனியம்மை வயக்காட்டில் இருந்து வரும்போது அவர்களுக்கு குளக்கரையில் கிடைக்கும் நாகப்பழங்களையும், ஆலம் பழங்களையும் கொடுத்து அவர்களைச் சரிக்கட்டினாள். ஆனால் இப்போது அந்தப் பெண்கள், ''எனக்கு சுத்து சீனி... உனக்கு வேணுமானால் பத்து பைசா தாரேன்'' என்பார்கள். அவளைச் சரிக்கட்டும் அளவிற்கு சரியாகப் பழகிக்கொண்டாள். சீனியம்மை பீடி சுற்றுவதில் 'சுயாட்சி' பெறும் நாள் வந்தது.

மண்வெட்டியை வந்த விலைக்கு ஒருவருக்கு விற்றுவிட்டு, அந்தப் பணத்தில் ஒரு கத்திரிக்கோல் வாங்கினாள். மூங்கிலால் பின்னிய ஒரு வட்டத்தட்டை வாங்கினாள். அய்யாவும், அம்மாவும் அவளுக்கு மறுப்புச் சொல்லவில்லை. சீனியம்மை, தனது சக தோழிகளுடன் பீடிக் கடைக்குப் போனாள். ஏற்சனவே வேப்பமரத்தடிக்கு வந்து அந்தப் பெண்களுடன் வம்பளந்துவிட்டுப் போகும் கணக்குப்பிள்ளை வாயெல்லாம் பல்லாக அவளைப் பார்த்தான். முன்பெல்லாம் அவளைப் பார்த்து, ''வயலுக்கா தாயி போற'' என்று கேட்கும் ஏஜெண்ட் மட்டும் ''பீடி சுத்தமா இருக்கணும். இதுகளை வெட்டுறது மாதிரி இல்ல'' என்று அசுத்தமாகவும், வெட்டொன்று துண்டொன்றாகவும் பேசினான். அவனது தோரணை சீனியம்மைக்கு என்னவோ போலிருந்தது என்றாலும் முன் கொசுவத்தைச் சரிப்படுத்திக் கொண்டு சங்கடத்தோடு சிரித்தாள்.

பீடிக்கடை, கிட்டத்தட்ட எருமை மாட்டுக் கொட்டகை மாதிரி இருந்தது. ஒரு 'அரங்கு' அறைக்குள், பதினைந்து

விடலைப்பையன்கள், பீடிகளை இரண்டு இரண்டாகச் சேர்த்து லேபிலை எடுத்து ஒட்டினார்கள். 'தார்சாவில்' ஒரு பயல் எழலைக் கிழங்கு மாவையும், கடலைமாவையும் அடுப்பில் வைத்துக் காய்த்துப் பசையாக்கிக்கொண் டிருந்தான். உள்ளே கடைசியில் இருந்த அறையில் ஏஜெண் டிடம் தலையைக் காட்டிவிட்டு அதற்கு அடுத்தாற்போல் இருந்த அறையில், தராசும் கையுமாக இருந்த கணக்குப் பிள்ளையிடம் தோழிகள், சீனியம்மையைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவன் அவர்களைக் கண்டுக்காமல் பீடி இலை களை எடைபோடும் ஒருவனைப் பார்த்து ''எச்சிஇல எடுக்க வேண்டியவன் எல்லாம் எதுக்குடா பீடி இலகிட்ட வாரிய! இலத்தட்டு கீழ போவுது. ஒன் பெரியப்பா மகள்னா, இப்படியா ஒரேடியா?'' என்று கத்தினான். அவன் முன்னால் நின்ற பெண், ''அண்ணாச்சி... ராமன் இவளவு பீடியயும் கழிச்சிட்டான்'' என்று கத்த, அவள், 'அண்ணாச்சி' என்று சொன்னதில் அதிர்ந்துபோன கணக்குப்பிள்ளை, 'இவளா வது தேறுறாளான்னு பாப்போம்' என்பதுமாதிரி சீனியம் மையைப் பார்த்தான். வச்சிக்கிடலாம்...

சீனியம்மைக்கு ஒரு வாரத்திற்குரிய இலையும், அதற்குப் போதுமான தூளும், தென்னை நாரும் கொடுக்கப்பட்டது. புதிதாக கல்லூரிக்குள் காலடி வைப்பவளைப் போல, முதல் தடவையாகத் தன் கதையைப் பத்திரிகையில் பார்க்கும் எழுத்தாளனைப் போல சீனியம்மை தன்னை நம்பாதவள் போல தன்னையே பார்த்துக்கொண்டாள். அவளுக்குக் கொடுத்திருந்த கணக்குப் புத்தகத்தை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

ஒரு வாரம் ஓடியிருக்கும்.

சீனியம்மை, இதரப் பெண்களுடன் பீடிகளை ஒப்படைக்கப் போனாள். மொத்தம் 180 'வண்டல்கள்.' கணக்குப்பிள்ளை பின்னால் வந்து அவளைத்தான் முதலாவ தாகக் கூப்பிட்டான். ''பீடின்னா இதுல்லா பீடி!'' என்று

அவள் தட்டில் இருந்த பீடிகளை எடுத்துப் பரிசோதித்துக் கொண்டே, பீடி சாக்கில் அவள் விரல் நுனியை லேசாகப் பிடித்தான். சீனியம்மைக்கு அவன் பிடித்ததே தெரிய வில்லை. பீடிகள் தேறவேண்டுமே என்ற அச்சப்பிடியில் அவனது அவசரப் பிடி உறைக்கவில்லை. கணக்குப்பிள்ளை இலைகளை நிறுத்து அவள் தட்டில் போட்டுவிட்டு, தென்ன நாரைக் கொடுக்கும்போது தன் கையை அவன் அழுத்துவது போல் அவளுக்குத் தோன்றியது. அவனை முறைப்போடு பார்த்தாள். அவன் ஏஜெண்டைப் பார்க்கிற சாக்கில் எழுந்து அவள் காலை மிதித்தபோது, அது தெரியாத்தன மானதாய் அவளுக்குத் தோன்றவில்லை. உஷ்ணமாக அவனைப் பார்த்துக்கொண்டாள்.

இரண்டு மூன்று வாரங்கள் வந்தது தெரியாமல் பறந்தன.

சீனியம்மை கணக்குப்பிள்ளையிடம், பீடித் தட்டைக் கொடுத்துவிட்டு சற்றுத் தொலைவில் நின்றுகொண்டாள்.

அவன் நாரைக் கொடுக்க வந்தபோது "தட்டுல போட்டுடு அண்ணாச்சி..." என்று கடைசி வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்துப் பேசினாள்.

அண்ணாச்சி என்று சொன்ன பிறகு, கணக்குப்பிள்ளை சும்மா இருப்பானா? இருக்கவில்லை.

சீனியம்மையின் பீடிகள் நன்றாக இல்லை என்று பல வற்றைக் கழித்தான். பீடி சுற்ற உதவாத பழுப்பு இலை களாகப் பார்த்துக் கொடுத்தான். பிரிக்கமுடியாதபடி கட்டிக் கட்டியாக இருந்த தூள்களைக் கொடுத்தான். இந்த வேகத் தில் போனால் அவளே பீடி இலைக்கு காசு கொடுக்க வேண்டிய அபாயம் ஏற்படும் நிலை வரலாம். சீனியம்மை யால தாளமுடியவில்லை.

"எதுக்காவ அண்ணாச்சி, இவ்வளவு பீடிய கழிக்க? அவள் தட்டுலயும் என் பீடி மாதுரிதான் இருக்கு; அதக் கழிக்கல. என் தட்டுன்னால் ஒனக்கு ஏன் இளக்காரம்?"

கணக்குப்பிள்ளை பதில் பேசும் முன்பாக, சீனியம்மை சுட்டிக்காட்டியவள் சூடாகக் கேட்டாள். ''எம்மாரு...ஒன் வரைக்கும் பேசு... என்னை எதுக்கு இழுக்க? நான் மூணு வருஷமா சுத்துறவள்!''

கணக்குப்பிள்ளை பேச்சை உதறினான்.

''அப்படிக் கேளு... நல்லாக் கேளு... அம்மாவுக்கு பெரிய ரம்பைன்னு நெனப்பு!''

சீனியம்மை சீறினாள். ''இந்தா பாரு கணக்குப்பிள்ளை பேசணுமுன்னால் பீடி விஷயமாகப் பேசு! ஏரப்பாளத்தனமாகப் பேசுனியானால்... கையில இருக்கிற கத்தரிக்கோலு எங்கிட்ட இருக்காது! யாரப் பாத்துய்யா ரம்பை கிம்பைன்னு பேசற! ஒன் இரப்பாளி புத்தி தெரிஞ்சிதான் விலகி நிக்கேன்! நீ எதுக்காவ பீடிய கழிக்கன்னு தெரியும்!''

''ஏ, மரியாதியா வெளில போ!''

''இது என்ன ஒப்பன் வீட்டுப் பீடிக்கடையா? நீயும் என்னமாதுரி கூலிக்கு வேல பாக்குறவன்தான். இடையன் பொறுத்தாலும் இடக்குடி நாயி பொறுக்காதாம்...''

ஏஜெண்ட் உள்ளே இருந்து ஓடிவந்தார். விவகாரம் சூடு பிடிக்காமல் இருப்பதற்காக, கணக்குப்பிள்ளையை நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகும்படி, ''பொம்புளகிட்ட என்னல பேச்சு? பொட்டப்பயல...'' என்றார். அவர் சொன்ன தோரணை 'அவன் பொட்டப்பய... அவன்கிட்ட போயி பேசுறியளேன்னு' பெண்களைப் பார்த்துக் கேட்பது போல் தோன்றியது. பின்ன என்ன... எந்தப் பெண்ணை யாவது ஏஜெண்டுகிட்ட பேசவிடுறானா? 'அவரு கோபக் காரரு... நான் சொல்லிக்கிடுறேன்னு இவனே என்னைக் காரணமாய்க் காட்டியே கண்ணடிக்கான்.''

சீனியம்மை பீடி இலைகளை ஈரத்துணியால் சுற்றி வைத்துக்கொண்டு அலுப்போடு திரும்பினாள். அவளோடு

போன பெண்கள் இப்போது கணக்கனைப் பகைச்சால் கழிவு பீடிதான் கிடைக்கும் என்ற புதுமொழியை நினைத்து கடையிலேயே நின்றார்கள்.

வேப்பமரத்தடியில் தன்னந்தனியாக உட்கார்ந்து இலைகளை வெட்டிக்கொண்டிருந்த சீனியம்மையைப் பார்த்து, முகங்களை வெட்டிக்கொண்டே அந்தப் பெண்கள் வந்து உட்கார்ந்தார்கள். யாரும் அவளோடு பேசவில்லை. அவர்கள் கைகளில் பீடி ஆடியதே தவிர முகங்களில் ஈயாடவில்லை. சீனியம்மை அவர்கள் திட்டியிருந்தால்கூட அப்படித் தவித்திருக்கமாட்டாள். தாள முடியாமல் கேட்டாள்.

''என்னடி பேச மாட்டக்கிய? நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்?''

மௌனம்.

''வாயத் திறந்து சொல்லுங்கடி...''

ஒருத்தி வாயைத் திறந்தாள்.

''ஒன்னால எங்களுக்குக் கெட்ட பேரு... ஆயிரந்தான் இருந்தாலும் நீ கணக்குப்பிள்ளய அப்படிக் கேட்டிருக்கப் படாது!''

''ஒரு வாரத்துக்கு முன்னால அவன் கையைப் பிடிச்சான்னு சொல்லும்போது நீங்க அவனை ஏன்னு கேட்டிருந்தால் நான் பேசியிருக்கமாட்டேன்!''

''அப்போ சும்மா இருந்தவளுக்கு இப்போ ஏண்டி முகம் கோணுது?''

''ஆயிரந்தான்னு சொல்றியே... அந்த ஆயிரத்துக்கு என்னடி அர்த்தம்? அவன் என்னை என்ன பண்ணுனாலும் சும்மா இருக்கணுமுன்னு சொல்றியா? அச்சடிப் புடவைக்கும், ஆயிரம் சொகுசுக்கும் இப்பதான் அர்த்தம் புரியுது!''

கூட்டத்தில் ஒரு ரோஷக்காரி சீறினாள்.

''இந்தா பாரு சீனி... நீ பாட்டுக்கு சகட்டு மேனிக்குப் பேசுறது நல்லா இல்ல. நீ மட்டும் பத்தினி! நாங்க தட்டுவாணி முண்டயுவ மாதுரி பேசாத! என்கிட்ட அவன் அப்படி நடந்ததே கிடையாது.''

சீனியம்மை சிறிது நிதானப்பட்டுப் பேசினாள். ''நான் அந்த அர்த்தத்துல சொல்லல... நீங்க எல்லோரும் அப்படிப் பட்டவளுக இல்லன்னும் தெரியும். ஆனால் ஒன்கிட்ட அந்தப் பய வாலாட்டாம இருக்கதுக்கு நீ மட்டும் காரணமில்ல. ஒன் அண்ணன் தம்பிங்க... அவன் பல்ல எண்ணிடு வாங்கங்ற பயமும் ஒரு காரணம். ஆனால் நான் அனாத மாதுரி. என்னை என்ன பண்ணுனாலும் யாரும் கேக்க மாட்டாங்க என்கிற அகம்பாவம் அவனுக்கு...''

சீனியம்மை இப்போது ஆவேசம்மையாகி, மேலும் விளாசினாள்.

''தன்னோட ஒழுக்கத்த மட்டும் காக்கிறவள் பத்தினியாகிட மாட்டாடி. இன்னொருத்தியை ஒருவன் முறகெட்டத்தனமாகப் பார்க்கையில சீறுறாள் பாரு. அவ தான் நிசமான பத்தினி. என்னோட கையக் கால அவன் பிடிச்சாலும் பீடிக்காக சகிச்சிக்கிட்டு இருந்தீங்க பாரு... அதுவே தேவடியாத்தனந்தான். மொதல்ல ஒங்கள மாதுரி பொம்புளங்கள ஒதச்சா, இந்த மாதுரி ஆம்புளைங்க சரியாயுடுவாங்க... பரவாயில்ல. அந்தக் கணக்கப்பிள்ள பய செருப்படி படுற காலம் வராமப் போகாது!''

சொல்லி வைத்ததுபோல், சில வாயாடிப் பெண்கள் அவளைத் திட்டப் போனார்கள். இதற்குள் சீனியம்மை எழுந்து இலைத் தட்டை அங்கேயே போட்டுவிட்டு தன் வீட்டுக்குப் போனாள். கால்மணி நேரத்திற்குள்—

கையில் ஒரு களை வெட்டியுடன், இன்னும் காய்ப்புகள் மாறாமலே இருந்த உள்ளங்கைகளை விரித்து அவற்றைக் கம்பீரமாகப் பார்த்துக்கொண்டே வயக்காட்டைப் பார்த்து நடந்தாள்.

# இன்னொரு உரிமை

இடுப்பில் இருந்து கணுக்கால்வரைக்கும் எட்டுமுழப் பட்டுவேட்டி ஒளிர, இடுப்பிற்கு மேலே 'பாப்ளேன்' சட்டை மினுங்க, கழுத்தில் ஜரிகை போட்ட 'மேரியல்' ஜொலிக்க, உதட்டில் வெற்றிலை போட்ட தடயம் 'டேஞ்ஜர் லைட்' மாதிரியும்—லிப்ஸ்டிக் மாதிரியும் பிரகாசிக்க, மோதிரம் போட்ட வலதுகையில் கருப்புக்குடை துலங்க—சின்னச்சாமி வீட்டை நோக்கி 'மேக்கப்'போடு வந்துகொண்டிருந்தார்.

அப்போது அவர் தங்கை தமயந்தி வாசலில் சாணந் தெளித்துவிட்டு, கோலம் போட்டுக்கொண்டிருந்தாள். தாமரைப் பூக்கோலம் அது. அடுக்கடுக்காக ஓர் இதழின் மேல் இன்னோர் இதழாக கோலப்பூ உருவாகிக்கொண்டிருந்தது. புருஷன் வருவதை ஊர்க்கிணற்றிலேயே பார்த்து விட்ட லட்சுமி, 'தோண்டி'யை அங்கேயே போட்டுவிட்டு, குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு ஓடோடி வந்தாள். வீட்டை நெருங்க நெருங்க அவள் வேகம் அதிகமாகி வாசலுக்கு வந்தபோது உச்சக்கட்டத்திற்கு வந்தது. புருஷனிடம் பேசும் ஆவலை அடக்க முடியாமல், அவள் இரண்டு கால் வைக்க வேண்டிய தூரத்தை ஒரே காலில் வைத்த போது, குடம் குலுங்கி அதிலிருந்து நீர் 'சளக்'கென்று கோலத்தில் விழுந்தது. தமயந்தியின் தாமரைப்பூக் கோலம் கிட்டத்தட்ட அழிந்துவிட்டது.

மூச்சை முன்னும் பின்னும் விட்டுக்கொண்டே, "போன விஷயம் என்னாச்சு?" என்றாள் லட்சுமி. 'மேக்கப்'போடு பேச விரும்பாதவர்போல் சின்னச்சாமி செருப்புக்களைக் கழற்றிப் போட்டுவிட்டு, கிழிந்துபோன ஒரு நாலுமுழ வேட்டியைக் கட்டிக்கொண்டபிறகு மனைவியைப் பார்த்து "கொஞ்சம் தண்ணி தா" என்றார் நிதானமாக. லட்சுமிக்கு குடத்தை இறக்கிவைக்க வேண்டும் என்று தோன்றவில்லை.

"போன விஷயம் என்னாச்சி? அதச் சொல்லும் முதலுல!"

"நீ முதல்ல தண்ணி தாப்பா..."

"மாடுகூட இந்த வேளையில தண்ணி குடிக்காது. உமக்குத் தாகம் எங்கிருந்துதான் வருதோ...அது சரி, போன விஷயம் என்னாச்சி?"

சின்னச்சாமி அவளிடம் பேசவில்லை. நேராக சமைய லறைக்குள் போய் செப்புக்குடத்திற்குள் ஒரு செம்பைவிட்டு உலுக்கி, வாய்க்குக் கொண்டு வந்தார்.

"போன விஷயம் என்னாச்சி?"

"அநேகமாய்ப் பழந்தான்."

"அப்படியா, பையனுக்கு என்ன வேலையாம்? சொத்து இருக்கா? சுகம் இருக்கா? சொல்லுமே சீக்கிரமா!"

"பையன் செக்கச் செவேன்னு ராஜா வீட்டுக் கண்ணுக் குட்டிமாதிரி இருக்கான். ரெவின்யூ இன்ஸ்பெக்டரா இருக் கானாம்! வேலையில் சேர்ந்து மூணு வருஷத்துல ரெண்டு வீடு கட்டிட்டான் கெட்டிக்காரன்!"

"ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குச் சம்பளம் குறைவாத் தானே இருக்கும்?"—இந்தக் கேள்விக்குப் பதில் சொல் லாமல் சின்னச்சாமி சிறிது நேரம் சிரித்தார்.

''ஒனக்கு ஒப்பனமாதிரி விபரந் தெரியல பிள்ளை... பையனுக்கு முந்நூறு ரூபாய்தான் சம்பளம். ஆனால் கெட்டிக்காரன்... சம்பளத்துல சாப்பிட்டு கிம்பளத்துல வீடு கட்டிட்டான்.''

''பரவாயில்லையே! அது சரி, எவ்வளவு கேக்கான்?''

"முப்பது கழஞ்சி (இருபது பவுன்) நகையும்... மூவாயிரம் ரூபாய் ரொக்கமும் கேக்குறான்.''

லட்சுமியின் முகம் சுறுத்தது. அண்ணன் நல்ல முடிவோடு வந்திருப்பதை யூகித்துக்கொண்டு தமயந்தி அந்தப் பக்கமாக வந்தாள். பூவரசு பூவைப்போன்ற நிறம்! நாட்டுக் கட்டை போன்ற அவள் மேனியில், பருவம் 'சன் மைக்கா' மாதிரி மின்னியது. லட்சுமி 'நாத்தனாரை'ச் சாடினாள்:

''பெரியவிய பேசையில, உனக்கென்ன அம்மாளு இங்க வேல? போயி... மாட்டுக்குப் புண்ணாக்கு வையி போ! போ!''

தமயந்தி புண்ணாக்கு எடுக்கப்போகும் சாக்கில், வீட்டுக்குள் போய் வாசற்கதவிற்குப் பின்னால் காதைத் தவிர, இதர உடற் பகுதிகளை மறைத்துக்கொண்டாள். லட்சுமி, 'இடைவேளைக்குப் பிறகாவது நல்லா இருக்கும்' என்று நினைத்து 'தம்மடித்து' விட்டு வரும் சினிமா ரசிகன் போல் சின்னச்சாமியை ஆவலோடு நோக்கி ஆதங்கத்தோடு கேட்டாள்:

''நீரு சொல்றதப் பாத்தா எனக்குப் பயமா இருக்கு. வேலயில சேர்ந்து மூணு வருஷத்துல ரெண்டு வீடு கட்டுறவன், அஞ்சு வருஷத்துல கம்பியையும் எண்ணலாமில்லியா?''

''கெட்டிக்காரன்! மேலிடத்தையும் கவனிச்சுக் கிறானாம். மாட்டிக்கமாட்டான்!''

"நமக்கெதுக்கு வம்பு? கிளியை வளர்த்துப் பூனை கையில எதுக்குக் கொடுக்கணும்? ஒண்ணு கிடக்க ஒண்ணாகி அவன் ஜெயிலுக்குப் போயிட்டா! நம்ம தமயந்தி கதி என்னாகும்? கொஞ்சமாவது யோசித்தீரா? மூளையை 'உருக்கு'ப் பண்ணும்!"

சின்னச்சாமி தாடையில் மூளையிருப்பதுபோல் அதைத் தடவி விட்டுக்கொண்டே யோசித்தார். "நீ சொல்றதும் ஒரு வகையில் சரிதான்."

"ஒருவகையில் இல்ல... எல்லா வகையிலேயும் சரியாத் தான் இருக்கும்."

"உனக்கு இருக்க மூளை எனக்கு வராது பிள்ளே! தெரியாத இடத்துல விழுவுறதவிட தெரிஞ்ச இடத்துல விழுவுறது நல்லது. நம்ம மேலத்தெரு மாடசாமி மவனுக்குக் கேக்கறாங்க. பி. ஏ. படிச்சிருக்கான். சொத்துபத்து இருக்கு. கொடுக்கலாமுன்னு நினைக்கேன்!"

"எவ்வளவு கேக்காங்க?"

"இருபத்தைஞ்சு கழஞ்சியும், இரண்டாயிரத்து ஐநூறும் வேணுமாம்."

"அவனுக்கு மாறுகண்ணாச்சே!"

"ஆம்பள எப்படி இருந்தா என்ன? எனக்குக் கூடத் தான் மாறுகண்ணு."

"அதனாலதான் சொல்றேன். மாறுகண்ணுக்காரனுக்கு வாக்கப்பட்ட ஒரு பொண்ணுக்குத்தான், இன்னொரு பொண்ணின் மனசு தெரியும். நம்ம தமயந்தி எவ்வளவு அழகா இருக்கா! ஆலம்பழத்த, அண்டங்காக்கா கொத்துறதுக்கு விடலாமா? மூளைய 'உருக்கு'ப் பண்ணிப் பாரும். உமக்கென்ன? எவன் கையிலாவது கொடுக்கத் துடிச்சிட்டு... ஏடாகோடமா போயிட்டா என்னாலதான் இப்படி ஆச்சின்னு ஊர்ல பேசுவாங்க! அதைவிட செத்தே போவலாம்! பாழாப்போற கடவுளே..."

லட்சுமி கண்ணைக் கசக்கினாள். சின்னச்சாமியால் அவள் அழுவதைப் பார்க்க முடியவில்லை. அவளை எப்படி யும் சமாதானப்படுத்தியாக வேண்டும். அவருக்கு நாற்பது வயதும், மூன்று பிள்ளைகளும் ஆகிவிட்டாலும், 'மாப் பிள்ளை' பாக்கப்போனதில் பிரிவு நாலுநாள் ஆகிவிட்டது மூன்று நாள்தான் அவரால் பிரிந்திருக்க முடியும்.

கதவிற்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த தமயந்தி கண்ணீர் விட்டாள். கிட்டத்தட்ட மூன்று வருஷமாய்ப் 'பிள்ளை பிடிக்கும் படலம்' நடந்து வருகிறது. மாடசாமி மாமா மவன் மாறுகண்ணு என்கிறாளே! இவா கண்ணு தான் மாறுகண்ணு! இல்லன்னா அந்த மின்வெட்டுக் கண்ணை, லயமாகப் பார்க்கும் அந்தக் கவர்ச்சிக் கண்ணை, வேண்டுமென்றே மாறுகண் என்பாளா? எல்லாம் அப்பா, அம்மா இறந்துபோனதால் வந்த வினை. அவள் வயசுப்பெண்ணு ஒருத்திக்குக் கல்யாணமாகி கையில ஒண்ணும் வயித்துல ஒண்ணும் இருக்கு. இவள் மட்டும் புருஷனைப் பின்கட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போறாளே! அப்படித்தானே எல்லாத்துக்கும் இருக்கும்?

நகையும் ரொக்கமும் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே அண்ணிக்காரி, வரன்களைச் சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழிக்கிறாள் என்பது தமயந்திக்குப் புரிந்துவிட்டது. ஆனால் இந்த அண்ண னுக்குத் தெரியலியே!

மனைவிக்காரி அவளை நினைத்து உரலை இடிக்கிறாள் என்பது சின்னச்சாமிக்கும் லேசாகத் தட்டுப்பட்டது. ஆகை யால் ஒருநாள் மனைவியிடம் சாமர்த்தியமாகப் பேசினார்

''லட்சுமி! நம்ம தமயந்திக்கு நல்லகாலம் பொறந் துட்டு. நம்ம பஞ்சாயத்து பிரஸிடெண்ட் பரமசிவம் இருக்கா னில்லியா? அவன் சம்மதிச்சுட்டான். ஊருக்கே தலைவன். சுற்றுவட்டாரத்துல அந்தப் பரமசிவம் தெரியாட்டாலும் இந்தப் பரமசிவம் தெரியும்!''

"எவ்வளவு கேக்கான்?"

"நாற்பது கழஞ்சியும்... நாலாயிரமும்."

"ஓமக்குக் கொஞ்சமாவது 'கூறு' இருக்கா? அந்தப் பரமசிவம் புறம்போக்கு நிலத்த சுத்தி வளைச்சுப்போட்டிருக்கான். பேப்பர்ல வர்றதுமாதிரி விசாரணைக் கமிஷன் வந்தால்... தமயந்திலா சந்தில நிக்கணும்? அதோடு அவன் குடிகாரன், குட்டிக்காரன்."

"என்னழா... ஒரேயடியாய் நீட்டுறீ? உன் பெரியய்யா மவன் நடராஜன் குடிகாரன் இல்லியா? சீட்டாட்டம் வேற! பொம்பிள ஷோக்கு வேற."

"எங்க நடராஜன சொன்னா... ஓம்ம நாக்கு அழுகிடும். பீடிகூடப் பிடிக்கமாட்டான். அவன் நடந்துபோற தூசில அறுந்துபோற தூசுக்குக்கூட பரமசிவம் பெறமாட்டான்! நான் நீன்னு பொண்ணு வீட்டுக்காரங்க போட்டி போடுறாங்க."

"அப்படி வா வழிக்கி... நடராஜனுக்குத் தமயந்திய கேக்குறாங்க! கொடுத்திட வேண்டியதுதான். உனக்கு எவ்வளவு போட்டாங்களோ அவ்வளவு நாம போட்டுடணுமாம்."

"உமக்குக் கொஞ்சமாவது இருக்கா? நாற்பது கழஞ்சியும், ஐயாயிரமும் நம்மால கொடுக்கமுடியுமா? நம்ம பிள்ளிக கதி என்னாவுறது?"

"நமக்கு பம்பு செட்டோடு, மூணு கோட்டை புஞ்சை அது இதுன்னு ஒரு லட்சம் ரூபா சொத்து இருக்கு. தமயந்திக்குப் பதினெட்டாயிரம் ரூபாய் போட்டால் குடியா முழுகிவிடும்?"

"செக்களவு திரவியம் இருந்தாலும் செதுக்கித் திங்க ஆகாது!"

"இந்தமாதிரி பேசினியான்னா எனக்குக் கெட்ட கோவம் வரும். நான் பாக்குறது பிடிக்கல! நீயாவது ஒரு மாப்பிள்ளை பாரேன்!"

"ஒம்மமாதிரி நான் பராக்கு இல்ல. எங்க ஊர்ல இருந்து போயி மெட்ராஸ்ல எவர்சில்வர் கடை வச்சிருக்கார்ல. நாகரத்தினம். அவரு பையன் வக்கீலாம்! எங்க அய்யா கிட்ட வந்து நல்ல குடும்பத்துப்பொண்ணா பாரும். நகையும் வேண்டாம்; நட்டும் வேண்டாம். பத்தாவது படிச்சிருக் கணும். கட்டுன துணியோட விட்டால் போதுமுன்னு லட்டர் போட்டிருக்கார். மெட்ராஸ்ல ரெண்டு வீடு இருக் காம். தமயந்திய முடிச்சிடலாம்."

"பையன் மெட்ராஸ்லே விலை போவாதவனா இருப் பான்... ஒருவேளை மாறுகண்ணா இருக்கலாம்!"

"இடக்குப் பேசாட்டா உமக்குத்தான் தூக்கம் வராதே! ஆம்பிள்ளைக்கு அழகு எதுக்கு? உமக்குக்கூடத்தான் மாறு கண்ணு. நான் சந்தோஷமா இல்லியா? நமக்கும் மெட் ராஸ்லே ஒரு ஆளு இருக்காண்டாமா?"

எவர்சில்வர் வியாபாரியின் மகனும், பிரபலமில்லாத வக்கீலுமான மோகனுக்கும்—தமயந்திக்கும் திருமணம் நிச்சயம் ஆனது. "ஒண்ணும் வேண்டாமுன்னு சொல்றத் துக்காக மாப்பிள்ளைக்கு எதிர்மாலையா பத்து கழஞ்சில ஒரு தங்கச்செயினு போடாண்டாமா?" என்று சின்னச்சாமி முறையிட, "கர்நாடகமுன்னு சிரிப்பாக" என்றாள் லட்சுமி.

தமயந்தி வக்கீல் மாப்பிள்ளை கிடைத்ததில் மகிழ்ந்து போனாள். லட்சுமி 'ஓசி'க் கல்யாணத்தில் உச்சி குளிர்ந் தாள். சின்னச்சாமி மாயமோ மந்திரமோ என்று மனங் குளிர்ந்தார்.

கல்யாணம் ஆகி இரண்டு மூன்று நாட்கள் ஆகியிருக்கும். மோகனின் தந்தை எவர்சில்வர் குடம் மாதிரி கம்பீரமாக உட்கார்ந்திருந்தார். சின்னச்சாமியும் லட்சுமியும், தமயந்தியும் மோகனும் ஜோடியாக உட்கார்ந்திருந்தார்கள்.

எவர்சில்வர்காரர் ''சின்னச்சாமி! கல்யாணச் செலவு எவ்வளவு ஆகியிருக்கும்?'' என்றார்.

''ரெண்டாயிரம் ரூபாய்க்கு மேல போயிருக்காது.''

''அப்படியா? இந்தாங்க ரெண்டாயிரம் ரூபாய்.''

''என்ன மாமா... நீங்க ஒண்ணும் வேண்டாமுன்னிங்க. இந்தச் செலவாவது என்னுதா இருக்கட்டும். உங்க மனசு யாருக்கு வரும்? பரவாயில்லை, வேண்டாம்...''

''அது தப்பு. பேசாம வாங்கும்... கல்யாணச் செலவு எங்க பொறுப்பு.''

''கை கூசுதுக...''

லட்சுமி 'இடைச்செறுகல்' ஆனாள்:

''பெரியவர் தர்றத ஏன் வேண்டாங்கிறீயரு? அவரு கையில வாங்குற புண்ணியத்திலாவது நம்ம வீடு விருத்தியாவட்டும்.''

சின்னச்சாமி வாங்கிக்கொண்டார். எவர்சில்வர் மாமா புன்னகை செய்துகொண்டார். பிறகு—

''மாப்பிள்ளை ஒரு விஷயம். எப்போ பாகப்பிரிவினை பண்ணலாம்?''

''என்னா பாகம்... என்ன பிரிவினை? மாமா சொல்றது புரியல...''

''புரிய வைக்கிறேன். ஒம்ம தங்கச்சியோட சொத்தை நீங்க பயிர் செய்றதுல எனக்கு ஆட்சேபணை இல்ல. ஆனால் கொண்டான் குடுத்தானுக்கிடையில 'இசுக்கு' இருக்கக்

கூடாது பாரும்... அதனால நாளைக்குக் கர்ணத்தை வர வழைச்சி சொத்தைப் பிரிச்சி மூணாவது மனுஷனிடம் குத்தகைக்கு விடலாமுன்னு நினைக்கிறேன்.''

''தங்கச்சிக்கு எதுக்குச் சொத்து?''

''அவளும் ஒங்க அப்பனுக்குப் பிறந்தவள்தானே... அவளுக்கும் சொத்துல பாத்தியதை உண்டுல்ல?''

லட்சுமி நிஜமாகவே குதித்தாள்:

''இந்த அநியாயம் எங்கேயாவது உண்டா? பொம் பிளைக்குச் சொத்து, நம்ம சாதில கொடுக்கது கிடையாது. வரதட்சணை வேண்டாமுன்னு சொல்லிட்டு நகை வேண்டா முன்னு சொல்லிட்டு... இப்போ சொத்துல பங்கு கேக்கிறது நியாயமா? அட பாழாப் போற கடவுளே...''

எவர்சில்வர் எகிறினார்: ''கப்பல்ல பொண்ணு வருது'ன்னானாம் ஒருவன். 'அப்படின்னா எனக்கு ஒண்ணு! என் அப்பனுக்கு ஒண்ணு'ன்னானாம் இன்னொருவன். உங்க கதை இப்படித்தான் இருக்கு! தமயந்திக்கு அப்பா அம்மா இல்லங்கறதுனால சொத்த அமுக்க முடியாது. நாளைக்கே பிரிச்சாகணும்...'

''இது அநியாயம்... அசிங்கம். நம்ம சாதிக்கு அடுக்காது. நேத்துகூட ரேடியோவில் வரதட்சணை வாங்கக்கூடாது, பொண்ணு வீட்டுக்காரங்கள சித்ரவதை பண்ணக்கூடா துன்னு சொன்னாங்க.'

எவர்சில்வர் மாமா மசியவில்லை:

''உன்னை மாதிரி நிறைய பேரு, இப்படித் தப்பா நினைக்கிறாங்க. வரதட்சணை வாங்கக்கூடாதுன்னா பொண்ணுக்குச் சொத்துல உரிமை கிடையாதுன்னு அர்த்த

மில்ல. வரதட்சணையைப் பற்றி பேசுறவங்களும் எழுதுறவங்களும் பெண்ணுக்குச் சொத்துரிமை இருக்கிறதை வற்புறுத்தாததால் வர்ற கோளாறு இது. ஏழைகிட்ட பணம் கேட்கிறது அரக்கத்தனம். ஆனால் இருக்கிறவங்ககிட்ட நியாயமா சேரவேண்டியத கேட்காதது மடத்தனம். நான் அரக்கனும் இல்ல... மடையனும் இல்ல!''

வக்கீல் மோகன் இப்போது மனைவியை 'இம்ப்ரஸ்' செய்ய நினைத்தவன் மாதிரியும், இதர நபர்களை 'ஜூரி' மாதிரியும் நினைத்துக்கொண்டு கைகளை ஆட்டி ஆட்டிப் பேசினான்:

''நீங்க ஏமாறல... தமயந்தியை ஏமாத்தப் பார்த்தீங்க. நாங்க உண்மையிலேயே பிறந்த மண்ணுல பிடி இருக்கணுங்கறதுக்காக, நகை பணத்தைப் பொருட்படுத்தாமல் பெண்ணை மட்டுமே பொருட்படுத்தினோம். ஆனால், இவள் கழுத்தில ஏற்கெனவே இருந்த நெக்லஸைக்கூட நீங்க கழட்டிக் கொண்டதாய் இவள் சொன்னபோது என்னால தாளமுடியல. எங்களை நீங்க ஏமாளியா நினைச்சது தெரிஞ்சுப் போச்சி இன்னொன்று—

ஒரு பொண்ணு புகுந்த வீட்டுக்குக் கம்பீரமாய் வரணும் முன்னா அவள் தன் நியாயமான சொத்தோடு வரணும். இல்லன்னா தான் ஏமாளியோன்னு அவளுக்குத் தாழ்வு மனப்பான்மைதான் வரும். தமயந்திக்கு அந்த மாதிரி மன நோய் வர நான் அனுமதிக்கமாட்டேன். இது வெறும் பொருளாதாரப் பிரச்னை அல்ல; பெண்களின் இன்னோர் உரிமைப் பிரச்னை. இ.பி.கோ...''

எவர்சில்வர் மாமா இடைமறித்தார்:

''சொத்தைப் பிரிச்சிக் கொடுக்காட்டால் இன்னும் ஒரு வாரத்தில் தமயந்தி சார்பில் பையன் வக்கீல் நோட்டீஸ் அனுப்புவான். அவன் பல கேஸ்ல தோத்திருக்கான். ஆனால் இந்தக் கேஸ்ல நிச்சயம் ஜெயிச்சிடுவான்!''

எவர்சில்வர், துண்டை உதறிப் போட்டுக்கொண்டார். மோகன் மனைவியின் மனநிலையை அவள் முகத்தில் பார்க்க முயற்சி செய்தான். தமயந்தியோ அண்ணனுக்கு மனம் நோகுமே என்ற வருத்தத்தை, அண்ணி மாட்டிக்கொண்ட மகிழ்ச்சியால் ஈடுகட்டிக் கொண்டிருந்தாள்.

சின்னச்சாமி லட்சுமியை இழுத்துக்கொண்டு 'மாட்டுத் தொழுவ'த்திற்குப் போனார். அவளால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று சாடுவதற்காக மனைவியை அழைத்துக்கொண்டு போனாரா? அல்லது ஆலோசனை கலப்பதற்காக அழைத்துச் சென்றாரா என்பது இன்னும் பத்து நிமிடத்தில் தெரிந்துவிடும்.

# செத்தாலாவது வாழலாம்

ஆலமரத்துப் பிள்ளையார் கோவிலுக்கருகே ராம லிங்கம் வந்தபோது, அங்கே பேசிக்கொண்டிருந்த நாலைந்து விவசாயிகளில் ஒருவர் ''கிராம சேவிக் ஐயா... ஒங்களைத் தான் தேடிக்கிட்டு இருக்கேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுமாதிரி வந்துட்டிய!'' என்றார். இன்னொரு டிராக்டர் விவசாயி, ''அவர கிராம சேவக்குன்னு சொல் லாதே மச்சான்! இப்போது அவரோட உத்தியோகத்துக்கு ஊர்நல அதிகாரின்னு பேராக்கும்'' என்றார்.

ராமலிங்கம் ''நீங்க வேற... பேரு பெத்தபேரு... வீடு பட்டினி! பழைய கருப்பன் கருப்பனேங்கற சமாசாரந்தான். இப்போ பேசிக்கிட்டு இருக்க நேரமில்ல. யூனியன் கமிஷனர் அவசரமா வரச்சொல்லியிருக்கார். போய்க்கிட்டே இருக் கேன்'' என்றார்.

''பொழுது சாஞ்ச நேரத்தில அப்படி என்ன வேல?''

''கமிஷனர் வரச்சொன்னாராம். எதுக்குன்னு எனக்கும் புயுயல.''

''ஒங்க கமிஷனரு காரணமில்லாமக் கூப்புடமாட்டார். நீங்க நம்ம ஹரிஜனன் ராமசுப்புக்கிட்ட விவசாயத் தொழி லாளிக்குக் குறைந்தபட்சக் கூலி சட்டப்படி ஏழேகால் ரூபாய். ஆறுரூபாய் கொடுத்தா வாங்காதேன்னு சொன்னி யளா?''

''சொன்னேன்.''

''நம்ம கண்டிராக்டர் வீடே கட்டல! அவர் கேட்கிற சிமெண்டைக் கொடுக்காண்டாமுன்னு கமிஷனர் காதைக் கடிச்சியளா?''

''கடிக்கல! சத்தம் போட்டுச் சொன்னேன் ''

''அங்கதான் விஷயமே இருக்கு. மிராசுதார் கிருஷ்ண சாமியும், காண்டிராக்டரும் போன வாரமே கலெக்டரைப் பார்த்து உங்களைப்பத்தி எதையோ எழுதிக் கொடுத்தாங் களாம்! எனக்கு என்னமோ...''

''இவன் எவண்டா இவன்! கிராம சேவக்கையா, நீங்க கவலைப்படாமப் போங்க.''

''எனக்காகக் கவலைப்பட நீங்க இருக்கும்போது நான் எதுக்காகக் கவலைப்படணும்?'' ராமலிங்கம் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு, பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்துக்குப் போனார். விஸ்தரிப்பு அதிகாரி முதல் ஆபீஸ் பியூன்வரை அனைவரும் அவரை அனுதாபத்துடன் பார்த்தார்கள். கமிஷனரை அவர் சீக்கிரம் பார்க்கட்டும் என்பதுபோல் வராந்தாவில் கும்பலாக நின்றிருந்த அவர்கள் அவருக்கு வழி விட்டார்கள்.

கமிஷனர் அவரைப் பார்த்ததும், நாற்காலியை நகர்த்திக்கொண்டே ''ஐ ஆம் ஸாரி மிஸ்டர்! ஒங்கள பட்டியாம்பட்டி யூனியனுக்கு மாத்தியிருக்காங்க. பி.ஏ. பீடிக்கு கால் போட்டுச் சொன்னேன். கலெக்டரே போட்ட ஆர்டராம்! மாத்த முடியாதாம்!''

ராமலிங்கத்தால் முதலில் மூச்சுக்கூட விட முடியவில்லை.

''ஸார்! இந்த இடத்துக்கு வந்து ஒரு வருஷம்கூட ஆகல்ல. அதுக்குள்ள மாத்துறதாய் இருந்தால் என்ன ஸார் அர்த்தம்! நான் என்ன தப்பு ஸார் பண்ணினேன்?''

"நீங்க தப்புப் பண்ணியிருந்தால் ஒங்கள மாத்தியிருக்க மாட்டாங்க! நீங்க விவ்சாயத் தொழிலாளிகளைக் கிளர்ச்சி பண்ணும்படியா தூண்டிவிடுகிறதாக் கலெக்டர் கிட்ட மனுப் போயிருக்கு; மாத்திட்டார். ஐ ஆம் ஸாரி. சத்தியமாய்ச் சொல்றேன், ஒங்களவிட எனக்குத்தான் வருத்தம்!"

"ஸார்! இந்த டெவலப்மெண்ட் இலாகாவுல சேர்ந்து இருபது வருஷமாகுது. இதுக்குள்ள முப்பது இடத்துக்கு மாத்திட்டாங்க. அப்பா மெட்ராஸ் ஆஸ்பத்திரியிலே சாகக் கிடக்காரு! மனைவி நோயில கிடக்காள். சொந்தத் தம்பி கிட்டச் சொல்றமாதிரி சொல்றேன். அன்றாடம் சாப் பாட்டுக்கே கஷ்டமாய் இருக்கு. அப்பாவுக்காக வாரத்துல இருபது ரூபாய் ஆயுடுது. அவளுக்கு சிஸேரியன் ஆபரேஷனைச் சரியாச் செய்யாததுனால குடல் சரிஞ்சிருக் கிறதா டாக்டர் சொல்றாரு! அவளை ஜிஹெச்லே சேர்க் கலாமுன்னு இருக்கேன். இதுக்காகவே கிரேட் ஒன்றுக்கு புரமோட் பண்ணி டிரான்ஸ்பர் செய்தப்ப புரமோஷன் வேண்டாமுன்னுட்டேன். இது தெரிஞ்சும் என்னை மாத்து னால் நான் என்ன சார் பண்றது?"

"நான் என்ன பண்ணட்டும்?"

"இது அநியாயம் ஸார்! பேமலி வெல்பர்ல முப்பத்தாறு பேர் டார்ஜெட் கொடுத்திங்க... 58 கேஸ் பிடிச்சிருக்கேன். சிறுசேமிப்புக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தீங்க. ரெண்டா யிரத்து நூறு வாங்கிக் கொடுத்திருக்கேன். பதினைஞ்சு கம்போஸிட் குழி போட்டிருக்கேன்! ஒரு கோபர் கேஸ் பிளாண்டுக்குப் பதிலா அஞ்சு பிளாண்ட் போட்டிருக்கேன்! நான் என்ன சொல்லி என்ன செய்யல! நீங்களே சொல்லுங்க ஸார்."

"நான் என்ன பண்ணட்டும்... அந்தக் காலத்திலேயே 'காய்ச்ச மரத்துலதான் கல்லு விழு'முன்னு பழமொழி இருக்கு. காய்ச்ச மரத்துல பழம் பறிக்கிறவன்மேல கல் விழுறதா ஒரு மொழியும் இல்ல! என்ன பண்றது... நீங்களும்

நானும் வேல செய்யறதுல மாடாய் இருக்கோம். காக்கா யாய் மாற முடியல! இந்தக் காலத்துல உழைக்கிறவன் அதிக மாய் உழைக்கிறதா உபத்திரவமாய் நினைச்சுக்கிறாங்க. மிராசுதாரையும் கண்ட்ராக்டரையும் பகைச்சுக்கிட்டீங்க. அவங்க சங்கை ஊத வேண்டிய இடத்தில ஊதி உங்களை.''

''ஸார்... நான் உங்களத்தான் நம்பியிருக்கேன்!''

''ஆல் ரைட். நீங்க ஒரு மாதம் லீவு போடுங்க. நான் சாங்ஷன் பண்ணிடுறேன். மனிதாபிமானத்தைக் கருதி, மாற்றல் உத்தரவை ரத்து செய்யும்படியாய் ஒரு மனுக் கொடுங்க. நான் ஸ்ட்ராங்கா எழுதறேன்... என்னத்த எழுதி என்ன பிரயோஜனம்? எங்க நியாயம் இருக்கு?''

ராமலிங்கம் தான் படும் கஷ்டங்களைச் சுட்டிக்காட்டி, அங்கிருந்து மாற்றப்பட்ட இடத்துக்குப் போனால் குடும்பத் தில் ஏற்படும் சிக்கல்களையும் கோடி காட்டி, அங்கேயே விடுமுறை விண்ணப்பத்தையும், கருணை மனுவையும் கொடுத்துவிட்டு, சலிப்போடு வெளியே வந்தார்.

ராமலிங்கம் எஸ்.எஸ்.எல்.சி. படித்ததற்கு இந்த ஆண்டு வெள்ளி விழா நடத்தலாம். அவர் கிராமத்தில் முதன் முதலாக எஸ்.எஸ்.எல் சி. படித்த ஐந்தாறு பேரில் அவரும் ஒருவர். அவரைத் தவிர இதர எஸ்.எஸ்.எல்.சி.க் காரர்கள் தாலுகா அலுவலகங்களில் கிளார்க்குகளாகச் சேர்ந்து இன்று பல கிளார்க்குகளை வைத்து வேலை வாங்கும் அதிகாரிகளாக இருக்கிறார்கள். ஆனால் இந்த மனிதர் கிராம முன்னேற்றம் சமூக சேவை என்று பத்திரிகை களிலும், அப்போதைய அமைச்சர்களின் வாய்களிலும் அடி பட்ட வார்த்தைகளில் மயங்கி பஞ்சாயத்து யூனியன் ஆபீசில் கிராம சேவக்காகச் சேர்ந்தார். அவரது இயல்பான பற்றற்ற ஒரே நிலையான குணத்தைப்போல் அதிகாரிகளின் வயிற்று வேகத்துக்கும் 'ஈகோ'வுக்கும் தீனி போடமுடியாத இவரது உத்தியோகமும் ஒரே நிலையில் இருந்தது.

வேலையில் சேர்ந்த ஒரு வருடத்துக்குள்ளேயே அலுவலகத்துக்கு வருகை தரும் மேல் அதிகாரிகளிடம் உள்ளதை உள்ளபடி சொல்லி அவர்களது சினத்தையும் யூனியன் அதிகாரிகளின் வெறுப்பையும் சம்பாதித்துக்கொண்ட இவர் ஒரு சமயம் லட்சிய மரத்தின் உச்சாணிக் கிளைக்குப் போய் அங்கே இருந்து உலுக்கப்பட்டுக் கீழே விழுந்தார். விழுந்தவர் விழுந்தவர்தான். இன்னும் எழவில்லை. அதாவது பஞ்சாயத்துக் கவுன்சில் ஹாலில் கூடிய கூட்டமொன்றில் ஒரு தலைவர் பாரதம் கிராமங்களில் வாழ்கிறது என்பதை மறக்கக்கூடாது' என்றபோது இவர் 'ஆனால் நாம் கிராமங்களில் சேரிகள் செத்துக்கொண்டிருப்பதை மறந்துவிட்டோம்' என்று ஆவேசமாகச் சொன்னபோது அந்த ஆவேசத்தில் ஆக்ரோஷமான அதிகாரிகளால் அவரது அந்தரங்கக் குறிப்பேடு வில்லங்கமாகியது.

இப்படிப்பட்டவர் காதலிக்காமலாவது இருந்திருக்கலாம். சொல்லப்போனால் அவர் காதலிக்கவே இல்லை. ஏகப்பட்ட சொத்திருந்த ஒரு பஞ்சாயத்துத் தலைவரின் வீட்டுக்கு உத்தியோக ரீதியாகப் போய்க்கொண்டிருந்த அவரை, அந்தத் தலைவரின் மகள் கண்ணால் அடித்தாள். இவருக்கும் ஆசை வரப் பார்த்தது. உடனே பயந்துபோய், சொல்லாமல் கொள்ளாமல் வேலையை வேறொரு யூனியனுக்கு மாற்றிக்கொண்டு அவர் போனபோது, அங்கே அவரை வரவேற்றது அந்தப் பெண், பஸ் நிலையத்திலேயே நின்றிருந்தாள். இவர் எவ்வளவு சொல்லியும் அவள் கேட்கவில்லை. திருமண விபத்துக்கு உள்ளாக்கப்பட்டார். மனைவி போட்டிருந்த முப்பது பவுன் நகைகளை இவர் பஞ்சாயத்து மாமாவிடம் சேர்த்துவிட்டு, லட்சிய இல்லத்தில் இறங்கினார். மகனுக்கு வசதியான இடத்தில் கல்யாணம் செய்து, இதர பிள்ளைகளையும் கரையேற்றக் கனாக் கண்டுகொண்டிருந்த இவரது தந்தை, பிள்ளை வேறே ஜாதியில் திருமணம் செய்ததை அறிந்து கொதித்து தந்தையே மகனுக்குக் 'கொள்ளி' வைத்தார். மகன் செத்துப்போய்விட்டதாக

அவர் பகிரங்கமாக அறிவித்தபோது, பஞ்சாயத்து மாமாவும் சம்பந்திக்குத் தானும் இளைக்காதவர் என்பதுபோல் மகளின் ஆடைகளை நெருப்பில் போட்டு அவரும் 'கொள்ளி' வைத்தார்.

எப்படியோ காலம் அந்தத் தம்பதியருக்கு 'கொள்ளிக்' கண்களைக் காட்டியது. பொதுவாக கிராம சேவக்குகள் ஆசிரியைகளை மணந்துகொண்டு 'டபுள்' சம்பளத்தில் உருவங்களும் 'டபுளாக' இப்போது கமிஷனர்களாக மாறிய போது, 'கமிஷன்' வாங்காத ராமலிங்கம் கண்ணேறுபடும் அளவுக்கு அப்படியே இருந்தார். சமீபத்தில்தான் நோய்ப் பட்ட தந்தையைக் கிராமத்தில் போய்ப் பார்த்து கட்டிப் பிடித்து அழுதுவிட்டு, பிறகு அவரைப் பெரிய ஆஸ்பத்திரியில் சேர்த்தார்.

ஒரு மாத விடுமுறையும் ராமலிங்கத்துக்கு ஓய்வு கொடுக் காமலேயே ஓய்ந்தது. குடும்ப நிலையை எத்தனையோ பேரிடம் எடுத்துக் கூறினார். அப்பாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கும் 'அட்மிஷன்' ரசீதையும் மனைவிக்கு 'மேஜர் ஆபரேஷன்' தேவைப்படும் என்று ஒரு டாக்டர் கொடுத்த நிஜமான சர்டிபிகேட்டையும் இணைத்து மீண்டும் கருணை மனுப் போட்டார்.

அவருடைய கருணை மனுவுக்குப் பலன் கிடைக்கவில்லை யானாலும் பதில் கிடைத்தது.

கமிஷனர் அவரைப் பார்க்க அவர் வீட்டுக்கே வந்தார். உடன்பிறந்த சகோதரன் போல் ராமலிங்கத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டே, "ஐ ஆம் ஸாரி தம்பி... நீங்க உடனே வேலையில் சேராவிட்டால் உங்க மேலே ஒழுங்கு நட வடிக்கை எடுக்கச் சொல்லி உத்தரவு வந்திருக்கு. நானும் உங்களுக்கு உடந்தைன்னு சொல்லி எனக்கும் மெமோ வந்திருக்கு. நாளைக்கு வந்து ரிலிவிங் ஆர்டரை வாங்கிக் கிறீங்களா?" என்றார்.

மறுநாள் ராமலிங்கம் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் போய், ரிலீவிங் ஆர்டரை வாங்கிக்கொண்டார். அவருக்காக வைத்திருந்த பிரிவுபசார நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். யூனியன் கட்டிடத்துக்கு வெளியே வந்தவர் ஒரு விவசாயியின் வேண்டுகோளை ஞாபகப்படுத்திக்கொண்டு டிப்போவில் போய், ஒரு டின் பூச்சி மருந்தை வாங்கினார்.

இரவுப் பொழுது பகலை விழுங்கிக்கொண்டிருந்தது.

வீட்டின் உள்ளறையில் வைத்திருந்த பூச்சி மருந்து டின்னை உரியவரிடம் சேர்ப்பிப்பதற்காக எடுத்தார்.

திடீரென்று ஒரு யோசனை.

இத்தனை ஆண்டு நேர்மையுடனும், நியாயத்துடனும் வாழ்ந்து என்னத்தைக் கண்டோம்? நியாயம் செத்துவிட்ட காலத்தில் எதற்காக வாழவேண்டும்? கழுதையும் குதிரையும் ஒன்றாகக் கருதப்படும் இந்த டிபார்ட்மெண்டில் எதற்காக இருக்க வேண்டும்? மனைவியை நல்லவிதமாகப் பராமரிக்க முடியவில்லை. அவள் வயிற்றுக்குள் குடல், அவர் மனம் மாதிரி சரிந்துகொண்டு வருகிறது. கடைசிக் காலத்தில் மகனைப் பார்த்துக்கொண்டே கண் மூடலாம் என்று ஆஸ்பத்திரியில் தவம் கிடக்கும் தந்தையை வாரத்துக்கு ஒரு முறைகூடப் பார்க்க முடியாது. நம்பி இருப்பவர்களை வாழ வைக்க முடியாத அவர் ஏன் வாழவேண்டும்? அப்படியானால் மனைவி மக்களின் சதி?

திடீரென்று இன்னொரு நினைவு.

இன்று முன்னைவிடப் பெருமளவு வசதியாக வேறொரு மாவட்டத்தில் இருக்கும் அவர் மாமனாரை இவருக்குப் பத்தாண்டுகளுக்குப் பின்னால் சேர்ந்து இப்பொழுது விவசாய விஸ்தரிப்பு அதிகாரியாக வேலை பார்த்தவர் பார்த்தாராம். பார்த்த கையோடு 'ஒங்க மகளும் பேரன் பேத்திகளும் ரொம்பக் கஷ்டப்படுறாங்க... கொஞ்சம்

உதவக்கூடாதா'' என்று கேட்டாராம். அதற்கு அந்த மாமனார் ''அவன் செத்தா போய்விட்டான்... நான் என் மகளுக்கு உதவறதுக்கு?'' என்று திருப்பிக் கேட்டாராம்!

ஒருவேளை நான் செத்தால்... இந்தப் பிள்ளைகளும் அவங்களைப் பெற்றவளும் வாழலாமோ... மாமனார் அவர்களைக் கூட்டிக்கொண்டு போய் வாழ வைக்கலாம். அதோட தநதையை வரவேற்கத் தான் ஏன் முந்திக்கக்கூடாது?

ராமலிங்கம் பூச்சி மருந்து டின்னின் வாய்ப் பக்கத்தை ஓர் ஆணியை வைத்து அடித்து ஓர் ஓட்டையை உண்டாக்கினார். 'கடவுளே என்னை மன்னிச்சுடு. இந்த நாற்பத்திரண்டு வயசில் பிறத்தியார் பொருளை இப்போதுதான் சாப்பிடுறேன்' என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்டே அந்த டின்னின் மரணப் பொந்தை அவர் வாய்க்கு அருகே கொண்டு போனபோது—

வீட்டுக்கு வெளியே, ஏதோ ஒரு மூலையில் இருந்து வந்த எருமை மாடு ஒன்று, யாரோ பின்னால் ஏறி உட்கார்ந்திருப்பதுபோல் முதுகைச் சிலிர்த்துக்கொண்டது.

# கதை இல்லாத நாயகி

திரைப்படப் பெரும்புள்ளிகளுக்கு மத்தியில், அவள் செல்லப்புள்ளியாய் நின்றாள். காதோரம் கறுப்பு டோலாக் காய் படர்ந்த முடிக்கற்றையை மேல் நோக்கி திருப்பிவிட்ட படியே ஒவ்வொரு புள்ளியையும் முற்றுப்புள்ளியாய் பார்த் தாள். இவர்கள் அத்தனைபேரும் இசை, நடிப்பு, இயக்கம், ஒளிப்பதிவு, எடிட்டிங் ஆகியவற்றில் பிரபல புள்ளிகள். அவள் ஒருத்திதான் 'ஒரு (க்)கால் புள்ளி'. அதனால்தானோ என்னவோ, கண்ணுக்கு எதிரே தோன்றினாலும் இவர் களுக்குக் காட்சியாகாத தெய்வப்படங்களையே பார்த்தாள்.

''முருகா! இந்தப் படம் நூறு நாள் ஓடணுமுன்னு ஒன் அண்ணன்கிட்டே சொல்லு... விநாயகா! இந்தப்படம் வெற்றி விழா கொண்டாடணுமுன்னு ஒன் தம்பிக்கிட்டே சொல்லு.''

அவள், தனக்குள்ளே புன்னகைத்தாள். வித்தியாசமான வளாய் மாறப்போவதால் இப்படி வித்தியாசமான வேண்டுதல் தோன்றுகிறதோ என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். 'எல்லாம் இந்தச் சந்திரனாலே... இவர் எழுதுற வசனங்களைப் பேசிப் பேசி இப்போ சிந்தனை கூட அவர் நடையிலேயே வருது' என்று மனதுக்குள் பேசிக் கொண்டே அவனைக் குறும்புத்தனமாகப் பார்த்தாள். குறுந்தாடியும், ஜோல்னா பையும் கொண்ட, 'அறிவுஜீவி' யான அந்தச் சந்திரன் 'கை கொடுப்பார்கள்' என்று நினைப் பவர்களுக்குக் கைகொடுத்துக் கொண்டிருந்தான்.

அவள் மனத்திரைக்குக் கீழே லட்சோப லட்சம் மக்கள் மூச்சையடக்கியதுபோல், அசைவற்று அவளைப் பார்க்கிறார்கள். அவள் அழும்போது சிரிக்காமலும், சிரிக்கும் போது அழாமலும் 'அவளாகவே' மாறுகிறார்கள்.

இந்தத் திரை விலகி, இன்னொரு திரை வருகிறது.

அவள் 'அவார்ட்' வாங்குகிறாள். டி.வி.யில் பேட்டி கொடுக்கிறாள். செய்தியாளர்களிடம் பேசுகிறாள்.

மனத்திரையில் தெய்வங்களுக்குப் பதிலாக, தன்னையே வேறு வேறு ரூபங்களாக ஆராதித்தும், ரசிகர்களை பக்தர்களாக அனுமானித்தும் ''அகமாகிப்போன'' தமிழ்ச்செல்வி, கூட்டத்தில் சலசலப்புக் கேட்டு கண் திறக்கிறாள். சுற்றும் முற்றும் பார்க்கிறாள். ஒரு பிரபல நடிகையின் பிரவேசத்தால் கூட்டம் அமளிப்படுகிறது. கூடை சுமந்த தோழியோடு வந்த அந்த நடிகையை, செய்தியாளர்கள் சுற்றிக்கொள்கிறார்கள். நாட்டின் மிகப்பெரிய பிரச்னையான அவளது விவாகரத்து கிசுகிசுப்புப்பற்றி கேட்கப் போகிறார்கள். அவள், யார் கதாநாயகி என்று கேட்டிருக்க வேண்டும். இல்லையானால் அந்த நடிகையின் வாயையே பார்த்தவர்கள் தமிழ்ச்செல்வியை ஒட்டு மொத்தமாக அப்படிப் பார்த்திருக்க மாட்டார்கள்.

அந்தம்மா பார்த்த பார்வையில் தமிழ்ச்செல்வி பயந்து போகிறாள். கண்களை மூடுகிறாள். முன்பு தோன்றிய மனோ 'பாவங்களை' மூழ்கடித்து, தெய்வப்படங்களை உலா விடுகிறாள். இந்தப்படங்களும் மறைந்து இன்னொரு படம், ஒற்றை உருவமாய் வருகிறது. சந்திரனின் உருவம். ஆமாம், அவன்தான். அவனே தெய்வம். அல்லது இந்த தெய்வங்களின் மனித ரூபம். இந்தச் சந்திரனுக்கு 'விடமாட்டோம்' என்ற நாடகம் பல புரட்சி நாடகங்களில் ஒன்றுதான்.

ஆனால் அவளுக்கோ அது முதல் நாடகம். திரையுலகப் பிரவேசத்திற்கு 'முதலான' நாடகம். கடந்த பத்தாண்டு காலமாக எக்ஸ்டிரா நடிகையாய் கும்பல் நடனக்காரியாய் நடித்தும், துடித்தும் அலுத்துப்போனவளுக்கு இந்தச் சந்திரன்தான் நாடகத்தில் நாயகி வேடம் கொடுத்தான். வேடம் என்றால் எப்படிப்பட்ட வேடம்? சப்-இன்ஸ்பெக்டர் காதலன், ஏழை பாளைகளை அடிக்கும்போது அவனுக்கு எதிராக போர்க்கொடியான ஒரு பெண் கொடி வேடம். காதலை குப்பையில் போட்டுவிட்டு, குப்பையோடு குப்பை யாய் வாழும் மக்களுக்காக புரட்சிக்காரியான வேடம்.

இந்த நாடகமே இவளால்தான் உயிர் பெற்றதாய் பத்திரிகைகள் சொல்லின. இதைச் சந்திரனே சொன்னான். இருக்கட்டுமே... சுவரில்லாமல் சித்திரமா? இந்தச் சந்திரன் இல்லாமல் தமிழ்ச்செல்வியா? தயாரிப்பாளர்களிடம் தமிழ்ச் செல்வியை சிபாரிசு செய்தவன் தனக்குக் கடவுளாக இல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்?

தமிழ்ச்செல்வியை அவள் அம்மா அப்போதுதான் பெற்றுப் போட்டதுபோல், பெருமிதத்துடன் பார்த்தாள். பலர் முன்னிலையில், அது தன் பிள்ளை என்று ஒப்புக் கொள்ள நாணப்படும் தலைப்பிள்ளைக்காரிபோல, பாராதது போல் பார்த்தாள்.

''ஏம்மா... பித்து பிடிச்சதுமாதிரி நிற்கே! பெரிய பெரிய ஆக்டருங்க வந்திருக்காங்க. நாடறிஞ்ச நடிகைகள் நிற் காங்க. அவங்களுக்கெல்லாம் வணக்கம் போடும்மா...''

தமிழ்ச்செல்வி அம்மாவின் பேச்சுக்கு அடாவடித்தன மாகத்தான் குரலை உயர்த்தி, அம்மாவுக்கு முகம் காட் டாமலே பேசுபவள். இன்றைக்கோ அந்த அன்னையின் முகம் கோணிட, மகள் மாறிவிட்டாள் என்று தப்புக்கணக்கு போட்டுவிடக்கூடாது என்று பயந்தவளாய், அம்மாவின் மோவாயைத் தாங்கியபடியே பதிலளித்தாள்.

''இந்த பில்டப் பற்றி ஒனக்குத் தெரியாதும்மா. படம் வருவது வரைக்கும் நாம் யாருன்னு தெரியப்படாது... இப்போ எல்லாருக்கும் ஒட்டுமொத்தமாய் வணக்கம் போட்டால் 'அம்மா பேட்டி கொடுக்க வாராங்களோ'ன்னு சிரிப்பாங்க! தனித்தனியாய் போட்டாலோ, 'அவனுக்கு எவ்வளவு உயரமாய்க் கையைத் தூக்குனே! எனக்கு மட்டும் இவ்வளவு உயரமா'ன்னு கேள்வி வரும். அதோட 'நான் கதாநாயகியாயிட்டேன்னு காட்டுறியாக்கும்! எக்ஸ்டிரா'ன்னு சொல்வானுக... அதனாலதான் இப்படி பேசா மடந்தை மாதிரி...'

பூஜை மணி நாதமாகி, ஆங்காங்கே பேசிக்கொண்டிருந்தவர்களின் வாய்களைக் கட்டி, அவர்களின் கண்களைப் பூஜைப் படங்கள் பக்கம் திருப்பிவிட்டது உடனே அத்தனை புள்ளிகளும், ஞானப்புள்ளிகளாயின. அர்ச்சகர் ஒரு தட்டில் காட்டிய கற்பூர ஒளியையும், மறு கை அடித்த மணியோசையையும் கண்டும் கேட்டும் முகங்களை உப்ப வைத்தார்கள். உடம்பைக் குலுக்கிக் கொண்டார்கள்.

டைரக்டர் சந்திரன் தயாரிப்பாளர் காலில் விழுந்தான். அவரோ டிஸ்ட்ரிபியூட்டர் காலில் கை போட்டார். டிஸ்ட்ரி பியூட்டர் 'பைனான்சியர்' காலில். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு காலில் கைபோட்டு நான்கு கால்கொண்ட கூனர்களாய் ஆகிக் கொண்டிருந்தபோது, கும்பிடத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டவர்களும் பையில் மட்டுமே கை போடுபவர்களும் போகப்போக, கூட்டம் கரைந்து நான்கைந்து ஆட்களாயிற்று.

தமிழ்ச்செல்வி நிமிர்ந்துதான் நடந்தாள். சந்திரனை நோக்கித்தான் சென்றாள். அவனை அடிக்கப்போகிறவள் போல்தான் போனாள். பிறகு அவன் கால்களை கைகளால் பற்றி கரங்களை எடுக்க மனமின்றி இயல்பாய் குனிந்தபடியே நின்றபோது சந்திரன் அவளைத் தோளோடு சேர்த்து

தூக்கி நிறுத்தினான். லிப்ஸ்டிக் கலப்படமில்லாமல் துடித்த உதடுகளையும் மைவேலி போடாத கண்களையும் உற்று நோக்கினான். அந்த அழகில் ஒரு மயக்கம் ஏற்படுவதற்குப் பதிலாக அவன் சுதாரித்தவன்போல் சொன்னான்.

"இன்றைக்கு முதல் டேக் இருக்கிறத மறந்துட்டியா... சீக்கிரமாய் மேக்கப் போட்டுட்டு வா!"

"நான் ரெடி சார்!"

"டயலாக் மனப்பாடம் ஆயிட்டுதா."

"ரெண்டே ரெண்டு வரி! அதுவும் நாடக வரி... மறக்க முடியுமா?"

"முடியாதுதான்... ஆனாலும் சொல்லு பார்க்கலாம்."

"ஒரு போராட்டத்துல தாக்குறது முக்கியமில்ல! தாக்குப் பிடிக்கிறதே முக்கியம்."

"ஓ ஐ அம் ஸாரி! சொல்ல மறந்துட்டேன். பஸ்ட் டேக்... புரட்சிக் கூட்டமில்ல! உன்கிட்டே காதலன் வருவான். உடனே நீ 'இன்று நல்ல நாள், இனி என்றும் வெற்றி நாள்'னு சொல்லணும்."

"முதல் சிட்சுவேசனும் டயலாக்கும் நல்லா..."

"சொல்றதை செய்! நான் இப்போ டைரக்டர். சந்திரன் செத்துட்டான். ஐ அம் ஸாரி... அவன் இல்ல. எடுத்த எடுப்பிலேயே போராட்டம், தாக்குறதுன்னு வசைச் சொல் வரக்கூடாது."

தமிழ்ச்செல்வி, அவனை ஒரு மாதிரிப் பார்த்தாள். புரட்சி நாடகாசிரியன் வறட்சி சினிமாக்காரனாகிவிட்டாரே என்பதுபோல் பார்த்தாள். கடந்த மூன்று மாதகால திரைக் கதை—டிஸ்கஷன் போன்ற வெண்டைக்காய் சமாச்சாரங்களால், அவன் மாறிவிட்டதுபோல் ஒரு பார்வை.

மேக்கப் அறைக்குள் நுழைந்ததும், ''ஒங்களுக்கு மேக்கப்பே தேவையில்லம்மா'' என்றார் மேக்கப்பர். 'தேவையில்லப்பா' என்றுசெல்லமாகச் சொல்லப்போனவர், அவள் பார்த்த பார்வையில் கன்றுக்குட்டிமாதிரி 'மா' போட்டார். பிறகு ஒரு அறைக்குள் அவளைப் போகச் சொல்லி வாயில் புடவையைக் கட்டச்சொன்னார். உள்ளே வந்தவளை சுழல் நாற்காலியில் உட்கார வைத்தார். நிலைக்கண்ணாடி முன்னால் இருந்த விதவிதமான கண்ணாடி டப்பாக்களை உருட்டி, திரட்டி அவள் முகமெங்கும் தேய்த்தார். பிறகு ரோஸ் பவுடரைப் போட்டார். ஒரு பட்டுத்துணியால் தேய்த்துவிட்டார். கண்ணுக்கு மை போட்டு ஒற்றைவால் ஜடையை குதிரைக் கொண்டையாக்கினார். உதவிப் பேராசிரியை ஆயிற்றே... சும்மாவா.

மேக்கப்மேனின் பார்வைக் கோளாறு பதிப்பித்த ஆசிரியையாக தமிழ்ச்செல்வி வெளிப்பட்டாள். உருவமும், உடையும், செயற்கையானது போன்ற எண்ணம். ஆனாலும் அது தொலைவில் தெரிந்த காட்சியைக் கண்டதும் இயற்கைக் கூத்தாகியது. தமிழ்ச்செல்வி வெட்டுக்கிளிபோல் துள்ளி நடந்தாள். சிட்டுக்குருவியாய் தாவித்தாவி நடந்தாள். நிஜத்தை நிழலால் சரிப்படுத்தியபடியே முயல் பாய்ச்சலாய் போனபோது—

காமிராக்காரர், ஷோல்டர் ஷாட்டுக்காக உதவியாளர் தோளில் காமிராவைச் சுமத்தி கண் குவித்துப் பார்க்கிறார். லைட்டிங் பையன் சாம்பல் நிறத்தகடு மாதிரியான ஒருச்சாண் நீள வஸ்துவை தூக்கிப் பிடிக்கிறான். இன்னொருத்தன் கரும்பலகை மாதிரியான ஒன்றில் வெள்ளை எழுத்துக்களோடு நிற்கிறான். இவர்களுக்கு முன்னால் கதாநாயக நடிகர் புல்வெளியில் உலாத்துகிறார். தமிழ்ச்செல்விக்கு நிஜமாகவே காத்திருப்பதுபோல் அவளையே பார்க்கிறார். இயக்குநர் சகல மரியாதைத்தனங்களோடு நீட்டும் காகிதத்தைப் பார்க்காமலே நடந்து வருபவளையே உறுத்தலாய்ப் பார்க்கிறார்.

தமிழ்ச்செல்விக்கு அவர்களைக் காக்கவைக்கப் பிடிக்கவில்லை. அவர்களை நோக்கி ஷைனி ஆப்ரஹாம் மாதிரியே ஓடுகிறாள். அதென்ன இன்னொருத்தி? அடடே நடிகை நந்திகுமாரி! இவங்களுக்கு இங்கென்ன வேலை? சந்திரன் அவளிடம் ஒரு காகிதத்தை நீட்ட, அவள் அதை அவன் கையில் வைத்தபடியே படிக்கிறாள். அப்புறம் சிரிக்கிறாள். அப்போதுதான் நடந்து பழகுபவள்போல் காமிரா முன் நடந்து காட்டுகிறாள். சந்திரனிடம் பேசிக் காட்டுகிறாள்.

தமிழ்ச்செல்வி, பி.டி. உஷாவாகிறாள். எதிர்த்திசையில் உஷாரில்லாமல் போன தன் மகளை நோக்கி அம்மாக்காரி கிழட்டு வேகத்தோடு ஓடிவருகிறாள். காய்ந்த அந்த உடம்பு காற்றடித்த சருகாக மகளிடம் ஒட்டிக்கொள்கிறது. அத்தனைபேர் காதுகளும் உள்வாங்கும்படி வாய் ஓலமிடுகிறது.

""பாவி மகளே மோசம் போயிட்டோமேடி... மோசம்! அடேய் அடுத்துக் கெடுத்த பயலே! ஒன் நாடகம் பேர் வாங்குனதுக்கு என் மகளோட நடிப்புதானடா காரணம்! இவளால ஓடுன ஒண்ணுல இருந்து இவளையாடா ஓட வைக்கே! நீ உருப்படுவியா... இந்த ஒரு படத்தோட நீ ஓடு எடுக்கிறியா இல்லையான்னு பாரு! ஏய் தடிமாடு எங்கேடி போறே!""

தமிழ்ச்செல்வி அம்மாவை அப்புறப்படுத்திவிட்டு, அவளை அரைவட்டமாய் ஒரு சுற்றுச் சுற்றி தன் ஆவேசத்தைக் காட்டிவிட்டு, படப்பிடிப்பு இடத்திற்கு நிதானமாய் நடக்கிறாள். போய்ச் சேர்கிறாள். அவளுக்கு முதுகைக் காட்டியபடி 'பிஸியாக' நின்ற சந்திரனின் தலையில் தட்டுகிறாள். திரும்பிப் பார்ப்பவனிடம் 'ஒரு நிமிஷம்' என்கிறாள். இருவரும் ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு வந்ததும், சந்திரன் அமாவாசையாகி தனிமைப்படுகிறான். அப்புறம் ஒப்பிக்கிறான்.

''ஐ அம் ஸாரிம்மா! புதுமுகத்தைப் போட்டால், அதுவும் தமிழ்ப்பெண்ணைப் போட்டால் படம் ஓடாதாம். டிஸ்ட்ரிபியூட்டரும், பைனான்சியரும், புரட்யூஸர்கிட்டே கண்டிப்போடு சொல்லிட்டாங்களாம்! ஒனக்கு செகண்ட் ரோல் கொடுக்கணுமுன்னால் ஏற்கனவே மஞ்சுவை...''

''நீங்க கொடுத்தாலும் நான் வாங்கிக்க மாட்டேன். என்னோட ஏமாற்றம் மஞ்சுவுக்கு வரப்படாது. குறைந்த பட்சம் என் மூலம்.

''நீங்களும் முட்டாள்தனமாய் பேசுவீங்க... ஆனால் நான்தான் ஆமாம் போடமாட்டேன்!''

தமிழ்ச்செல்வியால், தன் சுயமரியாதை பாதிக்கப்பட்ட பாவலாவில் சந்திரன் அவளைக் கோபமாகப் பார்க்கிறான். அங்கே தான் நின்றால், அவளுக்குத்தான் ஆபத்து என்பது போலவும், அதை தான் விரும்பவில்லை என்பதுபோலவும் அவன் அவளுக்கு புறமுதுகு காட்டி நடக்கிறான்.

தமிழ்ச்செல்வியும் நடக்கிறாள். திரும்பிப் பாராமலே திரும்பி நடக்கிறாள்—அம்மாவுக்கு தடிமாடாய்; திரையுலகின் எக்ஸ்டிரா நடிகையாய்.

❋

# பாசப் பிரிவினை

கிழவர் தன் கால்களை லேசாக, வேண்டுமென்றே ஆட்டி அவளைத் தாலாட்டுகிறார். அந்தத் தாலாட்டோடு கூடவே பாட்டு ஒலிக்கிறது. ராகம் இல்லாத பாட்டு.

"செல்லக் கோபத்தை பொறுமையாக்கிப் பழகணும்பா! இதுக்குல்லாம் நீதாம்பா காரணம்... நீதான் என்னைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிட்டே! வீட்ல அரிசி இருக்கோ இல்லையோ, எங்கேயாவது இரவல் அரிசி வாங்கி எனக்கு வேளா வேளைக்கி, ஆக்கிப்போட்டு எனக்குப் பசியே இல்லாமல் பண்ணிட்டே! முகத்தைப் பார்த்தே பசியறிந் தவள் நீ! இப்போ பசியறிந்தும், முகத்தைப் பார்க்க ஆளில்லாத நிலையில கோபம் வரத்தான் செய்யும். என்னப்பா செய்யச் சொல்றே... கருணை செய்யுற இயற்கை இந்த வயித்தையும், இன்னும் அதிகமாய் குறைத்து கருணை பண்ணியிருக்கணும். இல்லன்னா நீயாவது அப்போவே... பசியில விட்டு எனக்குப் பயிற்சி கொடுத்திருக்கணும். மகனும், மருமகளும் கொடுக்கிற ஒரு வருடப் பயிற்சி நீ கொடுத்த நாற்பத்தஞ்சு வருஷப் பயிற்சிய ஒண்ணும் பண்ண முடியல! இதை இப்போ கோபமாச் சொல்லல... குறையாத் தான் சொல்றேன்."

அந்த முதுமைகள் இரண்டும் ஒன்றுக்கு ஒன்று ஆதரவு சொல்வதுபோல் ஸ்பரிசங்களால் இயலாமை உணர்வுகளை எழுப்பிக்கொண்டே முடங்கிக் கிடந்தார்கள். சென்னையில்

தனியார் கம்பெனி ஒன்றில் எடுபிடி ஆளாகச் சேர்ந்து தனிப் பட்ட முறையில் படித்து உதவி நிர்வாக அதிகாரியாக 'ரிடயரானவர்'. மூன்று மகள்களையும் இரண்டு மகன்களை யும், கல்லூரிகளுக்கு அனுப்பி வைத்தவர். அவர்கள் இப்போது நலல நிலைமையில் இருப்பதைக் கண்குளிரப் பார்க்கிறவர். அவர்களால் இவருக்கு கண்தான் குளிர்ந்தது. வயிறு குளிரவில்லை. கிராமத்தில் கொஞ்சம் நிலபுலன் இருந்தது. கம்பெனியில் இருந்து விடுபட்டதும், பிள்ளை களும் விடுபட்டார்கள். ஆகையால் கிழவர் மனைவியுடன், சொந்தக் கிராமத்திற்குச் சென்று குத்தகைப் பணத்தையும் பிள்ளைகள் அனுப்பிய பணத்தையும் வைத்து காலத்தைக் கடத்தினார்கள். காலத்தை அவர்கள் கடத்தினார்களே தவிர, அவர்களைக் காலம் கடத்தவில்லை. 'அம்மா... அப்பா மண்டையைப் போட்டதும், கிராமச் சொத்துக்களை விற்கலாம்' என்று காத்திருந்த மகன் மகளுக்கு பொறுமை போய்விட்டது. கிராமியச் சொத்துக்கள் விற்கப்பட்டன. மகள்கள்—அம்மா காலமான பிறகும் அவளின் நினைவுச் சுவடுகள் நெஞ்சில் இருக்கவேண்டும் என்று நினைத்து தாய்க் காரியின் நகைகளை பிடுங்கி இப்போது தத்தம் நெஞ்சுக்கு மேல் காட்டிக்கொள்கிறார்கள்.

ஓராண்டுக்கு முன்பு இங்கே வந்தார்கள். தலைப் பிள்ளை தந்தைக்கு இன்பம் என்பார்கள். அது எப்படியோ கிழவருக்கு அது பொருந்தும். மகன் அருகிலேயே இருக்கப் போகிறோம் என்று சந்தோஷமாகத்தான் வந்தார். 'மூத்தவள் ஒரு மாதிரியாச்சே' என்று இழுத்த கிழவியை, இழுத்துக்கொண்டே வந்தார். மூத்த மருமகளை சும்மா சொல்லக்கூடாது. ஜாடை மாடையாகக்கூடத் திட்ட மாட்டாள். அவர்களைப் பார்த்ததும், சாமான்களை எடுத்து வீசியெறியக்கூட மாட்டாள். நல்லவள்தான்! ஆனால் இவர்களிடம் பேசமாட்டாள். 'சாப்பாடு போதுமா' என்று ஒப்புக்குக்கூட விசாரிக்கமாட்டாள். இவர்கள் வெளியே நின்றால், சினிமாவுக்காகப் புறப்பட்டு வெளியே

வருபவள்கூட உள்ளே போய்விடுவாள். அவ்வளவு அடக்கம். பின்வாசல் இருந்தது. அவள் 'அடக்கத்தை' பெர்மனண்டாக்கியது. இவர்களுக்கு தலைவலி, வயிற்றுவலி வந்தால்... உயிர்போவதுபோல் முதுமைக் காட்டேரி எட்டிப்பார்த்தால் அப்போதும் அடக்கத்தை விட்டுவிட மாட்டாள். டாக்டர் பார்க்க வேண்டிய விவகாரத்தை இவள் பார்க்கலாமா... அப்புறம் ஏதாவது ஏற்பட்டு இவர்கள் இறந்துவிட்டால்... டாக்டர் வருவாரா?

எதற்கு? பழைய காலத்துக் கட்டைகள் நாட்டு வைத்தியத்தில் பழக்கப்பட்டவை. சுக்கு, மிளகு, கேட்கும்போது கொடுப்பாள்— மகள் மூலமாக; மகன் மூலமாக. அவள் வருவாளா? வரலாமா? பெரியவர்கள் முன்னால் ஒரு சின்னவள் அடக்க ஒடுக்கம் இல்லாமல் வரத்தான் முடியுமா?

கிழவரும், கிழவியும் தங்களைச் செத்ததாக நினைத்துச் செயல்பட்ட மருமகளால் ஆரம்பக் காலத்தில் துணுக்குற்றார்கள். அவர் அவர்கள் அங்கே இல்லாததுபோல் செயல்பட்டாலும் அவர்களால் அவள் இல்லாததுபோல் நினைக்க முடியவில்லையே... ஆரம்ப காலத்தில் இவர்களும் வீட்டுக்குள் போய் எல்லோருடனும் சேர்ந்து டைனிங் 'டேபிளில்' சாப்பிட்டார்கள். ஒருநாள் மகன், "ஒங்களுக்கு ஏன் சிரமம்? தள்ளாத வயசுல... ஏன் கஷ்டப்பட்டு நடக்கணும்... சாப்பாடு... இனிமேல் அங்கே வந்திடும்" என்று சொன்னபோது மருமகள் ஒரு மர்மப் புன்னகையை மலரவிட்டாள். அப்புறம் சாப்பாடு லேட்டாக வரத் துவங்கியது. உள்ளே உள்ள டைனிங் டேபிளில் உட்கார்ந்திருப்பவர்கள், அதைக் காலி செய்த அரைமணி நேரத்திற்குப் பிறகே இவர்களின் காலி வயிறு நிரம்பும்.

ஆனால் இன்று போலில்லை. இரவு மணி பத்துக்கு மேலாகிவிட்டது. இன்னும் அவர்கள் சாப்பிட்டது மாதிரி தெரியவில்லை. சாப்பிடும்போது இப்படி பெரிய சத்தம்

போட முடியாது. திடீரென்று உள்ளே சத்தம் கூச்சலானது போல் கேட்டது. சின்ன மகனும், பெரிய மகனும் தத்தம் மனைவியுடன் அணிவகுத்து எதையோ, கூக்குரலுடன் வாதிடுவதுபோல் கேட்டது. 'அப்பா அம்மா... எனக்கு மட்டும் என்ன தலையெழுத்து' என்பது போன்ற வார்த்தைகள் கிழவருக்குக் கேட்கவில்லை. கிழவிக்குக் கேட்டது. அவரது காலில் பதிந்த தன் முகத்தை லேசாக நிமிர்த்திக் கொண்டே கிழவி ஒரு சந்தேகத்தைக் கேட்டாள்;

"ஏங்க... கொஞ்சம் பசியை மறந்துட்டு நான் சொல்றதக் கேளுங்க... நாம செத்துட்டோமா?"

கிழவர் திடுக்கிட்டு பின்புறமாக மடித்து வைத்திருந்த கைப்பின்னலோடு தலையை நிமிர்த்தினார்.

"இல்ல உங்க செல்ல மகனுக, அப்பா அம்மான்னு கூப்பாடு போடுறது மாதிரி இரையுறாங்க. நாம செத்தால் தானே! இந்த மாதிரி வார்த்தைங்கல்லாம் அவங்க வாயில வரும்... அதனால கேட்டேன்!"

கிழவர் முணுமுணுத்தார்.

"ஒனக்கும் பசிக்க ஆரம்பிச்சுட்டா? ஆமாம் நீ மட்டும் மனுஷி இல்லையா?"

"ஏங்க... என்னைப் பார்த்துச் சொல்லுங்க. ஒருசமயம் ஒங்கம்மாவுக்கு சாப்பாடு போட செத்தே லேட்டா யிட்டுன்னு என்ன குதி குதிச்சிங்க? லேட்டுன்னா பத்து நிமிஷ லேட்டு. இப்போ நம்ம பிள்ளிங்க எப்படி உள்ளே குதிக்காங்கன்னு பாருங்க! குதிக்கிற குறிக்கோளே மாறு னப்போ... நீங்க காலம் மாறலன்னு சொல்றீங்க!"

"கண்ணு கூசுது. விளக்கை அணைப்பா!"

"உங்க கண்ணு வெளிச்சத்தால கூசல... பசியால் சொருகுது."

கிழவர் எதுவும் பேசவில்லை. கைப்பின்னலால், அம்பு முனைபோல் வடிவெடுத்த முழங்கை முனைகள் இரண்டையும் வைத்து கன்னங்களை இடித்துக்கொண்டார். பெரிய மகன் இப்போதெல்லாம் பேசுவதே இல்லை. பேரப் பிள்ளைகள் வருவதே இல்லை. வெளியே போகும்போது எப்போதாவது நின்ற இடத்தில் நின்றபடியே உள்ளே எட்டிப் பார்க்கும் பெரியவன், பெற்றோரை தான் பெருமையாய் வைத்திருப்பதுபோலவும், இந்தக் காலத்து மற்ற மகன்களைப்போல். தான் ஒன்றும் அப்படி உதவாத மகனாக உருவெடுக்கவில்லை என்றும் நினைப்பதுபோல், தோளை ஒரு குலுக்குக் குலுக்கிக்கொண்டு போகிறான். மதுரையில் இருந்து பத்து நாளைக்கு முன்பு வந்த சின்ன மகனும், அவன் மனைவி மக்கள் சகிதங்களும் ஒரு பத்து நிமிடம்கூட முகம் பார்த்துப் பேசவில்லை. இவள் சொல்றது மாதிரி காலம் கெட்டுப் போயிட்டோ?

அந்த முதியவள் எழுந்து விளக்கை அணைத்தாள்.

உள்ளே குரலொடுங்கியது போலிருந்தது. பிறகு பாத்திரச் சத்தங்கள் கேட்பது மாதிரி இருந்தது. சிரிப்பில்லை. ஒருவேளை சிடுசிடுப்பான மௌனமோ...

இரவு பதினொரு மணிக்கு பேத்தி பாமா, சாப்பாட்டுத் தட்டுக்களோடு வந்தாள். "இன்னைக்கு மட்டுமாவது அவன் கொண்டு போகப்படாதா... இந்த வீட்ல இந்த வேலைக்கும் நான்தானா" என்று அவள் கத்திக்கொண்டே வந்தது பாட்டிக்கு நன்றாகவே கேட்டது.

பாமா ஸ்விட்சைத் தட்டினாள். ஸ்டூலில் சாப்பாட்டுத் தட்டுக்களை வைத்தாள். பிறகு அவர்களை இரக்கமாகப் பார்ப்பதுபோல் பார்த்தாள். பீடிகை போட்டுப் பேச வேண்டிய விவகாரத்தை எடுத்த எடுப்பிலேயே சொன்னாள். அவளுக்கும் அவசரம். பின்பக்கத்து வீட்டில், ரவி

இப்போதான் மொட்டை மாடிக்கு வந்திருக்கான். இவ ளுக்கும் கொல்லைப்புறப் பக்கம் கொஞ்சம் வேலையிருக்கு. பாமா பட்டென்று சொன்னாள்:

''சீக்கிரமா தூங்குங்க. அப்பா, ஒரு விஷயத்தை ஒங்க கிட்டே 'கன்வே' பண்ணச் சொன்னாங்க. அங்கிளும் டாடி யும், நீண்ட நேர 'வாருக்கு' அப்புறம் ஒரு 'டிஸிஸனுக்கு' வந்துட்டாங்க. நீங்க ரெண்டு பேர்ல ஒருத்தர் மதுரைக்குப் போகணுமாம். யார் மதுரைக்குப் போறதுன்னு இதுலயும் ஒரு 'வார்' வந்தது. அப்புறம் தாத்தா அங்கிளோட போற துன்னு முடிவாயிட்டு. ரெண்டுபேரையும் ஒருத்தரால பார்க்க முடியாதுன்னு அப்பா சொன்னதை அங்கிள் அரை குறையா ஒத்துக்கிட்டார். ஓ.கே... தாத்தா காலையில ஒன்பது மணிக்குப் புறப்படணுமாம். டிரஸ்கள எடுத்து வச்சுக்கணுமாம்...''

பாமா பேசியபோது, தட்டில் கைவைத்த பெரியவர், அசரீரியாய் ஒலிப்பது போலிருந்த அந்த வார்த்தைகளை உற்றுக் கேட்பதுபோல் தன் உடம்பையும், உட்கார்ந்த இடத்தையும் நெருக்கிக்கொண்டார். அந்த முதியவளுக்கு வார்த்தைகள் வரவில்லை. கணவனின் கையை, பலமாகப் பிடித்துக்கொண்டே திக்குமுக்காடிப் பேசினாள்:

''ஏம்மா! நீயாவது ஒன் அப்பனுக்காவது சித்தப்பனுக் காவது உறைக்கும்படியாய் கேட்கப்படாதா! இந்தத் தள்ளாத வயசில நாங்க ஒருத்தரை ஒருத்தர் பிரிஞ்சு இருக்க முடியுமா? இந்த நாற்பத்தஞ்சு வருஷத்துல, நாலு நாளைக்கி மேல பிரிஞ்சதில்லம்மா...''

பாமாவுக்கு முதலில் சிரிப்பு வந்தது. 'கிழடுங்களுக்கு, இன்னும் காதலா?' பிறகு பாட்டியின் முகத்தையும், தாத்தா வின் கண்களையும் பார்த்தவளுக்கு, பத்து சதவீதம் மனி தாபிமானம் வந்தது. தோளைக் குலுக்கிக்கொண்டே பேசினாள்.

''வர வர இந்த பேமிலி அபர்ஸே டர்ட்டியாய் மாறிட்டு. நான் இதுல இண்டர்பியர் பண்ண விரும்பல! வேணுமின்னால்... உங்களோட 'விஷ்ஷை' கன்வேய் பண்றேன்!''

பாமா ஐ. நா. காரியதரிசிமாதிரி பேசிவிட்டு நகரப் போனாள். திடீரென்று கிழவர் இறுகிய குரலில் ஆணை யிடுவதுபோல் பேசினார்.

''நீ ஒண்ணும் கன்வே பண்ணாண்டாம்... எப்படி நடக்க நினைக்காங்களோ... அப்படி நடத்தட்டும்! விளக்கை அணைச்சுட்டுப் போம்மா! இனிமேல் இந்த விளக்கும் எதுக்கு?''

பாமா விளக்கை அணைத்தாள். 'கன்வே' பண்ணத் தான் ஓடினாள். கொல்லைப்புற பக்கம் 'மொட்டை மாடி ரவிக்கு.

மௌனம் உறைபனியாய் மூட்டங் கொடுத்தது. கிழவி, கணவருடன் ஒட்டி உட்கார்ந்துகொண்டாள். அவள் கண் முன்னால் தனக்கு நடந்த கல்யாணம், முற்றுப்பெறாத முதலிரவு, பிறந்தகம் போகும்போது கணவனுடன் ஜோடி யாக ஊருக்குள் நடக்க வெட்கப்பட்டு சற்றுப் பின்தங்கி நடந்தது, பெரியவனைப் பெற்றுப் போட்டதும் எட்டிப் பார்த்த அவரிடம் வெட்கப்பட்டது, பிள்ளைகள் வயசாகி வருவதை கணவர் கவனிக்கவில்லை என்று அடிக்கடி வாதிட்டது. அத்தனையும் மொத்தமாகவும், தனித் தனியாகவும் வந்து, அவளை வாதை செய்தன. கிழவர் பேசாது கன்னத்தில் கை வைத்தபடி, மோவாய்க் கூரையைப் பார்க்க, உடல் பனியால் உருகியதுபோல், உள்ளம் அக்கினி யால் எரிவதுபோல் இருந்தார். அந்த மூதாட்டியால் தாள முடியவில்லை. நீண்ட நேர கோர மௌனத்தைக் கலைத்தாள்.

"ஏன்... பேசாம உட்கார்ந்திருக்கிங்க... ஏங்க! ஒங்களத் தான். என்னை விட்டுட்டுப் போகப் போறீங்களா? ஒங் களுக்கும் சம்மதமா, பதில் சொல்லுங்க... ஒங்களத்தான்!"

கிழவர், தள்ளாடி எழுந்து அறையின் மூலையில் கால்கள் நீட்டி கைகளைப் பரப்பி சாய்ந்துகொண்டார்—அப்போதே, மனைவியிடமிருந்து விலகியிருக்க பழகுபவரைப்போல். பிறகு, சிரித்தாரா அழுதாரா என்று அடையாளம் காண முடியாத குரலில் பதிலளித்தார்.

"என்னப்பா செய்யுறது... புருஷன் பெண்டாட்டி விவாகரத்துல... பிள்ளைங்க கஷ்டப்படும். இங்க என்ன டான்னா... பிள்ளிங்க கஷ்டப்பட்டு நமக்கு விவாகரத்து செய்து வைக்காங்க!"

"அய்யோ! பெரிய பெரிய வார்த்தையா பேசுறீங்களே! ஒவ்வொரு வீட்ல பெத்தவங்களுக்கு அறுபதாம் கல்யாணம் நடத்தி பிள்ளிங்க அழகு பாக்கும். ஆனால் நாம் பெத்த பிள்ளிங்க... அட கடவுளே! இதுக்கா ரெண்டு மகன்களப் பெத்தோம்..."

"ரெண்டுபேர மட்டும் பெத்ததுக்கு சந்தோஷப்படுப்பா, மூணு நாலுன்னு பெத்திருந்தால் நம்ம உடம்ப கூறு போட்டு எடுத்துட்டுப் போகணுமுன்னு தீர்மானிச்சிருப் பாங்க! உம்... எல்லாம் நன்மைக்கே."

"அய்யோ... அப்படிச் சொல்லாதிங்க! ஒங்களை விட மாட்டேன்! உயிர் போனாலும் விடமாட்டேன்! நீங்க இந்த வீடு கட்டுறதுக்காக கார்ப்பரேஷன்காரங்களோட கால் கையை எத்தன தடவை பிடிச்சிருப்பிங்க... ரெண்டுபேருமா கிராமத்தில் இருந்து வந்து குடிசை போட்டு வீட்டு வேலையைக் கவனிச்சோம்! இந்த வீட்ல இருந்து உங்களை யாராலயும் அனுப்ப முடியாது!"

''பைத்தியக்காரி! கொத்தனாருக்கு வீடு சொந்தமில்லாதது மாதிரி நாம உருக்கொடுத்த பிள்ளிங்களும், நம்மை உறவுல கொத்தனாராக்கிட்டாங்க! பெத்த மகனே துரத்தும்போது, கட்டுன வீடாப்பா பெரிசு... பைத்தியக்காரி!''

''அய்யோ! நீங்க சொல்றதைப் பார்த்தால்...முடியாது. நானே அந்தப் பயலுவகிட்ட பேசப்போறேன்! இந்த வயசில எங்களைப் பிரிக்காதிங்கடான்னு அதட்டப் போறேன்! மருமகள்காரிங்க காலைப் பிடிச்சு மடிப்பிச்சை கேக்கப்போறேன்! அதையும் பார்த்துடலாம்.''

''யதார்த்தமாய் பேசுப்பா! நாம ரெண்டுபேரும் சேர்ந்து கூச்சல் போட்டால் ஒருவேளை அவங்க என்னை உன்கிட்ட இருந்து பிரிக்காமல் இருக்கலாம். அப்புறம் என்ன நடக்கும்? மருமகள்காரி நம்மை சுமையா நினைப்பாள். பேரப் பிள்ளைங்க முனங்கும். நம்ம ரெண்டுபேரோட நெஞ்சில எல்லாருமே மிதிப்பாங்க. நாம ரெண்டுபேருமே மானஸ் தங்க... தள்ளாத வயசுல நம்மை பிரிக்கப்படாதுன்னு அவங்களுக்கே உறைக்கலன்னா, நாம எதுக்கு வாழணும்? அப்படி வாழ்ற வாழ்க்கையை, எங்கே வேணுமுன்னாலும் வாழலாம்! நாம என்ன வாழவா செய்யுறோம். சாவுக்காக காத்திருக்கோம்! நாம பிரியுறதும் ஒருவேளை நன்மைக்குத் தான்னு வச்சுக்கோ? நீ சாகும்போது நானோ, நான் சாகும்போது நீயோ, எப்படியோ துடிக்க வேண்டியதிருக்கும். இனிமேல் அந்தச் சிரமமில்லை பாரு!''

''அய்யோ இனிமேல் பேசாதிங்க... பேசாதிங்க.''

''நான் பேசுனேன்னால்... எல்லாம் நன்மைக்கேன்னு சொல்லத்தான். உதாரணத்திற்கு இன்னும் ஒண்ணு சொல்றேன் கேளு. இப்போ லைட்டை பாமா அணைச்சிட்டாள். இருட்டாய் இருக்கது நல்லதாய் போச்சு! இப்போ விளக்கு எரிந்து அந்த வெளிச்சத்துல ஒன் முகத்தை பார்க்கேன்னு வச்சுக்கோ... என்னால தாங்க முடியுமாப்பா!''

''அப்பிடின்னா சின்ன மகனோடு மதுரைக்குப் போற துன்னு தீர்மானம் பண்ணிட்டிங்களா? போங்க! நல்லா போங்க. நாற்பத்தஞ்சு கால தாம்பத்யத்த உதறிட்டு... சும்மா போங்க! அந்தக் காலத்திலேயே நாம கல்யாண வருஷத்தை கொண்டாடுனதை மறந்துட்டுப் போங்க. நான் ஒன்றும் அழுகிடமாட்டேன்! வேணுமுன்னால், இப்பவே அங்கே போய் மகனோட இருங்க! உம் போங்க! தலைவலி, வயிற்றுவலி வரும். நான் இங்க இருந்தபடியே சுக்கை இடிக் கேன். ஒங்களுக்கு சுகமாயிடும். போங்க, இப்பவே போங்க! உங்களுக்கோ எனக்கோ ஏதாவது ஆச்சுதுன்னா லட்டர் வரும். சந்தோஷமாய் படிப்பேன். நீங்களும் அப்படியே படிக்கலாம். போங்க உம் சீக்கிரம்...''

கிழவரிடம் இருந்து பதில் வரவில்லை. அந்த முதிய வளும், சிறிதுநேரம் பேசாதிருந்தாள். கோர இருட்டும், மௌடீகச் சூழலும், அவளைப் பயமுறுத்தின. தாம்பத்ய கால வாழ்வில் சேமித்த அனுபவங்கள் அவற்றின் இனிமை யான நினைவுகள் எல்லாவற்றையும் பறிகொடுத்தது போன்ற பரிதாபத்தில் அவள் துடித்தாள். புதிய உணர்வு களை காலியிடத்தில் சேமிக்க நினைத்தவள்போல் பேராசைப்பட்டாள். கணவரின் மௌனம் அவள் உள்ளத் தில் ஓலமிட்டது. ''என்னங்க... என்னங்க'' என்றாள் பதிலில்லை.

மெல்ல எழுந்தாள். கட்டில் கால் இடறி கீழே விழுந் தாள். நல்லவேளையாக அடி பலமில்லை. அடிப் பலமில் லாத அந்த முதியவள் இருந்தபடியே கால்களை முடத்தி போல இழுத்துக்கொண்டு கைகளை ஊன்றி ஊன்றி கணவர் இருந்த மூலையைப் பார்த்துத் தவழ்ந்தாள். தாழ்ந்துபோன வளாய், தவழ்ந்த அந்த முதிய குழந்தை மூலைக்குச் சென்று கணவரின் தோளில் கை போட்டபடி ''என்னங்க... என்னங்க'' என்றாள். அவள் கைகளில் ஈரம் பட்டது. ஏதோ ஒன்று கழுத்தை கட்டுவதுபோலிருந்தது. தன்னை

மார்போடு சேர்த்து அணைப்பது போலிருந்தது. அப்புறம் விம்மல் சத்தம் ‘‘வருத்தப்படாதப்பா... நாம எண்ணங்களா லேயே தொடர்பு வச்சுக்கலாம். எண்ணங்களாலேயே வாழலாம்.’’ என்ற வார்த்தைகள் விட்டு விட்டு கண்ணீரில் தோய்ந்து காதில் கரைந்து ஓலமாக வெளிப்பட்டது.

கிழவி கணவரை பலங்கொண்ட மட்டும் அழுத்திப் பிடித்துக்கொண்டாள். பாசங்கொண்ட மட்டும் ஒட்டிக் கொண்டாள். அவர் கண்ணீரைத் துடைக்கப் பார்த்தாள். பாழும் கைகள் அவர் தோளில் இருந்து எழ விரும்பவில்லை. அவரை மார்போடு அணைக்கப்போனாள். அவர் மார்பில் சாய்ந்த உடலுக்கு நிமிர மனமில்லை. கிழவர் அவள் தோளில் வாய் தேய்த்து புலம்பினார். குழந்தையான கிழவி தாயாகி நிஜமான ஒரு ஜீவனுக்கு தாயான ஞானச் செருக் கோடு ‘‘காலையில் கடவுள் கண்ணைத் திறக்கானான்னு பார்க்கலாம்.’’ என்று கிட்டத்தட்ட ஐநூறு தடவை சொல்லியிருப்பாள்.

**கா**லையில் கதிரவன் கண்ணைத் திறந்தான். கட்டிப் போட்டிருந்த பசு மாடு கண்ணைத் திறந்தது. வீட்டின் ஜன்னல் கண்கள் திறந்தன. கோழிகளின் கண்களும், மகன்கள், மருமகள்கள், பேரன், பேத்திகள் அனைத்தும், அனைவரும் கண்கள் திறக்க, அந்தத் தெருவே கண் திறந்தது. ஆனால் கடவுள்—

அவன் கண் திறந்தானோ இல்லையோ, வாசலில் வாடகைக் காராக வந்து நின்றான். ஒருவர் மரணத்திற்கு இன்னொருவர் ஒப்பாரி வைத்ததுபோல், இரவு முழுக்க பிடித்த பிடி விடாமல் தழுவிய தழுவல் வழுவாமல், பின்னிய விரல்கள் பின்னியபடி மூலையில் சாய்ந்திருந்த அந்த முதிய அன்னப்பறவைகளில் ஒன்றை மதுரை மகன் ‘‘ராத்திரி சாப்பிடலியா? ரெடியாயிட்டிங்களா?’’ என்றார். சாப்பி டாததற்கு காரணத்தை அறியுமுன்னாலேயே அவர் ‘ரெடிக்கு’ வந்துவிட்டார்.

வாசலில் நின்ற காரில் மருமகள் ஏறிவிட்டாள். பேரனும், பேத்திகளும் யார் ஓரப்பக்கம் உட்கார்வது என்று சண்டையிட்டு, அப்புறம் ஒரு வழியாக உட்கார்ந்தார்கள். மூத்தவர் மனைவி சிரிப்பைச் சிந்தியபடியும், பாமா மொட்டை மாடியை நோக்கிய கோணல் பார்வையுடனும் நின்றார்கள். பெரிய மகன் அப்பாவைக் கைத்தாங்கலாகப் பிடித்து, காரின் முன்னிருக்கையில் உட்கார வைக்கிறார். மதுரை மகன், "அவரு... பின்னால உட்காரட்டும்" என்கிறார். அப்பாவை எடுத்துக்கொள்ளச் சம்மதித்தவன் சொல்லை மதிக்க வேண்டும் என்பதுபோல், மூத்தவர் தன்னைப் பிறப்பித்தவரை மீண்டும் கைத்தாங்கலாக பிடித்து பின்னால் வைக்கிறார். கார் புறப்படப் போவதை டிரைவர் எல்லோரையும் வட்டப் பார்வையாகப் பார்த்து விட்டு ச.ரவியைத் திறக்கிறார். பாமா மொட்டைமாடியை பார்வையால் பிரிய விரும்பாதவள்போல், அங்கே பார்த்தபடியே, இங்கே—இந்தக் காருக்குள் இருப்பவர்களை நோக்கி 'டாட்டா' காட்டுகிறாள்.

கிழவர் சப்தமும் ஒடுங்கி, சப்த நாடிகளும் ஒடுங்கி, தேரில் வைத்த பிணம்போல் பேச்சற்று இருக்கிறார். பின்னால் திரும்பி மனைவியைப் பார்க்க விரும்புகிறார். பிறகு வாயை மூடி, கண்களைக் கசக்கி அப்புறம் அசைவற்று இருக்கிறார்.

கார் புறப்படுகிறது—இழவு வீட்டுச் சங்குபோல் ஒரு ஒலியை எழுப்பிக்கொண்டு.

அறையே சிறையாக, ஜன்னல் கம்பிகளில் முகம் புதைத்து, தள்ளாத குறையாக காருக்குள் திணிக்கப்பட்ட கணவரையே பார்த்த கிழவி, போகிற காரையே பார்க்கிறாள். அந்தக் காருக்குப் பின்னால் தான் ஓடுவதுபோன்ற உணர்வு, அதன் முன்னால் அடிபட்டு விழுந்து கார் நிறுத்தப் பட்டது போன்ற பிரமை. திடீரென்று அவளுக்கு இன்னொரு நினைவு.

நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு, அதோ அந்தக் காரில் போகிறவர் வாலிப மிடுக்கோடு மேளதாளத்துடன் காரில் இருந்து இறங்குகிறார். இவள்—அந்தக் காமாட்சி மாடி ஜன்னல் வழியாக, "அவனைப்" பார்த்து வெட்கத்தால் தலை குனிகிறாள்.

ஆனால் இப்போது?

# சின்ன மனிதர்கள்

"ஸார், வாட்ச்மேன் ஸார்."

மோகனா, இப்படி, முப்பது தடவையாவது கூப்பிட்டிருப்பாள். அவசர அவசரமாயும், அழுத்தந்திருத்தமாகவும், ஒவ்வொரு வார்த்தையையும் இடைவெளி விட்டு உச்சரித்ததும், அது இல்லாமல் உச்சரித்ததும், அழுத்தமாய் அழைத்ததும், சத்தமிட்டதும் அப்புறம் கத்தியதும் வீணாயின.

வாட்ச்மேன் வைரவன் அசையவில்லை. அந்தக் காலைப் பொழுதான எட்டு மணியிலும், மல்லாந்து கிடந்தான். வெள்ளை யூனிபாரத்தை மடித்து, அதையே தலையணையாக வைத்துக்கொண்டு, மேஜை விரிப்புத் துணியையே பாயாக்கி, படுத்துக் கிடந்தான். முப்பது வயதுதான் இருக்கும். ஆனாலும் முழுக் கிழவன் போல் தெரிந்நான்.

மோகனா, அவனை எப்படி எழுப்புவது என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தாள். சைக்கிள்காரனும், ஆட்டோ ரிக்ஷாகாரனும் மோதியதில் இடையில் அகப்பட்டு, காலைக் கோணலாக்கிய ஆறு வயது மகனை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போக வேண்டும். அந்தக் கட்டை அவிழ்த்துவிட்டு, அடுத்த கட்டைப் போடுவார்கள். ஒன்பது மணிக்காவது 'ஓபி' வரிசைக்குப் போய்விட வேண்டும். இவ்வளவு பெரிய இடத்தையும் எப்போ பெருக்கி எப்போ துடைச்சு...

மோகனா, வேர்த்துப் போன தன் முகத்தை, வியர்வை பட்ட கரங்களாலேயே துடைத்துக் கொண்டாள். வைரவனோ, கிராதிக் கம்பிகளுக்குள்ளே லாக்கப் திலகம் போல் தூங்கிக் கொண்டிருந்தான். அந்தக் கிராதகக் கிராதி கதவு, உட்புறம் சங்கிலி போட்டுப் பூட்டப்பட்டிருந்தது.

மோகனா வெளியே கம்புத் துடைப்பத்தை எடுத்து, தலைகீழாகப் பிடித்து, கம்பு முனையை கிராதிக் கம்பி களுக்கு இடையே விட்டு, அவன் இடுப்பில் லேசாகத் தட்டி னாள். உள்ளங்கால்களில் சற்று லேசாக அழுத்தினாள்.

வைரவன் கத்திக் கொண்டே உடலைப் புரட்டினான். பிறகு அவளை அடிக்கப் போவதுபோல் கை கால்களைத் துள்ளியாட விட்டபடி எழுந்தான். மோகனா பயந்து விட்டாள். சர்க்கார் ஆபீஸ் மவராசனை இப்படிச் செய்தது தப்பு என்பதுபோல் கைகளைப் பிசைந்தாள். ஆனால் வைரவன் முகத்தில் இருந்த கோபம் ஒளி வேகத்தில்—அதாவது வினாடிக்கு ஒரு லட்சத்து எண்பத்தாறாயிரம் மைல் வேகத்தில்—போய், சிரிப்பும் அதே வேகத்தில் வந்து சுடர் விட்டது. சங்கிலிப் பூட்டைத் திறந்தபடியே பேசினான்.

''ஒன் முகம் அழகு மட்டுமல்ல மோகனா... ராசியான மொகம். ஒன் மொகத்துல விழிக்கணுமுன்னுதான் தூங்கிட்டு இருந்தேன். இதேமாதிரிப் போன வாரமும் தூங்கினேன் பாரு. அப்போ நீ எழுப்புனே பாரு. அன்னிக்கி எல்லாக் கிராக்கியுமே எனக்குத் தள்ளுனாங்க. முப்பத் தாறு ரூபாய். இருபது ரூபாய் அதுக்கு. அதுல ஒனக்குப் பத்து ரூபாய் எடுத்து வச்சிருக்கேன்...''

மோகனா அவனிடம் எதுவும் பேசவில்லை. சுருங்கிப் போன இரும்புக் கிராதிகளின் இடைவெளியில் நுழைந்து துடைப்பத்தை எடுப்பதற்காகக் குனியப் போனாள். துடைப்பத்தோடு எழுந்தபோது, அவள் தலை வைரவனின்

மோவாயில் இடித்தது. மோகனா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ''ஏன் ஸார்... இப்படி ரோதனை செய்யுறே?'' என்று கேட்க நினைத்தாள். முடியவில்லை. அவள் அந்த அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்த மூன்று நாட்களுக்குப் பிறகு கடந்த மூன்று மாத காலமாகக் கிடைக்கும் உபத் திரவம் இது. வைரவன் பெரிய உபகாரம் செய்தவன்போல் பேசினான்.

''நாளைக்குக் கதவுப் பக்கமாவே படுக்கேன். ஒன் கை யாலேயே எழுப்பிவிடு. என்ன மோகனா நான் பாட்டுக்குப் பேசிக்கிட்டுப் போறேன். நீ என்னை மதிக்காம...''

துடைப்பத்தோடு ஆபீஸர் அறைக்குள் போகப் போனவள், அவனை மதிப்பவள்போல் நின்றாள். ''என் மனசு... ஒனக்கு ஏன் புரியமாட்டக்கு.'' என்று அவன் மீண்டும் பேசியபோது, அவன் மதிப்பிற்குரியவன் அல்ல என்பதுபோல், மடமடவென்று உள்ளே போனாள். நேற்று ஆறு மணிக்கு ஆபீஸர் போன பிறகு, இப்போதுகூடச் சுற்றிக்கொண்டிருக்கும் மின்விசிறியை நிறுத்துவதற்கு ஒரு ஸ்விட்சை மேல்நோக்கி அவள் கரம் நகர்த்தியபோது, அவள் புறங்கையில் பாதியிடத்தை அழுத்தியபடி வைரவனின் கை டியூப்லைட் சுவிட்சைத் தட்டிவிட்டது. அவள் கையையும் விடாமல், தன் கையையும் எடுக்காமல், வைரவன் வசந்த மாகப் பேசினான்.

''இதுதான் பொருத்தம் என்கிறது. ஒங்கிட்டே வரப் படாதுன்னுதான் நினைச்சேன். அதுக்காக லைட் போடாமல் இருக்க முடியுமா! அந்த ஸ்விட்சைப் போட் டால் இந்தக் கை ஷாக்கடிக்குது... சும்மா சொல்லப்படாது மோகனா. ஒன் கை இலவம் பஞ்சு மாதிரி இருக்குது.''

மோகனா தன் கையை வெடுக்கென்று எடுத்த பிறகும், வைரவன் ஸ்விட்ச் போர்டையே மெய்மறந்து தடவிக்கொண் டிருந்தான். ஓர் ஆணி பட்டு கைவிரல் ஓரத்தில் லேசான

வலி ஏற்பட்டபோதுதான் அவன் கண்விழித்துப் பார்த்தான் மோகனா அங்கே இல்லை. பக்கத்து அறையில் துடைப்பச் சத்தம் கேட்டது. அங்கே ஓடினான்.

''மோகனா எனக்கு ஒரு காப்பி வாங்கிட்டு வர்றியா?''

சரி என்பதுபோல், அவள் துடைப்பத்தைக் கீழே போட்டுவிட்டு. கைகளை முந்தானைச் சேலையில் துடைத்த போது வைரவனுக்கு அன்பு அதிவேகமாய்ப் பிறப்பெடுத்தது.

''நீயும் ஒரு காப்பி குடிக்கணும். அப்போதான் நானும் குடிப்பேனாம். என்ன சரியா?''

சரியில்லை என்பதுபோல் மோகனா கீழே கிடந்த துடைப்பத்தை எடுத்துக்கொண்டு, இன்னொரு அறைக்குள் போனாள். ஒட்டடைக் கம்பை வைத்து டியூப்லைட்டில் படிந்த தூசியைத் தட்டிய அவள் முதுகோடு முதுகாக அவன் சாய்ந்து, அவள் கைபிடித்த கம்பிற்குமேல் தன் கையைப் பற்றிவிட்டு, ''அதோ தூசி இருக்கு பாரு... அதோ சிலந்தி வலை இருக்கு பாரு. ஒனக்கு எட்டாத இடத்துல இருக்குதோ, சரி... நீ அப்பிடியே நிற்பியாம். நான்...'' என்று அவள் மேல் சாயப்போனான்.

மோகனாவால் இதற்குமேல் தாங்க முடியவில்லை— கட்டிய புருஷன் பாயிலும், நோயிலுமாய்க் கிடப்பது உண்மைதான். இந்த வேலை போய்விட்டால் பிச்சை எடுத்துத்தான் பிழைக்க வேண்டும் என்பதும் உண்மைதான். அதுக்காக? மோகனா நெருப்புத் தணலாய்க் கேட்டாள்.

''நான் ஏற்கனவே நொந்துபோனவள். என்னை ஒங்க தங்கையாய் நினையுங்க. அவ்வளவுதான் என்னால சொல்ல முடியும்...''

வைரவன் கடகடவென்று சிரித்தான்.

''பத்து வருஷத்துக்குப் பிறகு இப்படிச் சொன்னால். ஒருவேளை நான் அப்படி நினைக்கலாம். அதுகூட முடியாது. ஏன்னா ஒன் உடம்பு இருக்கே அது அச்சுமாதிரி உடம்பு!

இந்தச் சிவப்பும் இந்தத் தோரணையும் எப்பவுமே மாறாது. எந்தக்காலத்துலயும் ஒன்னைப் பார்க்கிறவன் கண்ணுலதான் சுருக்கம் ஏற்படுமே தவிர ஒன் முகத்துலயோ, வவுத்துலயோ ஏற்படாது. ஆக மொத்தத்துல—ஒன்னை நான் எப்பவுமே சிஸ்டர்னு நினைக்க முடியாது.

"அப்போ ஒங்க சிஸ்டர் அழகா இருந்தால்?"

மோகனா, துடைப்பத்தில் தூசியைத் தட்டிவிடுவது போல் அந்தத் தரையில் அதைக் கடாசியடித்தாள். வைரவன் வெளியே வந்து பெஞ்சில் உட்கார்ந்து ஒரு சிகரெட்டை உறிஞ்சினான். மோகனா பேசிய பேச்சில் அந்த சிகரெட்டே தன்னை உறிஞ்சுவது மாதிரியான ஒரு பிரமை. அவளை எப்படி வழிக்குக் கொண்டு வரலாம் என்பது மாதிரியான சிந்தனையுடன், புகைந்துகொண்டிருந்தான்.

மோகனா அந்த அலுவலகத்தின் நாலாயிரம் சதுர அடி பரப்பையும் பெருக்கி முடித்து, ஒரு வாளி நிறையத் தண்ணீரைக் கொண்டுவந்து ஒரு கலர்த் துணியை அதில் நனைத்து, குத்துக்காலிட்டு உட்கார்ந்தபடியே மொஸைக் தரையைத் துடைத்துக்கொண்டே போனாள். திடீரென்று வைரவனிடம் இருந்து ஒரு அதட்டல்.

"ஏய் மோகனா! மொஸைக் தரையைத் துடைக்கிற லட்சணமா? நூறு ரூபாய் மொத்தமா வாங்கத் தெரியுது. இந்தத் தரையை எப்படித் துடைக்கணுமுன்னு தெரியலியே! அதோ பாரு, தரையில ஈரம் படல. இதோ பாரு, நீ மெழுகுன லட்சணம். ஒரே தூசி தும்பு." ஒழுங்காய் வேலை பார்க்கணுமுன்னால் பாரு! இல்லன்னா தீர்த்துக்கட்டிடுவேன். நீயல்லாம் முன்னப்பின்ன மொஸைக் தரையைப் பார்த்திருந்தால்தானே!"

வைரவன், அவளை விட்டுப் பிடிக்க நினைத்தவன்போல் வெளியேறினான். அந்தச் சமயத்தில் மோகனாவுக்குத் தன் ஒட்டு மொத்தமான வாழ்க்கை அவலங்கள் அனைத்தும் முன்

வந்தனவே தவிர, வைரவனின் உருட்டல் மிரட்டல் மட்டும் தனித்து வரவில்லை. கிராமத்தில் நொடித்து, நகரத்திற்குக் கணவனோடு வந்தது, கட்டிலில் கிடக்கும் கணவன், அவன் மீள்வானா என்ற பயம். காலொடிந்த பையன், அவன் கால் தேறுமா என்ற சந்தேகம். இது போதாதென்று இந்த வைரவன்...

மோகனா என்ன செய்வது என்று புரியாமல், தரையில் படவேண்டிய துடைப்பத்தைத் தலையில் வைத்தபடியே குத்துக்காலிட்டு இருந்தபோது, வாட்ச்மேன் வைரவனும் எஸ்டாபிளிஷ்மெண்ட் கிளார்க் ரமணனும் உள்ளே வந்தார்கள். மோகனாவுக்குச் சம்பள பில் போடுபவன் இந்த ரமணன். கண்ணாடி அறைக்குள் போய் உட்கார்ந்த ரமணன் அவளைத் தன் பக்கம் வருமாறு சைகை செய்தான். அவளும் புடவையை இழுத்துவிட்டு, அந்த அறைக்குள் போனபோது, ரமணன் வாட்ச்மேனை நோட்டம் விட்டான். பின்னர் அதிகாரமும், அன்பும் கலந்த தோரணையில் பேசினான்.

"வைரம், பக்கத்து ஆபீசுல போய் டி.ஏ. பில் வாங்கிட்டு வர்யா... நீ மதுரைக்கு டூர் போனதுக்கு பில் போடணும் பாரு."

"கழுத பணம் கிடக்கட்டும் சார்! அதோட அந்த ஆபீஸ் காரங்க இன்னும் வந்திருக்கமாட்டாங்க."

"அதுவும் சரிதான்... எப்பா ஒரே தலைவலி. போய்க் காப்பி வாங்கிட்டு வா!"

"ஏய் மோகனா, சாருக்குக் காப்பி வாங்கிட்டு வா!"

"பெருக்கற வேலையை ஏன்யா கெடுக்கிறே? அவளைக் காப்பி வாங்க அனுப்பினா அப்புறம் டெப்டி டைரக்டர் வர்றபோது துடைப்பமும் கையுமா நிப்பா! நீயே போயிட்டு வா! ஒனக்கும் ஒரு காப்பி அங்கேயே குடிச்சுட்டு நிதானமா வா!"

இப்போது ரமணன் குழைந்து குழைந்து பேசினான்.

"மோகனா ஒங்கிட்ட ஒரு விஷயத்தைச் சொல்றதுக்குத் தான், அவனை வெளியே அனுப்பினேன். நீ சரியாய் வேலை செய்யலியாம்! ஒன்னை நிறுத்திடணுமாம். இன்னைக்கே வைரவன் கம்ப்ளெயிண்ட் எழுதிக் கொடுக்கப்போறானாம். டோன்ட் ஒர்ரி... அவன் எதுக்காக அப்படி மிரட்டறான்னு எனக்கு நல்லாவே தெரியும். பட்... அவன் புகாரை நான் கிடப்புல போடவும் முடியாது!"

"சார்... இந்த வேலை மட்டும் போயிட்டா நாங்க ஒரு வேளை சாப்பிடறதுகூட..."

"ஒன்னை நான் அப்படி விட்டுடுவேனா? எல்லா விஷயத்தையும் விவரமாப் பேசலாம், நாளைக்குக் கோடம்பாக்கம் தியேட்டர்ல பதினொரு மணிக்கு வந்துடு. அவன் என்ன கம்ப்ளெயிண்ட் குடுத்திருக்கான், நீ அதுக்கு எப்படி பதில் சொல்லணும்னு நான் விளக்கமாச் சொல்றேன். சரியா பதினொரு மணிக்கு வந்துடு...! குட்மார்னிங் சார்...!"

மோகனா, திகைத்து நின்றபோது டெப்டி டைரக்டர் ஜான்சன் வந்துவிட்டார். நாற்பது வயதுள்ள அவரை சபாரி டிரெஸ் நாற்பத்தைந்தில் தூக்கிப்போட்டது. ரமணனிடம் மிடுக்காகக் கேட்டார்.

"டூர் பேப்பர்ஸ் ரெடியா... கோயம்புத்தூர் கான்ட்ராக்ட் பைல், ஆடிட் பைல் எடுத்து வச்சிட்டியா மிஸ்டர்?"

"இதோ எடுத்து வச்சுக்கிட்டே இருக்கேன் சார்!"

"இன்னுமா எடுக்கலே? வாட் எ மேன் யூ வார்... ட்ரெயின் கிளம்ப இன்னும் அரை மணி நேரம்தான் இருக்குது."

"ஜஸ்ட் அஞ்சு நிமிஷம் சார்!"

"இந்தம்மா யாரு?"

''இது புதுசா பெருக்கறதுக்குப் போட்டிருக்கிற லேடி ஸார்!''

''ஐ ஸீ... இந்தாம்மா! இங்க வா. உன் பேரு என்ன? நீ இருய்யா! அது பேசட்டும்.''

''மோகனா சார்!''

''மிஸ்டர் ரமணன்! நீங்க இப்போ அஸிஸ்டென்ட் டைரக்டர் வீட்டுக்குப் போறீங்க. அப்படியே இங்கே அவரை டிஸ்கஷனுக்குக் கூட்டிட்டு வர்றீங்க... டூர் போறதுக்கு முன்னால அவர்கிட்ட சில அந்தரங்க சமாசாரங்களைப் பேசணும்!''

ரமணன், போய்விட்டான். எள்ளும் கொள்ளுமாய் இருந்த ஜான்சன் எலுமிச்சம்பழம்போல் ஒரு குளிர்ப்பதனப் பார்வையை வீசினார்.

''இப்படி வா மோகனா... ஏன் பயப்படுறே! ஆபீஸ்லே ஒனக்கு ஏதாவது பிரசினையா?''

''எனக்கு வேலை காயமாகணும். யாரு பேச்சையும் கேட்காமல் அய்யா என்னை இந்த வேலையில வச்சிருக்கணும்.''

''நீ சொல்றதைப் பார்த்தால் வாட்ச்மேன் ஏதும் கலாட்டா பண்ணுறானோ? ஏன் பேசமாட்டேங்கறே! டோன்ட் ஓர்ரி. அவனை வேற இடத்துக்கு மாத்தப் போறேன்!''

''அதெல்லாம் தேவையில்லீங்க ஐயா! இந்த வேலையிலிருந்து என்னை நீக்காமல் இருந்தாப் போதும்.'' கூனிக் குறுகியபடி நின்றாள். பாவம் டெப்டி டைரக்டர் ஜான்சனுக்கு மனசும் கேட்கவில்லை. கையும் கேட்கவில்லை. ''இனிமேல் உன் கவலையை என்கிட்டே விட்டுவிடு. உன்னோட எதிர்காலத்துக்கு நான் பொறுப்பு.'' என்று சொன்னபடியே அவளருகே போய்த் தோளில் கை போடப்

போனார். அப்போது பார்த்து ''குட்மார்னிங்'' என்று சொல்லிக்கொண்டு, ஒரு பேட் மார்னிங் டைப்பிஸ்ட் பெண் உள்ளே வந்தாள். ஜான்சன் சமாளித்துக்கொண்டார்.

**மோ**கனா மறுநாள் காலையில் வழக்கம்போல் அலுவலகம் வந்தபோது, வாட்ச்மேன் வைரவன் ஒரு நாற் காலியில் வீராப்புடன் உட்கார்ந்திருந்தான். அவளையும், சுவர்க் கடிகாரத்தையும் மாறி மாறிப் பார்த்தான். அவள் துடைப்பத்தை எடுத்துப் பெருக்கப் போனபோது, இவன் வாயெடுத்துப் பேசினான்.

''ஏழரை மணிக்குப் பெருக்கறதுக்கு இப்ப வந்தா எப்படி? நேத்து மேஜையைத் துடைக்காமல் போயிட்டே. இன்னையிலிருந்து பாத்ரூமையும், டாய்லெட்டையும் கழுவி விடணும்!''

''அதுக்குத்தான் வேற ஆளு இருக்குதே!''

''அதைப்பற்றி ஒனக்கென்ன? உன்னால முடியுமா முடியாதா? எனக்கு இப்பவே தெரியணும்.''

மோகனா அவனை நேருக்கு நேராய்ப் பார்த்தாள்.

''இந்தாப் பாருய்யா வாட்ச்மேன்... நான் மட்டும் மனசு வச்சால் உன்னை அடுத்த வாரமே இந்த ஆபீஸை விட்டுத் துரத்த முடியும். என்னை அழிச்சுக்கிட்டே உன்னையும் அழிக்க முடியும். நான் ரெண்டையும் விரும்பல. ஆனா இப்ப ரெண்டுல ஒன்னைத் தீர்மானிக்க வேண்டியது ஒன் னோட பொறுப்பு. என்ன சொல்றே? எனக்கு இப்பவே தெரியணும்.''

வைரவன் வாயடைத்துப்போனான்.

# உறவுக்கு அப்பால்

இது, தியாகராஜன் மறைந்த மூன்றாவது ஆண்டு நினைவு நாள்.

தியாகராஜனின் மனைவி காமாட்சி சென்ற இரவு அழுது தீர்த்து வீங்கிப்போன முகத்துடன், அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டு, பூஜையறையில் இருந்த அவர் போட்டோவை எடுத்து மேஜையில் வைத்தாள். ஊதுபத்தியைப் பத்து வயது சிறுவன் பிடித்துக்கொண்டிருக்க, கல்லூரியில் பி.யூ.சி. படிக்கும் பதினேழு வயது பையன் மோகன், ஊதுபத்தியைக் கொளுத்தினான். அப்போது ஒரு ரோஜாப் பூ மாலையுடன் வீட்டுக்குள் வந்த வித்யா, மாலையை அப்பாவின் படத்தில் மாட்டப் போனாள். பிறகு, என்ன நினைத்தாளோ தெரியவில்லை, அதை அம்மாவிடம் கொடுத்தாள். காமாட்சி கண்ணீர் மாலை கழுத்தில் வியாபிக்க, கை மாலையை எடுத்து படத்தில் போட்ட போது, அவள் உடல், உள்ளத்தில் தோன்றிய பூகம்ப உணர்ச்சியால் ஆடியது. வித்யா அம்மாவைக் கைத்தாங் கலாக அணைத்தவாறு, படத்திற்கு எதிரே உட்காரவைத்து, தானும் உட்கார்ந்தாள்.

நால்வரும் அந்தப் படத்தையே உற்றுப் பார்த்தார்கள். மௌனத்தை மீறிய ஏதோ ஒன்று [illegible]ட்டும் தொட்டும் காட்ட முடியாத, இனம் புரியாத ஒரு உணர்வு அங்கே மௌனத்துடன் சேர்ந்து ஆதிக்கம் செய்துகொண்டிருந்தது.

'காமாட்சி... 'பொண்ணு வயசுக்கு வந்துவிட்டாள், ஆயிரம் ரூபாய்க்கு மேல சம்பளம் வாங்கியும் மிச்சம் பண்ணாட்டா எப்படி'ன்னா கேக்கறே? கவலைப்படாதே... இந்தக் காலத்துல பணம் சம்பாதிக்கணுமுன்னு நினைச்சா... எப்படி வேணுமுன்னாலும் சம்பாதிக்கலாம். என் ஆபீஸ் லெயே கை நீளுறதுக்கு பைல்ஸ் நீளமாயும் இருக்கு, அகல மாயும் இருக்கு. ஆனால் அது ஒரு பிழைப்பா? எவ்வளவு சம்பாதிக்கிறோம் என்கிறது முக்கியமில்ல... எப்படிச் சம்பா திக்கிறோம் என்கிறதுதான் முக்யம்... டோன்ட் ஒர்ரி மை கேர்ல்...'' என்று கணவன் முன்பொரு முறை சொன்னது ஞாபகம் தந்தது.

வெளியே கார் சத்தம் கேட்டது. இரண்டு மூன்று நிமிடங்களுக்குள், தியாகராஜன் தம்பி சதாசிவமும், தங்கை மீனாட்சியும் வந்தார்கள். அவர்களது சிரிப்போசை, கார்க் கதவை மூடும்போது கேட்டது. இப்போது, வீட்டிற்குள் நிலவிய 'மூடை'ப் பார்த்ததும், அது அவர்களுக்கும் தொற்றிக்கொள்ள அசையாமல் நின்றார்கள்.

சகோதரி மீனாட்சியினால் அண்ணனின் படத்தைப் பார்த்ததும் தாள முடியவில்லை. 'அண்ணா ஒவ்வொரு தீபாவளிக்கும் டில்லியிலிருந்து காஷ்மீர் சில்க் புடவை வாங்கி அனுப்புவியே... இனிமே யாருண்ணா எனக்கு அனுப்புவாங்க?' என்று சத்தம்போட்டே அழுதாள். இந்த அழுகையைவிட அதன், அர்த்தத்தில் அதிர்ந்துபோன சதாசிவம், ''அண்ணா! என்கிட்டே 'டேய்... ஒன் பைய னுக்கு தமிழ்நாட்ல என்ஜினியரிங் காலேஜ்ல இடம் கிடைக்காது. உன் பையனை நல்லா படிக்கச் சொல்லு! டில்லியில் என் வீட்லயே தங்கி, அவன் படிக்கட்டுமுன்னு' சொல்லுவீங்களே...இனிமே யாரண்ணா...அப்படிச் சொல்லு வாங்க?'' என்று அக்காளின் சத்தத்திற்கு அதிகமான சத்தத் தில் புலம்பினார்.

மீனாட்சி புறப்படுவதற்காக எழுந்திருக்கப் போனாள். அப்படி எழுந்திருப்பதற்காக வலது கையைத் தரையில் ஊன்றிக்கொண்டே, ''சதாசிவம்... என்னை வீட்ல டிராப் பண்ணு'' என்றாள்.

''உன் மகன் ரவி வந்து பிக்கப் பண்ணுவான்னு சொன்னியே?'' என்றார் சதாசிவம்.

''கம்பெனி கார்லே வந்துடுறேன்னான். அவன் சமாசாரந்தான் ஒனக்குத் தெரியுமே? சினிமாவுக்குப் போனாலும் போயிருப்பான்!''

மீனாட்சி எழுந்தாள். அண்ணனின் படத்துக்கு அருகே சென்று லேசாகக் குனிந்துகொண்டே, ''தலைக்கு மேல ஒன் பொண்ண வச்சிக்கிட்டு தவிக்கிறாமே அண்ணா... நாங்க எவ்வளவு முயற்சி பண்ணினாலும், வித்யாவுக்கு நல்ல இடம் அமையமாட்டேங்குதே! கொஞ்சம் கருணை காட்டு அண்ணா'' என்று கண்ணீர் மல்க மன்றாடினாள்—தியாகராஜன் கருணை காட்டாததால்தான் கல்யாணமே நடக்காமல் இருப்பது மாதிரி.

சதாசிவம் அவசரப்படுத்தினார். அவர் அவசரத்திற்கும் ஒரு காரணம் இருந்தது. ''எனக்கும் பொண்ணுங்க இருக்கு. என்னால மாப்பிள்ளை பார்க்க இயலாது. லாபத்தைப்போல நஷ்டம் வந்துட்டா அப்புறம் என் தல தான் உருளும்'' என்று போன வருடம், தலையை உருட்டிக் கொண்டே சொல்லிவிட்டவர் அவர். ஒரு காலத்தில் 'வித்யாவுக்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டியது என் பொறுப்பு. ரவி பயலுக்கெல்லாம் கொடுக்கப்படாது' என்று டில்லியில் காமாட்சி செய்துபோட்ட பக்கடாவைத் தின்று கொண்டே சொன்னவரும் இவர்தான். இப்போது, தன் சொந்த மகளுக்கு சின்ன வயதிலேயே வித்யாவுடன் இணைத்துப் பேசப்பட்ட ரவியை முடக்கத் திட்டமிட்டு இருப்பவரும் இவர்தான்.

இருவரும் காரைவிட வேகமாகப் புறப்பட்டு, காருக்குள் நுழைந்து கதவைச் சாத்தினார்கள்.

காமாட்சி கணவன் படத்திற்கு அருகே போய் நின்றாள்.

''நாலு வருஷத்துக்கு முன்னாடி... 'அண்ணா! உங்க வித்யாவை எங்க ரவிக்குத்தான் கொடுக்கணும். மாட்டேன்னு சொன்னால் என் மகன் அவளுக்குக் கள்ளத்தாலி கட்டுவான்'னு சொன்ன உங்க தங்கை இப்போ எப்படிப் பசப்புறாள் பாத்திங்களா?'' என்று பொருமினாள்.

வேலூரிலிருந்து வித்யாவின் பெரிய அத்தையும், அவள் புருஷனும் ஒரு கூடை ஆப்பிள் பழத்துடன் வந்தார்கள். மாமா எஞ்ஜினியர். அத்தை ஆசிரியை.

அத்தைக்காரி முறைப்படி அழுது முடித்துவிட்டு, வித்யாவின் தலையைக் கோதிவிட்டுக் கொண்டே, ''நம்ம வித்யாவுக்கும் நல்ல காலம் பிறந்துட்டுது. தம்பிங்களோ தங்கச்சியோ அவளுக்கு ஏதாவது வழி பண்ணுவாங்கன்னு நினைத்து இதுவரை சும்மா இருந்திட்டேன். தியாகுவோட நீங்க எல்லாருமே இறந்திட்டதாய் நினைச்சிட்டாங்க... கவலப்படாதீங்க, நானிருக்கேன்'' என்றாள்.

காமாட்சியம்மாளுக்குப் புத்துயிர் ஏற்பட்டது. மகளுக்கு விடிவுகாலம் ஏற்படப் போகிறது என்கிற மகிழ்ச்சியில் நாத்தனாரைப் பார்த்து, ''ஏதாவது சாப்புடுறீங்களா...'' என்றாள். நாத்தனார்காரி தத்துவ ரீதியாகப் பேசினாள். அவள் புருஷன் ஒரு தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைக் கருகே நின்றுகொண்டார்.

''சாப்புட்டு சாப்புட்டுத்தான் என்னத்தைக் கண்டோம்? இப்போ அதுவா முக்கியம்... நம்ம வித்யாவுக்கு ஒரு பையனைப் பார்த்திருக்கேன். ஒன்னுக்குள்ள ஒன்னு. இவருக்குத் தூரத்துச் சொந்தம்...''

"பையனுக்கு என்ன வேலை?"

"ஒரு கம்பெனில ரெண்டாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறான். சம்பாதிச்சு என்ன பிரயோஜனம்? வீட்ல விளக்கேத்தி வைக்க ஆள் வேண்டாமா?"

"சின்ன வயதிலேயே ரெண்டாயிரம் ரூபாய் சம்பளமா!"

"அதுக்குத்தான் திறமை வேணுங்கிறது. இவரை மாதிரி இருந்தால் ஆயிரத்தைக் கண்ணாலகூட பார்க்கமுடியாது. நல்ல பையன். ஆனாலும் ஒரு உண்மையைச் சொல்லிடணும்."

"சும்மா சொல்லுங்க."

தப்பா நினைக்கப்படாது; பையனுக்கு நாற்பதுக்கு உள்ளதான் இருக்கும். போன வருஷம் அவன் வீட்டுக்காரி இறந்துவிட்டாள். ரெண்டே ரெண்டு பிள்ளைங்கதான். பையன் தங்கம்னா தங்கம். இந்தமாதிரி இடம் கிடைக்கிறது கஷ்டம்."

காமாட்சியம்மாள் நீர் முட்டிய கண்களை வேகமாகத் துடைத்துக்கொண்டே, அமைதி கலந்த ஆவேசத்துடன் கேட்டாள்:

"ஒங்க பொண்ணு விஜயாவைக் கொடுக்கலாமே?"

வந்தவளுக்கும், அவளுடன் வந்தவருக்கும், கண்கள் சிவந்தன. "எங்க விஜயாவும் ஒங்க வித்யாவும் ஒன்றாயிடுமா?" என்று கேட்கப் போனவள், கோபத்தை அடக்கிக் கொண்டு. "ஒங்களுக்கு இஷ்டமில்லைன்னா விட்டுடுங்களேன்... எதுக்காக என் பெண்ணை இழுக்கறீங்க," என்றாள்.

காமாட்சி மீண்டும் அமைதியாகப் பேசினாள்.

"உங்க பெண்ணுக்கே அப்படி நடக்கிறதாக இருந்தாலும், அதைத் தடுக்கிற முதல் ஆள் நானாத்தான் இருப்பேன்... தப்பா நினைக்கப்படாது. ஒங்க பொண்ணு வேறே,

என் பொண்ணு வேறயா? ஒங்களுக்கு இந்த ஐம்பது வயதுல நாற்பது வயசுக்காரன் பையனாத் தெரியுறது நியாயந்தான். ஒரு இருபத்திரண்டு வயதுக்காரிக்கும் அவன் பையனா தெரிய முடியுமா?''

வந்தவர்கள் புறப்பட்டுவிட்டார்கள்.

அன்றுதான் உண்மையான இழவு நடந்ததுபோல், காமாட்சி எதுவும் சாப்பிடாமல், பிள்ளைகளையும் சாப்பிடச் சொல்லாமல் ஒரு மூலையில் போய் முடங்கிக் கொண்டாள்.

வித்யாவுக்கு மூளை மரத்துப்போனதுபோல் தோன்றினாலும், இதயம் வெளியே வரப்போவது போல் துடித்தது. மூன்றாண்டுகளுக்கு முன்னால் டில்லியில் வடநாட்டுப் பெண்ணைப்போல் 'சல்வார்-கமீஸுடன்' தன்னுடன் பி.ஏ. (ஹானர்ஸ்) படித்துக்கொண்டிருந்த சக தோழிகளுடன் அஜ்மல்கான் பார்க்கை அலசியது, உல்லாசமாக சண்டிகர் போனது, தாஜ்மகால் பார்த்தது அங்கே அவர்கள் அவளை 'மும்தாஜ்' என்று சொன்னது, 'இனிமேல் உனக்குக் கேக் தரமாட்டேன். அதனாலதான் நைட்ல சாப்பிட மாட்டேங்கறே' என்று அம்மா கடிந்துகொண்டது, டில்லி யூனிவர்சிட்டி மாணவர் யூனியன் தேர்தலில் ஜாயிண்ட்-செகரட்டரிக்காகப் போட்டியிட்டு வெற்றி பெற்றது, 'எ ஓட் பார் வித்யா, இஸ் எ ஓட் பார் சத்யா' என்று சக தோழிகள் ஒலி பெருக்கிகளை வைத்துக்கொண்டு கத்தியது, சென்னைக்கு விடுமுறையில் சின்ன அத்தை வீட்டுக்கு வந்திருந்தபோது ரவி அவளிடம் வளைய வளைய வந்தது, அத்தைக்காரி ''வித்யா, இந்த ரூம் உனக்குச் சரிப்படாது தான், இருந்தாலும் சகிச்சிக்கம்மா,'' என்று குழைந்து பேசியது, எல்லாமே நினைவுக்கு வந்தன. அந்த நினைவின் சுமைகள் விழிகளைக் கவிழ்க்க அவள் கண் கலங்கியவாறே கண்மூடினாள்.

ஒரு வாரம் ஓடியது.

ரவியின் அம்மா மீனாட்சி வீட்டுக்கு வந்தாள்.

''வர்ர வெள்ளிக்கிழமை ரவியோட பர்த்டே...வீட்டுக்கு வித்யாவைக் கூட்டிக்கிட்டு வாங்க. வித்யாவுக்கு நல்ல காலம் பிறக்குது'' என்றாள்.

காமாட்சி அவளைக் குடுகுடுப்பைக்காரியைப் பார்ப்பது போல் பார்த்துக்கொண்டே, ''நீங்க சொல்றதைப் பார்த்தால்...'' என்று இழுத்தபோது, ''பேசாமல் வாங்க... ரவிக்கும் ஆசீர்வாதம் பண்ணுனாப்போல இருக்கும். வித்யா நீ ஏண்டி பெரியவங்க பேசுறதை ஒட்டுக் கேட்கிறே? போ போ'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

காமாட்சி, வித்யாவை அர்த்தபுஷ்டியாகப் பார்த்து விட்டு, ''அப்பாவைப் போய்க் கும்புடு'' என்றாள்.

வித்யா, டில்லியில் படிக்கும்போது, விடுமுறையில் அங்கு வந்திருந்த ரவியைக் 'சொஞ்சம் கர்நாடகம்' என்று நினைத்திருந்தாலும், அவனிடம் உள்ளத்தைப் பறிகொடுத் திருந்தாள். அவளையும், அவள் பேசும் ஆங்கிலத்தையும் கண்டு, கேட்ட ரவிக்கு, சற்றுத் தாழ்வு மனப்பான்மைகூட ஏற்பட்டது. ஆனால், வித்யா, அவனைச் சொல்லுக்குச் சொல் 'ரவி டியர்...ரவி டியர்' என்று சொன்னதால், தன் னம்பிக்கை ஏற்பட்ட ரவி, ஒரு நாள் ஒரு அழகான காதல் கடிதத்தை எழுதி, அவள் வேறு பக்கம் பார்த்தபோது, அவள் நோட்டுக்குள் வைத்துவிட்டு, காட்ரெஜ் பீரோவுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டான். தற்செயலாக நோட்டைத் திறந்த வித்யா 'இது என்ன டமில் ஸ்கிரிப்ட் மாதிரி இருக்கு டாடி... நீங்களா இதை வச்சிங்க?' என்று சொல்லிக் கொண்டே அந்தக் காகிதத்தை ஏந்திக்கொண்டு அப்பா விடம் போகப்போனவளை, ரவி தற்காப்பை முன்னிட்டு கை யைப் பிடித்து அவள் தோளைத் தன் பக்கம் லேசாகச்

சாய்த்து அந்தக் கடிதத்தைப் பிடுங்கினான். அப்போதுதான் அவளுக்குத் தமிழ் எழுத்துக்கள் தெரியாது என்பதை உணர்ந்துகொண்டான். கையில் இருக்கும் காகிதம் காதல் தூதென்று அவன் விளம்பிவிட்டு, அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று பயந்தான்.

வித்யா சிரித்தாள். நாணத்துடன் சிரித்தாள்.

"டாமிட்... நான் ஒனக்கு இந்தியில் பதில் எழுதப் போறேன் பாரு... இங்கிலீஷ்ல எழுதினா என்னவாம்?" என்றாள். ஆங்கிலத்தில் கடிதம் எழுதினால், அதில் இயல்பாக வரும் எழுத்துப் பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் கண்டு, தன் காதலையே நிராகரித்துவிடலாம் என்று பயந்துபோன ரவி "தமிழ் தாய்மொழி... அதுலதான் எழுதணும்" என்றான். உடனே அவள் "டாமிட்... ஒனக்கு இங்கிலீஷ் வரல... ஆனால்" என்று சொன்னபோது "காதல் வருது" என்று ரவி முடித்தான்.

அப்புறம் எஞ்சியிருந்த ஒரு வாரம்வரை, அவன் வித்யாவுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தான். அவள் அவனுக்கு இந்தி கற்றுக் கொடுத்தாள். அளவோடு அவர்கள் பழகினாலும் அந்த அளவே அவர்களுக்கு ஒருவித் புனிதத்தை ஏற்படுத்தியது.

வித்யா நடந்தவைகளை நினைத்து, நடக்கப்போவதில் திளைத்து மகிழ்ந்தாள். 'இந்த மூணு வருஷமா... ரவி கண்ணாலகூட காதல் பண்ணலேன்னு நினைச்சது எவ்வளவு தப்பு... கடைசியில் அப்பா அம்மாகிட்ட பக்குவமாய்ச் சொல்லி அவனோட பர்த் டேயில என்னையே வாங்கிக்கிறானே? டாமிட்!'

வெள்ளிக்கிழமை வந்தது.

உனக்கு இந்த டிரெஸ் நல்லாருக்கு' என்று ரவி டில்லியில், எதைச் சொன்னானோ, அதை அணிந்துகொண்

டாள். 'உனக்கு என்னைவிட என் டிரெஸ்தான் பிடிச்சிருக்கோ' என்று அவள் சிணுங்கியபோது, அவன் சிரித்த விதத்தை இப்போது நினைத்துக்கொண்டாள்.

அதே புடவையைக் கட்டிக்கொண்டு அதே மாதிரி 'ரிங்' விட்டு, முன் நெற்றியில் முடிக்கற்றைகளை நளினப்படுத்தி வைத்துக்கொண்டு அம்மாவுடன், தம்பிகள் சகிதமாய்ப் புறப்பட்டாள்.

''வாம்மா வித்யா'' என்று வரவேற்றாள் அத்தைக்காரி. வித்யா ரவியை ஓரக்கண்ணால் பார்த்தாள். அவனும் சிரித்தான்.

அத்தைக்காரி ஒரு போட்டோவைக் காமாட்சியிடம் காட்டினாள். யாரோ ஒரு வாலிபனின் போட்டோ.

அத்தைக்காரி அடுக்கினாள்.

''இவன் நம்ம ரவிக்கு பிரண்டாம். டில்லியில வேலை பார்க்கிறானாம். நல்ல குடும்பப் பெண்ணா வேணுமுன்னு ரவிகிட்ட கேட்டானாம்! மெட்ராஸ்ல அவனுக்கு வசதியா பெண் பார்க்க ஆளில்லையாம். அப்பா, அம்மா கிடையாதாம். அதுவும் நமக்கு நல்லதாப்போச்சு!''

வித்யாவுக்குத் தலை சுழன்றது.

''எனக்கு யாரும் மாப்பிள்ளை பார்க்க வேண்டாம்.''

வித்யா இதுவரை போடாத பலத்த சத்தத்தில் கத்திவிட்டு மேற்கொண்டு சிறுமைப்பட விரும்பாதவள்போல் எங்கேயோ ஓடினாள். அது மாடியில் ஒரு அறையில் அவளை நிறுத்தியது. நிலைகுலைந்த மேனியை நிலைப்படுத்துவதற்காக ஒரு தூணில் தலையை வைத்துக்கொண்டு கைகளால் அதற்கு அணை கொடுத்தவாறு விழிகள் சொட்ட நெஞ்சம் விம்ம, நினைவுக் கானலின் ஏமாற்றம் தாங்கமாட்டாது

'இப்படியா மனிதர்கள்' என்று கொதித்து 'இப்படித்தான் மனிதர்கள்' என்று கொதித்தடங்கி விரக்தியின் வேகத்தில் வெடித்துக் கிளம்பிய பெருமூச்சு விழியோரத்தில் பட்டு, அந்த வேகத்தில் உப்பு நீர், உப்புச் சப்பற்ற அவள் வாழ்க்கையை எடுத்துக் கூறுவதுபோல் கன்னக் கதுப்புகளிலிருந்து இறங்கியபோது—

ரவி வந்தான்

"வித்யா இந்தப் பையனுக்கு என்ன குறைச்சல்? இந்தா பாரு! இந்த அழுகிற சமாசாரம் எனக்குப் பிடிக்காது. ஏன் பிடிக்கலேன்னு சொல்றே! எனக்குத் தெரிஞ்சாகணும்."

வித்யா நிதானப்பட்டாள்.

"ரவி... நீ மன்னிக்கணும். நீங்க டில்லியில் எனக்குத் தமிழ் சொல்லிக் கொடுக்கையில... தலையில் குட்டினிங்க இல்லியா?"

"அதுக்கென்ன இப்போ!"

"அது செல்லக் குட்டுன்னு நினைச்சேன். ஆனால் அது உண்மையிலேயே சீரியஸான குட்டுன்னு இப்போதுதான் தெரியுது. உங்க குட்டை இப்போதான் தெரிஞ்சிக்கிட்டேன்!"

"அதுக்கென்ன இப்போ?"

"இப்போ ஒண்ணுமில்லை யூ ஆர் கரெக்ட்."

"நீ எதையாவது நினைச்சால் அதுக்கு நான் பொறுப்பல்ல. விரலுக்குத் தக்கபடிதான் வீக்கம் என்கிறதை மறந்துட்டே..."

"உண்மையிலேயே நீங்க கெட்டிக்காரர்தான். கம்பெனியை மட்டுமல்லாம, உறவையும் கமர்ஷியலாய்ப் பார்க்கிறவர்! குவிக்கா முன்னுக்கு வந்துடுவீங்க! கங்கிராஜுலேஷன்ஸ்!"

''குதர்க்கம் வேண்டாம். நான் வாக்குக் கொடுத்துட்டேன். நீ அவனைக் கட்ட முடியுமா முடியாதா?''

''எங்க குடும்பம் நொடிச்சிப் போனது உண்மைதான். ஆனால் நீங்க மாப்பிள்ளை பார்த்து, நான் கட்டிக்கிற அளவுக்கு மானம் நொடிச்சி போகலே ஸார்...''

''பின் விளைவுகள் தெரியாம பேசாதே! இது உங்க அப்பா காலமுல்ல.''

வித்யா இப்போது அவனை நேருக்கு நேராகப் பார்த்தாள். அவனைப் பார்க்கப் பார்க்க தன்மானம் அழுகையை அடக்கியது. இயலாமையை எதிர்ப்பு விலக்கியது. அச்சத்தை அஞ்சாமை விரட்டியது. மீண்டும் டில்லிப் பெண்ணானாள்.

''பின்விளைவுகள் தெரியாம பேசல. முன்விளைவு தெரியாதவராால ஏற்படுற பின்விளைவு தெரிந்துதான் பேசறேன்! நீங்க எல்லோரும் வட்டமேஜை மாநாடு போட்டு எங்களுக்குக் கொடுக்கப்போற உதவித்தொகையை நிறுத்தப்போறீங்க... அவ்வளவுதானே? பரவாயில்லை.

''உறவுக்கு மனிதாபிமானமோ, மனிதாபிமானத்துக்கு உறவோ தேவையில்லை. டில்லியில் என் அப்பாவின் நண்பர் ஒரு சர்தார்ஜி, நாங்கள் போகக்கூடாதுன்னு கண்ணீர்விட்டு அழுதார். இதை எதுக்காகச் சொல்றேன்னா... மனிதாபிமானம், மதம், மொழி, மத்தப் பிணைப்புக்களைத் தாண்டியது. உறவின் பரிபாஷைகள் பொருளாதார அந்தஸ்தைப் பொறுத்தது. ஆனால் மனிதாபிமானம் பொருளாதார வேலிக்குள் அடங்காத கருணை வெள்ளம். என் அப்பாவுக்கு அப்படிப்பட்ட சில மனிதாபிமான நண்பர்கள் இருக்காங்க ஸார்! என் அப்பா இறந்ததுனால... மனிதாபிமான அடிப்படையில் எனக்கு ஒரு வேலை கொடுக்க அப்பவே அரசாங்கம் முன் வந்தது. நான்தான் உங்களைப் பார்க்

காமல் இருக்கமுடியாது என்பதுக்காக இங்கே குடும்பத்தைக் கூட்டி வந்தேன். இப்போ உங்களைப் பார்க்கக்கூடாது என் கிறதுக்காகவே பழையபடியும் டில்லிக்குப் போகப் போறோம். அங்கே வேலையில சேரப்போறேன். தாங்க் யூ மிஸ்டர் ரவி, வரட்டுமா?''

ஒரு வாரம் ஓடியது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் டில்லி ரயிலுக்கு மணியடிக்கப்பட்டது. இரண்டாவது வகுப்புப் பெட்டியில் வித்யா, அவள் தம்பிகள், காமாட்சியம்மாள் உட்கார்ந்திருந்தார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இதே ஸ்டேஷனில், இதே இவர்களுக்கு இருந்த உறவின் ஆர்ப் பாட்டம் இப்போது இல்லை. 'போய்ச் சேர்ந்ததும் ஒரு டெலகிராம் போடுங்க. உங்களை விட்டுட்டு எப்படித்தான் இருக்கப் போறோமோ' என்ற பிரிவு வார்த்தைகள் பேச ஆளில்லை. அழுவதற்கு அத்தைகள் வரவில்லை. கலங்கு வதற்கு சித்தப்பாக்கள் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக கண்ணடிக்க ரவியில்லை.

என்றாலும் 'யாரும் இல்லாமல் போகவில்லை' என்று காட்டுவதுபோல், வித்யாவும் அவள் குடும்பத்தினரும் கம்பீர மாக நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார்கள்.

★

MK Colour Process, Madras-14
Phone · 841478